# யாதவமித்திரன்.

யாதவமக்களின் முன்னேற்றங்கருதி வெளிவரும்

## மாதப்பத்திரிகை.

---

### தொகுதி 1.

தலைமை ஆசிரியர்

ஆ. கார்மேகக் கோனார் அவர்கள்.



Managing Editor.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

புத்தக வியாபாரம், மதுரை.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224174.
சென்னை-600 008
நூலகம்

Printed at
The Excelsior Press,
Madura.

# முதல் தொகுதியின் பொருளடக்கம்.


| விபரம் | பக்கங்கள். |
|---|---|
| அடிமைப் புத்தியை யகற்றவேண்டும்:-திரு. *S.* வேலாயுததாஸ். | 223 |
| அபிராமம் யாதவ வாலிபர்சங்கம்:-திரு. நா.கு.ராமசாமிக்கோன் அவர்கள் ... | 351 |
| அமெரிக்கரது ஆயர் தொழில் முறை:- திருவாளர் N. A. கிருஷ்ண மூர்த்தி அய்யர் அவர்கள் M. A. | 21 |
| அறிவுள்ள யாதவப்பெண்:-யாதவ சமூக ஊழியன். ... | 102 |
| அறிவு இச்சை செயல்:-திரு. S. நாராயணக்கோனாரவர்கள் | 290 |
| அனுதாபம்:- மித்திரன் தலைமைப் பத்திரிகாசிரியர். ... | 228 |
| ஆசிரியர் குறிப்பு:-மி. த. பத்திரிகாசிரியர். .... | 236 |
| ஆதனூர் யாதவ சபைத்தீர்மானம்:- திரு. ம. அப்பாத்துரை பிள்ளை அவர்கள், | 262 |
| ஆயர் முதுமகள் மாதரியின் மாண்பு.- மி. த. பத்திரிகாசிரியர். | 129, 161, 195, 229 |
| ஆயர்குலச் சிறப்பு:- திரு. வ. பத்மநாப பிள்ளை அவர்கள் | 385 |
| ஆனந்தரங்கப்பிள்ளை:- திரு. S. முத்துக்கோனாரவர்கள் B.A. | 267 |
| ஆனாய நாயனார்:- அஷ்டாவதானம், தி. அ. முத்துச்சாமிக் கோனார் அவர்கள், | 353 |
| இரங்கற் பாக்கள்:-திரு ஐயம்பெருமாள்கோனாரவர்கள் ... | 188 |
| ,, மி. த. பத்திரிகாசிரியர் | 190 |
| இரு பெருந்துக்கங்கள்:- ,, ,, .... | 192 |
| எனது அன்புரை:-திரு. யதுகுமார் காந்திதாஸன் அவர்கள் | 157 |
| ஏறு தழுவுதல்:-திரு. R. வெங்கடாசலம் பிள்ளை அவர்கள் | 177, 203 |
| ஐவேல் அசதி:- திரு. தி. அ. முத்துச்சாமிக் கோனாரவர்கள் | 363 |
| ஓரின்னுரை:- திரு. K. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் | 112 |
| ஓர் அனுதாபம்:- மி. த. பத்திரிகாசிரியர். .... | 128 |
| ஓர் நற்செய்தி:- திரு. நாராயணக்கோனார் அவர்கள் .... | 357 |
| கண்ணன் சரிதை:-திரு ஆ. கார்மேகக் கோனார் அவர்கள் தலைமைப் பத்திரிகாசிரியர் | 16, 38, 69, 134, 164 201, 361 |
| கண்ணன் துதி:- திரு. ச. செல்லம், அவர்கள் சுசீந்திரம். ... | 136 |
| கமலா:- ,, ,, ,, | 166, 215 |

கால்நடை வைத்தியம்:- திரு. S. பெருமாள்கோனாரவர்கள் 113, 219

கிளைச்சங்க ஸ்தாபனம்:- திரு T.S. வேணுநாதக்கோனாரவர்கள் 392

குலாபிமானம்:- ஒருயாதவன். ... 91

குலோத்தாரணம்:- திரு ம. கு. ராஜகோபாலன் அவர்கள் 142

குறிப்புகள்:- மி. த. பத்திரிகாசிரியர். ... 63

கையறு நிலை:-பத்திரிகாசிரியர். ... 226

கொம்பு சீவுதல்:- கிருஷிகன். ... 218

கோகிலாஷ்டமி:- யாதவன். ... 29

கோகிலகிருஷ்ணன்:- திரு. S. குருசாமி அய்யர் அவர்கள்
256, 292, 346, 390

கோபாலத்துவமும் ஜீவகாருண்யமும்:- திரு. ரா. தேசிகனவர்கள் 149

கோ ரக்ஷணத்தின் இன்பம்:- ,, ,, ,, 58

சமூக மகாநாடுகள்:- திரு. ச. செல்லம் அவர்கள் சுசீந்திரம். 115

சமூக முன்னேற்றத்திற்கு வேண்டியவை:- களக்காடு
திரு. S. நாராயணக்கோனாரவர் வர்கள் ... 375

சிறிது செவிசாய்த்தல் வேண்டும்:- திரு. இ. ராம. குருசாமிக்
கோனாரவர்கள், புக்ஷாப், மதுரை. ... 90

சீகரன்:- திரு. நி. அ. முத்துச்சாமிக்கோனாரவர்கள் ... 48

சுற்றந்தழுவல்:- திரு. வீ. எஸ். வீரணக்கோனாரவர்கள் ... 281

செய்தித் திரட்டு:- மி. த. பத்திரிகாசிரியர். 96, 126, 160, 359

செய்யாறு யாதவ குலசங்கம்:- ,, ,, ... 259

சென்னை மாகாண 5-வது யாதவ மகாநாடு 1-வது யாதவ
வாலிப மகாநாடு இவைகளில் நடந்த நிகழ்ச்சிகளும்
தீர்மானங்களும்:- ,, ,, 265, 297, 345

சென்னை யாதவ வாலிப சங்கம்:- திரு. தி. ஏ. ராசு 351, 382,

சென்னை ஸ்ரீயதுகுல சங்கத்தின் தீர்மானங்கள்:- திரு M. K. ஆராவமுதன் அவர்கள் அஸிஸ்டெண்ட் காரியதரிசி, சென்னை. 356

சேரநாட்டு யாதவ அரசர்குலம்:- திரு. ச. செல்லம் அவர்கள் 41, 247

ஞான கலாவிலாசம்:- திரு. ஐயன் பெருமாள் அவர்கள், தமிழாசிரியர்,
திருச்சி. 140, 181, 211

தற்கால சமுதாயநிலைமை: திரு. துரைசாமிக்கோனாரவர்கள் 81





தசாவதாரங்கள்:- திரு. ச. செல்லம் அவர்கள் சுசீந்திரம். 369

தமிழ் எழுதும் முறை:- திரு. மணி திருநாவுக்கரசு முதலியார்
தமிழாசிரியர், தமிழரசு பத்திராதிபர், சென்னை ... 198

திரிசிரபுரம் யாதவவாலிபர் சங்கம் இலவசவாசகசாலைத் திறப்புவிழா:-
திரு. T. கிருஷ்ணன் அவர்கள் காரியதரிசி. ... 155

திருப்பாணாழ்வார்:- திரு. தா. ந. கோபால் அவர்கள் 137, 169

நடுவெழுத்தலங்காரவினா:- திரு. வீ. எஸ். வீரணக்கோனார் அவர்கள்
அம்பலத்தாடி, சிறுவாலை ஜமீன் மதுரை ஜில்லா. 191, 272

நமது குலமுன்னேற்றம்:- திரு. ச. செல்லம் அவர்கள் சுசீந்திரம் 8

நமது சமூக சீர்திருத்தம்:- மி. த. பத்திரிகாசிரியர் 33, 98

நமது கிராமங்களின் தற்காலநிலை:- திரு. ச. செல்லம் அவர்கள் 52

நமது சமூக ஒற்றுமை:- திரு. V. ஆனந்தரங்கநாதம் அவர்கள் 73

நமது யாதவத்திருநாமங்கள்:- திரு. ஐயம்பெருமாள் அவர்கள் 76

நமது கடமை:- திரு. எம். குமாரசாமிக்கோனாரவர்கள் ... 78

நமது வாழ்வு - திரு. இ. ம. வெள்ளைச்சாமிக்கோனாரவர்கள் 87

நம்பகமாட்சி:- வித்வான் திரு. ம. ராஜகோபாலன் Al. 121, 151, 185

நன்றிபுறவோம்:- திரு. இ. ம. வெள்ளைச்சாமிக் கோனாரவர்கள் 117

நமது சமூகப் பெற்றோரும் இளைஞரும்:- களக்காடு திரு. S. நாராயணக்கோனாரவர்கள் ... 275

நமது கிராமங்களின் முன்னேற்றம்:- திரு. க. ஆண்டியாதவன் Al. 374

நிகழ்ந்த நமதுமகாநாடுகள்:- மி. த. பத்திரிகாசிரியர். ... 19

பசு:- திரு. ச. செல்லம் அவர்கள், சுசீந்திரம். ... 65

பத்திரிகை படிப்பதேன்?:- திரு. எஸ். ஆர். தாஸவர்கள் ... 278

பாவத்தில் பெரிது எது?:- திரு. எஸ். நாராயணக்கோனாரவர்கள் 85

பிள்ளைகளை வளர்க்கும் முறை:- திரு. ச. செல்லம் அவர்கள் 109

புல்லறிவு:- களக்காடு திரு. S. நாராயணக்கோனாரவர்கள் 83

பெண்கல்வி அவசியமா?:- திரு. கு. கோ. கிருஷ்ணன் அவர்கள்
B Sc. (Hons) 172

பெண்கல்வி:- திரு. ச. ஆண்டியப்பா அவர்கள் பூதப்பாண்டி. 371

பெரியாருரை:- திரு. இ. சிவம் அவர்கள் ... 56, 384

மகிழ்வுரை, யாதவன்:- ... 71


மணித்திரள்:- 32, 60, 71

மக்கட்பேறு:- திரு. சு. ஆண்டியப்பா அவர்கள் பூதப்பாண்டி 241
மன்னார்குடி யாதவர்குல மகாசங்கம் 3-வது மகாநாடு:-
திரு. ந. கோதண்டபாணி அவர்கள், மன்னார்குடி. .... 260
மாடுகள் பாதுகாப்பு:- கிருஷிகன் ... 250
மித்திரனுக்கு மகிழ்வுரை:-திரு. M. K. ஆராவமுதன் அவர்கள் 55
மித்திரனின் மாட்சி:-திரு. மு. நா. பிள்ளை அவர்கள் போஸ்ட்
மாஸ்டர், இன்டான் F. M. S. ... 222
மித்திரன் மதிப்புரை:-திரு ந. மு. வேங்கிடசாமிநாட்டாரவர்கள் 295
முக்கிய குறை:-திரு க. ஆண்டியாதவன் அவர்கள் ... 118
முயற்சி திருவினையாக்கும்:- திரு. வீ. எஸ். வீரணக்கோனார்
அவர்கள் அம்பலத்தாடி சிறுவாலை ஜமீன். ... 253
முன்னுரை:- மி. த. பத்திரிகாசிரியர் ... 1
யாதவமித்திரன் வரவேற்பு:- திருவாளர்கள் ஐயம்பெருமாள்
திருநெல்வேலி, வீ. எஸ். வீரணக்கோனாரவர்கள் அம்பலத்தாடி,
S. சுப்பையா நம்பி அவாகள், நாகர் கோவில். 40, 62, 68,
யாதவர் சமூக ஊழியம்:-திரு. கு. கோ. கிருஷ்ணன் அவர்கள்
B. Sc., (Hons.) 104
யாதவ வாலிபர்க்கோர் வேண்டுகோள்:- திரு. பொ. பிச்சைமுத்துக்
கோனார் அவர்கள் முனிசிபல் வைஸ் சேர்மன் மதுரை. 153
யாதவமாணவர்களுக்கோர் நன்கொடை:-திரு. M. K. ஆராவமுதன்
அவர்கள் 263
யாதவர்களுக்குஓர் வேண்டுகோள்:-திரு ப. வீரக்கோனாரவர்கள் 288
யாதவ வாலிபர் சங்கங்கள்:-திரு. T. S. வேணுநாதக்கோனார்
அவர்கள் .... 367
ரவிவர்மன் குலசேகரன்.-திரு. S. முத்துக்கோனாரவர்கள் பி. ஏ. 232
லீலாவதியின் திருபம்:-திரு. ஸி. ராஜரெத்தினம் அவர்கள். 182,
212, 244, 285
வள்ளல்பாரி:-திரு. யதுகுமார் காந்திதாஸன் அவர்கள். 120, 176,
295, 350, 379
வாலிபர் சங்கம்:- திரு. T. T. சுப்பிரமணியன் அவர்கள் பி. ஏ. 224
விசேஷ செய்திகள்:-மி. த. பத்திரிகாசிரியர். ... 64
விரையெடுத்தல்:-சென்னை பஞ்சாயத்து புல்லடீன். ... 93
விடு கவி விடை:-திரு. வீ. எஸ். வீரணக்கோனாரவர்கள் 225
5-வது யாதவ மகாநாட்டு முயற்சிகள்:-பத்திரிகாசிரியர். 123, 227
ஸர் ஐசக் நியூட்டன்:-திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள்
B. Sc. (Hons) 207, 237
ஜன கணிதமும் யாதவர்களும்:-திரு. ச. செல்லம் அவர்கள் 273




## படங்கள்.

1 ஸ்ரீ கண்ணன் திரு அவதாரம்.
2 திரு K. கோபாலகிருஷ்ணக்கோன் B. Sc. (Hons.)
3 ஸ்ரீ கோபால் மஹால் புத்தக சாலை
4 திருவாளர் P. பிச்சைமுத்துக் கோனார்.
5 ,, M. மாலைக்கோனார்.
6 ,, இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனார்.
7 பூதனைவதம்.
8 புதுவை ஸ்ரீமான் முத்துச்சாமி பிள்ளை.
9 தோட்டக்காடு ராமகிருஷ்ணபிள்ளை.
10 இராமநாதபுரத்தில் 1930ௗ மேமீ 24, 25உகளில் நடந்த
சென்னை மாகாண 5வது யாதவ மகாநாட்டுப் பிரதிநிதி
களில் ஒரு சிலர் இப்படத்தில் அமர்ந்திருக்கிறார்கள்.
11 சென்னை மாகாண முதலாவது யாதவ இளைஞர்
மகாநாட்டுப் பிரதிநிதிகள்.
12 5 வது மகாநாட்டுத் தொண்டர்கள்
13 காலஞ்சென்ற பிரபந்த வித்வான் ஸ்ரீமாந். தி. கோ. முத்து
கிருஷ்ணபிள்ளை.



"யாதவமித்திரன்" ஆபீஸ்.



OFFICE OF ... MADRAS
12 SEP 1929

# யாதவ மித்திரன்.

## ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

(Editorial Board Members.)

தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி,
மதுரை.

---

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. ஏ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி ஏ பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.
7. ,, R. வேங்கடாசலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S. P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L. M. F. ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ்,
திருச்சிராப்பள்ளி.

## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றியும் முழு விலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

---

யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை.



ஸ்ரீ கிருஷ்ணன் திருஅவதாரம். 16-ம் பக்கம் பார்க்க.

OFFICE OF THE ... 18 SEP 1929

ஸ்ரீ

# யாதவ மித்திரன்

## ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.



| | | |
|---|---|---|
| தொகுதி 1 | சுக்கில-௵ ஆவணி-௴<br>1929-௵ ஆகஸ்டு-௴ | பகுதி 1 |



### கடவுள் வணக்கம்.

பச்சைமா மலைபோல் மேனி, பவள வாய், கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே ஆயர் தங் கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிர யான் போய் இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

## முன்னுரை.

புண்ணிய பூமியாகிய இப்பரத கண்டத்தில் நமது யாதவ குலமானது பழமையிலும், நாகரிகத்திலும், கல்வி முதலிய மற்றைய சிறப்புக்களிலும், உயர்ந்து விளங்கிய சமூகமாகும். அன்றியும் புலவர்கள், அரசர்கள், வள்ளல்கள், சான்றோர்கள் முதலிய பெரியோரை உடையதாய் உலகத்தில் உயர்ந்த சமூகங்கள் என்று

சொல்லப்பட்டவற்றுள் ஒன்றாய்த் திகழ்ந்து வந்த ஓர் சிறந்த
சமூகமாகும். மேலும் இது உலகமக்களின் இன்ப வாழ்க்கைக்கும்
மிகவும் இன்றியமையாததென்று கருதப்பெற்ற சமூகமுமாகும்.
இவை யாவும் கற்றோரும் மற்றோரும் நன்கறிந்த உண்மையாம்.
இத்தகைய இச் சமூகத்தினர் தற்காலத்தில் அடைந்திருக்கும் நிலை
மையை ஆராய்ந்துபார்த்தால், அது குலாபிமானிகளாயுள்ளோரனை
வர்க்கும் மிக்க துக்கத்தையும் வெட்கத்தையும் தருமென்பதில்
ஐயமில்லை.

மிகுந்த நாகரிக காலமென்கின்ற இவ்விருபதாம் நூற்றாண்
டில் உலகத்திலுள்ள ஒவ்வொரு கூட்டத்தினரும் தத்தமக்குரிய
உரிமைகளையும் கல்வி, செல்வம், நாகரிகம் முதலிய நலங்களையும்
அடையக்கருதி ஓயாது உழைத்து அதிவிரைவாய் இயங்கிக்கொண்
டிருக்கின்றனர். இத்தகைய புதிய யுகத்தில் நம் சமூகத்தின் நிலைமை
யை மனதில் ஊன்றிப்பார்த்து ஆழ்ந்த தூக்கத்திலிருக்கும் நமது
சமூகத்தை எழுப்பி இதற்குப் புதிய உணர்ச்சியை ஊட்டுதற்கு நம்
குலப்பிரமுகர்கள் முனைந்துநிற்றல் வேண்டும். நில்லாது இன்னும்
அவர்கள் சுய நலமே கருதிச் செல்வார்களாயின் சில நாட்களில்
நமது சமூகம் உலகத்தில் மக்கட்கூட்டத்திலேயே ஒன்றாக எண்ணப்
படாமல் தாழ்நிலை யடைந்துவிடு மென்பதில் ஐயமில்லை.

யாதவ சமூகத்தில் பெருஞ் செல்வமுடையவர்களும் உபகார
சிந்தை, அறிவு, முயற்சி உடையவர்களும் அறவேயில்லாமற் போக
வில்லை. இங்ஙனமிருந்தும் இவர்கள் இப் புதிய யுகத்தில் ஒரு சில
வருடங்களுக்கு முன்னர் வரை நம் சமுதாய முன்னேற்றத்திற்
குரிய வழிகளிற் புகுந்து உழைத்து, நமது பழய பெருமையை
நாட்ட முன்வராமற் போனது மிகவும் விசனிக்கத்தகுந்த விஷய
மாகும். இப்போது கல்வியறிவுடையவர்களும் செல்வமுள்ள கன
வான்களும் சமுதாய சேவையில் ஈடுபட்டு உழைக்கும் நற்காலம்
ஆரம்பமாகின்றதென்பதை யறிய மிக்க மகிழ்ச்சி தருவதாகும்.

இருபது வருஷங்களுக்கு முன்பு இராமநாதபுரம் ஜில்லா
யாதவர்களால் நிறுவப்பெற்ற 'கோவைசிய யாதவகுல சங்கம்'
என்பது சில வருடங்கள் நன்கு நடைபெற்றுவந்தும் தற்காலத்தில்
அது இருக்குமிடம் தெரியாமலிருக்கின்றது. தற்போது வங்காளத்



திலும் பம்பாய் மாகாணத்திலும் நம் சமுதாயஉணர்ச்சி அதிகமாக
வளர்ந்து பல இடங்களில் சங்கங்களும் நிறுவப்பெற்றுள்ளன.
அன்றியும் அங்கு அகில இந்திய யாதவமகாநாடும் ஒவ்வொரு
வருடமும் மிகச்சிறப்பாகநடந்து, சமுதாய முன்னேற்றம் மிக
சிரத்தையுடன் கவனிக்கப்பட்டு வருகின்றது. இரண்டாவதாக
இத்தகைய சமுதாயசேவையில் ஈடுபட்டிருப்பது நமது சென்னை
மாகாணமென்று சொல்லலாம். தென்னாட்டின் திலகமென விளங்
கும் சென்னைமாநகரத்தில் வாழும் நம் குலப் பெரியோர் பலர்
ஒன்றுகூடி, 'யதுகுலசங்க' மென்ற, சங்கமொன்றைச் சிலவருடங்
களுக்கு முன்னரே ஸ்தாபித்துக் குலமுன்னேற்றத்திற்குரிய அரும்
பெருங்காரியங்கள் பலவற்றைச் செய்து வருவதோடு சென்னை
மாகாண முதலாவது மகாநாட்டையும் சென்னையில் (கிண்டி என்
னுமிடத்தில்) கூட்டித் தென்னாட்டு யாதவர்களுக்குப் பெரியதோர்
உணர்ச்சியை உண்டாக்கினார்கள். அதன் பயனாக இரண்டாவது
யாதவமகாநாடு திருச்சியிலும் (ஸ்ரீரங்கத்தில்), மூன்றாவது மகா
நாடு மதுரையிலும், நான்காவது மகாநாடு திருநெல்வேலியிலும்
மிகுந்த சிறப்புடன் நடைபெற்றன. அதுமுதல் யாதவகுலப்பெரி
யோர்பலர்க்குச் சமுதாய ஊழியம் செய்யவேண்டுமென நல்லுணர்ச்
சியும், மனக்கிளர்ச்சியும், ஒற்றுமையும் பெருகிவருகின்றன இவை
களெல்லாம் சமீபகாலத்தில் நம் சமுதாயம் அடையப்போகும்.
நன்மைகளுக்கு ஓர் அறிகுறி யாகவும் அடிப்படையாகவும் ஏற்பட்
டவையென்று சொல்லலாம். மேற்கண்ட மகாநாடுகளில் குலாபி
விர்த்தியில் கண்ணுங் கருத்துமுடைய சில அபிமானிகள் நம்சமூ
கத்துக்கென்று ஓர் பத்திரிகை அவசியமென்றும் அதனை விரைவில்
வெளிப்படுத்த வேண்டுமென்றும் பலமுறை வற்புறுத்திப் பேசி
வந்திருக்கிறார்கள். இவர்களது நற்கருத்துக்கிணங்க அதனை நிறை
வேற்றுதற் பொருட்டே இப்போது மதுரை, பிரபல புத்தகவர்த்
தகரும் நம் குலத்தலைவர்களுள் ஒருவருமாகிய திருவாளர் இ. மா.
கோபாலகிருஷ்ணக் கோனாரவர்கள் இப்பத்திரிகை வெளியீட்டின்
சகலபொறுப்பினையும் ஏற்றுக்கொண்டு, சமுதாயத்தொண்டு ஆற்று
தற்கு முன்வந்திருக்கிறார்கள். இவர்களது இப் பெருங்குணத்
தைப்போற்றிக் குலமுன்னேற்றத்திற்குரிய சாதனங்கள் பலவற்
றுள்ளும் இப்பத்திரிகை வெளியீடு மிகவும் முக்கியமானதென்றும்

இதனால் விளையும் நலங்கள் பல வென்றுங் கருதி இதனை வளர்த்
தற்குப் பலவிதத்திலும் முயலவேண்டுவது நம்மவருள் ஒவ்வொரு
வரது கடமையுமாகும்.

இந்த இருபதாம் நூற்றாண்டின் உலகத்தைப் பத்திரிகா
உலகமென்றால் அது ஒரு சிறிதும் தவறாகாது. ஒவ்வொரு நாடும்
அடைந்து வரும் பலதுறை முன்னேற்றங்களுக்கும் நலங்களுக்கும்
காரணம் முக்கியமாகப் பத்திரிகைகளின் பிரசாரங்களே என்பதனை
அறிஞர் எவரும் மறுக்கா ரென்பது திண்ணம். ஒரு தேசமோ
ஒரு சமூகமோ கல்வியிலும் கலைஞானங்களிலும் செல்வத்திலும்
கைத்தொழில் விவசாய வியாபாரங்களிலும் பல்வித நாகரிகங்களி
லும் இம்மை மறுமைக்குரிய நலங்களிலும் சிறந்த வளர்ச்சி பெற
வேண்டின் அவற்றிற்கெல்லாம் சாலச்சிறந்த கருவியாயுள்ளதும்
அவற்றை விரைவிலும் உடல் உழைப்பும் காலக்கழிப்பும் மிக்க
பொருட்செலவு மில்லாது பயப்பதும் பத்திரிகைகளே யாகும்.
பத்திரிகைகளின் பயனைச் சுருங்கக் கூறுமிடத்து, இம்மை மறு
மைக்குரிய விஷயங்களை எடுத்துப் புகட்டுவதில் சிறந்த ஆசிரிய
னாகவும், செவிக்கும் சிந்தைக்கும் இனிய உணவுகளைப்பல இடங்களி
லிருந்தும் ஈட்டி இன்மொழியுடன் ஊட்டுவதில் அன்னையாகவும்,
நல்லொழுக்க நெறிகளையும் அறிவின் நலங்களையும் நற்காரியங்களை
யும் எடுத்து உபதேசித்துப் பயிற்றுவதில் தந்தையாகவும், ஆழ்ந்த
உறக்கத்திலிருப்போரைத் தட்டி எழுப்பி இடித்துரையாலும் இன்
சொல்லாலும் சீர்கேடுகளை எடுத்துவிளக்கிக் குற்றங்களை நீக்கும்படி
வற்புறுத்துவதில் நண்பனாகவும், வெவ்வேறு இடங்களில் வாழும்
மக்களையெல்லாம் ஒரு வயிற்றிற் பிறந்த உத்தம சகோதரர்களாகக்
கருதும்படி உணர்ச்சியை யெழுப்பிப் பிணக்குகளைப் போக்கி ஒற்று
மையை உண்டாக்குவதில் அரசனாகவும் விளங்குமென்று உறுதி
யாகக்கூறலாம்.

இத்தகைய பயனையளிக்கும் பத்திரிகைகளின் அருமை பெரு
மைகளை உணர்ந்து அவற்றை வளர்த்து அவற்றின் பயனை நிரம்ப
அநுபவித்து வருகிறவர்கள் நம்மவரினும் ஐரோப்பா முதலிய பிற
நாட்டு மக்களே யென்று கூறலாகும். பத்திரிகைகளின் வளர்ச்சியே
நாட்டின் வளர்ச்சி யென்பதை அவர்கள் நிதரிசனமாகக் காட்டி
வருகின்றார்களன்றோ? ஐரோப்பாவில் அன்றாடம் கூலிவேலை



செய்து வயிறு வளர்க்கும் ஒரு பரம ஏழையுங் கூடப் பத்திரிகை
படித்துவிட்டே பின்னர் மறுவேலை பார்க்கத் தொடங்குவானென்
றால், ஐரோப்பியர்களது பத்திரிகாபிமானத்தை எவ்வாறு அள
விட்டுரைப்பது. ஒவ்வொரு துறையிலும் மகாமேதாவிகளான அந்
நாட்டு அறிஞர்கள் தாங்கள் தம் புத்தி நுட்பத்தாலும் அரும்
பெரும் முயற்சியாலும் நவநவமாகக் கண்டுபிடித்துக் கொண்டு
வரும் அதியற்புத விஷய அமுதங்களை யெல்லாம் நாம்பெற்ற இன்
பத்தை வையகமெல்லாம் பெறுக என்று கருதி அவற்றை இப் பத்
பத்திரிகைகளாம் பொற்கிண்ணத்தில் சொரிந்து உலகத்தை இன்
புறுத்தி வருவதையறியாதார் யார்? முப்பது நாற்பது வருடங்கட்கு
முன்னர் மிகத்தாழ்ந்த நிலையிலிருந்த ஜப்பான்தேசம் இப்போது
எத்தகைய நிலையிலிருக்கிற தென்பதை யாவரும் அறிவர். அத்த
கைய நிலையிலிருந்த அந்நாட்டில் இப்போது வெளிவரும் பத்திரிகை
களின் வளர்ச்சியை அளந்தால் அது அதிக ஆச்சிரியத்தை விளைவிக்
கும். அங்கு தற்காலம்வெளிவரும்பத்திரிகைகளின் எண்ணிக்கை நா
லாயிரத்துக்கு மேற்பட்டனவாம். அவற்றுள் 'அஸாஹி' என்ற பத்
திரிகைக்கு 21-லக்ஷம் சந்தாதாரர்களும், 'ஒஸகா மைனிச்சி' என்ற
பத்திரிகைக்கு 10-லக்ஷம் சந்தாதாரர்களும், 'டீவிஸ்கிய்போ' என்ற
பத்திரிகைக்கு 4-லக்ஷம் சந்தாதார்களும் இருக்கின்றார்களென்று
அறியப்படுகின்றது. ஆயிரக்கணக்கான மூலதனத்தோடு ஆரம்
பித்த இப்பத்திரிகைகளெல்லாம் இப்போது லக்ஷக்கணக்கான
மூலதனங்களோடு விளங்குகின்றனவாம். இந்த ஜப்பானியரது
ஒப்பற்ற இப்பத்திரிகாபிமான மன்றோ அவர்களைத் தற்போது
மகோன்னத நிலையில் நிறுவியிருக்கின்றது.

இனி நம்நாட்டின் தற்காலத்திய பத்திரிகாபிமானத்தை
யும் அதன் வளர்ச்சியையும் ஆராய்ந்தால் அவை மிக விசனிக்கத்
தக்க நிலையிலேயே யிருக்கின்றன என்னலாம். நம்நாட்டு சமூகப்
பத்திரிகைகளையோ பொதுப் பத்திரிகைகளையோ எண்ணினால்
அவற்றைச் சில விரல்களால் எண்ணிவிடலாம். நம்நாட்டில் இடை
யிடையே பலபத்திரிகைகள்தோன்றினும் அவற்றை ஆதரிப்போர்
கள் அருமையாயிருத்தலின் அவைகள் பிறந்த சில மாதங்களிலோ
வருடங்களிலோ மறைந்தொழிந்து போகின்றன. இவ்விஷயத்தில்
மேற்காட்டிய நாட்டவர்க்கும் நமக்குமுள்ள வித்தியாசம் அஜ

கஜாந்தரமன்றோ? நம்நாட்டினருள் சிலர் ஆடம்பரமான வீண்விஷயங்களுக்கு எவ்வளவோ பணத்தை வாரிவாரி இறைக்கின்றனர். அவற்றுள் முதன்மையானது சட்டசபை, ஜில்லாபோர்டு, முனிசிபல் கவுன்சில் முதலியவைகளின் எலக்ஷன் செலவுகளாகும். இவ்வாறு செலவு செய்யும் பணத்துள் நூறில் ஒருபங்கேனும் சமூக நலத்துக்கோ நாட்டு நலத்துக்கோ அவர்கள் வழங்குவார்களாயின் அதனால் அவர்கட்கு எவ்வளவு நிலையான புகழும் புண்ணியமும் உண்டாகும். பத்திரிகைகளின் வளர்ச்சியும் ஆதரிப்பும் இப்போதிருப்பதினும் இன்னும் ஆயிரமாயிரமடங்கு அதிகரித்தாலன்றி நம் நாடும் நாட்டுச் சமூகங்களும் விரைவில் முன்னேறுமென்பது முடியாத காரியமாகும்.

இப்போது வெளிவரும் "யாதவமித்திரன்" என்னும் இப்பத்திரிகை சமூகப் பத்திரிகையாயினும் பொதுவாக ஏனைய மக்களுக்கும் ஒரு பகுதி பயனளியாமற் போகாது.

முதன்மையாக இம்மித்திரன், யாதவ சமூகம் கல்வியிலும் நாகரிகத்திலும் பொருளாதார நிலை முதலியவற்றுள்ளும் முன்னேற்ற மடைதற்குச் சாதனமான விஷயங்களை மிகுதியாகக் கொண்டு வெளிவந்துலாவும்.

பற்பல பாகங்களாகப் பிரிந்து வாழ்ந்துவரும் இச்சமூகத்தினரிடத்தில் வேற்றுமை யுணர்ச்சிகளைப் போக்கி அவர்களை ஒற்றுமைப் படுத்தற்குப் பெரிதும் முயன்று வரும்.

இச்சமூகத்தில் காணப்படும் குற்றங்களைக் களைந்து நன்மைகளைக் கடைப் பிடித்தொழுகு மாறும், மூடக் கொள்கைகளையும் குருட்டுநம்பிக்கைகளையும் போக்குமாறும் வன்மொழியாலும் இன்மொழியாலும் அஞ்சாது பேசிவரும்.

யாதவ சமூகத்தினரது பரம்பரைத் தொழிலாகிய பசுபரிபாலனத்தில் புதிய முறைகளை மேற்கொண்டு செய்ய வேண்டிய திருத்தங்களையும் இத்தொழிலின்மூலமாகத் தற்காலத்தில்கிடைத்து வரும் லாபத்தினும் மிகுந்த லாபத்தை அடைதற்குரிய உபாயங்களையும் நன்கு ஆராய்ந்து எடுத்துரைக்கும்.

பெற்றோர்கள், குழந்தைகளை வளர்க்க வேண்டிய முறைகளையும் அக்குழந்தைகளுக்கு இளம்பருவத்தில் செய்யவேண்டிய கடமைகளையும் அடிக்கடி எடுத்தியம்பும்.



யாதவ குலத்தில் பண்டைக்கால முதலாகத் தோன்றிவந்த அரசர், புலவர், பெரியோர், பிரபுக்கள் முதலியோர் சரிதங்களைப் பிற்காலத்திலுள்ளார்க்கு ஊக்கமுண்டு பண்ணுதற்காக இனிய வசனரூபமாக வெளியிட்டுவரும்.

ஸ்ரீவைஷ்ணவகுலமாகிய யாதவகுலத்தில் பிறந்தவர்களுக்கு குலதெய்வம் தேவிற் சிறந்த திருமாலே என்பதனையும், சமத்துவக் கொள்கை ததும்பும் ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தமே ஒவ்வொருவரும் வாழ்நாளில் கடைப்பிடித் தொழுகவேண்டிய நன்னெறி என்பதனையும் ஏனைய சிறு தெய்வ வணக்கங்கள் நம்குலத்துக்கு அடாது என்பதனையும் அடிக்கடி சிறந்த சான்றுகளோடு விரித்துணர்த்திவரும்.

மாணவர் பெண்டிர் முதலியோர்க்கும் கல்வி அபிவிருத்திக்குரிய அரிய பகுதிகளை எளிய நடையில் ஏந்தித்திகழும்.

பிற சமூக தூஷணம், பிறமத நிந்தை, ஒற்றுமைக்குறைவை உண்டாக்கும் ஏனைய விஷயங்களாகிய இவைகளுக்குச் சிறிதும் இடங்கொடாமல் வெளிவரும்.

இராஜீய விஷயங்களில் ஒரு சிறிதும் தலையிடமாட்டாது; ஆனால் இச்சமூகம் அடைதற்குரிய உரிமைகளைப் பெறுதற்கான விஷயங்களை எடுத்துரைக்கப் பின்னிடாது.

ஆ. கார்மேகக்கோன்,
தமிழாசிரியர் அமெரிக்கன் கல்லூரி,
மதுரை.

# நமதுகுல முன்னேற்றம்.

எண்ணேன்ப வேனை எழுத்தேன்ப இவ்விரண்டும்
கண்ணேன்ப வாழு முயிர்க்கு

(திருவள்ளுவர்)

எண்ணும் எழுத்தும் கண்ணேனத் தகும்

(ஔவையார்)

என்ற ஆன்றோர் ஆப்த மொழிகள் கல்வியை வலியுறுத்து கின்றன. கல்வியே கண்ணெனத்தகு மென்பது இவையின்பொருள். கண்ணற்றோர் குருடரே யன்றோ? குருடருக்குப் பிறர் உதவியின்றி யாதொன்றுஞ் செய்ய வியலாததுபோலக் கண்ணெனத்தகும் கல்வி யில்லானுக்கும் பிறர் உதவியே எதற்கும் வேண்டும். கற்றோனோடு கல்லாதான் வேற்றுமையை மனிதனுக்கும் விலங்கிற்குமுள்ள வேற்றுமையாக ஆன்றோர் கற்பித்தாரென்றால் கல்லாமையால் வரும் இழிவைக் கூறவும் வேண்டுமோ? கற்றோனே மனிதன், கல்லாதான் மிருகம். இம்மொழிகளை அறிந்த நான் நடுங்குகிறேன். நமதுநாட்டில் முக்காற் பகுதியினரும் மிருகங்களாக விருக்கின்றனரே என்ற எண்ணம் என்னைத்திகைக்கச் செய்துவிட்டது. யாதவநண்பர்களே! நீங்கள் இதில் கவனஞ் செலுத்தாது விட்டுவிட வேண்டாம். மேற் சொன்ன கணக்கு இந்தியாவிற்கே பொதுவானதாயினும் அதில் பெரும்பான்மையோர் யாதவர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. நமது யாதவ மக்களில் பலர் கல்வியாம் கண்ணில்லாது பொறியற்ற விலங்கினம் போன்று உழலுகின்றனர்.

நகர வாழ்கையால் கற்றறிந்து செல்வந்தராய் வாழும் ஒரு சிலரான எமது அருமையாதவ சகோதரர்கள் இதில் வியப்படைய வேண்டாம். வியப்பிற்கு வழியில்லை. நகர வாசிகளே கல்வி நலனை யடைய ஆவலுள்ளவர்களாக விருக்கிறார்களென்பதும் கிராமவாசிகள் கல்வியிற் கவலை செலுத்துவதில்லை யென்பதும் யாவரும் அறிந்த உண்மை. தொன்று தொட்டே தொழிற் சௌகரியத்திற் காகக் கிராமாந்தரங்களில் வாழ்ந்து வருபவரில் நமது யாதவ மக்களே முக்கியமானவர். அவர்களது தற்கால வாழ்க்கை முறைகளை இப்போது யான்வருணிக்க விரும்பவில்லை. அவற்றை எண்ணுங்கால் உள்ளம் உருகும். காணிலோ கண்ணீர் பெருகும். எழுதுவதற்கும் இயலாத எண்ணிறந்த பெருங் குறைகள் அவரிடைக் காணப்படு கின்றன. கரை கடந்த அபிமானத்தால் நமது சமுதாயப் பெரு மைகளைத் தொன்னூல்கள் வாயிலாய் அறிந்த ஒருவன் இப்போது நமது கிராமம் ஒன்றில் சென்றால் யாதவமக்கள் இவரோவென அவனுக்கு ஐயமுண்டாகும். மேற்சொன்ன எமது மொழிக ளால் நாம் கிராம வாழ்க்கையை வெறுக்கிறோமென எவரும் எண்ணிவிடக்கூடாது. நகர வாழ்வு நரகத்திற் கொப்பானதென் பதை யாமறிவோம். கிராமவாழ்விற்குக் கல்வியும் அதினால் பெறும் ஒழுக்கமும் வேண்டாமென விதியுண்டோ? தற்கால கிராமவாழ்வு மிகச் சீர் கேடான நிலைக்கு வந்துவிட்டது. கிராம வாசிகளுக்குக் கல்வியைப்பற்றிக் கவலையே கிடையாது. பத்து நிரம்பாப் பாலர் கள் எழுத்தறிவு இம்மியுமில்லாமல் நெடுங் கழிதாங்கி எருமைக் கூட்டங்களின் பின்னால் ஏகுகின்றனர். இச் சிறுவர்களன்றோ பிற் காலத்தில் கிராம முக்கியஸ்தர்களாக விருக்கப் போகிறார்கள். இத் தகையரது வாழ்வுகொண்ட கிராமவாழ்வு எந்நிலையிலிருக்கும்? உற வினருள் ஒருவர்க் கொருவர் பகைத்துப் போரிட்டுக்கொண்டு நீதி மன்றங்களில் வழக்குத்தொடர்ந்து நியாய வாதிகளுக்கும், தமக்குக் கல்வியறிவில்லாததினால் உதவி செய்ய வரும் வேறு சிலருக்கும், பொருளை இறைக்கிறார்கள். கல்வி இல்லாப் பெருங் குறையால் ஏமாற்றமடைந்த யாதவர்கள் கணக்கிலாதார். அப்பெருங் குறை யால் இவரிடையே நிகழ்கின்ற தீமைகள் எண்ணிலாதன. கல்வி யில்லாக் குறையை இவர் உணர்வாராயினும் அதற்காய் முயல் வாரைக் காணோம். கல்வியிற் சிறந்தவர்களும் அரசியல் வாதிகளும் சமுதாய வாதிகளுமான எத்தனைபேர்கள் கல்லா இருளில் அகப் பட்டு அறிவுகுன்றி மழுங்கிக் கிராமங்களில் இருக்கிறார்களோ? யாரறிவார்? ஆண்டவனுக்கே வெளிச்சம். கல்வியின்மையால் ஒவ் வொருவனுடைய முற்போக்கும் தடைபட்டுப் போகிறது என்ப தாக மாத்திரம் எண்ணவேண்டாம். கல்லா ஒருவனால் தனக்கும் தன் குலத்திற்கும் நாட்டிற்கும் தீமையுண்டாகிறது. இத்தனை பெரிய தீமையான கல்லாமையில் ஏனோ இருக்கவேண்டும்? இங்ஙனம் கல்லாதாரைப் பெரும்பாலுங் கொண்ட யாதவ மக்கள் தங் கள் சமூகச் சீர்திருத்தத்திற்காக இனி முயல்வதெக்காலம்?

இப்பெரிய கேட்டிற்குப் பொறுப்பாளிகள் ஒவ்வொரு யாத
வத் தந்தையரே யாவார்கள். ஈன்ற மக்களுக்கு உதவி புரிதல் தந்
தையர் கடமையல்லவா? தம்மக்களுக்குக் கல்வி கொடுக்காத யாத
வர்கள் யாதவ சமுதாயத்தின் பண்டயமாண்பையும் இன்றைய
முற்போக்கையும் கெடுத்தவ ராவார்கள். இவர்கள் 'பள்ளிக்கு
வைத்திலனே தந்தையாகிய பாதகனே' என்ற பழமொழிக்குப்
பின்னர் ஆளாகவுஞ் செய்கிறார்கள். இதற்கு வறுமை காரணமெனச்
சிலர் சொல்லிக் கொள்வதைக் கேட்டிருக்கிறோம். ஆரம்பக் கல்வி
யாவது அவர்களுக்குக் கொடுக்க வியலாதெனக் கூறுங் காரணம்
பொருந்தாது. இதற்குத் தந்தையர் அறியாமையே காரணமெனக்
கூறலாம். ஆடவர் கல்வி நிலையே இங்ஙனமிருக்கும்போது பெண்
கள் கல்வியைப்பற்றிப் பேசவும் வேண்டுமோ? ஆடவர் கல்வி
நிலைக்கு நாம் பெரும்பாலும் கிராமங்களைப் பற்றியே கூறினோம்.
ஆனால் பெண் கல்வியில் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் வித்தி
யாசமில்லை யென்றே கூறலாம். நமது குலப் பெண்கள் கல்வி கற்
பது ஆசாரக் குறைவென எண்ணப்பட்டு வருகிறது. நமது யாத
வச்சிறுமியரின் கல்வியைப்பற்றி நகரங்களிலுங்கூட எவரும் கருத்
துச் செலுத்துவதாய்க் காணப்படவில்லை. "பெண்கள் மனிதரல்ல
ரென்றும் அவர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் வேலைசெய்து உழைப்
பதற்குக் கடவுளால் படைக்கப்பட்டிருக்கும் விலங்கினம்" என்றும்
பெரும்பாலோர் எண்ணி வருவதாகத் தெரிகிறது. அவர்களுக்கு
அளிக்கப்பட்டிருக்கும் பெரிய பொறுப்புக்களையும் கடமைகளையும்
எண்ணினால் ஒவ்வொருவரும் பெண்கல்வியில் பெரிதுங் கருத்துச்
செலுத்த முயலுவார்கள். வருங்கால உலகம் அவரிடமன்றோ
அமைந்திருக்கிறது? பெரியராய்த் தோன்றுபவர் பெண்களின்
புதல்வரன்றோ? அறிஞரும் ஞானிகளும் புலவர்களும் பெண்கள்
புதல்வரே. புதல்வரைப் பேணுதல் முதலில் தாய்க்கே ஏற்படுகிறது.
மணிபோன்ற மாசற்ற இளம்மழலைகள் மனதிலே முதலில் தாயின்
செய்கைகளே அமைகின்றன. கற்றறிந்த தாயின் செய்கைகளுக்
கும் அவ்வறிவுறாத தாயின் செய்கைகளுக்கும் நாம் வேற்றுமை
கூறவேண்டுவதில்லை. கற்றறிந்த மகளிர் ஈன்ற மக்கள் அறிவாற்
றலில் சிறந்தவராய் விளங்குவார்கள். இவராலேயே பிற்கால
உலகம் செம்மை யடைவதென்பது மிகையாகாது. பிற்கால உல
கைச் செம்மைப் படுத்துவது பெண் கல்வியே. பெண் கல்வி



இல்லாப் பெருங்குறை நமது யாதவ சமுதாயத்தைப் பெரிதும்
பாதித்திருக்கிறது. பெண் கல்வியைப் பெற்றுக்கொள்ளாத சமூகம்
ஒரு காலத்திலும் முன்னேற்றமடைய முடியாதென்பது திண்ணம்.
பெண் கல்வியுடைய சமுதாயங்கள் பெரும் முன்னேற்றம் அடைந்து
வருகின்றனவென்பது கண்கூடு. பெண்கல்வி மக்கள் வாழ்
விற்கு இன்றியமையாத ஒன்றென யாவரும் ஒப்பமுடிந்த ஒரு
விஷயம். அதைப்பற்றிப் பின்னுங் கூறிப் பெருக்க எண்ணவில்லை.
ஆனால் பெண்கல்வியைப்பற்றி நன்கு தெரிந்தவர்களான நமது
சமுதாயத்திலுள்ள சிலரும் என்ன அறிந்தாலும் அதைப் போற்று
வதில்லை யென்பதைக் கட்டாயமாகக் கொண்டிருக்கிறார்கள் என்
பதைக் கவலையோடு கூறவேண்டிய திருக்கிறது. பெண்கல்வி
பெருத்த திருவாங்கூரிலே - உயர்தரப் பட்டங்கள் பெற்ற மகளிர்
பலர் மருவும் திருவாங்கூரிலே - மாதர்களுக்கெனத்தனி இயக்
கங்களும் பத்திரிகைகளும் நடைபெறும் திருவாங்கூரிலே சாதார
ணக் கல்விகற்ற ஒரு யாதவ கன்னிகையைக் காணக்கிடைக்கவில்லை.
பெண்கள் பட்டம் பெற்றுச் சட்ட ஞானம் உடையவர்களாக
வேண்டுமென்பது எமது கொள்கையல்ல. நல்லறிவு பெறற்கு
வேண்டிய நூல்களை வாசிக்கத் தகுந்த திறத்தில் தமிழ் மொழியில்
பயிற்சி பெற்றால் போதுமானது.

இனி நமது சமூகச்செல்வ நிலைமைப்பற்றிச் சிறிது கவனிப்
போமாக. யாதவ மக்களுடைய பொருள் வருவாயைப் பார்ப்போ
மானால் கிராமங்களிலும் நகரங்களிலும் மிக மோசமாகவே காணப்
படுகிறது அருமையாகச் சிலர் ஆங்காங்குச் செல்வவந்தராய்த் திகழ்
கின்றனரே ஒழிய சமுதாயம் பொதுவாகவே அதற்குப் போதிய
செல்வத்தைப் பெற்றிருக்கிறதெனக் கூறவழியில்லை. பொருளின்றி
ஆவதெது? பொருள் பெற்றாலன்றோ பிறநலன் யாவும் பெறலாம்.
செல்வமும் சிறப்பும் ஒன்றற்கொன்று தொடர்புடையனவாம்.

இனி யாதவ மக்கள் இறைவனை இறைஞ்சும் முறைகளைச்
சிறிது கூறலாமென எண்ணுகிறோம். கண்ணன் நமது கடவுள்.
யாதவ குலவிளக்கு ஆயர்தம் கொழுந்தே யென்றார் ஆன்றோரும்.
கீதையருளினவர் நமது கடவுள். கண்ணனுக்குப் பாமாலை சூட்
டாத கவிகள் அருமை. 'ஐயஹோ கண்ணா நீயல்லாது வாழ்வ
தில்லேன்' என்றார் பெரியாரும். 'கண்ணனது கடாட்சம் பெறுவ
தற்கு அவனுக்கு அன்பான யாதவர்களாக இருக்கவேண்டும்' என்

பது கருதியே பிறகுலத் தவதரித்த பெரியாரெல்லாம் தம்மை யாதவர்களாகப் பாவித்தே பாசுரமருளியுள்ளார்கள். பெரியாழ்வார் தம்மை யசோதா பிராட்டியைப் போலவும் ஸ்ரீ ஆண்டாள் ஆயர் மகளிரில் ஒருவரைப் போலவும் பாவனைசெய்து பக்தி செலுத்திப் பாசுரமருளியுள்ளார்கள். வட நாட்டிலுள்ள மீராபாய் என்ற பக்தியிற் பெரியாரும் மேற்சொன்ன பாவனையைக் கொண்டிருந்தார். "கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை பணிமின் நீரே" என்றார் தொண்டரடிப் பொடி யாழ்வாரும். இங்ஙனம் ஏனைய வகுப்பினர் கண்ணனை இறைஞ்சுவதற்கு யாதவர்களாகத் தம்மைப் பாவனை செய்தும் கண்ணபிரானையே வழிபடு கடவுளாகவுங் கொண்டாடிவரக் கண்ணனைக் குலதெய்வமாகக் கொண்ட யாதவ மக்களில் சிலரேனும் கண்ணனை வழிபடுவதுண்டா எனும் ஐயம் எமக்குண்டாகிறது. அந்தோ! இவர் தன்மைக்குப் பெரிதும் இரங்குகிறோம். கண்ணனை எண்ணி வணங்கக் கடமைப்பட்ட இவர்கள், கருப்பனை வணங்கி ஆடுகளைப்பலியிட்டு ஆடுவது எவ்வளவு மதியீனம். யாதவ குலத்திற்குரிய கோகுலாஷ்டமியை ஏனைய வகுப்பினர் வெகு விமரிசையாகக் கொண்டாட இவர் வாளாவிருப்பதும் வியப்பே. இவ்வழிபாட்டிற்கே இவ்விதமாயின் யாதவர்களுடைய புகழைக்கூறும் பாகவத புராணத்தையும் கண்ணன் திருவாய் மலர்ந்த பகவற்கீதையையும் அவன் புகழைக்கூறும் திவ்விய பிரபந்தத்தையும் இவர்கள் ஓதி யுணர்வார்களா?

கிராமச் சீர்திருத்தம், கிராம முன்னேற்றம், கிராம நிர்மாணம் என்ற மொழிகள் எங்கும் முழங்கப்பட்டு வருகின்றன. தேசீய வாதிகளும் சமயவாதிகளும் கிராமச் சீர்திருத்தத்தை முக்கியமாக எண்ணுகிறார்கள். காலஞ்சென்ற தேச பந்துதாஸர் கிராமச் சீர்திருத்தத்தையே கடைசி முறையாகக் கைக்கொண்டார். இதற்கெல்லாம் காரணம் இந்தியா விவசாயம் மிகுந்த நாடானதினால் கிராமங்களில் வாழ்வதே ஜனங்களுக்குச் சௌகரியம். ஆகையினால் நகரங்களைவிடக் கிராமங்களிலேயே இந்திய ஜனங்கள் ஏராளமாக வாழ்ந்து வருகிறார்கள். இந்தியாவில் பெரும்பகுதியினரான கிராம ஜனங்களிடையே கல்வி இல்லாக் குறையால் நாடு எதற்கும் தகுதியற்றதாய் இருந்து வருகிறது. கிராமங்களில் சென்று சீர்திருத்தம் செய்தால்தான் இந்தியாவில் எக்காரியமே



னும் செய்ய வியலுமென்பது யாவருந் தெரிந்த உண்மை. ஆகையினால் கிராமச் சீர்திருத்தத்திற்கு எல்லாரும் முயலுகின்றனர்.

பொதுவே இந்தியாவிலுள்ள எவ்விதமான இயக்கங்களுக்கும் கிராமச் சீர்திருத்தம் தேவையாகிறது போல நமது யாதவ சமுதாயச் சீர்திருத்தத்திற்கும் அது தேவையாகிறது. ஏனைய இயக்கங்களைவிட யாதவ சமுதாயத்திற்குக் கிராமச் சீர்திருத்தம் மிகையாக வேண்டற்படுகிறது. யாதவ மக்களில் பெரும்பாலோர் விவசாயம்! பசுபரிபாலனம் என்ற ஒன்றற்கொன்று தொடர்புடைய கிராம வாசத்திற்கு இன்றியமையாதனவாகிய தொழில்களையே கைக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் இவரில் பெரும்பகுதியோரும் கிராமாந்தரங்களிலேயே வாழ்ந்து வருகிறார்கள். பெரும் பான்மையோரான கிராம ஜனங்களிடையே சீர்திருத்தம் செய்யாமல் நடைபெறுவதென்ன?

கிராமச் சீர்திருத்தம் எல்லாக் கிராமங்களிலும் நடைபெறவேண்டும். அதற்குக் கிராமந்தோறும் யாதவ சபைகளை ஸ்தாபனஞ்செய்ய வேண்டும். அச்சபைகள்மூலம் எவ்வித சீர்திருத்தமும் எளிதாகச் செய்துவிடலாம். முதலில் கல்வி விஷயத்தில் கிராமச் சபையார் கவனம் செலுத்தி வரவேண்டும். எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயம் ஆரம்பக் கல்வி பயிற்றவேண்டும். பெண்களுக்குக் கல்வி கூடாதென்ற குருட்டு நம்பிக்கை நம்மைக்கெடுத்துவிட்டது. பெண்களே நமது சமூக முன்னேற்றத்திற்கு முக்கியமானவர்கள். அவர்கள் உயர்வு சமுதாய உயர்வு. ஆகையால் அவரைத்தாழ்த்தி வைத்திருப்பதை விட்டுவிடுவோமாக. "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்".

பொருள் தேடும் வழியில் ஐக்கிய நாணய சங்கங்கள் பேருதவிபுரிந்து வருகிறதினால் ஆங்காங்கு ஐக்கிய நாணய சங்கங்களை நிறுவி அதன்மூலம் அவரவருக்குத் தகுந்த தொழிலைக் கைக்கொண்டு ஒழுகவேண்டும். "எங்கள் புராதனத் தொழிலைத் தான் கைக்கொண்டு ஒழுகுவோம்" என்ற வழக்கத்தை யாதவ மக்கள் விட்டுவிட்டுக் கால வியல்பிற் கொத்தவாறு இனிக் கைத்தொழில் முதலியன புரிந்து வருவார்களாக.

கல்வியுஞ் செல்வமும் கைகூடுமானால் பின் யாவும் எளிதில் சாதித்துவிடலாம். ஆசாரச் சீர்திருத்தம் முதலியன தாமாகவே

அமைந்து கொள்ளுமென்பதில் ஐயமில்லை. இவற்றால் மாத்திரம் யாதவ சமுதாயம் முன்னேற்ற மடைந்து விடுமென நான் கூற முன்வரவில்லை. யாதவ சமுதாயத்தவர் பல பிரிவாகச் சிதறுண்டு ஒருவர்க் கொருவர் தாங்கள் இன்ன சமுதாயத் தவரென்று உணர்ந்து கொள்ளாதவாறு ஆங்காங்கே தனித்தனியாய் வாழ்ந்து வருகிறார்கள். இப்பிரிவால் ஒருவர்க் கொருவர் உயர்வு தாழ்வும் கற்பித்துக் கொண்டாரெனில் யாதவ சமூகத்தின் பிரிவுகளைப்பற்றி விரிப்பது மிகை. "வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தைப்பற்றி விவாதம் நடை பெற்றுவரும் தற்காலத் தமிழ் நாட்டிலே பலவேற்றுமைகளைக் கொண்ட யாதவ சமூகம் என்ன பயனை எதிர் பார்க்க முடியும்" என்பதுதான் எமது எண்ணம்.

ஒன்று பட்டாலுண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வு
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால்பின் நமக்கேது வேண்டும்.

என்ற புலவர் பெருமானின் பாடலைக் கவனிப்போமாக. 'ஐகமத்தியம் மஹாபலம்' என்பது ஆன்றோர் மொழி. பிரிந்துபோகும் பல சக்திகளை ஒன்று கூட்டினால் அதற்கேற்படும் ஊக்கம் மிகவலியதாமன்றோ? தொகையால் தமிழ் நாட்டுச் சமூகங்களில் முக்கியமானவொன்றாய்ப் பலபிரிவாகச் சிதறப்பட்டுக்கிடக்கும் யாதவசமூகம் ஒன்று சேர்ந்துவிட்டால் அதற்கேற்படும் சக்தியை விவரிப்பதெங்ஙனம்? இம்மஹாச் சக்தியால் யாதவ சமுதாயத்திற்கு எடுத்த காரியத்திலெல்லாம் ஜயம் கிடைக்குமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இவ்வொற்றுமையும் அதனால் ஏற்படும் சக்தியும் வெற்றியும் வருஷாவருஷம் கூடிப் பிரியும் மஹாநாடுகளால் மாத்திரம் வராதென்று கூறுகிறோம். கிராமச் சீர்திருத்தத்தின்மூலம் அன்பு ஒற்றுமை சமுகாயாபிமானம் முதலியவற்றை வளர்க்கவேண்டும். இவ்வொற்றுமையா லுண்டான சக்தியால் தம் உரிமைகளை நழுவவிடாது பாதுகாத்துக்கொள்ளத் தகுந்த திறன் யாதவ சமூகத்திற்கு ஏற்பட்டுவிடும். தலஸ்தாபனங்களிலும் யாதவ சமுதாயம் தக்க பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருக்கும். இங்ஙனம் ஒற்றுமையால் உயிர் கொண்டெழுந்த சமுதாயம் தமது சமூக வாலிபர்களுக்கு உயர்தரக் கல்வியிலும் அயல் நாட்டுக் கல்வியிலும் உதவி செய்ய முன்வருமானால் தமிழ் நாட்டிலுள்ள சமூகங்



களுக் கிடையே யாதவ சமூகமும் ஒன்றென அரசாங்கத்தாரால் எண்ணப்படுவோம். இந்த உயரிய நிலைக்கு உழைத்தல் ஒவ்வொரு யாதவனுடைய பெருங் கடமையாம்.

நாம் யாதவசமூதாயத்தில் தற்காலம் இருந்துவரும் குறைகளையும் அவற்றால் சமுதாயம் அடைந்துவரும் இடுக்கண்களையும் அவற்றை ஒழிக்கும் விதத்தையும் ஒருவாறு கூறிவிட்டோமென்று எண்ணுகிறோம். ஆனால் "சொல்லுதல் யார்க்கும் எளிதாம், அரியவாம் சொல்லிய வண்ணஞ்செயல்" என்ற பெரியாருரை ஞாபகத்திற்கு வருகிறது. கிராமச் சீர்திருத்தத்திற்குரிய யாதவசபைகளை ஸ்தாபனஞ் செய்யும் பொருட்டுக் கிராமங்களுக்குச் செல்லுபவர்களுக்கு இதன் உண்மை புலனாகாமற் போகாது. முதியவர்கள் தங்கள் முயற்சிகளை இதிற் செலவு செய்ய முடியாதவாறு குடும்பப் பந்தத்தில் ஏற்பட்டிருப்பவர் பலர். எஞ்சிய சிலர் யாதவ சபைகள் இப்போது எதற்கெனவினவித் தம்மாலொன்றுஞ் செய்யவியலாதெனக் கூறிவிடுவார்கள். இளைஞரை யடுத்தால் முதியோர்க்கல்லால் தங்களுக்கு இக்காரியஞ் செய்ய முடியாதெனக் கூறுவார்கள். இவர்கள் மனோநிலையை எவ்விதம் கூறுவது. இத்தாலி சீனம் ருஷியா முதலிய நாடுகள் அந் நாட்டு இளைஞர்களாலேயே முன்னேற்ற மடைந்திருக்கின்றன. ஒவ்வொரு இயக்கங்களும் இளைஞர்களாலேயே ஊக்கமுண்டாய் வருகின்றன. யாதவ சமூக இயக்கத்திற்கும் அச் சமூக இளைஞர்களே பொறுப்பென எண்ணி அவர்களுக்கும் சில வார்த்தைகள் கூறி எமது கட்டுரையை முடிக்கலாமென்று எண்ணுகிறோம்.

எனதன்பார்ந்த யாதவ இளைஞர்களே! இளைஞர்களாகிய நம்மால் ஆகாததொன்றில்லை. உலக சரித்திரம் இதன் உண்மையை வெளிப்படுத்தி வருகிறது. யாதவ சமூகத்தின் அன்பு, வன்மை, பரோபகாரம், ஞானம், செல்வம், வெற்றி என்பவைகளுக்கு அடிப்படை யாதவ இளைஞர்களாகிய நாமே என்பதை அறியுங்கள். யாதவ சமூகத்தின் வன்மை முழுதும் நம்மிடத்தில் அடங்கி யிருக்கிறதென உறுதி கூறுகிறேன். எமது அருமை யாதவ இளைஞர்களே! முன்னேறிச் செல்லுவோம். அச்சமின்றிச் செல்லுவோம்; வெற்றி கிடைக்கும்வரையிலும் முன்னேறிச்செல்லுவோம். நமது யாதவ சமுதாயம் நெடுநாட்களாக ஒருநல்லநிலையை

அடையாதிருக்கிறது. இப்பொழுதும் நல்லநிலை யடையுமோவென அஞ்சவேண்டியதாயிருக்கிறது. அரசியலிலும் ஆசார சீர்திருத்தத்திலும் நாம் பின்னடைந்து வருகிறோம். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவவாதத்தால் தமிழ்நாட்டுச் சமுதாயங்களெல்லாம் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யத் தொடங்கிவிட்டன. முன்னேறிவரும் ஜாதியார் நம்மைக் கண்டு ஏளனஞ்செய்து நகைக்க வழி தேடக்கூடாது. ஆகவே கிராமங்களிலும் நகரங்களிலும் வாழும் யாதவ இளைஞர்கள் ஆங்காங்குத் தமிழ்நாடு முழுமையும் யாதவ சபைகளைக் காண முயல்வார்களாக, முயற்சி திருவினையாக்கும்.

ச. செல்லம், (யாதவன்)

சுசீந்திரம்.

---

## கண்ணன் சரிதை.

துவாபர யுகத்தில் பூலோகத்திலே அசுராம்சமான அரசர்கள் பிறந்து அடாத செயல்களைச் செய்தமையால் பூமிதேவி, அவர்களது கொடுமையையும் பாரத்தையும் பொறுக்கமுடியாது வருந்திப் பசு ரூபத்தோடு பிரமதேவனிடம் சென்று முறையிட்டாள்; பிரமதேவன் அவள் துன்பத்தை நீக்கக் கருதித் தேவர்களுடன் பூமிதேவியை அழைத்துக்கொண்டு, பாற்கடலில் அறிதுயில் கொள்ளும் ஸ்ரீ: நாராயணனை அடைந்து, பூமிதேவியின் துயரத்தைக் கூறி முறையிட்டான். அதைச் செவியேற்ற பரந்தாமன், தான் பூமியில் வசுதேவ புத்திரனாய் அவதரித்து, துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனஞ் செய்யப்போவதாக அனுக்கிரகித்தனன், அதையறிந்த பிரமாதி தேவர்கள் அகமகிழ்ந்து தத்தம் இருப்பிடம் போய்ச் சேர்ந்தனர்.

பின்னர்ப் பகவானது கட்டளையின்படி தேவர்கள் கோபாலர்களாகவும், யாதவ அரசர்களாகவும், தேவஸ்திரீகள் கோபிகாஸ்திரீகளாகவும், முனிவர்கள் பசுக்களாகவும் வடமதுரையிலும், கோகுல பிருந்தாவனங்களிலும் பிறந்தார்கள். அவ்வாறு பிறந்தவர்களுள் வடமதுரையில் வசுதேவன் என்பவன், உக்கிரசேனன் என்னும் யாதவராஜனது குமாரத்தி தேவகி என்பவளைத் திருமணம் புரிந்து தன் அரண்மனைக்கு ரதத்தின்மீதேறிப் புறப்பட்டான்.



தேவகியுடன் பிறந்த கம்சராஜன் அந்த ரதத்தில் பூட்டிய குதிரைகளை நடத்திக்கொண்டு வந்தான்; வரும்போது "அடா மூடா! இவள் உன் தங்கையென்று ரதத்தில் வைத்துச் சாரத்தியம் செய்து போகிறாய், இவளுடைய எட்டாவது பிள்ளை உன்னைக் கொல்லப் போகிறது" என்று ஒரு அசரீரிவாக்குக் கூறிற்று. அதனைக்கேட்ட கமசன் திடுக்கிட்டுத் தேவகியைக் கொல்லுதற்கு வாளை உருவினான். இதனை அறிந்த வசுதேவன் கொல்லுதல் தகாதெனப் பலவாறு வேண்டியும் கம்சன் கேளாமையால், 'தேவகி வயிற்றிற் பிறக்கும் குழந்தைகள் எல்லாவற்றையும் உன்னிஷ்டப்படி செய்தற்கு உன்னிடம் தந்துவிடுகிறேன்' என்றான் வசுதேவன். அதற்கிசைந்து கம்சன் தேவகியைக் கொல்லாது நீங்கினான். மணமக்கள் அரண்மனை சென்று இன்பமாய் வாழ்ந்து வந்தார்கள்.

தேவகி கர்ப்பமுற்று ஒரு குழந்தையைப் பெற்றாள். பெற்றவுடன் வசுதேவர் அக்குழந்தையைத் தான் முன் வாக்குறுதி செய்தபடியே கம்சனிடம் கொடுக்கக் கம்சன் வசுதேவருடைய சத்தியத்தைப் புகழ்ந்து பேசத்தொடங்கியவனாய், "வசுதேவரே! என் உயிருக்கு ஆபத்து விளைக்கும் என்பது எட்டாவது குழந்தைதானே! இக்குழந்தையில்லையே! ஆதலால் இதனை நான் கொல்லுதல் அநீதியாகும். இதனை எடுத்துக்கொண்டு போய்விடும்" என்று சொல்லி வசுதேவரை அனுப்பினான். அனுப்பியவன் பின் நாரதர் கூறிய சில செய்திகளால் மனம் மாறி அனுப்பிய குழந்தையைத் திரும்பவும் கொண்டுவரும்படி செய்து அக்குழந்தையைக் கொன்றுவிட்டு மேலும் தேவகியிடம் பிறக்கும் குழந்தைகளையெல்லாம் கொன்றுகொண்டே வந்தான். இவ்வாறு கம்சன், தேவகி குழந்தைகளைக் கொன்றுகொண்டு வருங்கால் உலகரக்ஷகனாகிய ஸ்ரீ: நாராயணனது அம்சமாகிய ஆதிசேடன் தேவகிக்கு ஏழாவது கர்ப்பமாகத் தோன்றினான். இச்சமயத்தில் பகவான் தனது மாயையை நோக்கி, 'தேவி! வசுதேவனது மனைவியாகிய ரோகிணி என்பவள் கம்சனுக்குப் பயந்து கோகுலத்தில் மறைந்து வசித்துக்கொண்டிருக்கிறாள். இப்போது என்னுடைய அம்சமாகிய ஆதிசேஷன் தேவகியின் ஏழாவது கர்ப்பமாகத் தோன்றியிருக்கிறான். நீ அந்தக் கர்ப்பத்தை இழுத்துக்கொண்டு போய் ரோகிணியின் திருவுதரத்தில் சேர்ப்பாயாக. பிறகு நான் என்னுடைய திவ்யமங்கள ரூபத்துடன் தேவகிக்குப் பிள்ளையாய் வந்து

பிறக்கிறேன். நீ கோகுல சக்கரவர்த்தியாகிய நந்தகோபரது பத்தினி அசோதையிடத்தில் பிறப்பாயாக; இனி உலகத்தில் நீ நாராயணீ முதலிய நாமங்களோடு யாவராலும் பூஜிக்கப்படுவாய். தேவகியின் கர்ப்பத்தினின்றும் உன்னால் இழுக்கப்பட்டமைபற்றி அந்த ஏழாவது கர்ப்பமாகிய குழந்தை சங்கர்ஷணன் என்றும், உலகத்தை மகிழ்விப்பவனானமையால் ராமன் என்றும், மிக்க பலவானானமையால் பலபத்ரன் என்றும் அழைக்கப்படுவான் என்று கட்டளையிட்டருளினார்.

இவ்வாறு கட்டளையிடப் பெற்ற மாயை, அங்ஙனமே ஆகட்டுமென்று கட்டளையைச் சிரசில் தாங்கிப் பூமிக்கு வந்து பகவானது கட்டளைப்படியே செய்து முடித்தது. அப்பால் பக்தவத்ஸலனாகிய பகவானும்; வசுதேவனது மனத்தில் சங்கல்ப ஞானத்தினால் பிரவேசித்து அவன் மூலம் தேவகியின் திருவயிற்றிற் புகுந்தான்; தேவகி கிழக்குத் திக்கில் மேகத்தில் மறைந்திருக்கும் சந்திரனைப்போன்று பகவானாகிய கர்ப்பத்தைத் தன் வயிற்றில் தரித்து எக்காலும் இல்லாத தேஜோமயமான ஒளியுடன் விளங்கினாள். இங்ஙனம் விளங்கிய தேவகியைக் கண்ட கம்சன் 'இவளுக்கு இப்படிப்பட்ட ஒளி ஏது? இதனால் இவளுடைய கர்ப்பத்தில் விஷ்ணு புகுந்திருக்கிறானென்பதில் சந்தேகமில்லை. இவன் என்னை அழிக்குமுன்னம் கர்ப்பத்தோடு இவளைத் தொலைத்துவிடலாமென்றாலோ இவள் பெண்ணாக இருக்கிறாள். அன்றியும் கர்ப்பிணி. கர்ப்பிணியைக் கொல்லல் நரகத்துக்காளாக்கும் மகாபாதகமாகும்' என்று கருதித் தேவகியைக் கொல்லும் எண்ணத்தை விட்டுத் தேவகி வசுதேவரைச் சிறைப்படுத்திக் குழந்தை என்று பிறக்குமென்று பகவானது ஜனனத்தையே எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். இச்சமயம் ருத்திராதி தேவர்களும் நாரதாதி முனிவர்களும் தேவகியிருக்கும் இடத்தை அணுகிக் கர்ப்பத்திலிருக்கிற பரமனை வேதசூக்திகளால் துதித்துத் தேவகியை வாழ்த்தித் தேற்றிப்போனார்கள்.

அப்பால் ஏற்ற காலத்தில், கர்மத்தினால் உண்டாகும் பிறவியற்ற பகவான், தான் உலகத்தில் பிறக்கவேண்டுமென்று திருவுள்ளங் கொண்டான். அக்காலம் எல்லாவிதத்திலும் அழகாக விளங்கிற்று; பகவானது ஜன்ம நக்ஷத்திரமாகிய ரோகிணி நக்ஷத்திரத்துக்கு, மற்ற நக்ஷத்திரங்களிலிருக்கிற சூரியன் முதலிய கிரகங்களும் அசுவினி முதலிய நக்ஷத்திரங்களும் அனுகூலங்களாயிருந்தன. நக



ரங்களும் ஊர்களும் ஆயர்பாடிகளும் மங்களங்கள் நிறைந்திருந்தன. நதிகளெல்லாம் தெள்ளிய நீரால் பெருகிவழிந்தன; தடாகங்களில் தாமரை முதலிய புஷ்பங்கள் அழகாய் மலர்ந்திருந்தன; சோலைகளெல்லாம் பக்ஷிசாலங்களும் வண்டுகளும் செய்த இனிமை ஒலியோடு பூங்கொத்துக்களைத் தாங்கித் திகழ்ந்தன. மந்தமாருதம் சுகந்தமுடன் வீசிற்று; யாகாக்கினிகள் வலஞ் சுழித் தெரிந்தன. தேவதைகளின் மனங்களும் சாதுக்களின் மனங்களும் மகிழ்ச்சியிருந்தன. ஆகாயத்தில் துந்துபி வாத்தியங்கள் முழங்கின. கந்தருவ கின்னரர்கள் இனிய கானங்களைப் பாடினார்கள். தேவஸ்திரீகள் அழகிய நடனங்களை ஆடினார்கள். இப்போது மெல்ல மெல்ல மாலைக் காலம் வந்து பின்பு இருள் மூடியது. மேகங்கள் கடல்போல் முழங்கின; இத்தகைய மங்களமான சமயத்தில் கிழக்குத் திக்கில் பூர்ண சந்திரன் உதிப்பதுபோலத் தேவகியிடத்திலிருந்து ஸ்ரீமகா விஷ்ணுமூர்த்தி செந்தாமரைக் கண்களோடும் சதுர்ப்புஜங்களோடும் சங்குசக்ரபாணியாய்க் கழுத்தில் கவுஸ்துவமணி புரள, அரையில் பீதாம்பரம் திகழ, கிரீடகுண்டல ஒளிசூழ்ந்த கேசத்தோடும் நீல மேகவண்ணத்தோடும் பார்க்கப் பதினாயிரம் கண்களும் போதாதென்னும்படி அற்புத உருவமமைந்த பாலகனாய் அவதாரமானான். அங்ஙனம் அவதரித்த தெய்வக் குழந்தையை வசுதேவன் இருகண் மலரும் குளிரக்கண்டு ஆநந்த பரவசனானான்.

ஆ - கா.

(தொடரும்)

# நிகழ்ந்த நமது மஹா நாடுகள்.

சென்னை மாகாணத்தில் யாதவ மக்களுக்குச் சமுதாய உணர்ச்சியை உண்டு பண்ணின பெருமை சென்னை நகர வாசிகளான நமது யாதவப் பெரியார்களுக்கே உரிமை. இவர்கள் சென்னைமா நகரிலே யதுகுல சங்கமெனச் சங்கமொன்று நிறுவி அதன் மூலம் சிலகாலம் சமூகத் தொண்டாற்றி வந்தனர். அதுகாலை யாதவ மாணவர்களுக்குக் கல்விக்கான உதவியிலே அவர்கள் கருத்துச்சென்றது. தமிழ் நாட்டில் சாதாரணமாக நடைபெற்று வரும் ஜாதி மஹா நாடுகளைப்போல சென்னை மாகாண யாதவர்களுடைய மஹா நாட்டையும் கூட்டவேண்டுமென்ற அவா அவர்க்குண்டா

யிற்று. அதற்கான முயற்சிகள் நடைபெற்றன. 1925-வது வரு
ஷம் எப்பிரல்மாதம் 12உ சென்னை நகரில் கிண்டி என்னுமிடத்தில்
சென்னை மாகாண யாதவர்களின் முதல் மஹாநாடு கூடிற்று.
அம்மஹா நாட்டிற்கு மைசூர் டாக்டர் திருவாளர், வி. அப்பாயி
நாயுடு அவர்கள் (யாதவர்) தலைமை வகித்தார்கள். சென்னை உயர்
தர நீதிமன்ற நியாயவாதி திருவாளர் எஸ். வேங்கடாசலம்பிள்ளை
பி. ஏ, பி. எல். அவர்கள் உபசரணைக் கூட்டத் தலைவராய் இருந்து
தம் கடமைகளைச் செய்தார்கள். இரண்டாவது மஹா நாட்டைக்
கூட்டத் திருச்சிராப்பள்ளி வாசிகளுக்குச் சிரத்தையிருந்தது அதன்
பயனாய் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குப் பெரிய கோயிலாம் ஸ்ரீரங்கத்தில்
1926 எப்பிரல் மாதம் 3-4உகளில் இரண்டாவது மஹாநாடு கூடி
யது. சென்னை, திருவாளர் ராவ்சாகிப், டி. ஸி. ஆதிகேசவலுப்
பிள்ளை, பி. ஏ, பி. எல். அவர்கள் (யாதவர்) அக்கிராசனம் வகித்
தார்கள். இம்மஹாநாட்டிற்கு வரவேற்புக்கழகத்தலைவர் திருவாளர்
டி. ஜி முத்துசாமிக்கோனார் அவர்கள். மூன்றாவதுமஹாநாடு செந்
தமிழ்மொழிக்குத் தாயகமான மதுரைவாசிகளின் நன்முயற்சியால்
மதுரையம்பதியிலே 1927 செப்டெம்பர்மாதம் 17-ம் 18ம் உகளில்
கூடியது. அம்மகா நாட்டிற்குக் கோயம்புத்தூர் உயர்தர நீதிமன்ற
நியாயவாதி ராவ்சாகிப் திருவாளர் எம். வேணுகோபால்பிள்ளை.
பி. ஏ. பி. எல். அவர்கள் (யாதவர்) தலைமை தாங்கினார்கள். பிரபல
புத்தகவர்த்தகரான திருவாளர் இ.மா. கோபாலகிருஷ்ணக்கோனார்,
அவர்கள் உபசரணைக்கூட்டத் தலைமை தாங்கித் தம் தொண்டாற்றி
னார்கள். 4-வது மஹாநாடு திருநெல்வேலி வாசிகளின் ஊக்கத்தால்
1928 டிசம்பர் 26-27உகளில் வேலூர் நீதிமன்றநியாயவாதி திருவா
ளர் வி. கிருஷ்ணரெட்டி பி. ஏ. பி. எல். அவர்கள்(யாதவர்)தலைமை
யில் கூடியது. திருவாளர் ப. சு. துரைசாமிக்கோனார், அவர்கள் வர
வேற்புக் கழகத்தலைவரா யிருந்தார்கள். இம்மஹா நாடுகளின்
பெரும்பயனாகத் தென்நாட்டு யாதவ மக்களிடையே இப்பொழுது
தான் சமூகவுணர்ச்சி எழுந்திருக்கிறது. இதுபோல் பல மஹா நாடு
கள் கூடி யாதவ சமுதாயம் தன் முற்கால உயர்வை அடையுமாக.
இதுகாறும் நடந்த இம்மகாநாடுகள் ஒற்றுமையுடன் சிறப்பாய்
நடைபெறுதற்குக் காரணமாயிருந்தவர்கள் சென்னை திருவாளர்
M. அப்பாத்துரைப் பிள்ளையவர்களாவர். அவர்களது இப்பெரு
முயற்சிக்கு நாம் நன்றியறிதலாகவிருத்தலோடு அவர்கள் எல்லா
நலன்களும் எய்த இறைவன் திருவருளைச் சிந்திப்போமாக.

# அமெரிக்கரது ஆயர் தொழில்முறை.

அமெரிக்கா தேசத்திலுள்ள யுனைட்டெட் ஸ்டேட்ஸிலி
ருந்து ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களில் பசு
வின் பாலிலிருந்து இயற்றப்பட்ட பண்டங்கள் (புட்டிப்பால், குழந்
தைப்பால், பாலடைக்கட்டி முதலியன) ஒரு சிறந்த பகுதியாகும்.
இவ்வுலகின் கண்ணே தற்காலம் டென்மார்க்கும் ஸ்விட்ஸர் லந்
துமே ஆயர் தொழிலில் சிறந்த தேசங்கள் என்னலாம். அடுத்த
படியாக யுனைட்டெட் ஸ்டேட்ஸூம் இவற்றிற்கு ஒருவாறு சம
மெனக் கொள்ளலாம். ஆங்கே வியாபார சங்கங்கள், பசுக்கூட்
டங்களை ஆதரித்து ஆயர்தொழிலை நடத்திவருகின்றன. இத்தகைய
சங்கங்கள் நன்மையை நோக்கி, அத்தேயத்தில் வாஷிங்டன் நகரி
லிருந்து அரசாங்க விவசாய இலாகாதார் அடிக்கடி இத்தொழில்
சம்பந்தமான அறிக்கைகளை வெளியிடுவது வழக்கம். இவ்வறிக்
கைகளிலொன்றை ஆராய்வதே இவ்வியாசத்தின் நோக்கமாகும்.
இந்த அறிக்கை ஐம்பது பொதுவிதிகளோடு பொருந்தியிருக்கிறது.
இதனால் பசுக்களை ஆதரிக்கும் விதமும், பாலைக் கறந்து ஏற்றவாறு
பாண்டங்களிலிட்டுச் சேமித்துவைக்கும் முறையும் நன்கு விளங்கு
கின்றன. இம்முறைகளை அந்நாட்டு மக்கள் அநுட்டித்து வருகி
றார்களென்பதற்கு அவரது தொழிலின் ஆக்கமேசான்றாகும். நமது
நாட்டில் தற்சமயம் தாழ்ந்த நிலையிலிருக்கும் ஆயர் தொழிலைச்
செய்து வருகிறவர்கள் தமது குறைகளை நீக்கவேண்டின், அயல்
நாட்டாரிடமாவது இது சம்பந்தமான சில முக்கியமானவைகளைக்
கற்றுணர்தல் அவசியம். ஆதலின் பின்வரும் விஷயங்களை நமது
நேயர்கள் கற்று ஆராய்ந்து அவைகளுள் நம் நாட்டுக்கு ஏற்ற
வற்றை மேற்கொண்டு பயன்பெறுவார்களென நம்புகின்றோம்.

பசுமந்தையின் சொந்தக்காரருக்கும் அவரது வேலைக்காரருக்கும்.

பசுபரிபாலன விஷயமாகக் கூறும் நூல்கள் பலவற்றையும்
நன்கு படிப்பதேயன்றி முறையே புதிது புதிதாக வெளிவரும்
அறிக்கைகளையும் படித்துத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

பசுக்களும் அவற்றோடிருந்து வேலை செய்வோரும், மாட்டுப்பட்டியும், பால் சேமித்து வைக்கும் இடமும், அங்குள்ள பாண்டங்களும் ஒரு சிறிதும் அசுத்தமில்லாது எப்பொழுதும் தூய்மையாயிருத்தல் வேண்டி முதலாளியும் பிறரும் வெகு கண்டிப்பாயிருத்தல்வேண்டும்.

எத்தகைய நோயாளியேனும், நோயாளிகளோடு சம்பந்தப்பட்டவரேனும் மாட்டுப்பட்டியையோ அல்லது பால் வைக்கும் இடத்தையோ அணுகவிடல் கூடாது.

மாட்டுப் பட்டியைப் பிரத்தியேகமாகக் கறவை மாடுகளுக்கும் கன்றுகளுக்குமே உபயோகித்தல் வேண்டும். பட்டிக் கட்டடத்தில் சேந்திகளோ, (பரண்) பூமிக்கு அடியிலியற்றப்பட்ட சுரங்க அறைகளோ இருத்தல் கூடாது.

மாட்டுப் பட்டிகளில் நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் அதிகமாக இருத்தல்வேண்டும், கட்டிடத்தின் தரையும், சுவர்களும் இலேசாகவும் தூய்மையாகவுமிருத்தலே நலம்.

புழுதியடைந்த புல்லையோ, அசுத்தமான வைக்கோலையோ மாடுகளுக்குப் படுக்கையாக விரித்தல் தகாது.

நாற்றமான பொருள்களையோ நாசிக்கு எரிச்சலையளிக்கும் பொருள்களையோ மாட்டுப் பட்டியில் வைக்கலாகாது. எருக்களைப் பட்டிக்கு வெளியே குழியிலிட்டு மூடி வைக்கவேண்டும். அதனை அங்கேயே மிகுந்து போகவிடாது. சிற்சில நாட்களுக்கொருமுறை பட்டியிலிருந்து வெகுதூரத்துக்கப்பாலே கொண்டுபோய் அவற்றைச் சேமித்து வைக்கவேண்டும்.

வருடத்திற்கு இரண்டு அல்லது ஒருமுறையாவது மாட்டுப் பட்டியை வெள்ளையடிக்கவேண்டும். மூத்திரம் ஓடும் சாக்கடைகளைத் தினந்தோறும் கலிசியம் சலுபேட்டினால் (இது ஒருவிதச் சுண்ணாம்பு) சுத்திசெய்தல் வேண்டும்.

கறப்பதற்குச் சற்றுமுன்பாகத் தூளாகவுள்ள உலர்ந்த உணவையோ, புழுதியடைந்த உலர்ந்த புல் அல்லது வைக்கோலையோ பசுவுக்குவைப்பது நல்லதல்ல. அவசியமானால், வைக்கோலை நன்கு உதறிப் புழுதியை நீக்கிவிட்டு இடுவது உசிதமாகும்.



மாட்டைக் கறப்பதற்குமுன் பட்டியை நன்கு சுத்திசெய்து ஜன்னல் கதவு முதலியவற்றை நன்றாகத் திறந்து சுத்தக் காற்றை உள்ளே நிரம்ப வைக்கவேண்டும். வெயிற் காலத்தில் தரையைத் தண்ணீர்விட்டுக் குளிரவைக்கவேண்டும்.

மாட்டுப் பட்டியைமட்டுமே சுத்தமாகவைப்பதன்றிப் பால் சேமித்து வைக்கும் சட்டிடத்தையும், பாலிலிருந்து பண்டமியற்றும் பணிக்களரியையும் (தொழில் செய்யும் இடம்) பால் போய்ச் சேரும் மற்ற இடங்களையும் சுத்தமாக வைக்கும்படி வற்புறுத்த வேண்டும். பிறரின் அஜாக்கிரதையால் பால்திரைந்து தமது பெயர் கெட்டுப்போகக்கூடாது.

மந்தையிலுள்ள மாடு கன்றுகள் யாவற்றையும் வருடத்திற்குக் குறைந்தது இரண்டுமுறையாவது ஒரு தேர்ச்சிபெற்ற கால்நடை வைத்தியரால் வியாதி ஏதேனுமுளதோவென்று பரிசோதித்து, நோய் வருவதைத் தடுக்கவும் அவை சிறிதளவு வந்திருந்தால் அந்நோய்களை வேரறக்களைந்துவிடவும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொள்ளுவது அவசியமாகும்.

யாதானுமோர் மாடு நோயுற்றதாகச் சந்தேகம் பிறக்குமாயின், அதனை உடனே மந்தையைவிட்டு அப்புறப்படுத்தி அதன் பாலையும் விலக்கவேண்டும். அது பிணியிலிருந்து முற்றிலும் விடுபட்டதென்று நிச்சயம் பிறந்தாலன்றி அதனை மந்தையுடன்சேர்க்கலாகாது. இந்த நிபந்தனையைக் காசநோய் போன்ற கிருமிரோகங்களுற்ற மாடுகள் விஷயத்தில் கண்டிப்பாயநுட்டிக்கவேண்டும்.

மாடுகளைத் தீனிகொள்ளும் இடத்திற்கோ அல்லது கறக்கும் இடத்திற்கோ இலேசாக நடத்திக்கொண்டு போகவேண்டுமேயன்றி அவற்றிற்கு அசௌகரியம் உண்டாம் வண்ணம் அவற்றை விரைவாக ஓட்டுவது கூடாது.

மாடுகளைத் துரத்தியும், கூக்குரலிட்டும், கலவரம் செய்தும் அநாவசியமாகத் தொந்தரை செய்யக்கூடாது. மிகுந்த பனி, அதிக வெயில், புயற்காற்று முதலியன அவற்றைச் சிறிதும் தாக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

மாட்டினது தீனியைத் திடீரென்று மாற்றலாகாது.

புதிய ருசிகரமான தீனிகளையே மாடுகளுக்கு வேண்டிய மட்டும் ஏராளமாக அளிக்கவேண்டும்; தமது இயல்பு சிறிதும் திரிந்த பொருள்களை உபயோகித்தல் கூடாது.

மாட்டுக்குத் தண்ணீர் ஏராளமாகவேண்டும். மாட்டுக்கு எளிதில் கிடைக்குமாறு அதற்கருகே சுத்தமான தண்ணீரை அடிக்கடி ஊற்றிவைக்கவேண்டும். பாத்திரத்தில் அதிகநேரம் சேமித்து வைக்கப்பட்ட தண்ணீர் கிருமிகளுக்கு இருப்பிடமாகுமாதலின் தண்ணீரை அடிக்கடி புதுப்பித்துக் கொண்டிருக்க வேண்டும்.

மாடுகள் நக்குவதற்கு ஏற்ற விடங்களில் உப்புக்கட்டிகளைக் கட்டித் தொங்கவிட்டு வைக்கவேண்டும்.

பாலைக் கறந்த பிற்பாடு மட்டுமேயன்றி, வெள்ளைப்பூண்டு, முள்ளங்கிக் கிழங்கு, முட்டைக்கோசு முதலிய மிகுந்தநாற்றமுள்ள வஸ்துக்களைப் பசுக்கள் தின்னும்படி விடலாகாது.

பசுவின் உடம்பு முழுதையும் தினந்தோறும் நன்றாகச் சுத்தம் செய்யவேண்டும். பசுவின் மடியில் உரோமம் மிகுந்து அடிக்கடி அசுத்தமானால், ஒரு கத்திரிக்கோலால் அந்த உரோமத்தைக் களைதல்வேண்டும்.

முற்றின சினையான மாட்டுப் பாலையும் கன்று போட்டபின் ஐந்து நாட்களுக்குள் கறந்த பாலையும் உபயோகித்தல் கூடாது.

## மாடுகறத்தல்.

மாடு கறப்பவன் தனது உடம்பை வெகு சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். அவன் மாடுகளைக் கறக்கும்போது புகையிலையையோ, மூக்குத்தூளையோ அல்லது புகைச் சுருட்டையோ உட்கொள்ளுதல் கூடாது; கறப்பதற்கு முன்பாக அவன் கைகளை நன்குகழுவி ஈரம் சிறிதுமில்லாத துணியினால் துடைத்துக்கொண்டு கறக்கவேண்டும்.

கறப்பவன் ஒரு சுத்தமான உடையைக் கறக்கும்பொழுது அணிந்துகொள்ள வேண்டும். கறந்ததும் அதனைக் கழற்றி ஒரு சுத்தமான இடத்தில் மடித்து வைக்கவேண்டும். இவ்வுடையை இச்சமயம் ஒன்றுக்கே பிரத்தியேகமாக வைத்துக்கொள்ள வேண்டும்.



பால் கறப்பதற்குமுன் மாட்டின் மடியையும் அதனைச்சுற்றியுள்ள பாகத்தையும் ஒரு புருசினால் (Brush) நன்கு தேய்த்து, ஒரு சுத்தமான ஈரத்துணியைக் கொண்டு இலேசாகத் துடைத்துக் கொள்ள வேண்டும்.

பசுவின் காம்புகளை இலேசாக விரல்களாற்பற்றி, அமைதியாகவும் திருத்தமாகவும் சீக்கிரமாகவும் கறத்தல்வேண்டும். ஏனென்றால், பசுக்கள் ஆரவாரத்தையும் காலம் நீடித்தலையும் விரும்பமாட்டா. காலைமாலை இருவேளைகளிலும், ஒரே குறிப்பிட்ட பொழுதில் பசுக்களை ஒரே வரிசைக் கிரமமாகக் கறத்தல்வேண்டும்.

ஒவ்வொரு காம்பிலிருந்துவரும் முதல் இரண்டுமூன்று பீச்சுக்களை விலக்கிவிட வேண்டும். அவற்றைத் தரையிற் பீச்சி அசுத்தம் செய்யாது ஒரு தனிக் கிண்ணத்திற் பீச்சித் துலைவில் ஊற்றிவிடுவதே நலம். இந்தப் பாலானது தண்ணீர்போல இலேசாயிருப்பதுமன்றிப் பாத்திரத்திலுள்ள பால்முழுதையும் கெடுத்துவிடும்படியான தன்மையும் உடையது.

யாதானுமொரு பசுவைக் கறக்கும்பொழுது அதன்பாலில் ஒருபகுதி இரத்தத் துளி கலந்திருந்தாலும் அல்லது பாலினது நிறம் இயற்கை திரிந்து மாறுபட்டிருந்தாலும் அந்தப் பால் முழுதையும் விலக்கிவிடவேண்டும்.

ஈரக்கையினால் பாலைக்கறக்கலாகாது. விரல்கள் பாலிற்படாமல் கறக்கவேண்டும்.

நாய்களையும், பூனைகளையும், சோப்பேறி வம்பர்களையும் பால் கறக்குமிடத்தில் அணுகவிடக் கூடாது.

யாதானுமோர் எதிர்பாராத வழியாகப் பாண்டத்திலுள்ள பாலில் அசுத்தம் ஏற்பட்டால் அந்தப் பாலை இறுத்தோ அல்லது வடிகட்டியோ சீர்திருத்தி உபயோகிக்க நினைப்பது தவறாகும். அந்தப்பால் முழுதையும் கொட்டிவிட்டுப் பாண்டத்தை மறுபடியும் ஏற்றவாறு சுத்தம் செய்வதே நலமாகும்.

காலை மாலை இருவேளையும் ஒவ்வொரு பசுவும் அளித்த பாலைத் தராசினால் நிறுத்து, அத தன் பெயருக்கு நேராக ஓர் அட்டவணையிற் குறித்துக்கொண்டு வரவேண்டும். வாரத்திற் கொருமுறையாவது அதன்பாலிற் சிறிதளவு எடுத்து, எடுத்துக்கொண்ட

அளவுக் கேற்றவாறு அப்பாலில் வெண்ணெயின் அளவு குறையாம லிருக்கிறதா என்பதைப் பரிசோதிக்க வேண்டும். வெண்ணெய் குறைந்திருந்தால், மாட்டுக்கு வேண்டியவாறு தீனியை அதிகரித்து அக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டும்.

## பாலைச் சேமித்தல்.

ஒவ்வொரு பசுவிலிருந்தும் கறந்த பாலை உடனுக்குடனே பட்டியிலிருந்து பாலறைக்கு (பால் சேமித்து வைக்கும் அறைக்கு) அனுப்பிவிட வேண்டும். பாலறை சிறிதும் ஈரமில்லாது, பரிசுத்தமான நறுமணமுள்ள காற்று நிரம்பியிருத்தல் வேண்டும். பட்டியில் பால் தொட்டிகளை வைத்துக் கறக்கும் பாத்திரங்களிலிருந்து அத்தொட்டிகளுக்குப் பாலை மாற்றலாகாது.

பாலைக் கறந்தவுடனே அதனை ஒரு கப்பிச் சல்லடையினாலாவது ஒரு சுத்தமான பிளானல் அல்லது பருத்தி வஸ்திரத்தினாலாவது வடிகட்டி விடவேண்டும்.

பால் அந்நிய நாட்டிற்குக் கப்பலேறிச் செல்ல வேண்டின், அதனை வடிகட்டினவுடன் 45 டிகிரி பாரனீட்டுக்குச் சரியான உஷ்ண நிலைக்குக் குளிரவைக்க வேண்டும். பால் உள்நாட்டில் செலவாக வேண்டின், அதனை 60 டிகிரி பாரனீட்டுக்குக் குளிர வைத்தாற் போதுமானது.

கறந்த சூட்டுடன் பாலைடப்பிகளில் அடைத்துவிடக்கூடாது.

திறந்த டப்பிகளிலுள்ளபாலில் பூச்சிகள் விழாத வண்ணம் அவற்றைச் சன்ன சல்லாத் துணிகளால் மூடிவைப்பது நலம்.

பாலை மிகுதியாக ஒரு தொட்டியில் நீண்டகாலம் சேமித்து வைக்கவேண்டின், அத்தொட்டியை முற்கூறியபடி மூடி, மிகக் குளிர்ந்த தண்ணீர் கொண்டதோர் பெரிய தொட்டியினுள் வைக்க வேண்டும். இத் தண்ணீரானது பாலின் உஷ்ணத்தை வாங்கிச் செல்வதால், தண்ணீரின் உஷ்ண நிலையதிகரிக்கும். தண்ணீர்த் தொட்டியின் உஷண நிலையை இவ்வாறு அதிகரிக்க விடக்கூடாது. அதற்காகவேண்டி அடிக்கடி உஷ்ணப்பட்ட நீரை நீக்கிக் குளிர்ந்த சலத்தைத் தொட்டியிற் பெய்யவேண்டும். இந்தப் பாலறையானது குறைந்த உஷ்ண நிலையிலிருக்கவேண்டி அதனை ஏற்றவாறு பனிக் கட்டியாற் குளிரவைக்க வேண்டும். பாலாடைக் கட்டி செய்வது



நோக்கமில்லை யெனின், வெண்ணெய்ப் பகுதிகள் பாலின் மேல் மட்டத்தில் ஆடைத்திரளாகச் சேராதவண்ணம், பாலைக்கிளரிக்கொண்டிருக்கவேண்டும்.

மழை காலங்களில், பாலில் மழை சலம் படாதவாறு காப்பாற்றவேண்டும். வெயிற் காலத்தில் பாலை முற்கூறிய வண்ணம் குளிர்ந்த தண்ணீர்த் தொட்டியில் வைத்துக்கொள்ளவேண்டும்.

இவ்விதம் சேமித்து வைத்த குளிர்ந்த பாலில் யாதொரு காரணத்தை முன்னிட்டும் அப்பொழுதுதான் கறந்து சூடு தணியாத புதுப்பாலைக் கலத்தல்கூடாது.

பாலைக் குளிரவைக்குங்கால், பால் கட்டியாக உறைந்து விடாமற் பார்த்துக் கொள்ளவேண்டும்.

பால் புளித்து விடாதிருத்தல் வேண்டி யாதானுமோர் பதார்த்தத்தைப் பாலிலிடுவது பேதமையேயாகும். சுத்தமாகவும் குளிர்ச்சியாகவும் வைப்பதே பாலைக் கெடாமற் காப்பாற்றுவதற் கேற்ற நல்ல முறையாகும்.

பாலினாலாகும் பண்டங்களைஇயற்றும் பணிக்களரிகளுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் பாலானது தனது நல்லியல்பு திரியா திருத்தல்வேண்டும்.

பால் டப்பிகளை வெகு தூரத்துக்கப்பால் கொண்டுபோக வேண்டின், டப்பிகளிற் பால் நிரம்பியிருத்தல்வேண்டும். இவற்றை எடுத்துச் செல்லும் வண்டி அதிர்ச்சி சிறிதுமில்லாது போகக்கூடிய வில்வண்டியா யிருத்தல்வேண்டும்.

வெயிற் காலத்தில் வண்டியிலேற்றிச் செல்லும் பால் டப்பிகளை ஒரு சுத்தமான ஈரரெட்டினால் நன்றாகப் போர்த்து வைக்க வேண்டும்.

## பால் பாத்திரங்கள்.

பால் பாத்திரங்கள் யாவும் உலோகத்தினால் செய்யப்பட்டிருக்கவேண்டும். பாத்திரத்தினுள்ளே வங்குகளெல்லாம் மழமழப்பாகப் பொடிவைத்து ஊதப்பட்டிருக்கவேண்டும். பாத்திரங்களுக்குள்ளே துரு ஏறாமற் பாதுகாக்க வேண்டும்.

பணிக்களரிகளிற் பாலை ஊற்றிவிட்டுத் திரும்புங்கால், ஆங்கே பிரயோசனமின்றி விலக்கப்பட்ட வெண்ணெய் எடுத்த பாலை

யும், மோரையும், பால் டப்பிகளிற் பெய்து வீட்டுக் கெடுத்துவருவது உசிதமல்ல. இப்படிப்பட்ட ஆவசியம் ஏற்பட்டால், அந்தப் பாத்திரங்களை மிகுந்த கவனத்துடன் கழுவிவைக்கவேண்டும்.

இவ்விதம் மோர் முதலியனவற்றைக் கொண்டுவரும் பாண்டங்களை நன்றாகக் கழுவி, கழுவு நீரைத்துடைத்து, அப் பாண்டங்களை நீராவியில் நன்கு காய்ச்சி, உலரவைக்கவேண்டும்.

பாண்டங்கள் இருப்பிடம் வந்து சேர்ந்ததும், அவற்றைச் சுடு தண்ணீரைக் கொண்டு நன்றாகத் தேய்த்துக் கழுவவேண்டும். பிறகு அவற்றை உள்ளும் புறமும் நன்றாக ஒரு புருசினால் (Brush) துடைக்க வேண்டும். புருசினால் துடைக்கும்பொழுது, பாத்திர சுத்திக்காகவேண்டிய உப்புகள் கலந்த சுடுதண்ணீரைவிட்டுக் கழுவவேண்டும். பிறகு, பாத்திரங்களை முற்கூறிய வண்ணம் நீராவியிலிட்டுக் கிருமிகள் நசிக்கும் வண்ணம் உஷ்ணப் படுத்தவேண்டும். இயலாவிடின், பாத்திரங்களைத் தண்ணீரில்போட்டு அத்தண்ணீரை நீண்டகாலம் பொங்க வைக்கவேண்டும். இதற்குச் சுத்தமான தண்ணீரையே உபயோகிக்கவேண்டும்.

இவ்விதமாகச் சுத்தம் செய்தபின் பாண்டங்களை நன்கு வெயில் காயுமோர் காற்றோட்டமுள்ள இடத்தில் கவிழ்த்து உலர வைக்கவேண்டும். இவ்விதம் உலர்ந்த பின்னரே இப்பாண்டங்களை மறுமுறை உபயோகிக்கலாம்.

நங்கவரம் அரங்க கிருஷ்ணமூர்த்தி அய்யர்.

---

ஸ்ரீ:

# கோகுலாஷ்டமி.

ஆவணித் திங்கள் பூரணை கழிந்த எட்டாவது நாள் கண்
ணன் திருவவதாரஞ் செய்த நாளெனக் கொண்டாடப்பட்டு வரு
கிறது. அத்திருநாளைக் கோகுலாட்டமி எனவும் ஸ்ரீ கிருஷ்ண
ஜயந்தி எனவும் வழங்கி வருகிறார்கள். கோகுலாஷ்டமி என்
றால் கடவுள் அவதரித்த குலத்தவர் கொண்டாடும் எட்டாவது
திதியெனப் பொருள்படும். கடவுள் அவதரித்த குலத்தவர் கொண்
டாடும் நாளெனவும் கடவுளையும் அவர் அவதரித்த குலத்தையும்
கொண்டாடும் நாளெனவும் கூறுவார்கள். கோவெனும் மொழிக்
குப் பசுவெனப் பொருள்கொண்டுப் பசுவைப் பாதுகாக்கும் குலத்
தவர் கொண்டாடும் நாளெனவும் பொருட்படுத்துவாருமுளர்.
கோகுலம் என்பது கண்ணன் அவதரித்த பிருந்தாவன ஆயர்பாடி
யின் பெயரென்பது சிலர் கொள்கை. எங்ஙனம் பொருள் கொள்
ளினும் இவ்வாக்கியத்தினால் கண்ணன் அவதாரஞ் செய்த யாதவ
குலத்திற்கு ஒரு விசேஷ உரிமையும் பெருமையும் ஏற்படுகிறதென்
பது எவரும் மறுக்க முடியாதவொன்று.

கண்ணன் பிறந்த காரணத்தால் யாதவ குலத்திற்கு ஏற்பட்
டிருக்கும் பெருமைக்கு எல்லை இல்லை. பாரத நாட்டில் பல்வேறு
பாஷைகளிலுள்ள பனுவல்களும் இவரைப் போற்றுகின்றன.
அவை எண்ணவும் எழுதவும் இயலாதவாறு ஒரு பாஷையிலேயே
இருக்குமானால் பிறபாஷைகளைப் பற்றிக் கூறுவானேன். "எவ
னொருவன் யாதவ வம்சத்தைப் பற்றி (ஒருவன் சொல்வதை)க்
கேட்கிறானோ அவன் எல்லாவிதப் பாவங்களிலுமிருந்து விடுதலை
பெறுகிறான்; ஏனென்றால் பரப்பிரம்மமானது மானிடவுருக்
கொண்டு கிருஷ்ணன் என்ற பெயரால் இவ் வம்சத்திலன்றோ பிறந்
தது" என விஷ்ணு புராணம் யாதவர்களின் பெருமையைப்பற்றிக்
கூறுகிறது. இனி யாதவ மக்களுக்குக் கண்ணபிரானால் கிடைத்த
பெருமையைக் கூற வேண்டுவது அனாவசியம்! "தர்மங்குன்றி
அதர்மம் எப்பொழுது மேலிடுகிறதோ அப்பொழுது நான் அதர்
மத்தைத் தொலைத்துத் தர்மத்தை நிலைநாட்டுதற் பொருட்டு யுகங்

கள்தோறும் பூமியில் அவதரிக்கிறேன்'' என்பது பகவான் வாக்கியம். கம்சனுடைய ஆட்சி முறையால் அதர்மம் மேலிட்டுத் தர்மங்குன்றிவிட்டது. அன்பர்களான யாதவர்கள் இடுக்கணுற்றனர். அவ்வேளையிற் கண்ணன் அவதாரஞ் செய்து கம்சனைக் கொன்று யாதவரைப் பாதுகாத்தார். நல்லவரைப் பாதுகாப்பதும் தீயவரைத் தொலைப்பதும் அவர்வேலை யன்றோ !

நல்லவருக் கொருதீங்கு நண்ணாது
நயமுறக் காத்திடுவான்—கண்ணன்
அல்லவருக்கு விடத்தினில், நோயில்,
அழலினிலுங் கொடி யான். (பாரதி)

தீமை விலக்கி நன்மை விரும்புவது உலகவியல்பாதலால் அதைச் செய்யவந்த கண்ணனை யாவரும் போற்றுகிறார்கள். அவன் பிறந்த குலமும் புண்ணிய தினமும்யாவராலும் கொண்டாடப்பட்டு வருகிறது. சிறப்பாக அந்நாளை யாதவர்கள் கொண்டாடக் கடமைப் பட்டவர்கள். தங்கள் குலப்புகழ் விளக்குத் தோன்றிய நாளதுவன்றோ ? கண்ணன் பிறந்தவுடன் ஆயர்கள் கொண்ட ஆனந்தத்தை,-

“ஓடுவார் விழுவார் உகந்தா லிப்பார்
நாடுவார் நம்பிரான் எங்குற்றா னென்பார்
பாடுவார் களும்பல் பறைகொட்ட நின்று
ஆடுவார்களும் ஆயிற்று ஆய்ப்பாடியே''

என்று பெரியாழ்வார் வருணித்திருக்கிறார்.

கோகுலாஷ்டமியில் அப்பம், அவல், சர்க்கரை, சீடை முதலியன அருந்தும் விரதத்தை யாதவ மக்கள் மேற்கொள்ள வேண்டாம். கண்ணன் திருவுருப் படங்களை அலங்கரித்துப் பூசனைபுரிந்தால் போதாது. அது யாதவ குலத்திற்கு இக்காலம் உண்மையான விரத மாகாதென உறுதி கூறுவோம். கண்ணபிரான் எந்த சமூகத்தில் தோன்றி வளர்ந்து உழைத்தாரோ அந்த சமூகமான நமது யாதவ சமூகம் முன்னைய மாண்பழிந்து நிலைதவறி யிருக்கும் வேளையில் அதைக் கொண்டாடுவ தெப்படி? யாதவ மக்கள் முன்னைய மாண்பு பெற்றிருந்தால் தானே மகிழ்ச்சியோடு கோகுலாஷ்டமியைக் கொண்டாட முடியும் ? கோகுலாஷ்டமியைப் பற்றித் தெரிந்து கொள்ளாதவாறு எண்ணிறந்தோர் இருக்கிறார்கள்; இருப்பார்கள். சமுதாயம் சீர்திருத்தம் பெற்றால் எல்லா யாதவர்களும் கோகுலாஷ்டமியின் மகிமையறிந்து கொண்டாடுவார்கள். எல்லா யாதவர்களும் இன்பமடையும்படி சமுதாயச் சீர்திருத்தமாம் விரதத்தை மேற்கொள்வதே யாதவ சமுகத்திற்குத்தற்போது தேவை. இதுவே கண்ணபிரான் விரும்பும் உண்மை விரதம். ஆகையால் யாதவ மக்கள் கண்ணபிரானுக்கு விருப்பமான சமுதாயச் சீர்திருத்த கோகுலாஷ்டமி விரதத்தைக் கொண்டாடுவார்களாக. கோகுலாஷ்டமி என்ற மொழி யாதவ சமுதாயத்தைக் குறிப்பிடுகிறதினால் அச் சமுதாயச் சீர்திருத்தத்திற்குரிய சிறந்த நாளாக நாம் கோகுலாஷ்டமிநாளைக் கொண்டாடி வருவோமாக.



யாதவகுல விளக்காம் கண்ணன் பிறந்த இப் புண்ணிய தினத்திலே யாதவர்களுக்கு இதஞ்செய்யும் நண்பனும் யாதவ மித்திரன் நம்மிடைத் தோன்றியுள்ளது. அதன் வரவு நல்வர வாகுக. யாதவ நண்பர்களே! நாம் நீண்ட நாளாக எதிர் பார்த்திருந்த நமது மித்திரனின் வருகையை ஆவலோடு எதிர் கொள்வோமாக. உண்மையான கோகுலாஷ்டமி விரதங் கொண்டாட நல்ல தருணங் கிடைத்திருக்கிறது. யாதவ சமுதாயச் சீர்திருத்தத்திற்குச்செய்ய வேண்டிய முக்கியமான தொண்டு இதுவே. யாதவ மித்திரனை நமது சமுதாயத்தவர் வாசஞ்செய்யும் கிராமங்களிலெங்கும் பரவச்செய்ய வேண்டும். ஒவ்வொரு மாதமும் அது அவரிடஞ்சென்று சமுதாய விஷயங்களைத் தெரிவிக்கும்படி செய்யவேண்டும். இப்புண்ணிய தினத்திலிருந்து நாம் எல்லோரும் முயன்று சமுதாயச் சீர்திருத்தக் கோகுலாஷ்டமியின் உண்மை விரதத்தைப் பாதுகாப்போமாக.

(யாதவன்)

# மணித்திரள்.

## நமது சமுதாயக் கல்வி.

நிகழ்ந்த நமது யாதவ மஹா நாட்டுத் தலைவர்களின் பிரசங்கங்களிலிருந்து:—

### ஆரம்பக்கல்வி.

தமது குழந்தைகளின் கல்வியைப் புறக்கணிப்பவர் சமூகத் துரோகஞ் செய்யும் பாவிகளாவர். குழந்தைகளைக் கல்விகற்பிப்பது ஒவ்வொரு தந்தைக்கும் முதற் கடமையாகும்.

கிராமங்களிலுள்ள நமது குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கப் படாததை நிவர்த்திக்கவேண்டும்.

### கட்டாயக்கல்வி.

நம்குலச் சிறுவர்கள் அனைவரும் படித்துவிட்ட பிறகே தொழில் செய்ய வேண்டுமென்று பிரசாரஞ் செய்யவேண்டும்.

அரசாங்கத்தாரால் பிரதமக் கல்வி எல்லாராலும் பயிலப் பட வேண்டுமென்று கட்டாயப் படுத்தும்வரை நமக்கு முற்போக்கில்லை என்று எண்ண வேண்டியதிருக்கிறது.

### கல்விக்கு உதவி.

நமது சமூகத்தார் பொருளாதார நிலையில் தாழ்ந்திருப்பதால் நம் குலமாணவர்களுக்கு அதிகமான உதவிச்சம்பளம் அளிக்கும்படி நாம் சர்க்காருக்கு முறையிட்டு அனுகூலம் பெறுவது உசிதமென்று நினைக்கிறேன்.

நமதுகுலச் சிறுவர் சிறுமிகளைக் கல்வி பயிற்றுவிப்பதற்காக நமதுகுலத்திலுள்ள தனவந்தர்கள் முன்வந்து போதுமான பொருளுதவிபுரிய வேண்டுமென்று அவர்களைப் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்கிறேன்

### பெண்கல்வி.

நம்முடையபெண்களை அறியாமையிலும் முற்றிலும்தாழ்ந்த ஸ்திதியிலும் வைத்துக் கொண்டிருப்பது ஒருவனுக்கு ஒரு கண் குருடாகவும் ஒரு கால் முடமாகவும் இருப்பதுபோ லிருக்கிறது.

நாட்டின் எதிர்கால வாழ்விற் குரிய ஆரம்பப் பயிற்சி அளிப்பவர் அன்னையரே யாவார்கள். ஆகவே அவர் மனம் தக்க முறையில் பயிற்சி பெற்றிருக்கவேண்டும்.

---



## யாதவ மித்திரன் சந்தா விபரம்.

இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு வருஷம் 1-க்கு } ரூ 1—0—0

பினாங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு வருஷம் 1-க்கு } ரூ 1—8—0

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்
இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி பி மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும், ஆதலால் முன்னடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம் மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது. பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

1-பக்கத்திற்கு ரூ 10—0—0

½-பக்கத்திற்கு ரூ 5—8—0

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

0

Reg No. M:-2527.

32 C





# யாதவ மித்திரன்.

முன்னேற்றங்கருதி வெளிவருவர்

OFFICE OF THE REGISTRAR
8- NOV 1929
MADRAS





Managing Editor

# யாதவ மித்திரன்.

ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

(Editorial Board Members.)

தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி,
மதுரை.

2. ,, ச செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. ஏ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி. ஏ. பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.
7. ,, R. வேங்கடா சலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S. P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L. M. F. ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ்,
திருச்சிராப்பள்ளி.


## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றியும் முழு விலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை.

8 NOV 1929
MADRAS



ஸ்ரீ

# யாதவ மித்திரன்

ஒரு மாதப்பத்திரிகை.

OFFICE OF THE ... -NOV 19 ... MA

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

| | | |
|---|---|---|
| தொகுதி 1 | சுக்கில-௵ அற்பசி-மீ<br>1929-௵ அக்டோபர்-மீ | பகுதி 3 |

## கடவுள் வணக்கம்.

சேய னணிய னெனச் சிந்தையுள் நின்ற
மாயன் மணி வாளொளி வெண் தரளங்கள்
வேய் விண்டுதிர் வேங்கட மாமலை மேய
ஆயனடி யல்லது மற்றறியேனே. திருமங்கை ஆழ்வார்.

## பசு.

## பெயரில் பெருமை.

பசு உலகத்தில் உபகாரத்தில் சிறந்த ஜந்து. மனிதர் ஆதியில் தங்கள் உணவுப்பொருள்களாகக் கண்டுகொண்டது பஞ்சகவ்வியங்களேயாம். இந்துக்கள் இதனாலேயே பசுவைக் கடவுளாகக் கருதிக் கொண்டாடி வருகிறார்கள். ஜனனம்முதல் மரணம் வரையிலும் உள்ள சகல லௌகீக வைதீக கருமங்களுக்கும் பஞ்சகவ்வியங்கள் இன்றியமையாதிருக்கின்றன. நெய்யும், பாலும் மெய்க்கு உறுதி உண்டுபண்ணும் பொருள்கள். இவை பிணியாளருக்கு நல்ல மருந்தாகவும் இருக்கின்றன. இவ்வகைக் குணங்களினாலே பசு நாட்டுச் செல்வத்தின் நாயகமாய் வீட்டு விலங்கில் மேன்மையுற்று,

அறவோராலும் மறவோராலும் ஆதரிக்கப்பட்டு, வேதம் முதல் பனுவல்களாலும் விதந்தோதப்பட்டு வருகிறது. பசுவின் பெருமையைப்பகரா நின்ற பனுவல்களும் பாக்களும் பழமொழிகளும் பல. பசுவுக்குத் துன்பஞ் செய்தல் பெரும் பாபமாகக் கருதப்படுகிறது. பசு மனித வாழ்விற்கு இன்றியமையாததினாலேயே அதற்கு மேலான பெருமை ஏற்பட்டிருக்கிறது.

பசுவிற்கு இந்தியர் கொடுத்திருக்கும் பெயரால் அதற்குக் கற்பித்திருக்கும் பெருமையை அறிவோமாக. முதலில் "பசு" என்ற பெயரை எடுத்துக்கொள்வோம். அதற்கு உயிர் ஜீவனுடையது, கடவுள் என்பன உயரிய பொருள்கள். உலக மாந்தருக்கு உணவுப் பொருளாக அமைந்ததினாலே அதை ஜீவனுடையதாகவும் ஜீவனுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைக் கொடுப்பதினாலே ஜீவிகளாகவும் எவ்வுயிர்க்கும் உணவு அருத்தும் கடமை கடவுளுக்கு இருப்பதுபோலவே பசு உணவளித்துவருவதால் கடவுளாகவும்கருதப்பட்டு வருகிறதென்பதைத் தெரிவிக்குமாறு பசுவென்ற பெயர் விளங்குகிறது. கடவுளியலைக்கூறுகின்ற தாயுமானவர் "உயிருக்குயிராய்" என்று கூறியது காண்க. இன்னும் பசுகரணத்திற்கு உயிர்க்கரணமென்றும் பசுபதிக்குக் கடவுளென்றும் பசு ஞானத்திற்குத் தத்துவ ஞானமென்றும் பசுத்துவத்திற்கு ஆன்மத்துவமென்றும் பலவாறு பசு வெனும் பதம் பொருள்படுவதைக் காண்க. பசுபதி பாசம் என்ற இடத்தில் இதன் பொருள்கள் கவனிக்கத்தக்கது.

பசுமை எனும் மொழி மை விகுதி குன்றி பசுவென நிற்கிறதென்று கூறினும் பொருந்தும். இதனால் உலகிற்கு மாறாத இனிமையை ஊட்டிக்கொண்டிருப்பது பசு வென்று கொள்ளலாம்.

இனிய பசுவின் பரியாய பதங்களால் அதன் பெருமையைக் காண முயலுவோம். உலகிலே மாந்தருக்கு உபகாரமானதும் மிகப் பழக்கம் வாய்ந்ததுமான பொருள்களுக்குப் பல பெயர்கள் உண்டாவதியல்பு. இது எல்லாப் பாஷைகளிலுமுள்ள வழக்கம். ஒரு பாஷை வழங்கும் நிலத்திலேயே ஒரு பொருளுக்கு ஒரு கூட்டத்தவர் ஒரு பெயரையிட்டும் இன்னொருகூட்டத்தவர் வேறு பெயரையிட்டும் வழங்கிவருவார்கள். கடைசியில் எல்லாஞ் சேர்ந்து ஒரு பொருளுக்குப் பல மொழிகளாக அமையும். உதாரணமாக யாவருக்கும் எளிதாகக் காண வியலுகின்ற பூமிக்கும் கடலுக்கும்



மலைக்கும் எல்லாப் பாஷைகளிலும் பல பெயர்கள் வழங்கிவருவது காண்க. இதுபோல் முக்கியமான பொருள்களுக்குப் பல பெயாகள் வழங்கிவருகின்றன. இதுவுமன்றி அப்பரியாய பதங்களே சிறந்த பொருளமைதி யுடையனவாக விருக்கும். இதைப் பசுவின் விஷயத்தில் பார்த்து அறிவோமாக.

குலவிய பசுப்பேர் கூலங் கோகுடஞ் சுரபியாவே
இலகிய நிரையே தேனு பெற்றம் இவ்வெட்டு மாகும்
(சூடாமணி நிகண்டு)

ஆவும் பெற்றமும் பசுவு மானும்
கோவும் குரால் தேனும் பசுச் சாதிப்
பொதுப் பெயர்.
சுரபி தேனு சுரை கபிலை சேதா
குரமே கோமளம் பெண்பான் மேன
(சேந்தன் திவாகரம்)

இப்பதங்கள் ஒவ்வொன்றிற்கும்உள்ளபொருள்களையும் அவைகளின் பெருமைகளையுங் கூறிக் கொண்டு போனால் இக் கட்டுரை பெருகும். பசுவுக்குக் கிடைத்திருக்கும் "ஆ" எனும் மொழியே பசுவின் பெயர்ப் பெருமைக்குப் போதிய சான்றாயிருக்கிறது. ஆ வெனும் ஓரெழுத்து ஒரு மொழி யாதொரு முயற்சியுமின்றி அங்காத்தல் மாத்திரையாலே பிறக்கிறது. குழந்தைகள் முதலில் அம்மா அப்பா வென்றே அழைக்கின்றன. அகரமே எழுத்துக்கள் யாவைக்கும் முதற் காரணமாயிருக்கின்றன.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

இத்தகைய சிறப்புவாய்ந்த அகரத்தின் நெடிலையே தன்பெயராகக்கொண்டதினால் பசுவின் பெருமை அகரத்தை யொத்ததுஎன்றும் உய்த்துணர்ந்து கொள்ளலாகும்.

"மாஹேயி ஸௌரபேயிகௌ
ருஸ்ரா மாதா ரும்கணி
அருச்சினி யக்கின ரோகணிசியா
உத்தமா கோஷ்ட நைசிகி"

இனி முறையே தமிழிலும் ஆரியத்திலும் சேர்ந்து வந்து வழங்கப்படுகிற மொழிகளையும் நோக்குவோம்.

கோ-பூமி, வான், தேவலோகம், சூரியன், சந்திரன், கிரணங்கள், ஜலம், அரசன், அம்பு, கண், மாதா, மேன்மை, ஊர், பட்டினம், பூரணகும்பம், சருக்கரை, மாயோனுடல்.

ஸௌரபேயி (தமிழில் சுரபியென வழங்குவர்) சுரபியின் குலம், பூமி, மல்லிகை, துளவம்.

மஹேயி காமதேனுவின் குலம்.

உச்ரா-பாலுள்ளது

மாதா<br>மாஹா } பூஜிக்கத்தகுந்தது.

இதில் பஞ்சபூதங்களின் பெயர்களெல்லாம் அடங்கியிருக்கின்றன.

இறைவனால் இயற்றப்பட்ட இயற்கைப் பொருள்களின் பெயர்கள் பல அடங்கியிருக்கின்றன. நமது பாரத நாட்டவர் ஆதியில் இயற்கையைத்தான் வணங்கினார்கள். ஆரியர்கள் அக்கினி, நீர் முதலிய பஞ்சபூதங்களையும், திராவிடர் சூரியன், மலை, முதலியவற்றையும் வணங்கி வந்தார்கள். தாங்கள் வணங்கிவந்த இயற்கைப் பொருள்களின் பெயர்களை முக்கியமான பசுவிற்கும் இட்டு வழங்கி வந்திருக்கவேண்டும்.

தமிழ் ஆரியம் இருமொழிகளிலும் மாதாவென வழங்கி வருகிறார்கள். பசு தாயையொத்து ஆதரவளிப்பதால் இப்பெயரை அது பெற்றது. தங்களுக்கு ஆதாரமான பாலைத்தருவதால் பாலுள்ளதென்றும் இங்ஙனம் உபகாரத்திற் சிறந்த அதைப் பூஜிக்கவேண்டுவதால் பூஜிக்கத் தகுந்ததென்றும் குறிப்பிட்டுள்ளார்கள். இவற்றால் பசுவிற்கு ஏற்பட்டுள்ள பெயர் அளவிலேயே ஏற்பட்டிருக்கும் பெருமையைக் கண்டுகொள்வோமாக.

ச. செல்லம், சுசீந்திரம்.

## யாதவமித்திரன் வரவேற்பு.

கல்வி அடைந்தோம் கணக்கறிந்தோம் கஞ்சமலர்ச்
செல்வி அருள்நோக்குஞ் சேர்ந்தடைந்தோம்—நல்விரதம்
மிக்கவும் யாதவ மித்திரனே நின்வரவால்
புக்ரவும் பெற்றேமிப் போது.

S. சுப்பையாநம்பி (யாதவன்)
நாகர்கோவில்.

## கண்ணன் சரிதம்.

(40-வது பக்கத் தொடர்ச்சி)

பின்பு தன் அரண்மனைக்குச் சென்ற கம்சன் இரவு கழிந்து விடிந்தவுடன் தன் மந்திரிகளை வரவழைத்து மாயக்குழந்தை ஆகாயத்தில் சொன்னதை எல்லாம் அவர்களுக்குச் சொன்னான். இதனைக்கேட்ட அவனது துன்மந்திரிகள் கம்சனைப்பார்த்து; "போஜவம்சத்தரசர்களில் சிறந்தவனே! மாயக் குழந்தை இவ்வாறு சொன்னதாயின் இனி நாம் சும்மாவிருத்தல் கூடாது; பகையை உடனே களையவேண்டும். உடலில் தோன்றிய நோயை உடனே அகற்ற வழி தேடாவிட்டால் அது சரீரத்தில் வேரூன்றித் துன்பஞ் செய்யும் அல்லவா? பட்டணங்கள், கிராமங்கள், இடைச்சேரிகள் முதலிய இடங்களிற் சென்று பிறந்து பத்துநாள் கழிந்தவைகளும், கழியாதவைகளுமான சிசுக்களையெல்லாம் வதைத்துவிடுவோம். உருத்திராதி தேவர்களும் உன் வில் தொனிக்கெதிரில் நிற்கமாட்டார்களென்பது நிச்சயம். ஆனாலும் விஷ்ணுவாகிய குழந்தை விஷயத்தில் நாம் அலட்சியமாய் இருந்துவிடக்கூடாது. எல்லாத் தேவதைகளுக்கும் மூலமான விஷ்ணுவை ஒழித்துவிட்டால் எல்லாத் தேவதைகளையும் அழித்ததாகிவிடும். நாம் இப்போதே பிராமணர், பசு, குழந்தைகள் யாவரையும் கொல்லவேண்டிய சூழ்ச்சிகளைச் செய்வோமாக" என்றுசொல்லிக் கம்சனோடு துராலோசனைசெய்து முடித்தார்கள்.

இஃதிங்ஙனமாகக் கோகுலத்தில் நந்தகோபர் தமக்குப் பிள்ளை பிறந்ததை அறிந்து, அளவிலாத ஆனந்தமடைந்தார். பின்பு வேதங்களை உணர்ந்த அந்தணர்களை அழைத்துத் தாம் நீராடி அலங்கரித்துக்கொண்டு புண்ணியவாசனம் செய்து விதிப்படி ஜாதகர்மம் செய்வித்துத் தேவதைகளைப் பூஜித்தார். அதன்பிறகு இருபதினாயிரம் பசுக்களை ரத்னங்களாலும், சொர்னங்களாலும் அலங்கரித்து அந்தணர்களுக்குத் தானஞ்செய்தார். துதிபாடகர்கள் புராணாதிகளைப் பாடினார்கள். பலவகை வாத்தியங்கள் முழங்கின. கோகுலத்தில் கோபாலர்களது வீடுகளெல்லாம் பலவகைக் கொடிகளாலும், மாலைகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்று விளங்கின. அவர்களது பசுக்களும் எருதுகளும்

கன்றுகளும் மஞ்சள் எண்ணெய் இவை பூசப்பெற்று, மயிற் பீலி கள், மாலைகள், கோடி வஸ்திரங்கள், பொன் சங்கிலிகள் ஆகிய இவைகள் அணியப்பெற்று விளங்கின. கோபாலர்கள் விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களையும் சட்டைகளையும் தலைப்பாகைகளையும் தரித்துக் கைகளில் பலவகை மங்களப் பொருள்களை ஏந்திக் கொண்டு நந்தகோபரது மாளிகைக்கு வந்தார்கள். கோபிகா ஸ்திரீ களும் யசோதைக்குப் பிள்ளை பிறந்த சுபசெய்தி கேட்டு மிகுந்த மகிழ்ச்சியுடையவர்களாய் ஆடை ஆபரணங்களாலும், மெய்ப் பூச் சுக்களாலும் தங்களை அலங்கரித்துக்கொண்டு தாமரை மலர் போன்ற' தங்களது திருமுக மண்டலங்களில் குங்குமப்பொடிதிகழப் பற்பல திரவியங்களைச் செங்காந்தண் மலர்போன்ற கரங்களில் ஏந் திக்கொண்டு வரிசை வரிசையாக யசோதை மனைக் காண விரைந்து வந்தார்கள். காதுகளில் ஒளிமிகுந்த ரத்ன குண்டலங் களையும் கழுத்தில் பதக்கங்களையும் அரையில் அற்புதமான ஆடை களையும் கைகளில் சிறந்த வளையல்களையும் அணிந்து விரைந்து வருகிற ஆயர் மங்கையர்கள் நடை வேகத்தினாலே சோர்ந்த கூந்த லினின்றும் பூமழை பொழிய, கூந்தல் பிடரியில் புரள, தரள மாலைகள் ஒளிசெய்ய வருவது மிகுந்த அழகு செய்வதாயிருந்தது. வந்த அக் கோபிகைகள் கோபால குலத்தை விளக்கஞ்செய்த தாமரைக் கண்ணனைத் தம் கண்களாரக் கண்டு, "எங்களை நெடுங் காலம் வாழ்விப்பாயாக" என்று வாழ்த்தி மஞ்சள் முதலாய பொடிகளையும், சுகந்த சுண்ணங்களையும், தைலவர்க்கங்களையும், தண்ணீரையும் ஒருவர்மேல் ஒருவர் இறைத்தும் பாடினார்கள். ஆயர்கள் மிக மகிழ்ச்சியுடையவர்களாய்த் தயிர், பால், வெண் ணெய் இவற்றை ஒருவர்மேல் ஒருவர் இறைப்பதும் பூசுவதும் தூவு வதுமாய் விளையாடினார்கள்.

பின்பு மிக்க பிரதாபமுடைய நந்தகோபர் பாடகர்களுக்கும் வித்வான்களுக்கும் ஆடை ஆபரணங்கள் பசுக்கள் முதலானவற் றைச் சன்மானமாக அளித்தார். வசுதேவரது பாரியாகிய ரோக ணியும் அப்போது தங்கள் குல தெய்வமாகிய விஷ்ணுவின் ஆரா தனத்திற்காகவும் தன் பிள்ளை கண்ணனுக்காகவும் திவ்ய மங்கள ஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டு நடமாடிக்கொண்டிருந் தாள். கோகுலம் இப்பொழுது மகாலக்ஷ்மி விளையாடுமிடமாகத் திகழ்ந்தது. (தொடரும்)

ஆ. கா.

# மகிழ்வுரை.

மதுரைநகரசபை 13-வது வார்டுக்குத் திரு. T. V. முருகக்கோ னார் B. A. அவர்கள் போட்டியின்றியும் பாளையங்கோட்டை நகர சபைக்குத் திரு. ராமசாமிக்கோனார் அவர்களும் திருநெல்வேலிநகர சபைக்குத் திரு. பெருமாள்கோனார் அவர்களும் மிகுதியான வாக் குக்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கத்தினர்களாக நியமனம் பெற்றார்கள் என்றவிவரத்தை மிகமகிழ்வோடு குறிப்பிடுகின்றோம்.

திருச்சி யாதவகுல வாலிப சங்கம் 2-வது ஆண்டு விழா இம் மாதம் 8உ திருச்சி நகர் யாதவகுல வாலிப சங்கத்தின் இரண்டா வது ஆண்டு நிறைவிழா திருநெல்வேலி ஜில்லாபோர்டு உபத் தலை வரும் அட்வகேட்டுமாகிய திரு. ஜே. சக்கரபாணிநம்பியார் B. A., B. L. அவர்களின் தலைமையின்கீழ் கூடியது யாதவகுலப் பிரமுகர்கள் சிலர் சமுதாய முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பிரசங்கங்கள் செய்தார்கள். சமுதாய முன்னேற்றத்திற்காய் முனைந்துழைக்கும் தலைவர் அவர்கள், கல்வி செல்வம் என்ற இன்றியமையாப் பொருள்களை யாதவ மக்கள் கைப்பற்றி வாழவேண்டுமென்றும் குலத்திலுள்ள பல பிரிவினை களைப்போக்கி ஒத்து வாழவேண்டு மென்றும் என்பன பற்றியும் ஒரு அரிய விரிவுரை நிகழ்த்தினார்கள். இவ்வுரைகள் யாதவ மக்க ளுக்கு நற்பயனளிக்குமென்று நம்புகிறோம். சிறப்பாகத் திருச்சி யாதவகுலஇளைஞர்களின் முயற்சியைப்போல எல்லா இடங்களிலும் யாதவ இளைஞர் சங்கங்கள் நிறுவவேண்டுவதுடன் வரும் ஐந்தா வது மஹாநாடோடு யாதவ இளைஞர் மஹாநாடொன்றும் நடத்த வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

யாதவன்.

# மணித்திரள்.

பெண்கள் பொதுவாக 18-வயதில் தான் தங்கள் முழுத் தேக பலத்தையும் அடைகிறார்களாம்.

மனிதருடைய அறிவு 27-வயதிலேயே அதிகக் கூர்மை யடை கிறதாகச் சில அறிஞர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஒரு வயதுக் குழந்தைகளில் பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகள் 100-க்கு 10 அதிகமாக இறந்துபோகின்றனவாம்.

இங்கிலாந்தில் ரயில்கள் வருஷத்திற்கு 42 கோடி மைல்கள் பிரயாணஞ் செய்கிறதாகத் தெரிகிறது.

வயல்களில் காணப்படும் எறும்புகள் தங்களுடைய பளுவை விட மூவாயிரம் பங்கு கனமுள்ள பொருள்களை அவற்றினுடைய பெரு முயற்சியினால் இழுத்துக்கொண்டு செல்கின்றனவாம்.

ஒரு பவுன் விலையுள்ள இரும்பைக்கொண்டு 6000 பவுன் மதிப்புள்ள கடிகாரச் சக்கரங்கள் செய்யமுடியுமாம்.

வீட்டு ஈக்கள் மூலந்தான் காலரா, ஜன்னி, வாதஜ்வரம், வயிற்றுப்போக்கு முதலான வியாதிகள் பரவுகின்றன.

ஐரோப்பாக்கண்டத்தில் 121 பாஷைகள் பேசப்படுகின்றன.

லண்டனில் 3 மாத காலத்தில் மோட்டார்வண்டி ஏறி 364 பெயர்கள் மரணம் அடைந்திருக்கிறார்கள். இவரில் 229 பெயர்கள் கால் நடையாகச் சென்றவர்கள். இவருள் 99 பெயர் தாங்களே பதட்டத்தினால் குறுக்கே ஓடி மோட்டாரில் அகப்பட்டுக்கொண்டனர். 16000 பெயர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள்.

---

எலிகள் இல்லை என்றால் பிளேக் என்கிற வியாதிகளும் இல்லை. ஆகவே எலிகள் இல்லாமல் அவைகளைத் தொலைக்கின்ற பொறுப்பு வீட்டில் இருந்து வருகிற பெண்பாலர்களைச் சார்ந்திருக்கிறது. அவர்கள் வீட்டில் அரிசி, பருப்பு, உப்பு, புளி, மிளகாய், மிளகு, சீரகம் முதலிய சமையல் பதார்த்தங்களைச் ஜாக்கிரதையாகப் பாத்திரங்கள் பானைகளில் மூடிவைத்தே புழங்கவேண்டும். சாக்கடை, கக்கூஸ் முதலிய இடங்களில் தண்ணீர் சகதி முதலியன தங்காமல் அன்றன்று சுத்தம் செய்யவேண்டும். சுகாதார விதிகளை ஆண்பாலர்களைவிடப் பெண்பாலர்களே அதிகம் உணர்ந்திருக்கவேண்டும். இவற்றால் பெண்பாலர்களுக்கும் போதிய அளவு கல்விகற்பிக்கப்படவேண்டு மென்பது அவசியமென்று புலனாகிறது.

சுகாதாரபோதகன்.

# நமது சமூக ஒற்றுமை.

"ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கினால் அனைவர்க்கும் தாழ்வு" என்பது கற்றறிந்தோர் கண்ட உண்மையா கும். அவ்வுயர்ந்த உணர்வை மக்களுக்கு அடுத்தடுத்து எடுத்தோது வது மாண்புடையார் கடமையாகும். இவ்வுணர்வானது ஏனைய கூட்டத்தினரிடத்திலிருப்பதைவிட நம் குலத்தாரிடம் மிகவும் சீர் குலைந்திருக்கிறது என்பது எவரும் மறுக்க முடியாததோர் முடிவா கும். ஆதலால் நமது சமூகத்தினிடையே தற்காலம் நிலவிவரும் ஒற்றுமைக்குறைவை நீக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டியது யாதவர்களாகிய நம் ஒவ்வொருவருடைய முதற்கடமையாகும்.

பின்னை, இவ்வொற்றுமை உணர்வெனும் செந்நெற் பயிரை நம்மவருள் செழித்தோங்கவொட்டாமல் அழித்துக்கொண்டுவரும் களைகளோ பலவாம். அவைகள் பலவாயினும் முக்கிய களையானது கல்வியின்மை என்னலாம். நம்மவருள் பெரும்பாலோர் கல்வி யின் மேன்மையைப் பாராட்டாதவராய் உண்டியே உடையே உகந்து ஓடித் திரிகின்றனர். அறிவு முதிர்ச்சியடைந்த சமூகத்தினிடையே தான் ஒற்றுமை நிலவிநிற்கும். அவ்வறிவு முதிர்ச்சிக்குக் கல்வியே அடிப்படையாகும் ஆகையினாலேதான் கல்வியில் மேம்பாடடைந்த சமூகங்களெல்லாம் இப்பொழுது ஒற்றுமை வளர்ச்சியில் மேம்பா டடைந்து மிளிர்கின்றன. கல்வித்துறையில் தாழ்வடைந்த நமது சமூகமானது இப்பொழுது ஒற்றுமை வளர்ச்சியில் தாழ்வடைந்து நிற்பது உண்மையேயாம். கல்வி பெருகினால் மாத்திரம் இப்படிப் பட்ட தீங்குகள் தானே அகலும். இனி நம் கூட்டத்தினிடை வேற் றுமை வளர்கின்ற தன்மையினை ஆராய்வாம். அம்மம்ம! அன்ன வைகள் அத்தனையும் எடுத்துரைக்க எம்மனோரால் இயலாது. அவைகளில் சிலவற்றை ஒருவாறு எடுத்துரைக்க முயன்று முன் வந்தாலும் அவற்றை வெளியிட என் மனம் துணியவில்லை. என் செய்வது? குணத்தைக் கைக்கொள்ளும்படி செய்தற்குக் குற்றத் தின் கேட்டையும் எடுத்தியம்புதல் தானே வேண்டும்? உடல்நோய் நீங்கி நலம்பெறவேண்டுமானால் கைப்பு மருந்தும் ஊட்டவேண்டி யது அவசியமன்றோ? இனம் இனத்துடன் சேரும் என்பது பழ

மொழி. அது நம் சமூகத்தினரிடத்தில் மாத்திரம் பொய்த்துப்
போய்விட்டதென்றே துணிந்து கூறலாம். எப்படி யெனில் ஒரே
வகுப்பாகிய யாதவக் கூட்டத்தில் எத்தனை பிரிவுகள் இப்பொழுது
உளது என்பதைச் சற்றே யோசியுங்கள். ஒரு பிரிவினர் தாங்கள்
உயர்ந்த யாதவர்களென்றும் மற்றைப் பிரிவினர்களைத் தாழ்ந்த
யாதவர்களென்றும் சொல்லிக்கொண்டு வருவது வெள்ளிடை மலை
என்பது யாவருக்கும் தெரிந்ததோர் விஷயம். ஒரு பிரிவினர் மற்
றோர் பிரிவினருடன் சேரமாட்டார்கள். அன்னவர்களைத் தன்
போலும் மதிக்கமாட்டார்கள். அவர்களுடன் உண்ணவுமாட்டார்
கள். இப்படி இவர்கள் செய்வதின் பயனாய் ஒரு பிரிவினர் மற்
றொரு பிரிவினருடன் சம்பந்தஞ்செய்யமுடியாமல் ஒருசாதியினரா
கிய நாம் பல சாதியினராக இருந்து வருவது ஒன்று. நம்மவர்களை
நாமே பழிப்பதினால் நம்மை நாமே பழித்துக்கொண்டிருக்கிறோம்
என்பது மற்றொன்று. நம்மை நாமே இப்படிப் பழித்துக்கொள்
வதினால் நாம் மாற்றானுக்கு இடங்கொடுக்கிறோம் என்பது பிறி
தொன்று. இப்படி நாம் மாற்றானுக்கு இடங்கொடுப்போமானால்
கூடிய சீக்கிரத்தில் நம்சமூகம் மனிதவர்க்கத்தினிடத்தில் நாமெல்
லோரும் மாக்களாய்க் கருதப்படுவோம் என்பதில் ஐயம் இல்லை.
சென்னையிலுள்ள யாதவக் கூட்டத்தினர் தம் தென்னாட்டு யாதவர்
களைச் சோழியர் என்று இழித்துக் கூறுவர். தென்னாட்டு யாதவர்
கள் சென்னையிலுள்ள தம் யாதவசகோதரர்களைத் தமக்குத்தெரிந்த
இழி அடைமொழிகளைக்கொண்டு திரும்பவும் வைவர். இது மாத்
திரமன்று. யாதவ வகுப்பினுள்ளே தாம்தான் உயர்ந்த பிரிவின
ரென்று ஒவ்வொருவரும் தம்தம்இடங்களிலேயே வெறும் சண்டை
யிட்டுக்கொண்டு ஒருவரை மற்றொருவர் வேறுபடுத்தி இழிவாய்க்
கூறிக்கொண்டு வருவது இன்றும் ஒழிந்தபாடில்லை. ஒரே ஊரி
லுள்ள யாதவர்கள் அதே ஊரிலுள்ள பிறபிரிவுயாதவர்களை இழித்
துக் கூறிக்கொண்டு வரும் தன்மையை என்னென்று எழுதுவது
அவைகளை எல்லாம் இவ்வியாசத்தில் வரையப் புகுந்தால் வியாசத்
தின் பெரும் நோக்கத்தைக் கெடுத்துவிடுமென அஞ்சியும், இ
விஷயம் நம் யாதவ சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் முக்கியமா
கத் தெரிந்ததொரு விஷயமென நினைத்தும் வரையாது விடுத்தனம்
நம் குலத்தில் ஒரு பிரிவினர் சற்றுத் தற்கால கல்வி நாகரிகங்களி
மேம்பாடடைந்திருந்தால் அவர்கள் தாம் அடைந்த இன்பத்தை



தம் ஏனைய சகோதரர்களும் அடையும்படி செய்ய முன் வராம
லிருப்பதுடன் தம் சகோதரர்களையே இழிவுபடுத்திக் கூறிக்
கொண்டு அன்னவர்களை யாதவ வகுப்பினுள் சேர்ந்தவர்களென்று
கனவில் கண்டாலுங்கூட மறந்துவிடப் பிரயத்தனப்படுகிறார்கள்.
இப்படி இருந்தால் நாம் எத்தனைக் காலம் வாழலாம்? மற்றொரு
ருசிகரமான விஷயம். அவ்விதம் கல்வி கேள்வி நாகரிகங்களில்
சிறந்த பெரியோர்களும் தாங்கள் யாதவர்களென்று வெளியில்
சொல்லிக்கொள்ள வெட்கப்படுகிறார்கள். அவர்கள் நாம் ஏன்
யாதவ வகுப்பில் பிறந்தோமென்றும் சற்றுநேரம் கவலைப்படுகிறார்
கள். என்னே இவர்களின் குலத் துரோகம்! இப்படிப்பட்ட தன்
மைகள் இருக்கும்வரை நம் வகுப்பில் ஒற்றுமை கிஞ்சித்தும் உண்
டாகமாட்டா. ஆகையால் நம் சமூகம் முன்னேற்றமடையவேண்டு
மானால் யாதவ சகோதரர்கள் அனைவரும் தங்களுக்குள் தற்கா
லம் உலாவிவரும் பேதங்களை நீக்கி அனைவரும் ஒன்றென எண்
ணல் வேண்டும். தங்கள் வகுப்பில் ஒரு பிரிவினருக்கு ஒரு இழிவு
தங்களாலாவது அல்லது பிறராலாவது உண்டாகுமாயின் அது
தம்மைச் சேர்ந்ததென்றே நினைத்து அதைக் களைத்தெறிய முன்
வரல் வேண்டும். ஒவ்வொருவரும் தாம் யாதவ வகுப்பில் பிறந்தி
ருப்பதை ஒரு பெருமையாக எண்ணல் வேண்டும். தக்களுக்குள்
தற்காலம் இருக்கும் பிரிவுகளை அறவே பிடுங்கி எறிந்து ஒரு பிரிவி
னர் மற்றொரு பிரிவினரிடத்தில் சம்பந்தம் முதலியவைகள் செய்து
கொள்ளலாம் என்கிற சமத்துவக் கொள்கையை நாளடைவில் தங்
கள வகுப்பில் பரப்ப ஒவ்வொருவரும் முயற்சிபுரியல் வேண்டும்.
இவ்விதக் கொள்கைகளாகிய தண்ணீரை நாம் பாய்ச்சப் பின்ன
டைவோமானால் ஒற்றுமையென்னும் செந்நெற்பயிர் நம் சமூகத்தி
னிடையே செழித்தோங்காது என்பது திண்ணம்.

நம் சமூகமானது பிராமண சமூகத்தைப்போல இமயமலை
முதல் கன்னிமுனை வரையிலும், அரபிக் கடலிலிருந்து வங்காளக்
குடாக்கடல் வரையிலும் பரந்து நிற்பதாகும். ஏனைய சமூகங்கள்
தமிழ் நாட்டின் சில ஜில்லாக்களில் மாத்திரமும் அல்லது தமிழ்
நாட்டில் மாத்திரமுமே பரவி நிற்கின்றனவைகளாகக் காணப்படு
கின்றன. இவ்வளவு பெரிய பரந்த நம் சமூகத்தினிடை உண்டியி
லும், உடையிலும், பாஷையிலும், நாகரிகத்திலும் பேதம் காணப்

படுவது இயல்பே. இவ்விதமான அற்ப பேதங்கள் காலதேச வர்த்தமானங்களின் மூலமாய்க் காணப்படுமேயாயினும் அன்னவைகள் நம் பகுத்தறிவின் முன்னே சற்றேனும் எதிர் நிற்கமாட்டாவாகையால் அன்னவைகளை நாம் சிறிதும் பொருட்படுத்தவேண்டாம். நம் யாதவ சகோதரர்களை நான் மறுபடியும் மன்றாடிக் கேட்டுக் கொள்வது என்னவென்றால் பல பிரிவினராய்ப் பிரிந்து இந்திய நாடு முழுவதும் பரவியிருக்கும் நம் யாதவ சகோதரர்களிடை நமக்கும் அவர்களுக்கும் சில வித்தியாசங்கள் காணப்படுமேயாயினும் அவைகளைப் பொருட்படுத்தாமல் "அவன் யாதவன் நானும் யாதவன், அவனும் நானும் ஒரே ஜாதியினன், ஆகையினால் அவனுடன் நான் உண்ணலாம், அவனுடன் நான் சம்பந்தம் செய்து கொள்ளலாம்" என்ற எண்ணத்தைக் கைக்கொள்ளவேண்டுமென்பதும், அவ்வித எண்ணத்தைக் கூடியவரையில் செய்கையில் கொண்டு வர முற்படல் வேண்டுமென்பதுமேயாம். தென்னாட்டாரென்றும், வடநாட்டாரென்றும் அதனால் யான் உயர்ந்தவன், நீ தாழ்ந்தவன் என்றும் இத்தகையபேதம் நம்மிடை ஒருக்காலும் உண்டாகாமல் நம்குல முன்னேற்றத்தைக் 'கருதுவார்கள் காப்பாற்றுவார்கள்' என்று நினைக்கிறேன். ஆகையினாலே இனிமேலாவது நம் யாதவ சகோதரர்களனைவரும் தம்பெரும் துயிலிலிருந்து விழித்தெழுந்து தம் சமூகத்தைக் கல்வி, சமத்வம், ஒற்றுமை முதலிய துறைகளில் சீர்திருத்தி உலகிடை மேன்மையுற்றிருக்கும் ஏனைய சமூகத்திடை சமத்வம் பெறும்படி செய்ய முற்படுவார்களென்றெண்ணுகிறேன்.

கூடலூர் O. T.<br>5—10—'29

V. ஆனந்தரெங்கநாதம்,<br>(யாதவன்)<br>Advocate.

---

# நமது யாதவத் திருநாமங்கள்.

---

'திருநாமம்' என்பது பெற்றோர் பிள்ளைகளுக்குச்செய்யும் சடங்குகளில் ஒன்று. இதனை நாமகரணம் என்றும் கூறுவர். ஒவ்வொரு பொருளின் தன்மை இன்னது என்று அறிந்து வழங்குதற்குச் சாதகமாகச் சர்வேஸ்வரனால் உலகில் காணப்பட்ட எல்லாப்



பொருள்கட்கும் சிருஷ்டிகாலத்தில் பெயரிடப்பட்டிருக்கின்றன. அதன்படி மனிதர் என்பது பொதுவாக நமது வர்க்கத்தைக் குறிக்கும். இனி நமக்குள் தனித்தனி இன்னார் இனியார் என்று அறிந்து கொள்ளுதலின் பொருட்டே பெற்றோர்களால் தெய்வங்களின் பெயரைப் பிள்ளைகளுக்கு இட்டு அழைப்பது தொன்று தொட்ட மரபு. இது ஆகுபெயரின் பாற்படும் என்று இலக்கணங்களில் கூறுகின்றன. நமது யாதவ மரபில் தேவிற்சிறந்த திருமாலினது திருநாமங்கள் பல்லாயிரக் கணக்காயிருக்கின்றன. இங்ஙனமிருந்தும் நாம் நமது பிள்ளைகளுக்கு ராக்கன் மூக்கன் சுடலை கடலை என்று வாய்க்கு வந்த பெயரை எல்லாம் இட்டுப் பெரும்பாலும் வழங்கிக்கொண்டு வருகிறோம். இது பெரும் பாவம் என்று பகருதற்கும் அஞ்சுகின்றேன். பகவானைக் காட்டிலும் பகவானுடைய திருநாமங்களுக்குப் பெருமை அதிகம் என்று பாகவதம் கூறுகின்றது. அஜாமிளன் என்பவர் தம் புதல்வனுக்குப் பகவனாமத்தை இட்டபடியால் அவர் நற்கதியடைந்தார் என்பது புராணப் பிரசித்தம். இனித் திருஷ்டாந்தப் பிரசித்தமாக உண்மையில் நடந்த ஒரு கதையும் உண்டு. ஒருவன் தன் புதல்வனுக்கு இராமன் என்று பெயரிட்டிருந்தான். ஒருநாள் இரவு அவன் வீதிவழி வந்துகொண்டிருக்கையில் அவன் விரோதி ஒருவன் அவனைக் கொல்ல முயன்று கையிற் கத்தியுடன் ஓடோடியும் வந்தான். அதை அறிந்த இவன் அல்லோலப்பட்டு ஒரே ஓட்டமாக வீடுவந்து சேர்ந்தான். விரோதியும் பின்தொடர்ந்து ஓடிவந்தான். வீடு மூடியிருந்தது. இவன் "இன்று செத்தோம்" என்று எண்ணியவன் திடீரென்று கதவைத் தட்டி இராமா என்று தன் மகனைக் கூப்பிட்டான். இந்தத் திரு நாமத்தைக்கேட்ட விரோதி கத்தியைத் தூர எறிந்து விட்டு அவன் காலில் வீழ்ந்து "நீ இராம பக்தன் என்பதை நான் அறியேன். என்னை மன்னிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான். இத என்னை மன்னிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான். இதனால் கடவுள் இவன் உயிரையே காப்பாற்றினாரன்றோ! இனி ஆ கிருஷ்ணா துவாரகா சங்குசக்கர கதாபாணே என்றவுடன் ஆதரவற்ற துரௌபதிக்குப் பகவான் துயில்வளர்த்தருளினாரென்றும் ஆதிமூலமே என்று ஒரு யானை அழைக்கப் பகவான் பெரிய திருவடியையும் தமது பாதங்களால் அணைத்தபடியே பறந்துவந்து காத்தருளினர் என்றும் நாம் படித்தறிந்திருக்கிறோம். "கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதவொட்டோம்" என்று சமு

சாரிகளை வெறுத்துக் கூறிய பெரியாழ்வார் அவரை நல்வழிப் படுத்தத் திருவுளங் கொண்டு "காசும் கறையுடைக் கூறைக்கும்" என்ற தொடக்கத்தில் பாசுரங்கள் பத்து அருளிச்செய்திருத்தலை யும் நாம் அறிந்திருக்கின்றோம்.

"மண்ணிற் பிறந்து மண்ணாகு மானிடப் பேரிட்டங்கு
எண்ண மொன்றின்றி இருக்குமேழை மனிதர்காள்
கண்ணுக் கினிய கருமுகில் வண்ணன் நாமமே
நண்ணுமின் நாரணன் தம்மன்னை நகரம் புகாள்"

என்பது அவ்வருளிச் செயல்களில் ஒன்று. ஆகவே இனி நாம் நமது இளைஞர்களுக்கு நங்குலத்துதித்த பகவானது திவ்ய திரு நாமங்களையே இட்டு வழங்கிவருதல் வேண்டுமென்றும் நாமும் நமக்கு ஏற்பட்டிருக்கிற நாராயணசாமிக்கோன் என்பதை N S. சாமி என்றும், சுந்தரராஜக்கோன் என்பதை S. R. சாமி என்றும் சுருக்கி வழங்காமல் உள்ள பெயரையே வழங்கி வருதல் வேண்டு மென்றும் அதுவே புண்ணியப்பேறென்றும் ஸ்ரீ வைஷ்ணவ குல யாதவர் முன்னிலையில் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்,
ஐயம்பெருமாள், (யாதவன்)
திருநெல்வேலி.

---

# நமது கடமை.

---

யாதவப் பெரியோர்களே!

நம்குல மகாநாடு இதுவரை நான்கு நடைபெற்றிருக்கின்றன. இனி நடைபெறுதற்கிருப்பது ஐந்தாவது மகாநாடு. இம்மகாநாடு கள் கூடியதின் பயனாக நமது மரபுக்கென்று ஒரு பத்திரிகை நடைபெறவேண்டியது அத்தியாவசியமென்று தீர்மானிக்கப்பெற்று நடத்துவதற்கேற்ற இடம் பொருள் ஏவல் மூன்றும் அமையவேண்டுமே என்றும் ஆலோசித்துக்கொண்டுவந்தோம். தனித்தனி யாதவ குலத்துத்தோன்றிய ஒவ்வொருவருக்கும் இதைப்பற்றிய ஆர்வம் அதிகந்தான். ஆனால் இதனைப் பொறுப்புடன் ஏற்று அதில் வரும் இலாபம் நஷ்டம் முதலியனவற்றிற்கு ஆளாக நின்று எடுத்த



முயற்சி இடையூறின்றி நிறைவேறி நடைபெற்று வருதற்கான பிர
த்தனங்கள் செய்வதற்கு "நான்" என்று ஒருவர் இதுவரையும்
முன் வரவில்லை. என்றாலும் இப்பொழுது ஏதோ நமது குலத்
துக்கு அமைந்த நற்காலத்தின் பயனாக "அந்தி பூத்தது; அம்மி
தந்தது" என்பதுபோன்று "யாதவமித்திரன்" என்னும் பெய
ரில் இப்பத்திரிகை வெளியாயிருக்கிறது. இதன் பொறுப்பாளர்
மதுரை புத்தக வர்த்தகப் பிரமுகர் ஸ்ரீமான், இ மா. கோபால
கிருஷ்ணக்கோனார் அவர்களே என்பது இப்பத்திரிகையில் சந்தா
தாராய்ச் சேர்ந்திருக்கிற நாமெல்லாம் அறிந்துகொண்ட விஷயமே.
பத்திரிகை நடத்துவதென்றால் என்ன! இலேசான காரியமா? அதில்
ஏற்படுகிற சிரமம் இன்னதுதான் என்பது யாரால் வெளியிட்டுச்
சொல்லக்கூடும்!. ஒரு மாதம் இரண்டுமாதம் மூன்று மாதம் வரை
நடத்தி அதன் சிரமத்தைச் சகிக்கமுடியாமல் நிறுத்திவிட்ட பத்தி
ராதிபர்கள் நமது தேசத்தில் எண்ணிப் பார்ப்பதாயிருந்தால் ஆயி
ரக்கணக்கல்ல பதினாயிரக் கணக்காயும் இருக்கலாம். ஒருவேளை
அவர்களுக்கே அதனுடைய சிரமம் தெரியும். நான் ஒரு தடவை
திருநெல்வேலியில் ஒரு பத்திரிகைக்கு ஆசிரியராயிருந்து சில
காலம் நடத்தி வந்து, பின்னர் நிறுத்திவிட்ட என் நண்பர் ஒரு
வரைச் சந்தித்து "ஏன் பத்திரிகை நின்றுவிட்டது" என்று வினவி
னேன். அதற்கு அவர் என் வினாவிற்கு விடையாகத் தாயுமான
சுவாமிகளது பாடல்களில் ஒன்றாய "கந்துக மதக் கரியை வசமா
நடத்தலா"மென்ற பாடலைக் கூறி அதன் ஈற்றடியாகிய சிந்தையை
அடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது என்கிற அடியைச்
"சிந்தையை அடக்கலாம்" என்று மாற்றிப் "பத்திரிகை நடத்து
கிற திறமரிது சத்தாகி என் சித்தமிசை குடிகொண்ட அறிவான
தெய்வமே தேசோமயானந்தமே" என்று அழகாய்ப் பாடி முடித்
துக்காட்டினார். இதிலிருந்து பத்திரிகை நடத்துவதின் அருமை
ஒருவாறு நமக்குப் புலப்படுமென்று நம்புகிறேன். இதனை நமது
கோனாரவர்கள் அறியாதவர்கள் அல்லர். என்றாலும் சமுதாயச்
சீர்திருத்தத்தைமுன்னிட்டு 'என்ன வந்தாலும் சரி' என்று துணிந்து
ஆரம்பித்திருக்கிறார்கள். ஐம்பதினாயிரம் சந்தாதார்கள் சேர்ந்து
நடைபெற்றுவருகிற பத்திரிகையும் இவ்வளவு நயங்காகிதத்தில்
இதுவரை வெளிவந்திலது. சீர்மையிலிருந்து வெளிவருகிற ஒன்
றிரண்டு ஆங்கிலப் பத்திரிகைகள் ஏதோ இத்தகைய நயங் காகிதத்

தில் வெளிவரலாமென்று நினைக்கலாம். இவ்வளவு நயங் காகிதத்தில் 36-பக்கங்களோடு கூடி மாதம் ஒருமுறை வெளிவருகிற இப்பத்திரிகைக்கு வருஷ சந்தா ரூபா ஒன்றேதான். இது குலாபிமானத்தை முன்னிட்டு ஏற்படுத்திய பத்திரிகையும் சந்தாவுமாதலின் இதனையும் நாம்செலுத்தி இதில் சந்தாதாராகச் சேர்தற்கு யாதவர்களாகிய நாம் பின்னிடலாமா? "பத்திரிகைதான் வெளிவந்துவிட்டதே; இனி என்ன நமக்கு அரியது?" என நாம் திருப்தி அடைந்துவிடலாமா! குறைந்தது மூவாயிரம் சந்தாதார்களாவது சேராமல் இப்பத்திரிகையைக் கைப்பொறுப்பாகாவண்ணம் நடத்துவதுதான் எப்படி? இதனை விஷயதானம்புரிந்து நடத்துதற்கும் இது சம்பந்தப்பட்ட காரியாதிகளை உடனிருந்து நடத்துதற்கும் நம்மரபில் தகுந்த பண்டிதர்கள் குலாபிமானத்தை முன்னிட்டாவது பாடுபட முன்வரவேண்டாமா? பணமும் படிப்பும் ஒருங்கமைந்த பேரறிவாளர் நமது வகுப்பில் இல்லாமலில்லை. ஆனால் நான் என்று முன் வருபவர்கள்தான் இல்லை என்று கூறவேண்டியதிருக்கிறது. ஆகவே இனி நாம் செய்யவேண்டிய கடமை 'என்ன? யாதவர்கள் ஒவ்வொருவரும் ஒரு ரூபா அனுப்பிச் சந்தாதாராகச் சேரவேண்டும் "ஒன்றே புரிதல் வேண்டும் ஒன்றும் நன்றே புரிதல் வேண்டும். நன்றும் இன்றே புரிதல்வேண்டும். இன்றும் இன்னே புரிதல்வேண்டும்" என்றார் பெரியார். ஆகவே இது விஷயத்தில் நாம் இப்பொழுதே முயன்று முன்னிற்கவேண்டும். நம்மைச் சேர்ந்த யாதவர்களுக்கும் இவ்விஷயத்தைத் தெரியப்படுத்தி அவர்களையும் சந்தாதாராகச் சேரும்படி தூண்டுதல்வேண்டும். அம்மட்டுமாத்திரம் புரிவது போதாது; அவர்களை இப்பத்திரிகையை முற்றிலும் படித்தறியுமாறு கட்டாயப்படுத்தலும் வேண்டும். இதுதான் நமது முதற் கடமை பின்னர் நமது பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற் சேர்த்து அவர்களைப் படிக்க வைப்பதுங்கூட இதன் இரண்டாங் கடமை என்றுங் கூறலாம். இதுபோன்ற எத்தனையோ கடமைகள் இன்னும் இருக்கின்றன. மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கடமையைச் செய்து முடிக்கவே கடமைப்பட்டவர்களாயிருக்கின்றனர். நாமும் அதுபோல் நமது குலத்திற்குரிய நன்மை பயக்கத்தக்க கடமைகளைச் செலுத்த முன்னின்று முயலுவோமாக.

எம். குமாரசாமிக்கோன்,
சப்கோர்ட் அமீனு, திண்டுக்கல்.

# தற்கால சமுதாய நிலைமை.

வேதங்களும் இதிகாச புராணங்களும் யாதவகுலம் தெய்வீக
குலம் என்று பாராட்டிக் கூறுகின்றன. காரணம் பகவானே நமது
குலத்தில் அவதரித்தருளிய புண்ணியமேயாம். இவ்வாறு நமது
குலம் உயர்ந்தகுலமென்று வேதபுராணங்கள் பாராட்டி வருகிறபடி
தற்போது நமது யாதவகுலம் உயர்ந்த நிலைமையில் இருந்துவரு
கிறதா என்பதை இனிக் கவனிப்போம். முதலாவது ஒரு குலம்
உயர்ந்த குலம் என்று ஒப்புக்கொள்ளுதற்கு அக்குலத்தார்கள்
பெரும்பாலார் கல்வியுள்ளவர்களாயும் கல்வியைப் பாராட்டித் தம்
மக்களுக்குப் பத்தாண்டு வரையிலாயினும் கல்விகற்குமாறு செய்வித்
துப் பின்னரே தமது குலத்தொழிலில் பிரவேசிக்குமாறு செய்விப்
பவராயும் இருந்து தீரவேண்டும். நமக்கும் நமது குடும்பத்துக்கும்
எவ்வாறு நாம் நன்மையேகருதி முயல்கின்றோமோ அவ்வாறே நமது
குலத்திற்கும்நன்மையே கருதி முயலவேண்டும். மனுஷராகப் பிறந்த
எவரும் தன்னையும் தன் தாய்தந்தை சுற்றம் பிள்ளை பேரன் முதலிய
குடும்பத்தாரையும் மாத்திரம் பேணி அவர்களுக்காகப் பாடுபடப்
பிறந்தவரல்லர். பின்னர் அவர் அவரது குலத்தையும் பேணி
அதற்காகப் பாடுபடவுமே மனுஷராகப் பிறக்கின்றனர் என்ப
தைத் தனித்தனி ஒவ்வொருவரும் உணருதல் வேண்டும். "இனை
நன்மை இன்சொல் ஒன்றீதல் மற்றேனை மனநன்மை என்றிவை
எல்லாம் இற் பிறந்தார் கண்ணே உள" என்று ஒரு பெரியார் கூறு
கின்றார். மேலே கூறிய இவை எல்லாம் இயற்கையில் எக்குலத்தில்
ஏற்பட்டிருக்கின்றனவோ அக்குலமே உயர்குடிப் பிறப்பாகும்
என்பது இதன் பொருள். நல்லவை செய்வதே மனிதர்களின்
இயல்பென்றும் தீயவை பல்லவர் தூற்றும் பழி என்றும் கூறிய
மற்றொரு பெரியார் அவற்றைப் பழங்குடிப் பிறப்பினிலேற்றி
"எல்லாம்-உணரும் குடிப்பிறப்பி னாதியமென்றே என்றும் கூறி
யிருக்கின்றார். ஆகவே நல்லவை தீயவை முதலியவற்றுக்கு அவ
ரவர் குலமே பொறுப்பாகும் என்பது புலனாகிறது. பண்டைக்
காலத்தில் கல்விநலம் பெற்று வந்த குலமே உயர்குலம் என்று
பாராட்டப்பெறறு வந்தது போலவே தற்காலத்திலும் ஆங்கில
கவர்ன்மெண்டார் கல்விநலம் பெற்ற [illegible] முன்னேற்றமுற்ற

மாபென மதித்து அக்குலத்திற்கு வேண்டிய சாதகங்களை எல்லாம்
வேண்டியது வேண்டியாங்கு உதவி வருகின்றனர். அரசாங்கத்தார்
கணக்கில் நமது யாதவகுலம் கல்விநலம் பெற்ற குலம் என முன்
னர்க் கணக்கிடப் பெற்று இப்போது கல்வியில் பிற்போக்கு
அடைந்துள குலம் யாதவகுலம் என விலக்கப்பட் டிருப்பதை நாம்
அனைவரும் அறிந்துமிருக்கிறோம். ஒரு சமுதாயத்தில் கல்வியறிவு
மிக்கார் ஒருவர் இருப்பரேல் அவரால் அச்சமுதாயத்திற்கே பெரு
மை என்பதைக் கண்கூடாகக் கண்டறிந்த நாம் ஒரு சமுதாயத்தில்
கல்வியறிவு இல்லா மக்கள் பெரும்பாலும் இருந்தால் அது அச்
சமுதாயத்திற்கே பெருங்குறைவு என்பதையும் தெரிந்தே இருக்
கிறோம். பொதுவாக நமது இந்திய நாட்டில் எத்தனையோ சமூகங்
கள் இருக்கின்றன. அவைகள் முன்னிருந்த நிலைமைக்கு இப்போ
திருக்கிற நிலைமை மிகவும் முற்போக்குடைய நிலைமையில் இருக்
கின்றன. நமது சமூகம் மாத்திரம் பண்டைக்காலத்தில் முற்போக்
குடைய நிலையில் இருந்து இப்போது கல்வியில் குறைந்து பிற்
போக்கடைந்திருக்கின்றது என்பது உள்ளது உள்ளபடி எவரும்
ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும். "தக்கவின்ன தகாதனவின்ன
வென்றொக்க உன்னலராகி னுயர்ந்துள மக்களும் விலங்கே" என்று
நமது கம்பர் பெருமானும், "விலங்கொடு மக்களனையர் இலங்கு
நூல் கற்றாரோடேனையவர்" என்று தெய்வத் திருவள்ளுவரும்கூறி
இருப்பதை நாம் சிறிது ஊன்றி உணர்ந்து பார்ப்போமானால் நமது
யாதவ சமூகத்திற்கென ஆங்காங்கே பல சங்கங்களும் சமுதாயப்
பத்திரிகைகளும் அவசியந்தான் என முயன்று உழைக்க முன்வரு
வோம். நமது முயற்சி பெரும்பாலும் கல்வியிலேயே இருக்கவேண்
டும். நமதுமக்கள் போதிய கல்வியறிவு பெறுதற் கேற்றவாறு ஆங்
காங்கே பள்ளிக்கூடங்களைக் கிராமங்கள்தோறும் அமைப்பதற்குப்
பிரயத்தனப்படவேண்டும். ஆண்மக்களைப் போலவே பெண்மக்க
ளும் கல்விக்குரியார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கல்வி
யோடு கைத்தொழிலையும் நமது பிள்ளைகளுக்குப் பழக்கிவருவது
சாலச் சிறந்த நன்மையாகும். வேதங்களும் இதிகாச புராணங்க
ளும் கூறியாங்கு யாதவகுலம் முன்னரேபோல் முன்னுற்றுத்துலங்
குதற்கு யாதவ மக்களினது ஒவ்வொருவர் கடமையும் ஈங்கு அவ
சியமாக வேண்டப்படுவதா யிருக்கிறது என்பதை இனியேனும்
ஊன்றி உணர்ந்து ச[illegible]மைப்புக்கு முன் வருவோமாக,



பிற்கால வாழ்விற்கு நம்மைவிட நமது பிள்ளைகளே உரிமை
உடையவர்கள். ஆகவே யாதவ வாலிபர்களை ஊக்கி அவர்கள் முற்
போக்குக்கு ஏற்ற உதவிகளையும் அவரவர் தாய்தந்தையர் புரிந்து
அவர்கள்விஷயத்தில் கண்ணுங்கருத்துமாயிருந்துவருதல்வேண்டும்.

முந்துவோம் முன்னுறுவோம் மூலப் பழம்பொருள்கோ
விந்தன் மலர்ப்பதத்தை வேண்டிடுவோம்—சொந்தமுள
யாதவ மித்திரனை யாதரிப்போம் நாம்புரிந்த
மாதவமே என்ன மதித்து.

இங்ஙனம்,
துரைசாமிக்கோன்,
வக்கீல் குமாஸ்தா, திண்டுக்கல்.

# புல்லறிவு.

புல்லறிவென்பது சொற்ப அறிவென்றும் தகாத அறிவென்
றும் பொருள்படும். பிறர்பொருளைக் கவருமொருவன் பொருளுடை
யானுக்குத் தோன்றாமல் கவர எத்தனிக்குஞ் சமயம் பக்கத்திலி
ருந்து யாராவது வந்துவிடுவனோ என்ற அச்சத்தோடு திருடுவன்.
நாம் அகப்பட்டு விடப்படாது. என்றதே அவனுடைய நோக்கம்.
நாம் செய்வது தவறு பிடிபட்டால் தண்டனை அடைவோமென்பது
தெரிந்துதான் புல்லறிவோடு செய்கிறான். இன்னும் ஒருவன் தன்
னைப் பார்க்கிலும் கல்விசெல்வமுதலியவைகளிற் சிறந்திருந்தாலும்
தனக்கு ஒன்றும் தெரியாதாயினும் தெரிந்ததுபோல் பொறாமை
கொண்டு வீண்தர்க்கம் செய்வது புல்லறிவே. அறிவாளர்கள்
கேட்கும் கேள்விக்குப் பதில் கூறத்தெரியாது வீண்பேச்சுப்பேசி
எதிர்ப்பதும் புல்லறிவே. எனக்கு அது சரியென்று தோன்றிற்று
செய்தேனென்பதும் புல்லறிவுதான். உலகு உயிர் கடவுள் என்று
முப்பகுதி பற்றிக்கூறும் வேதாகமங்களைப் பிறசமயக் கோட்பாட்
டாலும் ஆன்ற கல்வி கேள்வியின்மையாலும் வாயில்வந்தபடி பழி
மொழிகூறித் திரிந்து சமயத்தைக் கருதாமல் ஒழுக்க மன்னியில்
அனாசாரங்குடிகொண்டு திரிவதும் புல்லறிவென்றுதானுணரலாம்.
'நல்லறிவாளர்களுடன்கூடி நன்மைக் கேதுவானதை நாடி நமது
சமூகத்தைத்தேடி நலம் செய்யுங்கள்' என்று கல்வி அறிவொழுக்க

முடைய தவப் பெரியார் பேசினால் ஒருவகையிலுங் கண்டறியாது உண்பதும் உறங்குவதுமே கொண்ட புன்மதியில் "நமக்குப் புத்தி சொல்ல ஒருவருண்டோ! நம்மைப் பார்க்கிலும் பெரியனென்று ஒருவனுண்டோ மனிதரென்றால் எல்லாரும் ஒன்றுதானே" என்று பேசித் திரிவதும் புல்லறிவென்றுதான் அறிவாளிகள் கூறுவர்.

அறிவுடையன்பர்காள்! உலகுயிரனைத்தினும் பல நன்மைகளடைந்திருப்பதும் அடைவதும் அடையப்போவதும் மக்களாகிய நாம்தான். ஆகையால் அறிவுடையரா யிருந்தாலல்லது ஒரு பயனுமடையோமென்பதுண்மை "அறிவுடையா ரெல்லாமுடையா ரறிவிலார் என்னுடையரேனுமிலர்" என்பது குறள். ஆகவே புல்லறிவை நீக்கி நல்லறிவை நாடினால் நாமடைய முடியாத பொருளொன்றுமில்லை. நல்லறிவைநீக்கிப் புல்லறிவை வகித்தால் நாமடையப்போவதொன்றுமில்லை நல்லறிவினால் நன்மையும் புல்லறிவினால் தீமையும் அடைவமென்பது திண்ணம்.

பிறர் பொருளைக் கவருவது தவறு என்று நமக்குத் தோன்றியும் திருட எத்தனிப்பது கூடாது துவக்கத்தில் ஊதியந்தருவதாயினும் இறுதியில் துன்பத்தையே பயக்கும். மற்றவருடைய கல்வி செல்வத்தைக்கண்டு நாமும் அவ்வாறடைய முயலவேண்டுமே யன்றிப் பொறாமையினால் பிதற்றுவதுந் தவறு. கல்வி கேள்வியுள்ள தவப்பெரியாரிடம் எதாவதொன்றை வசனிக்கும்போது தாம் தாழ்ந்தநிலையில் வசனிக்க வேண்டுமேயன்றித் தனக்குத் தெரிந்ததுபோல் தெரியாததை மனந்துணிந்து புல்லறிவோடுபேசுவதும் தகாது. அவர்கள் சொல்லுக்குச் சொல்லாய் நாமும் பதில் கூறிவந்தாற்போதும் எனப் புகல்வது புல்லறிவாந் தன்மையே. நமக்குச் சரியென்றதை நியாயமென எண்ணக்கூடாது. அறிவுடைய பெரியாருக்கும் மனச் சம்மதியாக இருக்கவேண்டியதைச் செய்வோமாக. அவர்கள் மனமொவ்வாது ஒருவன் செருக்கோடு செய்யுங் கருமம் இறுதியிற் றுன்பமே பயக்குமெனவறிவோம். உலகத்திலுள்ள சகலவித கருமங்களும் ஆகம அறிவோடுதானியங்கும். வேதாகமங்கள் மக்களுடைய அறிவுக்குத் தக்கவே வகுத்துவைத்திருக்கிறார்கள். ஐந்தாண்டுகொண்ட ஒரு சிறுவனுக்கு அரிச்சுவடி மாத்திரம் உணர்த்தலாமே யன்றி ஆகமங்களை யெல்லாம் உணர்த்த முடியுமா? முடியாது. மக்களுடைய அறிவுக்குத் தக்கவே



பொது நூலென்றும் சிறப்பு நூலென்றும் அறிவு நூலென்றும்
இன்னும் பலவிதமாக நிலைமைகண்டு வகுத்திருக்கிறார்கள். அத்தன்
மையறியாமல் அயல் நாட்டாச்சாரத்தினையும் பிறமதக் கண்ட
னங்களையுங்கண்டு வேதாகமங்களின் தன்மையை உணராமல்
சொற்ப அறிவோடு உண்டென்பதை. இல்லையென்று நாஸ்திகம்
பேசித்திரிவதை அறிவுடையோர் கண்டால் நகைப்பார்கள். ஆகை
யால் அன்புடைய சகோதரர்காள்! இவ்விதமான புல்லறிவை நீக்கி
நல்லறிவோடு கூடிய அறிவாளிகளைக் கண்டால் வணங்கி அவர்கள்
சொல்வதை வேதமாக நம்பி அவர்கள் பின்னடையாய் நடப்பது
தான் மேன்மை. நல்லறிவாளரையும் புல்லறிவாளரையுங் கண்டு
கொள்ளலாம். அது அவர்கள் வாயினின்று வெளிவரும் இன்
சொல்லினாலும் புன்சொல்லினாலும் வெளிப்படும்.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். — என்றார் நாயனார்.

ஆகவே மிருகத்தன்மையதாய புல்லறிவை நீக்கி நல்லறிவை நாடி
நடக்கவே நாமெல்லோரும் அறக்கருணைப் பெருந் தடங்கடலாகிய
நம்மிறைவன் திருமுன் அன்பு செய்வோமாக.

எஸ். நாராயணக்கோன்,
களக்காடு.

---

# பாவத்தில் பெரிது எது?

அன்புடையீர்!

திருநெல்வேலி ஜில்லாவில் நாங்குநேரித் தாலூகா பொதிகை
மலைச் சார்பில் களக்காடு என்னும் நகரமானது சகல வளங்களி
லும் பொருந்தி மிக்க மேம்பாடுடையதாயிருக்கின்றது. அதிலும்
நம் யாதவ மக்கள் அதன் பக்கமுள்ள கிராமங்களிலும் நகரத்தின்
கீழ்ப்பக்கத்தில் செட்சைத்தெரு என்னும் பெயருடைய இடத்திலும்
புராதீனமாக எல்லா வளங்களும் பொருந்தியிருப்பவர்கள். அத்
தெருவின் நடுப்பாகத்தில் யாதவ சமூகத்துக்கென ஒரு காளி
கோயில் உண்டு. அதன் பக்கம் நமது சமூகப் பொறுப்பின் தனி
மையாகத் தொன்றுதொட்டு ஒரு சிறந்த திண்ணைப் பள்ளிக்கூடம்

நடந்து வந்தது. அதன் மூலம் அநேக மக்களுக்குத் தமிழ்ப் படிப்
புத் தோன்றி இன்றைக்கும் என்றைக்கும் அவர்கள் அழியாத
கல்விப் பொருளோடு விளங்குகிருர்கள். அதனுல் செல்வப் பொரு
ளும் அடைந்துள்ளார்கள். அவ்விதம் நடந்துவந்த கல்விச் சாலை
யானது நமது அருமைச் சகோதரர்களின் நல்வினைப் பயனுல் சர்க்
கார் கிராண்டு வருவாய் முதலியனவும் முறையாயேற்பட்டுத் தக்க
மேம்பாடுடையதாகத் தோன்றிற்று.

அவ்விதம் நடந்துவந்த பாடசாலையானது நமது தவக்குறை
வாலும் இங்குள்ள யாதவமக்களின் செயலினுலும், பிள்ளைகளை
யுடையார்க்கன்றி மற்றவர்களுக்கு அப்பள்ளிக்கூடத்தினுல் வரு
வாயென்ன என்று ஆட்சேபிக்கத் தொடங்கிப் பள்ளிக்கூட விடு
முறை நாட்களிலும் இராக்காலங்களிலும் அந்த இடத்தில் சகிக்க
முடியாத சில ஆபாசஞ் செய்யத் தொடங்கினுர்கள். இவைகளைக்
கண்டித்துப் பள்ளிக்கூடம் நடத்த எத்தனித்த சில அறிவாளிகளைக்
கண்டமட்டும் பிதற்றினுர்கள். பொதுக் கட்டிடமானதால் அதில்
எல்லாரும் புழுங்கலுலர்த்தலாம் என்றுர்கள் பலர். மேலும் பள்ளிக்
கூட ஆசிரியரை மெள்ள வெளியே துரத்தவும் எத்தனித்தார்கள்.
என்ன செய்வார் ஆசிரியர் !

இவர்களுடைய புன்மதிக்கு வேண்டியமட்டும் தன்னுலியன்ற
பிரயத்தினம் செய்தார். ஒன்றும் நடக்காதது கண்டு கல்வி கற்க
விருப்பமுள்ள சில மாணுக்கரைக்கொண்டு தமது சொந்த இடத்
தில் வைத்துக் கொஞ்சநாள் பள்ளிக்கூடம் நடத்திவந்தார். சரியான
படி பள்ளிக்கூடம் நடத்தவியலாமல் கிராண்டையும் இழந்து பள்
ளிச் சிறுர்களையும் கவனியாமல் இருந்துவிட நேர்ந்தது.

காளிகோயில் பக்கமான கல்விச் சாலையில் அக்காளிகோயில்
உற்சவகாலத்தில் யாவரும் பலிகொடுத்துக் காளிக்குப்பூஜைபோட்டு
வருகிருர்கள். அதற்காகவே அந்த இடத்தைச் சுவாதீனப்படுத்திக்
கொண்டார்கள். அந்தோ! தற்காலம் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு
சமூகங்களும் கல்வி அபிவிருத்திக்காகப் பாடுபடும் நிலைமை என்ன!
நமது சமூகம் இருந்த பள்ளிக்கூடத்தையும் இழந்து பரிதவிக்கும்
கதியென்ன! இவர்களுடைய இவ் அடாத செய்கையையும் இவர்
களுடைய நிலைமையையும் கண்ட எந்த யாதவர் மனம்தான் பரி



தவிக்காமலிருக்கும்! இவை பாவமல்லவா? களக்காட்டிலுள்ள நமது
அருமைச் சகோதரர்களாய யாதவர்களுக்குக் கல்வி விஷயத்தில்
இனிமேலாவது தீவிரமுயற்சி அளிக்கும்படியாகப் பரம கருணு
நிதியின் திருவருளை அனவரதமும் சிந்திப்போமாக. சுபம்.

எஸ். நாராயணக்கோன்,
களக்காடு.

---

## நமது வாழ்வு.

---

பொதுவாக நமது இந்தியாவில் மானிட வாழ்வைப்பற்றி
அது எத்தகையது என்று ஆராயப் புகுந்தால் மானிடர்கள் அனே
வர்களையும் எலும்பற்ற பிராணிகளாகவும் இந்தியாவில் ஏற்பட்
டிருக்கிற வறுமையைப் பங்குனி மாதத்து வெயிலாகவும் உபமா
னித்து வறுமை என்கிற வெயிலினிடத்து மனிதராகிய பிராணிகள்
கிடந்து வருந்துகின்றன வென்றே தீர்மானிக்கலாம். முப்பத்து
மூன்றுகோடி ஜனங்களுக்கிடையில் ஏதோ நூற்றுக்கு ஒன்றிரண்டு
பேர் மேற்கூறிய வெயிலினிடத்து ஒரு மரநிழல் கண்டு அதில் ஒதுங்
கிச் சுகப்பெறுமாப்போல் பூர்வீகத்தில் அவர்கள் செய்த புண்ணி
யப்பேற்றுல் தனவந்தராகச் சுகவாழ்க்கையில் அமர்ந்திருக்கின்
றனர். நமது இந்தியாவைத் தவிர மற்றைய எந்தத் தேசத்தை
எடுத்துக் கொண்டாலும் வறுமையில் இத் தேசத்தைப்போல் இவ்
வளவு மோசமாக எவ்வாற்றுலும் கூறமுடியாது. இதற்குக் காரணம்
மற்றைத் தேசத்தாரிடத்துள்ள ஒற்றுமை, ஊக்கம் என்ற இரண்டி
னுலும் நமது தேசத்தாரிடத்துள்ள வேற்றுமை சோம்பல் என்ற
இரண்டினுலுமே அன்றி வேறென்றுகூற யாராலும் முடியுமோ?
இங்ஙனமிருந்தும் இந்தியர்கள் இந்த வேற்றுமையையும் சோம்பலை
யும் மாத்திரம் கைவிடோர் என்று கட்டுரைக்கின்றனர். இனிச்
சிறப்பாக நமது யாதவ சமூகத்தின் வாழ்க்கையைப்பற்றி ஆராயப்
புகுந்தால் இச்சமூகம் ஆதிகாலத்தில் மிக்க உன்னத நிலைமையி
லிருந்து வரவர நமது தேசத்திலுள்ள எல்லாச் சமுதாயத்தையும்
விடக் கல்வியிலும் ஊக்கத்திலும் மிகவும் பிற்போக்கை உடையதா
கவே இருக்கின்றதென்று தீர்மானிக்கலாம். வேதங்களிலும் புரா

ணங்களிலும் இதிகாசங்களிலும் நமது யாதவகுலத்தைப்பற்றிப் புகழ்கின்ற விஷயம் ஒருபுறமிருக்க; நமது குலத்தில் கடவுளே கண்ணனாகவந்து அவதரித்த மகிமை ஒருபுறமிருக்க, இன்றைக்கு இரண்டாயிர வருடங்களுக்குட்பட்ட சங்க காவியங்களும் யாதவர்களைப்பற்றிப் புகழ்ந்து கூறுகின்றன. "நமது வாழ்க்கை வறுமை என்பதை அது கசப்போ அல்லது புளிப்போ வென்றும் அறியாமல் சதா வற்றாத பாக்கியத்தைப்பெற்ற வாழ்க்கை" என்றும் எல்லாச் சமுதாயத்தார்களுக்கும் ஒரு தாயெனுந் தன்மையில் நின்று அன்னார்க்குப் பேருதவி புரிந்துவந்த சமுதாயமென்றும் இக்காரணம் பற்றியே நமது மரபுக்கு "ஆயர்" என்கிற ஒரு திருநாமமும் கிடைத்திருக்கிற தென்றும் பண்டைய நூல்கள் பகருகின்றன.

ஆய்-அர்-ஆயர்; ஆய்-பகுதி; அர்-விகுதி. ஆய் என்னும் வாக்கியத்துக்குத் தாய் என்பது பொருள். ஆகவே ஆயர்கள் தாய் போன்ற அன்பினை உடையவர்கள் ஆவார்கள். ஒரு தாய் தனது பிள்ளைகளை எவ்வளவு அன்போடு ஆதரிக்கக்கூடுமோ அவ்வளவு அன்போடு யாதவர் மேன்மையான கோவினங்களை யாதரித்து அக்கோவினங்களை முன்னிட்டு மற்றை மக்களினங்களுக்கும் நற்பயனளித்து வருகின்றனர் என்பதே ஆயர் என்ற வாக்கியத்தின் திரண்ட பொருளாகும். இத்தகை மேன்பாட்டினை உடைய ஆயர்கள் இப்போது தங்களைத் தாமே ஆதரித்துக்கொள்ளுதற்குங் கூடச் சக்தியற்றவரா யிருக்கின்றனர் என்று கூறுவது குற்றமாகாது. பண்டைக் காலத்தில் ஒரு ஆயர் குடியில் குறைநதது பத்துப் பசு, மாடு, ஆடு முதலியனவும் அதற்குத் தக்க நன்செய் புன்செய் நிலம் வீடு முதலியனவும் இல்லாமல் இருந்தவரைக் காணமுடியாது. "பால், தயிர், மோர், நெய் முதலியன பானைகள்தோறும் வற்றாத பாக்கியமாக வளர்ந்தோங்குங் குலம் யாதவ குலமே" என்றும், "புனிதமான பசுவினங்களைக்காத்து அவற்றின் பயனை மற்றை மாந்தர்க்கும் அளித்து உபசரிக்கும் கருணை நிறைந்த தருமகுணமுடைய இடையரது இல்வாழ்க்கையில் கொடுமை ஒரு சிறிதுமில்லை" என்றும் பண்டை நூல்கள் பகருகின்றன. சுருங்கக்கூறின் திருமகள் வாழ்க்கை யாதவர் குலமே என்றும் கூறலாம். அடைக்கலம் புகுவோரை ஆதரிக்கும் குலம் யாதவ குலமே என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் உள்ளது உள்ளவாறு இயற்கை நலந் தோன்றக் கூறியிருக்கின்றனர். "அமரர்ப் பேணியும் ஆவுதி



யருத்தியும் நீரக விருக்கை ஆழி சூட்டியதொன் நிலை மரபு" ஆதியில் நமது யாதவ மரபாயிருந்தது. ஆழி சூட்டிய என்பது அரசு புரிந்த என்னும் பொருளது. ஆகவே நமது மரபு அரசாங்கத்திற்கும் உரிய மரபாயிருந்து அநேக நாடுகளை ஆட்சிபுரிந்து மிருக்கிறது என்பது சரித்திரத்தால் தெரியலாம். தெரிந்தென்ன! இப்போது நமது சமூகம் பல வேறுபாடுகளை யுடையதாய்த் தனித் தனியே பலபிரிவடைந்து நம்பாலிருந்த ஒற்றுமை உயர்வு முதலியன குலைந்து வறுமை நுகர்ந்து மிகவும் தாழ்ந்தநிலைக்காளாயிருக்கிறோம் என்றுதான் முடிவுரைக்கவேண்டி யிருக்கிறது. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்ற நமது நாட்டுப் பழமொழியைப் போற்றாமலே நமது சமூக இளைஞர்களை ஒரு சிறிதேனும் அவர்கள் கல்வி கற்க வேண்டுமே என்றுகருதாமல் நாம் அவர்களைக் கைத்தொழிலினும் பழக்காமல் "கன்று காலி காடு கரைகளைக் கவனித்து வந்தால் போதும்" என்று கருதிவிடுகிறோம். கண்ணில்லாதவன் ஒருவன் எப்படிக் கதிரவனைக் காணுவான்? அதுபோல் கல்வியறிவு இல்லாத ஒருவன் எப்படிக் காடுகரை கன்றுகாலிகளைக் கவனித்துவர முடியும்? மேலும் அவ்வாறு நமதுசமூகம் இப்போதுபெரும்பாலும் கன்று காலிகளை உடையது என்று கூறவும் முடியுமா? முடியாது. ஆகவே இனி நாம் இளைஞர்களுக்குக் கட்டாயம் கல்விகற்பிப்பதிலும் கைத்தொழில் பழக்குவதிலும் எவரையும் பகைக்காது நட்புக்கொள்ளுந் தன்மை யுண்டாக்குவதிலும் ஒற்றுமைத் தன்மை வளர்ப்பதிலும் பொறுமையை ஆதரிக்குமாறு செய்வதிலும் சோம்பலை ஒழித்து முயற்சியைக் கைக்கொள்ளுமாறு செய்வதிலும் நமது சமூகங்களுக்கென ஆங்காங்கே சங்கங்கள் நியமிப்பதிலும் நமது சமூகப் பத்திரிகைகளை விரும்பி ஆதரிப்பதிலும் புத்தூக்கமுற்று உழைக்க முன்வர வேண்டுமென்றும் நமது சமூக வாலிபர்கள் சங்கங்கூட்டி இராப்பள்ளிக்கூடம் முதலியன நியமித்துப்படித்து வரும் முயற்சிகளில் நுழையும்போது அவர்களுக்கு மென்மேலும் ஊக்கமூட்டி அவர்களை உற்சாகப்படுத்தி வரவேண்டுமென்றும் யாதவப் பெரியார் திருமுன்னர் அறிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

இ. ம. வெள்ளைச்சாமிக் கோனார்,

ஜவுளி வர்த்தகம், மதுரை.

# சிறிது செவி சாய்த்தல்வேண்டும்!

அன்பார்ந்த யாதவர்களே!

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து" என்றார் நாயனார். அனிச்ச மலரை ஒரு தடவை முகந்தவுடன் அது குழைந்து வாடிவிடுமாம்; அது அவ்வளவு மெல்லியது. ஆனால் ஒருவர் வீடுதேடி வலிய வருகிற விருந்தினரது முகம் அதினின்றும் மெல்லியது என்று இவ்வாக்கியத்தால் புலனாகிறது. வருபவர்களை உபசரிப்பவர்கள் இனிய முகத்தோடு அன்பு பெருகி அவரை எதிர்சென்று முகமன் பல கூறி அவரை வரவேற்புச்செய்யவேண்டும். பின்னர் அவரை அவரவர் வீட்டிலுண்டான அமுது படைத்து உபசரித்தல் வேண்டும். இங்கு நாயனார் விருந்தினர் முகத்திற்கு அனிச்சமலரை உபமானித்திருக்கிறபடி நாம் நமது யாதவமித்திரனை அவ்விருந்தினர் முகத்திற்கும் மெல்லியதென உபமானப்படுத்துகின்றோம். ஏனெனில் அது யாதவருடைய ஒவ்வொருவர் வீட்டுக்கும் வலிய அவரவர் வீடுதேடி வந்துகொண்டிருக்கிறது. யாதவ சமூகத்தாராகிய நாம் இனிய முகத்தோடு அன்பு பெருகி அதனை வரவேற்று ஆதரிக்கவேண்டுமென்பதற்காகவே, "இனி வரவேற்று ஆதரிக்கவேண்டு"மென்றால், "அதுவந்துகொண்டிருக்கும்வரை சந்தாத் தொகை அனுப்பாமலே அதனைப்பெற்றுக்கொண்டிருந்து பின்னர் அது வி. பி. யில் வந்தவுடன் அதன் முகத்தையும் பாராமல் ஒருபக்கம் திரும்பி "நான் வந்திருக்கிறேனே; என்னை ஏற்றுக்கோள்ளவில்லையா" என்று அது கேட்டுங்கூட அதன் வார்த்தைக்குச் செவி சாய்க்காமல் அது திரும்பிச் சென்றுவிட்டது என்றுதிட்டமாய்த்தெரிந்தவுடன் திரும்பிப்பார்ப்பதுதான்" என்று அர்த்தமல்ல. பொதுவாக நமது தமிழ் நாட்டில் அத்தகையசந்தாதார்கள் ஆயிரக்கணக்காயிருப்பரென்றாலும் 'நமது யாதவமரபிலும் ஒரு சிலர் இருக்கின்றனர் என்று நாம் பேரெடுக்கலாகாது. நமது தமிழ் நாட்டுக்கென்று நூற்றுக் கணக்கான பத்திரிகைகள் நடைபெற்று வருகின்றன. நமதுசமூகத்திற்கென்று இதுவரையில் ஒரு பத்திரிகை நடந்துவரும் பாக்கியத்தை நாம்அடைந்திருக்கவில்லை. நீண்ட காலமாகப் பிள்ளையில்லாத ஒருவர் தெய்வானுக்கிரகமாக ஒரு பிள்ளை பெற்றால் அதனை அவர் எவ்வாறு போற்றி வளர்த்துவருவாரோ அவ்வாறே நாமும் நமது யாதவ சமூகத்திற்கென்று பிறந்து வளர்கிற இவ் யாதவமித்திரன் என்கிற இப்பிள்ளையை நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாய்ப் போற்றி வளர்த்துவருதல்வேண்டும். எல்லா யாதவர்களும் இதற்குச் சந்தாதாரராகச் சேரவேண்டும். இச்சஞ்சிகை மெம்மேலும் விருத்தியடையுமாறு ஒவ்வொருவரும் நான் நான் என்று முயன்று முன்வரவேண்டும். "சந்தாதார்களின் கூட்டுறவே சஞ்சிகைக்கும் சமூகத்திற்கும் ஆதரவு" என்பதை மறந்துவிடக்கூடாதென்றும், ஆங்காங்கே பல சங்கங்கள் நடைபெற்றுவருமாறு இடைவிடாது முயன்றுவரவேண்டுமென்றும் தாழ்மையுடன் நமது யாதவசமூகத்தாரிடத்து விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்,

இ. ராம. குருசாமிக்கோன்,

புக்ஷாப், மதுரை.

---

# குலாபிமானம்.

பட்டணம் சுப்பிரமணியஐயர் என்பவர் ஒரு விஷ்ணுபக்தர். இமயம் முதல் குமரிவரை நமது தமிழ் நாட்டினிடத்து இவர் பெயரை அறியாதவர் எவருமே இலர் என்று கூறலாம். ஏனென்றால் இவர் பகவான்மீது பக்தியாகச் சில கீர்த்தனங்கள் பாடியிருக்கிறார். இவர் கீர்த்தனைகளில் அடங்கியுள ஆழ்வார் அருளிச்செயல்களின் தத்வார்த்தங்களுக்கும் சங்கீத அமைப்புக்கும் பகவானே ஆனந்தமடைந்து ஒரு மானிடனைப்போல் வந்து தாளம் போட்டுக் கூத்தாடியிருக்கிறார் என்றும் தெரிகிறது. இத்தகைப் பெரியார் தமது கீர்த்தனங்களில் ஒன்றில் ஸ்ரீ கண்ணபிரானை முன்னிலைப்படுத்தி "எப்புடு கிருப கலுகுனோ யதுகுல திலகா" என்று பிரார்த்தனை செய்து கொள்ளுகிறார். இக்கீர்த்தனையில் பரமாத்மாவுக்குப் பெருமைகொடுக்க நினைத்த ஐயரவர்கள் "யதுகுல திலகா" என்று யாதவ குலத்தை அடைமொழியாக்கிப் பரமாத்மாவினது இயற்கையாம் கடவுட்டன்மையை வெளிப்படுத்துகிறார். இதனால் பரமாத்மாவும் "இந்த யாதவ குலத்தில் தோன்றினாற்றான் நமது தெய்வத்தன்மை மானுடர்களுக்கு நன்கு விளங்கக்கூடும்" என்று

தீர்மானித்தே இக்குலத்தில் வந்து அவதரித்தனர் என்றும் நினைத்தற்கு இடமிருக்கிறது. அந்தோ! இத்தகைய உயர்ந்த குலத்திற் பிறந்து தற்காலம் புதிய நாகரிகப்படி நமது இராஜ பாஷையைப் படித்து உத்தியோக முறையில் திரும்பிய சில பல யாதவர்கள் "நாம் ஏன் யாதவ குலத்திற் பிறந்தோம்" என்று துயரப்படவும்; 'பிறந்துவிட்டோம்; இனி என் செய்யக் கடவோம்" என்று துணிந்து 'கோன் கோனார்' என்பதை அப்படியேமறைத்து நாயுடு பிள்ளை ரெட்டி செட்டி என்று மாற்றிக்கொள்ளவும் துணிந்திருக்கிறார்களே! "இதுஎன்; எதற்காக" என்றதான் விஷயம்விளங்கவில்லை. இவர்கள் இவ்வாறு செய்து கொண்டதிலிருந்து யாதவ சமூகம் பல வேறுபாடு அடைந்து அதனுடைய ஒற்றுமை, ஊக்கம், உரிமை, முயற்சி முன்னேற்றம் முதலியனவற்றை எல்லாம் அதுஇழந்து மிகவும் தாழ்ந்தநிலையிலிருந்துவருகின்றதல்லவா? உண்மையில் யாதவ குலத்தில் தோன்றிய யாருக்குத்தான் இந்தப்பரிதாபமான நிலைமையைக்கேள்விப்பட்டவுடன் "அவர் மனது வருந்தாமலும், கண்ணீர் ததும்பாமலும் இருக்கக்கூடும்" என்றுகேட்கிறேன். வறுமைநிறைந்திருக்கிற ஒரு ஏழைக்குடும்பத்தில் தகப்பன் தான்மாத்திரம் இரவும்பகலும் அரும்பாடுபட்டு அவனுக்குக்கிடைக்கிற சொற்பவருமானத்தைக்கொண்டு தான் பட்டினி பசியுடன் இருந்துகொண்டாவது தன் குடும்பம் மக்கள் மனைவி என்று பாராட்டி மக்களுக்குக் கல்வி புகட்டி அவர்களை ஆதரித்து வந்துகொண்டிருந்து, தந்தையினது பகீரதப்பிரயத்தனத்தினாலும் ஏதோ அதிர்ஷ்டவசத்தாலும் அவனது பெரிய மகனுக்கு ஒரு உத்தியோகம் கிடைத்தவுடன் "தான் அக்குடும்பத்தை விட்டு விலகி அவர்களைக் கனவிலும் கருதாமல் தன் இஷ்டப்படி 'டாம் டீம்' என்று செலவுசெய்துகொண்டுதிரிகிற ஒரு பிள்ளையை" அவனது தாய் தகப்பன் கண்டால் எப்படி அவர்கள் வயிற்றெரிச்சல் அடைவார்களோ அப்படியே நமது யாதவ குலமும் இத்தகையாரைக் கண்டு வயிற்றெரிச்சல் அடையக்கூடுமே என்று குலாபிமான அன்புபெருகி மனது உருகி வருந்துகின்ற,

ஒரு யாதவன்.

# விரையெடுத்தல், அல்லது காயடித்தல்.

சென்னை சிவில் கால்நடை வைத்திய இலாக்கா டைரேக்டர்
F. வேர்., F. R. C. V. S. அவர்கள் எழுதியது.

ஆண்மிருகங்களை அவைகளின் இன உற்பத்திக்கு இயலாதவைகளாய்ச் செய்தற் பொருட்டு "விரையெடுத்தல்" என்னும் ரணக்கிரியை செய்யப்படுகிறது. தங்கள் தங்கள் ஜீவனத்தை விருத்தி செய்து கொள்ளக் கருதும் ஒவ்வொரு "மிருக வளர்ப்பாளரும்" முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயங்களில் இது ஒன்று. ஏனெனில், ஆராய்ந்து பொறுக்கி எடுக்கப்பட்ட பொலிகாளைகளை உபயோகிப்பதினாலும், ஆண், பெண் இவ்விரு மிருகங்களையும் அதியுக்திடாய்ச் சேரவிடுவதினாலுமே நல்ல பலன் கிடைக்கும். வேலைகளுக்கு உபயோகிக்கும் காளைகள் குதிரைகள் போன்ற மிருகங்களுக்கு விரை யெடுத்துக் கொள்ளுதல் அவசியம். ஏனெனில், விரையை எடுத்துவிடுவதால், அவைகள் சாந்தமடைகின்றன. இன்னும் வேலை சமயங்களிலும், ஓய்வு நேரங்களிலும், அவைகளைச் சேர்ந்த இதர ஆண், பெண் மிருகங்களோடு கலந்துவைக்கக் கஷ்டமில்லாதிருக்கும். மேலும், மனிதர்களுக்கு உணவுக்காக உபயோகிக்கும் தேசங்களில், மாடு, செம்மறி, வெள்ளாடு இவைகளை விரையெடுத்துக் கொள்வதற்கு வேறு ஓர் காரணமுண்டு. எங்ஙனமெனில், விரை யெடுக்கப்பட்ட ஆடு, மாடுகள் சீக்கிரம் கொழுப்படைந்து பருவத்தை அடைகின்றன. இன்னும் இவைகளின் மாமிசம், விரை எடுக்கப்படாத ஆடு மாடுகளின் மாமிசத்தைவிட மிருதுவாயும், வெறுக்கத்தக்க வாசனை இல்லாமலும் இருக்கும்.

செம்மறி ஆடுகளில், விரை எடுத்த ஆடுகளின் ரோமம் மிக மிருதுவாயிருக்கும். அதிக விலை மதிக்கக்கூடியதாகவும் இருக்கும்.

விரை எடுத்தல் என்றால் என்ன? அதாவது மிருகத்தின் விரைகளை எடுத்து அப்புறப்படுத்திவிடுதல், அல்லது விரைகளைப் பலன் கொடுக்க விடாதபடி "சுக்கில நரம்புகளைத்" தட்டுதலாகும். இக்கிரியை பல முறைகளில் செய்ய முடியும். என்றாலும், அம்முறைகளில், இத்தேசத்தில் பெரும்பாலும் கையாடப்படுவது

"விரையடித்த" லாகும். இது எங்ஙனமெனில், விரைகளையாவது, சுக்கில நரம்புகளையாவது துண்டித்து எடுத்துவிடாது, இரண்டையும் இரண்டு கற்களுக்கிடையிலோ, அல்லது வேறு கடினமான வஸ்துக்களுக்கு நடுவிலோ பிடித்துக் கொண்டு சுத்திகள் போன்ற ஆயுதங்களால் அடித்து அவைகள் குழம்புபோலாகும் வரை நைத்தலாகும். இவ்விதம் செய்ய அரைமணிக்குமேலாகும் அச்சமயத்தில் அப்பிராணி கொடிய அவஸ்தையான துன்பத்தை அனுபவிக்கும்.

முற்காலங்களில், பிராணிகளுக்கு மேற் குறித்தபடி "விரையடித்" துக்கொள்ளக் காரணங்களிருந்தன. ஆனால் இப்பொழுதோ சர்க்காரால் இந்த ராஜதானியில் ஒவ்வொரு ஜில்லாவிலும் மிருக வைத்தியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மற்ற முறைகளில் தேர்ந்திருப்பதோடு, சாஸ்திரீக முறையில் விரையெடுக்கவும் பழகியிருக்கிறார்கள். ஆகையால் நாகரிகமுள்ள ஒவ்வொரு குடித்தனக்காரரும், தங்கள் தங்கள் பிராணிகளுக்கு "விரையடிக்க" ஒப்புக் கொள்ளாது விலகிக்கொள்ள இது நல்ல சமயமாகும்.

சர்க்கார் மிருக வைத்தியர்கள் பல முறைகளில் இக் கிரியை செய்யப் பழக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் ஒருவிதம் "ரணவைத்திய" முறையில் விரைகளைத் துண்டித்து அப்புறப்படுத்தாது விடுதலாகும். இம்முறையே குதிரைகளுக்குச் சாதாரணமாய்க் கையாடப்பட்டு வருகிறது. மாடுகளுக்குத் தற்காலத்தில், இரத்தம் சிந்தாத நிலைமையிலும், விரைகளை எடுத்து அப்புறப்படுத்தாத நிலைமையிலும், இக்கிரியை செய்யமுடியும். இதற்குக் "கிரியை சர்த்தர்" பர்டோசா என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட "விரையடிப்பான்" என்னும் ஒரு பெரிய ஆயுதத்தை உபயோகிக்கிறார்கள். இக் கருவியைக்கொண்டு "சுக்கில நரம்புகளை" நைத்துவிடுகிறார்கள். இக்கருவி, ஒரு பெரிய இடுக்கி அல்லது ச்ராவணத்தைப் போலிருக்கும். இக் கருவி அதன் கைபிடிகளை இலகுவாய் அமுக்கினாலும், முகவாயில் நைக்கக்கூடிய பெரும் பலத்தைக் கொடுக்கும் விதமாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. இக்கருவியின் முகவாய் ஓரங்கள், மூடும் சமயத்தில், அவைகளின் நடுவில் குறுக்கிடும் அங்கக்கட்டுள்ள ஒவ்வொரு வஸ்துவையும் நைக்கக்கூடிய நிலைமையில் அவ்வளவு சூக்ஷ்மமாய்ப் பொருந்தக்கூடியது. ஒவ்வொரு நரம்பும் ஒரே நிமிஷத்தில் நைக்கப்படுகிறது. அம்மிருகத்திற்கு ஆண்மை குன்றச் செய்யும், விரை



கள் வசக்கேடடையவும் இதுவே போதுமானது. பின்னால் வேறு எவ்வித வைத்தியமும் செய்யவேண்டியதில்லை. இதற்குப் பிறகு இரண்டொரு நாட்கள்வரையில் விரைப்பக்கமும் அண்டகோசமும் வீங்கியிருக்கமுடியும். ஆனால் இவ்வீக்கத்தினால் மிருகத்தின் உடம்புக்குக் கஷ்டமாவது அசௌகரியமாவது கிடையாது. ஆகவே இம்மிருகத்தை உடனே மந்தையோடு அனுப்பிவிடலாம் இன்னும் இரண்டொரு நாட் கழித்து வேலையும் வாங்கிக்கொள்ளலாம்.

எனவே "விரைகளையடித்"துக் கொள்வதைவிட, பர்டோசா முறைப்படி "விரைபங்கம்" செய்து கொள்வதால் உண்டாகும் முக்கியமான அனுகூலங்கள் பலவாம்.

(1) விரையடிப்பதற்கு அரைமணி நேரமாகும். ஆனால் பர்டோசா முறைப்படி இரண்டே நிமிஷத்தில் செய்யலாம்.

(2) பின் முறைப்படி செய்து கொள்வதில் ஏதோ இரண்டொரு நாளைக்குக் கொஞ்சம் வீக்கமிருந்து வத்திப்போகிறதைத் தவிர வேறே எவ்வித கஷ்டமும் மிருகத்திற்குக் கிடையாது. ஆனால் விரையடிப்பதால் அநேக வாரங்களுக்கு மிருகம் கஷ்டப்படுவதோடு கிரியாஸ்தானத்தில் சீக்கழலை ஏற்பட்டு அது ஆற அநேக நாட்கள் பிடிக்கும். அவற்றை மற்ற வேலையில் உபயோகிக்கவும் முடியாது.

(3) விரையடிப்பதால், அம்மிருகத்திற்கு உண்டாகும் வலியும் கஷ்டமும் மிகக் கொடூரமானது இந்த முரட்டுத்தனமான செய்கையைக் கண்ணால் கண்டவர்களுக்கே அக் கொடுஞ் செயல் வெளியாகும். ஆனால் பர்டோசா முறைப்படி செய்வதால் உண்டாகும் கஷ்டம் சிறிதும் பிரமாதமல்ல.

(4) இன்னும் பின் முறைப்படி அதிசீக்கிரத்தில் இக்கிரியை செய்யமுடியுமானதால், விரையடிக்கும் பிராணிக்கு மயக்க மருந்து கொடுப்பது வழக்கமல்ல. ஆனால் சொந்தக்காரர் விரும்பினால் மிருக வைத்தியர் பிராணியை மயக்கியே செய்வார். அப்படிச் செய்து கொள்வதால், அம்மிருகம் கஷ்டத்தைச்சிறிதும் உணராது.

(5) இம்முறைப்படி மிருகங்களினுடைய எந்த வயதிலும் விரையடித்துக் கொள்ளலாம்.

ஆகவே, தங்கள் தங்கள் மிருகங்களை விரையடித்துக் கொள்ள விரும்பும் ஒவ்வொரு சொந்தக்காரரும், இப் புதிய முறையே ஏற்றுக் கொள்ளத் தக்கதாகு மென்று நம்பப்படுகிறது. இதற்காக மிருக வைத்தியரின் உதவியைப்பெற விரும்புவோர், அவருடைய ஹெட்குவார்ட்டருக்காவது, பக்கத்து மிருக ஆஸ்பத்திரிக்காவது அல்லது அத்தாலூகா தாசில்தாருக்காவது எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். (சென்னை பஞ்சாயத்து புல்லடீன்)

# செய்தித்திரட்டு.

200-மைலுக்கு அப்பாலுள்ள பொருளை எளிதாகப் புகைப் படம் எடுக்க ஒருகருவி இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

பிரான்ஸிலிருந்து சீனாவிற்கு இடைவழியில் தங்காமல் ஒரே பயணத்தில் 6006-மைல் ஆகாயவிமானத்தில் திருகோஷ்டே என்பவர் பிரயாணஞ் செய்திருக்கிறார் இதுவே ஆகாயவிமான யாத்திரையில் நீண்ட முதல் யாத்திரை.

சுமார் 50-குன்றுமணி எடையுள்ள ஒரு முத்து பர்ஷியக் கூடாக்கடலில் முத்துசலாபத்தில் அகப்பட்டது 100-வருஷகாலங்களுக்கு மேலாக இதுமாதிரி அகப்பட்டதில்லை. இதன் விலை 50-ஆயிரம் பவுனுக்கு மேல் மதிக்கப்படுகிறது.

அடுத்த காங்கிரஸ் மகாசபைக்குத் தலைவராக ஸ்ரீஜவஹரிலால் நேரு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

தென் இந்திய நல உரிமைச் சங்கத்தின் கூட்டம் இம்மாதம் 5, 6-உ ளில் நெல்லூரில் திரு பி. முனிசாமிநாயுடு அவர்களின் தலைமையின் கீழ் கூடியது. திரு, பி. முனிசாமிநாயுடு அவர்களே பார்ப்பனரல்லாதார் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இம்மாதம் 2-உ மகாத்மா காந்தியடிகளின் ஷஷ்டி அப்தபூர்த்தி 60 வது ஆண்டு நிறைவு) ஆகும். அன்று இந்தியாவெங்கும் மகாத்மாவின் திடஆயுளுக்காக பிரார்த்தனைகள் நடைபெற்றன.

நெல்லூரில் சமுதாயச் சீர்திருத்த மஹாநாடு திரு, எ. ராமசாமி முதலியார் அவர்களின் தலைமையின்கீழ் கூடியது.

நூறு வருடங்களின் முன் ஆங்கிலம் பேசி வந்தவர்களின் தொகை 200-லக்ஷம் பெயர். இப்பொழுது 2200-லக்ஷம் பெயர்.

சமுத்திரத்திலுள்ள தண்ணீரை யெல்லாம் வற்றும்படி செய்தால் அதில் கிடைக்கும் உப்பை ஒருமைல் கனத்தில் 50,00,000 சதுரமைல்கள் பரப்பலாம் என்று யூகிக்கப்படுகிறது..

ஆண்களைவிடப் பெண்கள்தான் அயர்ந்து தூங்குகிறார்கள் என்று வைத்திய நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்,

---

## யாதவ மித்திரன் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினாங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்

இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும், ஆதலால் முன்னாடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம் மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம. அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது. பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

96 B

யாதவ மகா ஜனங்களுக்கு ஒரு

## வேண்டுகோள்,

யாதவ சகோதரர்களே !

நமது யாதவ மித்திரன் கல்வி, பொருளாதாரம், ஆசாரச் சீர்திருத்தம் முதலிய துறைகளில் சிறந்த அறிஞர்களால் எழுதப் பெற்ற அருமையான கட்டுரைகளைக்கொண்டு யாதவ மக்களின் முன்னேற்றத்தையே முக்கியமாகக் கருதி மாதம் ஒருமுறை வெளி வருகின்றது.

நல்ல யாதவ மக்களும் உடனே சந்தாதாராய்ச் சேர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

எல்லா யாதவ மக்களிடமும் யாதவ மித்திரனைப் பரவச் செய்தல் சமுதாயப் பற்றுடையவரின் முதற் கடமையாகும்,

யாதவமித்திரன் நம்மவர்வாழும் ஒவ்வொருகிராமங்களிலும் உலாவ வேண்டும். ஒவ்வொரு யாதவரிடத்திலும் யாதவ மித்திரன் மாதா மாதம் சமுதாய விஷயங்களைத் தெரிவிக்கும்படி செய்ய வேண்டும். இதுவே சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அறிகுறி.

இப்பொழுது விலாசந் தெரிந்த சிலருக்கே பத்திரிகை அனுப்பப்பட்டிருக்கிறது. ஏனையோர் விலாசந் தெரிவித்துப் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகையால் யாவரும் பத்திரிகை படித்துப் பயன் பெறுமாறும், இப்பத்திரிகையை வாசிக்கும் அன்பர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தெரிந்த பத்திரிகை படிக்கும் ஆற்றலுள்ள நமது யாதவ சகோதரர்களின் விலாசங்களைத் தயைசெய்து எழுதி யனுப்புமாறு வேண்டுகிறோம்.

மானேஜர்,

யாதவமித்திரன் ஆபீஸ்,

கோபால் [illegible]

வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

Printed & Published by E. M. GOPALAKRISHNA KONE
at the Excelsior Press Madura

593 Reg No. M:-2537. 96C



36D

2 MAY 1930
MADRAS

# யாதவமித்திரன்.

ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்
(Editorial Board Members.)

தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி,
மதுரை.

2 ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.

3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. எ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.

4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி ஏ பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.

5 ,, தி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.

6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.

7. ,, R. வேங்கடாசலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S. P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.

8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L. M. F. ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.

9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ்,
திருச்சிறாப்பள்ளி.

## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றியும் முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக

யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை



2 MAY 1930
...RAS

ஸ்ரீ

# யாதவமித்திரன்

## ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.



| தொகுதி 1 | சுக்கில-ஹு கார்த்திகைமீ 1929-ஹு நவம்பர்-மீ | பகுதி 4 |
|---|---|---|



### கடவுள் வணக்கம்.

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள் விசும்பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்
(திருமங்கையாழ்வார்.)

குலச்சிறப்பையும் சகல செல்வங்களையும் தந்து துன்பங்களை யெல்லாம் போக்கிப் பரமபதமாதி பதவிகளையும் தந்து வெற்றியையும், மற்ற நலங்களையும் கொடுத்து பெற்ற தாய்போல் வேண்டிய நன்மைகளை யெல்லாம் பயக்கின்ற விசிட்டாத்வைத திருமந்திரமாகிய ஸ்ரீநாராயண நாமத்தை அனவரதமும் சிந்தித்து ஆனந்தமடைவோமாக.

ஸ்ரீ

# நமது சமூக சீர்திருத்தம்.

## ii. பொருளாதார நிலை.

பொருளானது இவ்வுலகத்தில் மனிதர்வாழ்க்கைக்கு மிக அவசியமானதென்பதை யாவரும் அறிவார்கள். 'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்', பணமில்லாதவன் பிணம்,' என்பன பெரியோர் வாக்குகள். இச்செல்வச் சிறப்பை யறிந்தே அமெரிக்கா, ஐரோப்பா முதலிய மேனாட்டு மக்கள், தத்தம் தேசத்தின் பொருளாதார நிலையை, அதிதீவிரமாக முயன்று பலப் படுத்தி வருகிறார்கள். அந்நாடுகளில் நிமிஷத்துக்கு ஆயிரக்கணக்கான பவுன்கள் வருமானமுள்ள சீமான்களும் இருக்கின்றார்களென்றால் அவர்களது செல்வச் சிறப்பைச் சொல்லவும் வேண்டுமோ?

இந்தியாவோ இயற்கையிலேயே பொன்கொழிக்கும் பூமியாக இருந்தும் இந்திய மக்களின் சோம்பலினாலும், வீணான வேதாந்தத்தினாலும், சாதிசமயப் பிணக்குகளினாலும், புதிய பெரிய முயற்சிகளிற் புகாமல் பொருளாதார நிலையில் மிகவும் சீர்கேட்டையடைந்திருக்கிறது. அன்றியும், கால் வயிற்றுக் கஞ்சிக்கும் வழியின்றிக் கூலிவேலைசெய்யும் ஏழைகளுக்கும், சோம்பேறிகளுக்கும் கணக்கில்லை என்ற பெருமையைத் தனக்கென்று கொண்டு விளங்குகிறது! இப்படிப்பட்ட இந்தியாவின் ஜன சமூகங்களுள் ஒன்றாகிய நம் சமூகம் பொருளாதார நிலையில் இப்படிப் பட்டதென்று பிரித்துச் சொல்லாமலே விளங்கக் கூடுமாயினும், இந்திய சமூகங்களில் ஏனைய ஒரு சில சமூகங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பின், நம் சமூகம் அவற்றினும் மிகவும் தாழ்ந்த நிலையிலிருப்பதால், அது பற்றி நாம் இவ் விஷயத்தில் தனியான கவனஞ் செலுத்திச் சில கூற வேண்டுவது அவசியமா யிருக்கின்றது.

நம் தேயத்தில் ஒவ்வொரு குலமும் தம் தம் வாழ்க்கைக்குத் துணையாக ஒவ்வொரு தொழிலையே பரம்பரையாகக் கொண்டு வருகின்றது. 'தன் தொழில் தெரியாதவனுக்குத் தலையளவு பஞ்சம், என்ற பழமொழியும் இது பற்றி வழங்குகிறது. இத்தகைய கருத்தினால், வைத்தியன் மகன் வைத்தியனாகவும், விவசாயி மகன் விவசாயியாகவும், கன்னான் மகன் கன்னானாகவும் பரம்பரைத் தொழிலையே நம் தேசத்தவர்கள் கைக்கொள்வது வழக்கம்,



ஆனால் வைத்தியன்மகன் தகப்பனது பழைய வாகடமன்றிப் புதிய முறையைக் கற்று வைத்தியஞ் செய்யக் கருதான். விவசாயி மகன் தகப்பனது பழைய தேய்ந்த கலப்பை முதலிய கருவிகளையன்றிப் புதிய கருவிகளையும் முறையையும் கையாள நினையான். கன்னான் மகனும் அவ்விதமேயன்றி மற்றன்று.

இம்முறையில் நம் குலத்தவர்கள் ஜீவனோபாயமாகப் பண்டைநாள் முதல் மேற் கொண்ட தொழில்கள், பசு, எருமை, ஆடு இவற்றைப் பரிபாலித்தல், விவசாயம், வியாபாரம் ஆகிய இவைகளாம். தற்காலத்துள் இத் தொழில்களில் பசுமந்தைகளை வைத்துப் பரிபாலித்து லாபம் அடைதல் நம் சமூகத்தில் குறைந்து கொண்டு வருகிறது. விவசாயம் கிராமங்களில் நம்மவர்க்குள் பேரளவில் இருந்து வருகிறதன்றி நல்ல முறையில் இருக்கின்றதென்று கூற முடியாது. சாதாரண வியாபாரம் நகர வாசிகளாகவுள்ள ஒரு சிலரால் செய்யப் படுகின்றது. ஆட்டு மந்தைகளைப் பரிபாலித்து அவற்றின் மூலம் வருவாயை எதிர் பார்ப்பவர்களே நம் சமூகத்தில் அதிகமாக இருக்கிறார்கள். இவற்றை யெல்லாம் யோசிக்குமிடத்து, நம் சமூகம் பெரும்பாலும் பொருளாதாரத்துக்குக் கருவியாகக் கொண்டிருக்கும் தொழில் ஆடுகளை வளர்த்தலே என்று சொன்னால் அது தவறாகமாட்டாது. நமது தமிழ் நாட்டில் நமது சமூக ஜன சங்கியைக் கணக்கிட்டால், 6-லக்ஷத்துக்கு மேலாகும் என்று தெரிகிறது. இவ்வளவு பெருந்தொகையினராக உள்ள நம்மவருள் பெரிய செல்வவான்கள் எத்தனை பேர்கள் என்று எண்ணினால், அவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கை யுள்ளேயே அடங்கிவிடுவார்கள். ஒரு பகுதியினர் நடுத்தர வாழ்க்கையினராக இருப்பார்கள். பெரும் பகுதியினர் கிராமங்களில் நல்ல உடை, உணவு இல்லாமல் பெரும்பாலும் வறுமைக் குட்பட்டு, அதனால் அநாகரிகத்துள் ஆழ்ந்து பார்ப்போர் பரிதவிக்கும் நிலையிலிருக்கிறார்கள். இவற்றை யெல்லாம் ஆராயுமிடத்து நம்மவர்கள் முக்கிய தொழிலாக மேற்கொண்டிருக்கும் ஆடு வளர்த்தலானது ஏதோ குலத்தொழிலுள் ஒன்றாக இருக்கின்றதன்றி, பெரும் இலாபங்களை அடையக் கூடியதாயில்லை என்று துணிந்து சொல்லலாம். இத் தொழிலால் நல்ல இலாபத்தை அடையவேண்டுமானால் மிகுந்த மூலதனத்தோடும் பெருத்த செல்வாக்கோடும் காரியநிருவாகத் திறமையோடும்பெருந்தொகையான ஆடுகளைமாத்திரமன்றிப் பசுக்

களையும் பரிபாலித்து அவற்றால் வரும் பால் முதலானவற்றைக் கூட்டுறவு வியாபாரமுறையில் வியாபாரஞ்செய்ய முயலவேண்டும். நல்ல ஜாதி மாடுகள் பல்கும் படிசெய்து அதனாலும் லாபம் அடையக்கருதவேண்டும். இந்த முறையில் இந்தத் தொழிலைச்சாஸ்திரீயஉணர்ச்சியோடு செய்து வருவதாற்றான் அமெரிக்கா முதலிய மேல்நாட்டவர்கள் சிறந்த ஊதியம் அடைந்து வருகிறார்கள். இம்முறையைப் பின்பற்றி இத்தொழிலைச் செய்யும் அறிவாற்றல் உள்ளவர்களோ நம்மவர்களுள் தற்காலத்தில் ஒருவருமில்லை யென்றே சொல்லலாம். இந்தியா புல் பூண்டுகள் செழித்த பூமியாக இருந்தும், வரவரக்கோசஞ்சார பூமிகளாகிய புறம்போக்கு இடங்களெல்லாம் தர்க்காஸ்துகள் மூலம் விளைநிலங்களாக மாற்றப் பட்டு வருகின்றன. அதனால் மாடு ஆடுகளின் மேய்ச்சலுக்கு மிகுந்த கஷ்டங்கள் ஏற்பட்டு வருகின்றன. சர்க்காருடைய பொருள் வருவாயெல்லாம் விவசாயத்தொழிலைப் பொறுத்திருக்கிறது. அவ்விவசாயத்துக்குப் பெரும் துணையா யிருப்பவை ஆடு மாடுகள். அந்த ஆடு மாடுகளைப் பரிபாலிப்பதையே முக்கிய தொழிலாக வுடையது நம் குலம். அதனால் ஒரு அரசாங்கத்துக்கு இன்றி யமையாத சமூகம் யாதவ சமூகமென்பது பெறப்படும். அவ்வாறிருந்தும் சர்க்காரிடமிருந்து நம்மவர் விஷயமாக விசேஷமான தயையும் உதவியும் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. இத்தொழிலுக்கு வேண்டிய சாதகங்களைச் செய்தற்குச் சர்க்காரை வேண்டிக் கொள்ளவோ குறைகளை எடுத்துக் கூறவோ சட்டசபை முதலான சர்க்கார் ஸ்தாபனங்களில் நம் சமூகப் பிரதி நிதிகள் ஒருவருமில்லை; யாதவ சமூகத்தினர்க்குத் தனி இடம் ஒதுக்கப் படவுமில்லை. சர்க்காரால் நியமனங்களும் (nominations) இதுவரை செய்யப்படவில்லை. இஃதிவ்வாறாக, இனிக் கிராமங்களிலுள்ள மற்ற பொது ஜனங்களோ தங்கள் விவசாயத்துக்குப் பெருதவியாக விருக்கும் நம் குலத்தவர்கள் விஷயத்தில் நன்மதிப்பும் அநுதாபமும் காட்டவேண்டி யிருக்க, அவர்கள் நம்மவர்களை அவமதிப்பும் பலவித இடைஞ்சல்களும் செய்து, நம்மவர்களுள் கல்வியறிவில்லாதவர்களைத் தங்களது குரூரச் செய்கைகளால் பயமுறுத்தி ஒடுக்கி, ஆடு மாடுகள் முதலியவற்றைக் கவர்ந்தும் வருகிறார்கள். இச்செய்கை இராமநாத புரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் நிரம்ப நடைபெற்று வருகிறது. ஒரு காலத்தில் நம்மவரது



ஆடுகளைத் திருட்டுப் போகாமல் காத்து அதற்காகக் கூலிபெற்று, பாடி காப்பாராக இருந்து வந்த ஒரு வகுப்பினருள் சிலர் இப்போது அந்த வேலையைச் செய்யாமலே ஆட்டு மந்தைகள் இல்லாதவர்களிடத்தும் தாங்கள் எஜமான் ஸ்தானத்திலிருந்து ஆட்டுக்கடாய், பால், நெய் முதலான பொருள்களைப் பலவந்தமாய் வசூலித்து வருகிறார்கள் என்று தெரிகிறது. அதற் கிணங்கி நம்மவர்களுள் கல்வி யறிவும், தைரியமும் இல்லாத சில பேதை ஜனங்கள் பயந்து, அப்படியே அவர்களுக்குக் காணிக்கை செலுத்தி வருகிறார்கள். இதைவிட அவமானம் வேறென்ன இருக்கிறது? இதனை அநீதமென்று தெரிந்த சிலர் மாத்திரம் இப்போது இந்த அடிமைத் தனத்துக் கிணங்காமல் மறுத்து வருகிறார்கள். (மற்றவர்களும் இவர்களைப் பின்பற்றினால் நலமாக விருக்கும்-) நமது பழைய தொழில் தற்காலத்தில் இப்படிப்பட்ட அசௌகரியங்களையும் இடுக்கண்களையும் உடையதாக இருக்கிறது.

மற்றும் நம் குலச் சிறுவர்கள் உலகப் போக்குக்குத் தகுந்தவாறு கல்வி யறிவையும் நாகரிகங்களையும் அடைவதற்கும் இத்தொழில் இடையூறாக இருந்து வருவதன்றி, அடிமைக்குணத்தையும் அதிகமாகச் சாலப்பெருக்குவதா யிருக்கின்றது. ஆகவே மேற்கூறிய விஷயங்களையெல்லாம் நாம் ஆராய்ந்து பார்த்தால், நம் சமூகத்தில் பெரும்பான்மையோரால் பொருள் வருவாய்க்குச் சாதனமாகக் கைக் கொண்டிருக்கும் ஆடு வளர்த்தல் தொழிலானது சிறந்த பொருள் வருவாய்க்கு ஏதுவில்லாம லிருப்பதோடு பலவித அசௌகரியங்களுக்கும், கஷ்ட நஷ்டங்களுக்கும் காரணமா யிருக்கிறதென்றும் திட்டமாக அறியலாம்.

ஆதலால், இனியேனும் நம் குலத்தவர்கள் இந்தத் தொழிலையே முக்கிய தொழிலாகக் கொள்ளாமல், சிறிது சிறிதாக உலகப் போக்குக்குத் தகுந்தபடி வியாபாரம், விவசாயம் முதலிய வெவ்வேறு தொழில்களையும் கைக்கொண்டு வருவது நலமாக இருக்கும். புராண இதிகாச இலக்கியங்களை ஆராய்ந்தால், ஆடு மாடுகளைப் பரிபாலித்தல் மாத்திரம் நம் தொழிலல்ல என்றும், விவசாயமும், வியாபாரமும் கூட நம் தொழிலென்றும் தெரியலாம். ஆகவே, நம் குலத்துச் சிறுவர்களுக்குப் போதிய கல்வி யறிவு கொடுத்து, அதன்மேல் இம்மாதிரியான தொழில்களில் அவர்க

ளைப் புகுத்தி, இதுகாறும் மிருதியாகச் செய்து வந்த தொழிலில்
சிறிது வேறுபாடு செய்து பார்ப்பது நமது சமூகப் பொருளாதார
நிலைக்கு அநுகூலமாக இருக்குமென்று கருதுகின்றோம். இதனை
இனிக் கூடப்போகும் மகாநாடுகளில் ஆலோசிப்பது நலம்.

ஆ. கார்மேகக் கோன்,
ஆசிரியர்.

---

# அறிவுள்ள யாதவப் பெண்.

---

நான் ஒரு யாதவன். என் பெயர் பெரியசாமிக்கோன். நான்
பழநியில் கோர்ட் அமீனாவாக இருக்கிறேன். எனக்குச் சிறிது
நிலபுலங்கள் காடுகரைகள் இருக்கின்றன. எங்கள் குடும்பம் பரம்
பரையாகவே ஒரு கௌரவமுள்ள குடும்பந்தான். அதில் நான்
அழுத்தமான தெய்வ நம்பிக்கை உள்ளவனாகவே அநுதினமும்
காலையில் எழுந்து காடுகரைகளைப் போய்ப் பார்த்துவிட்டு வீட்
டுக்கு வந்து ஸ்நானஞ்செய்து நமது குலத்தில் புகுந்தருளிய ஸ்ரீகண்
ணபிரான் முன்னர் திருமண்ணிட்டுப்பூஜை முடித்துத்தான் சாப்பிடு
வேன். சாப்பிட்டதும் கோர்ட்டுக்குப் போவது வழக்கம். எனக்கு
இரண்டு பெண் குழந்தைகளும் ஒரு பையனும் இருக்கிறார்கள்.
அவர்கள் பள்ளிக்கூடத்திற் படிக்கிறார்கள். "ஆண் பிள்ளைகளைப்
போலவே பெண் பிள்ளைகளும் படிக்கவேண்டும் என்பது எனது
கொள்கை. நான் கல்யாணம் செய்துகொண்டதின் பின்னர் என்
மனைவிக்கு நல்ல வார்த்தை சொல்லி அவள் மனம்போல் நடந்து
எடுத்த புஸ்தகம் வாசிக்கும்படியான தன்மையில் நானே அவளுக்
குச் சொல்லிக் கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன். இப்பொழுது
பாரதம் இராமாயணம் முதலிய வசனங்களையும் பாகவத புராண
வசனத்தையும் அவள் படிப்பாள். எங்கள் யாதவ குலத்துக்கு
என்று இப்போது ஏற்பட்டு நடைபெற்று வருகிற யாதவ
மித்திரனை அவள் இருகண்ணெனப் பாவித்து மிக்க ஆவலோடு
படித்து வருகிறாள். அதில் மாதந்தோறும் வெளிவருகிற ஒவ்
வொரு வெளியீட்டிலும் எங்கள் குலத்தில் அரவணை துறந்து போ
ந்து அன்று அசோதைகண் களிப்பநீடு தராதலம் விளங்க வெண்



ணெய்த் தாழிசூழ்தரநின்றாடிக் குராமணம் கமழுங் கூந்தற் கோ
வியர் குரவை கொண்ட புராதனனாகிய ஸ்ரீ கண்ணபிரானது திவ்
விய சரிதையை எங்கள் குலத்துதித்தவரும் மதுரை அமெரிக்கன்
காலேஜ் தலைமைத் தமிழாசிரியரும் யாதவ மித்திர ஆசிரியர்கூட்
டத்துத் தலைவரும் மேற்படி அங்கத்தினருள் ஒருவருமாகிய திரு
வாளர் ஆ கார்மேகக் கோனார் அவர்கள் எழுதி வருகிற பாகவத
புராணத்தின் சாரமாகிய ஸ்ரீ கண்ணன் சரிதையை மிக்க பக்தியுட
னும் படித்து வருகிறாள். ஒருநாள் நான் காலை பத்து மணிக்கு ஸ்நா
னம் பண்ணிக்கொண்டிருந்தேன். என் மனைவியும் சிறிய மகளும்
என் பூஜைக்காகப் பூத்தொடுத்துக் கொண்டிருந்தனர். அது சமயம்
போஸ்ட் பியூன் சென்ற மூன்றாம் மாத யாதவமித்திரன் பத்திரிகை
யைக்கொணர்ந்து கொடுக்க அதை என் மனைவி ஆவலோடு வாங்கிப்
பிரித்து வாசித்துக்கொண்டுவர என் சிறிய மகள் அதனைக்கேட்
டுக்கொண்டே பூத்தொடுத்தனள். "பாவத்தில் பெரியது எது"
என்கிற தலை அங்கத்துடன் வெளிவந்துள்ள விஷயத்தைப் படித்து
வர அதைக்கேட்டுக்கொண்டுவந்த என் மகள் மனதை அதிற் குறித்
துள்ள ஒரு துக்கரமான விஷயம் சென்று மிகவும் வாட்டிற்று.
அதன் காரணமாக அவள் நெஞ்சு கலங்கிக் கண்ணீர் கசிந்து முத்
துப்போற் சிதறி அவள் தொடுத்துக்கொண் டிருந்த மலர் மாலை
யை நனைத்து விட்டது. இதனை அறிந்த அவள் தாய் 'ஏனம்மா!
அழுகின்றனை? என்று கேட்டுக்கொண் டிருக்கும்போது நானும்
ஸ்நானம் செய்துவிட்டு அவ்வறைக்குட் சென்றேன். அப்போது
என் மகள் என்னைப் பார்த்துக் கோவெனக் கதறி "தந்தையே! என்
போன்ற பெண் மக்களுக்கும் கல்வி அவசியம் என்று கருதி வருகிற
இக்காலத்தில் களக்காட்டிலுள்ள நமது யாதவமக்கள் யாதவ
குலத்திற்கெனப் புராதனமாக இருந்து வந்த ஓர் யாதவப் பள்ளிக்
கூடத்தைக் காளி கோயில் பூஜை பலி முதலிய கொண்டாட்டத்
திற்கு இடையூறு நேருகிறதென்று எடுக்கும்படி கட்சிகட்டிக்
கொண்டனர்களாமே? சர்க்கார் கிராண்டையும் கெடுத்துப் பள்ளிக்
கூடம் நடைபெறாமற் போம் படிக்கும் ஆக்கிவிட்டனராமே?
அந்தோ! நமது சமூகம் கல்வி அபிவிர்த்திக்காகப் பாடுபட வேண்
டியதை விடுத்து இவ்வாறு இருந்த பள்ளிக்கூடங்களையும் இழந்து
போம்படி செய்து வருவதென்றால், இது பரிதாபமான காரியமல்
லவா? ஆண் பிள்ளைகள் படிப்புக்கே இப்படி அடிபிடியானால் நமது

சமூகத்திலுள்ள என்போன்ற பெண் பிள்ளைகள் கதி என்ன ஆகிறது! நாங்கள் என்ன பாவத்தையே செய்து பெண் ஜென்மமாக உலகில் பிறந்திருப்பதாக ஆண் மக்களின் அபிப்பிராயமா? இது என்ன அநீதி? பெண் மக்கள் காரணமாக அல்லவோ ஆண் மக்கள் பல்கிப்பெருகுகின்றனர். டில்லிக்கு ராஜாவானாலும் அவர்கள் தல்லிக்குப் பிள்ளைதானே (தல்லி-தாய்) இது பாகவதம் படித்துக் கோயிலை இடித்த கதைபோன்றல்லவோ இருக்கிறது!" என்று வினவினாள். இதனைக்கேட்ட என் மனமும் என் மனைவி மனமும் இளகிக்கண்ணீர் கலங்கிற்று. நான் என் அறிவார்ந்த மகளின் கண்ணீரைத் துடைத்துவிட்டு அவளுக்கு ஆறுதலாக "மகளே! இதன் காரணமாக நின் கண்ணீர் கண்ணபிரான் பூஜைக்காகத் தொடுத்த மாலையில் வீழ்ந்து அதனை நனைத்துவிட்டது. என்றாலும் நான் அதனையே பகவானுக்கு முன்னிலையில் சாத்திப் பூஜை செய்கிறேன். கண்ணபிரான் இத்தகைய நமது யாதவர் சமூகத்திற்கு நல்லறிவு கொடுத்து 'மக்களாய்ப் பிறந்த நமக்குக் கல்வி அவசியமென்றும், ஆண் மக்களைப் போலவே பெண் மக்களும் கல்வி கற்பது அவசியந்தான்' என்றும் அவர்கள் உணருமாறும் அதற்காகப் பாடுபட முன்வருமாறும் செய்விப்பானாக" என்று சமாதானங்கூறி அங்ஙனமே செய்தேன். இந்த உண்மையான நிகழ்ச்சியை நமது யாதவ குலத்தார் ஒவ்வொருவரும் உணர்வார்களாக. உணர்ந்து இதற்கு வேண்டிய பரிகாரங்களை உடனேதேடி உறுதி பயப்பாராக.

இங்ஙனம்
யாதவ சமூக ஊழியன்.

---

## யாதவர் சமூக ஊழியம்.

---

ஒரு தேசத்தின் கண்ணுள்ள எல்லா ஜாதியாரும், எல்லா மதத்தினரும், எப்பாஷை பேசுகிறவர்களானாலும் யாவரும் தங்கள் தாய்நாடாகிய அத் தேசத்தின் மேலுள்ள அபிமானத்தால் தங்கள் தேசத்தை முன்னிலைப்படுத்த முயன்று பொது ஜனங்களுக்குச் சுய நலங் கருதாது கௌரவம், கௌரதாபட்டம், அந்தஸ்து, செல்வம் முதலியவற்றையுங் கருதாது ஆற்றுதல், போற்றுதல், மாண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறை முறை, பொறை என்னும் இரத்தினங்கள் ஒன்பதையுங் கொண்டு பொதுநலத் தொண்டு செய்வதே ஜன சமூக ஊழியமாகும்.



அறையிலாடி அம்பலத்திற்குப் போவதுபோல ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் குலத்தினர்களுக்குப் போதிய ஊழிஞ் செய்து அக்குலத்திலுள்ள கல்வியின்மை, மூடப் பழக்க வழக்கங்கள் முதலியவைகளைக் களைந்து சீர்தூக்கிவிட்டாலன்றி நம் நாடு நாடாவாம். ஒரு கிராமத்திலுள்ள ஒவ்வொரு வீடும் க்ஷேமமடைந்தாலன்றி அக்கிராமம் க்ஷேமமடையா! ஒவ்வொரு கிராமமுஞ் சீர்பெற்றாலன்றி ஒரு நகரம் நன்னிலையடையா, ஒவ்வொருநகரமும் உயர்நிலையடைந்தாலன்றி ஒரு மாகாணம் மேம்பாடடையா, ஒவ்வொரு மாகாணமும் க்ஷேமமடைந்தாலன்றி ஒரு நாடு அல்லது தேசம் எவ்வகையிலும் சீர்பெற்றோங்கமுடியாது. அதுபோலவே நம் இந்திய நாடு சீர்பெற்றோங்க வேண்டுமானால் இங்குள்ள ஒவ்வொரு குலத்தினரும் தங்கள் தங்கள் குலம் விர்த்தியடையச் சேவை செய்தல் அத்யாவசியமன்றோ? இதுபற்றியே நம் யாதவ குலம் முன்னேற்றமடையப் பாடுபடுவதும் நம் கடமையல்லவா?

இற்றைக்குச் சற்றேறக்குறைய 600 ஆண்டுகளுக்கு முன் நமது குலத்தின் நிலைமையும் இப்பொழுது அது வகிக்கும் ஸ்தானத்தையும் ஒப்பிடுமிடத்து நம் குலத்தின் தற்கால ஈனஸ்திதியைக் குறித்து வருந்தாதவர் நம் குலத்தில் ஒருவருமிரார் என்பது திண்ணம். அக்காலங்களில் நம்குலம் அரசச்செல்வமுடைமையோடு, கல்வியிலும், வீரத்திலும், நியாயத்திலும், தியாகத்திலும் சிறந்தோங்கி இருந்ததை யார்தான் மறுக்கக்கூடும்!

நம் குலத்தினர் காலத்திற்கேற்ற பதவிகளையும் தொழில்களையும் மற்ற எல்லாப் பழக்க வழக்கங்களையுஞ் சீர்படுத்திக்கொள்ளாது தங்கள் முன்னோர் வழிபட்டுச் சென்ற அந்நெறியையே பற்றிச் சென்று வறுமையால் வதைக்கப்பட்டுத் தங்கள் பெருமை குன்றிச் சிறுமையில் வருந்தக் காணும் தற்கால நம் குல இளைஞர்பால் பற்பல உணர்ச்சிகள்உண்டாகி அவர்கள் உள்ளங் கொழுந்துவிட்டு 'பகீர், பகீர்' என்று எரிகிறதல்லவா? "மானங் குலங் கல்வி வண்மை யறிவுடைமை தானந் தவமுயற்சி தாளாண்மை-தேனின் கசிவந்தசொல்லியர் மேற் காமுறுதல் பத்தும் பசிவந்திடப்பறந்து போம்" என்ற அரிய செய்யுளும் பொய்க்குமோ? ஆம்! நம் குலத்

தாரின் வறுமை, சிறுமை காரணமாகப் பசி முற்றி நம்மைப் பல்காலும் வருத்த அவையாவும் பறந்தன போலும். நம் பெருமை வாய்ந்த குலத்தின் கீர்த்தியை நிலைநிறுத்த வேண்டுமானால் யாதவ குலத்து இரத்தம் ஓடும் ஒவ்வொருவரும் நம் யாதவர் சமூக ஊழியஞ் செய்ய முன்வருவது அத்தியாவசியமாயிருக்கிறது. ஜன சமூக ஊழியத்தை யதிகமாய்க் கையாண்டு வந்ததாலன்றோ இந்நாளில் நவீன நாகரிகம் நலம்பெற விளங்கும் பல இனத்தார்கள் தேடுவாரின்றிப் பாழாய்க் கிடந்த தாழ்நிலைக்காலமும் பறந்துவிட்டது? தன் குலவிர்த்திக்குச் சேவைசெய்வோன் தன்னாலியன்றவரையில் எதையுந் தியாகஞ்செய்யக்கூடிய உள்ளமுடையவனாகவிருக்கவேண்டும்.

நம் குலத்தில் அநேகருக்கு ஜன சமூக ஊழியம் என்பது என்னவென்றே தெரியாது. ஏன்? போதிய கல்வி யறிவின்மையாலேயே! நம் குலத்தினர்க்குள் தீங்கையுண்டாக்கும் விஷயங்களைப் புகழ்ந்து நம் குலத்திற்கு நன்மை செய்வோரை இகழும் அவிவேகத் துரோகிகள் அநேகர் உளர். வேறுசிலர் தன் குலத்தார்க்கு நன்மை செய்யவே பாடுபடுபவர்கள்போல் அபிநயித்து உண்மையில் கௌரதாபட்டங்களுக்கும், நான்குபேர் புகழ்ச்சிக்கும் ஆசைவைத்து உண்மையில் தீமையே இழைக்கும் 'ஆஷாடபூதி'களாயிருக்கின்றனர். இவர்கள்தான் நம் குலத்தைக் கெடுக்க வந்த 'கோடாரிக் காம்புகள்' அநேகர் தங்கள் வருமானத்தால் செருக்கடைந்து இறுமாப்பில் கண் 'தெரியாது கண்டோர் தன்னைக் கையெடுக்க வேண்டுமென்னும் அகங்கார நோக்கத்தி லிருக்கின்றனர். ஒரு வகுப்பினிடமிருந்து புகழ்ச்சியையும், உயர்ந்த ஸ்தானத்தையும் அடையக் கருதினால் அவ்வகுப்பினருக்குச் சேவைசெய்ய வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணபகவான், கௌதமபுத்தர், இயேசுகிறிஸ்துநாதர், முகமதுநபி முதலிய தீர்க்கதரிசிகள் இங்குள்ள ஜீவன்களின் முன்னேற்றத்திற்கு ஊழியஞ்செய்து போந்ததாலன்றோ அவர்களை ஜீவன்கள் அன்றும், இன்றும், என்றும் போற்றுகின்றன? ஆதலால் ஊழியத்தின் பெருமையை இவண் எடுத்துரைக்க இவ்வேடுதான் போதுமா? போதாதென்றே கொள்ளவேண்டும்.

சிலர் "இருந்தால் இராஜாவாயிருப்பேன் இல்லாவிட்டால் கழுதைமேய்ப்பேன்" என்ற அற்பப்பேச்சுகள் பேசித் திரிகின்றனர். இவர்கள் தங்கள் தற்கால செல்வப் பெருக்கால் சுயகுலநலங்கருதாது சும்மாவிருப்பதால்சுணையில்லாச்சுபோகிகளாவாரன்



றோ? பிரிய நாயகன்இல்லாதபெண்ணுக்குப் பட்டுப்புடவை எதற்கு? தாலியில்லாத கழுத்துக்குத் தங்கக்காசுமாலை எதற்கு? இன்னும் நம் குலத்தினர் அநேகர் துவேஷப் புத்தியும், பொறாமையும், கட்சிபேதமும் வளர்த்துக்கொண்டு, 'எனக்கு இரண்டு கண்களும் போவதாயினும் பரவாயில்லை; அயல்வீட்டுக்காரனுக்கு ஒரு கண்ணாகிலும் கெடவேண்டும்' என்று கருதுவதுபோல் முரண்படுகிறார்கள். இப்படி நடப்பதுதானா யாதவர் சமூக ஊழியம்? இதுதானா சுயநலங் கருதாப் பெருந்தன்மை?

நம் குலம் முன்னேற்ற மடையக் கல்வியும் செல்வமும் வேண்டும். நம் யாதவர் சமூக ஊழியஞ் செய்வோர் இவ்விரண்டையும் நம் குலத்தினர்க்குண்டாகும்படி பாடுபடவேண்டும். பல பாடசாலைகளை நிறுவித் தருமத்திற்குக் கல்வி கற்கவைத்தும் 'யாதவமித்திரன்' போன்ற பல பத்திரிகை வாயிலாக நல்லுணர்ச்சி, நல்லொழுக்கம், அறிவு முதலியவற்றைப் போதிக்க வேண்டும். செல்வத்தை விவசாயம், கைத்தொழில் வர்த்தகம் இவற்றால் வளர்க்க வேண்டும். இவைகளின் விருத்திக்கு வேண்டிய முறைகளைச் செவ்வனே எடுத்து ஊட்டவேண்டும்.

"சொல்லுதல் யார்க்கு மெளிய அரியவாம்—சொல்லிய வண்ணம் செயல்" என்று பொய்யா மொழியார் அருளிய வண்ணம் வாக்கும் செயலும் ஒன்றாகப் பொருந்தி யிருப்பது மிகவரிது. இப்பொழுது நமது குலம் முன்னேற்ற மடைய வேண்டுமென்ற கிளர்ச்சி நிகழ்ந்து, சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி முதலியவிடங்களில் யாதவகுல மகாநாடுகள் கூடினது யாவருமறிந்த விஷயமே. ஆனால் நம்மவர் எவ்வளவுதூரம் யாதவர் சமூக ஊழியத்தைக் கையாண்டுவந்திருக்கின்றனரென்று கவனித்தால் அந்தோ! அப்படிக்கில்லையென்றும் சில விஷயங்களில் நேர்மாறாக நடக்கிறார்களென்றும் புலனாகிறது.

நம் குல மேம்பாட்டுக்கு ஊழியஞ் செய்யக் கருதுவோர் தன் மெய், பொருள், ஆவி மூன்றையுந் தத்தஞ் செய்யக்கடவர். இவ்வரிய பெரிய செய்கையால் தான் இம்மையிலும் மறுமையிலும் நன்மை யடைகிறார்கள். மேலும் "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று" என்ற பொய்யாமொழியைப் பூர்த்திசெய்கிறார்கள். பொதுவாகப் பேசுமிடத்து நாம்

பிறரிடத்து அன்பு செலுத்தி உதவினால் நமது சுயப்பற்று நீங்கிவிடும், அன்றியும் சுயநலவிருப்பம், காமியக்களங்கம், கர்வக்கட்டி, அகங்காரப் பிரமியம், கோபக்குன்மம், இச்சகப் பச்சவாதம், வஞ்சகக்ஷயம், வாய்மதப்பித்தம் முதலிய கொடிய நோய்கள் பறந்தோடிப் போம். இதுபற்றியே திருவள்ளுவரும் "அன்பிலா ரெல்லாந் தமக்குரியர்" என்றார். பிறர் நன்மையைக் கருதிப்புரியும் சேவை தேவ அம்சமாயிருப்பதால் அதையடைந்தவர் கடவுளையுடையவராகிறார். எவ்வளவுக் கெவ்வளவு அது உண்டாகிறதோ அவ்வளவுக் கவ்வளவு தேவாம்சம் வளர்கிறது. தேவாம்சம் வளரவே மனுஷாம்சம் அல்லது ஜீவாம்சம் குறைந்து சாயுச்சிய பதம் பெறமுடியுமென்பதாகப் பட்டாங்கு பறை சாற்றுகிறது.

ஆகலால் யாதவகுல சிலர்காள்! இன்னுந் தூக்கமா? மற்ற இனத்தார்கள் முன்னேற்ற மடைந்து உங்கள் சுப குலத்தை இருந்தவிடந்தெரியாமல் செய்து விடுவார்களென்னும் பயம் உங்களைப் பாதிக்கவில்லையா? குன்றாத குன்றேந்திய வம்சத்தார்களென்னும் பெருபுடைய நாமம் குன்றின் மேலிட்ட தீபம்போல் சிறந்து விளங்க உங்களுக்குச் சிந்தனையில்லையா? நம் குலத்தாரின் அறியாமை என்னும் அந்தகாரத்தை ஞானமென்னும் சூரியோதயத்தால் அதமாக்க உங்களுக்கு ஆவலில்லையா? பெருமை வாய்ந்த நம் குலம் இப்பொழுது வறுமை சிறுமையால் சீர்குலைந்து நிற்பதைக் கண்டு உங்கள் உள்ளம் பற்றியெரிய வில்லையா? அப்படி உண்மையில் உங்களுக்கு நம் குலத்தில் அபிமான மிருப்பின் எழுமின்! நம் யாதவ சமூக ஊழியத்தை இன்றே கடைப்பிடிமின்! இன்றும் இன்னே கடைப்பிடிமின்! வீண் வார்த்தை வேண்டாம், வீண் வேஷம் வேண்டாம், வீண் காலமும் வேண்டாம், நம் குலப் பெருமையை மாத்திர மெடுத்தோதுவதால் நம் காரியம் சித்திபெற்று விடாது. நான் யாதவனென்று வேஷங்கள் போட்டுத் திரிவதாலும் நம் குலம் சீர்பெற்றோங்கி விடுமென்றுங் கருதிவிடாதீர்கள். உண்மையான ஊழியத்தாலன்றி வேறெவ்வகையாலும் நம் குலத்தைப் பெருமைப் படுத்திவிடலாமென்னுந் தப்பபிப்பிராயத்தை ஒழித்து விடுங்கள். நாம் 'சோடாபோத்தலைப்' போலிருந்து விடக்கூடாது. ஏனெனில் சோடாபோத்தலை உடைத்தவுடன் அடங்கியுள்ள தண்ணீர் ஆவேஷத்துடன் பொங்கி (Effervescence) மேலே வந்து சில நிமிஷங்களுக்குள் தன் ஆவேசங்குன்றி உள்ளே



அடங்கிவிடுகிறது. அதுபோல நமது வாக்குஞ் செயலும் நடுவழியில் தடைப்பட்டு நின்று விடாது "யாதவர் சமூக ஊழியம், யாதவர் சமூக ஊழியம்" என்று சதா மூச்செறிந்து எத்தகைய இடுக்கண்களையுங் களைந்து நமது சமூகந் தழைக்கப் பாடுபட முன்வருவது ஒவ்வொரு யாதவரின் கடமையாயிருக்கிறது.

நம்மாலியன்ற ஊழியத்தை நம் குல சீர்திருத்தத்திற்கு உதவி நாமும், நம் குலமும் சீர்பெற்றோங்க நமக்கு நல்லறிவளிக்க எல்லாம் வல்ல திருமால் அருள்பாலிப்பாராக.

கு. கோ. கிருஷ்ணன். (யாதவர்)
B Sc (Hons.)

---

# பிள்ளைகளை வளர்க்கும் முறை.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோ னெனக் கேட்ட தாய்.

தம்மக்கள் பெருமையடைவதில் தாய்தந்தையருக்குச் சந்தோஷம் அதிகம். தங்கள் புதல்வரைப்பற்றிய போற்றுரைகள் கேட்கும்போது அவர்களுக்கு உண்டாகும் ஆனந்தத்திற்கு எல்லை இராது. "ஏவாமக்கள் மூவாமருந்து" என்பது முதுமொழி. தாய் தந்தையரின் விருப்பம் அறிந்து வினையாற்றும் மக்கள் அமுதுக்கு ஒப்பாவார். இத்தகைய புதல்வர்களைப் பெற்றோரே மக்கள்பேற்றின் பயனைப்பெற்றோர்கள். சான்றோரை ஈன்ற தாய்தந்தையர் உலகிற்கும் உபகாரஞ்செய்த உத்தமர்களாவார்கள். தங்கள் தீய குணத்தால் தாய்தந்தையருக்கும் ஏனையோருக்கும் இன்னல் விளைக்கும் மக்களைப் பெற்றோர் மனோநிலை எவ்வாறிருக்குமோ? இத்தாய் தந்தையர்கள் கெட்ட பிள்ளைகளைப் பெற்றதால் என்றும் துன்பமடைவதின்றி உலகிற்கும் பெரும் துன்பத்தை உண்டுபண்ணினவர்களாகவேயாவார்கள்.

"நூலைப்போல சேலை தாயைப்போல பிள்ளை" என்பது ஆன்றோர் வாக்கு. சேலை நூலின்தன்மையை ஒத்திருக்கிறது. தாய்தந்தையரின் தன்மையை மக்கள் பெற்றிருக்கிறார்கள். நிர்மலமாய் யாதொன்றும் அறியாமல் பூமியில் பிறந்த குழந்தைக்குத்

தாய்தந்தையரே சகல செய்கைகளையும் கற்பிக்கின்றனர். ஆண்களை விடப் பெண்களுக்கே பிள்ளைகளைப்பேணும் பொறுப்பு மிகுந்திருக்கிறது. பரிசுத்தமான மனோநிலை இச்சிறு பருவத்திலேயே குழந்தைகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. தன் தாயின் இயல்பை யொத்துக் குழந்தையின் குணம் ஏற்பட்டிருப்பது அதிசயமல்ல. வருங்கால உலகமக்களை ஈனும் பெண்களிடமே உலக நன்மை இருக்கிறதென்பது மிகையாகாது. இத்தகைய பெரும் பொறுப்பைக்கொண்ட பெண்கள் “கல்விகற்கக்கூடாதுஎன்ற சிலர்கூற்றுவெறுக்கத்தக்கது.

பெண்கள் நன்கு கற்றிருப்பார்களானால் மக்களை வளர்த்தும் முறையும் பிறவும் தெரிந்திருப்பார்கள். அவர்களுக்குக் கல்வி இல்லாக்குறையால்தான் மக்களை வளர்த்தும் முறை தெரியாதிருக்கிறார்கள். குழந்தைகள் முன்னிலையில் ஒழுங்கற்ற செய்கைகளை ஒருபோதும் செய்யக்கூடாது. அவர்கள் முன்னிலையில் அரசன் முன்னிலையில் நடப்பதுபோலவும் ஆசாரியன் முன்னிலையில் நடப்பதுபோலவும் நடந்துகொள்ளவேண்டும். ஒழுக்கமில்லாமல் குழந்தைகளை வளர்க்கும் தாய்தந்தையர்கள் பின்னால் அதன் பயனைப் பெறுவார்கள். பொய்களவு முதலிய கெட்டபழக்கங்களெல்லாம் சகவாசதோஷத்தால் உண்டாகின்றன. ஒரு சிறுவனிடம் கெட்டவழக்கம் ஏதேனுங் கண்டால் அவனை அன்பாய் உபதேசித்தும் அச்சமுறுத்தியும் அதை நிறுத்திவிடலாம். கூடாநட்புக் கொண்டொழுகும் புதல்வரைக் கண்டிப்பாய் அதிலிருந்து விலக்கிவிடவேண்டும். இவ்விஷயத்தில் தாய்தந்தையர் தங்கள் கருத்தை முழுதுஞ் செலவுசெய்ய வேண்டியவராயிருக்கிறார்கள்.

“தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்” என்பது பழமொழி. சிறுபருவத்தில் மழலைகள் பெறும் பழக்கவழக்கங்கள் மரணமடையும்வரையிலும் மாயா. ஆகையால் சிறுபருவத்தைச்செம்மையாகப் பாதுகாக்கவேண்டும். குழந்தைகளுக்கு நான்காவது பருவம் முதல் பொருள்களை அறியும் ஆவல் பிறந்து கேள்விகள் கேட்கின்றன. அக்கேள்விகளுக்கு ஒழுங்காகப் பதில்சொல்லிவரவேண்டும். சில அல்ல, பலதாய்மார்கள் இதற்குச் சரியான பதில் சொல்வதில்லை. முரண்பாடான விடைகளை வெறுப்போடு கூறுகிறார்கள். தான்கேட்ட கேள்விகளுக்கு விடைகிடைத்ததும் அதைத்தன் மனமாகிய புஸ்தகத்தில் பதிவுசெய்து கொள்வது குழந்தைகள் இயல்பு. ஒன்றற்கொன்றாய்க்கேட்ட விடைகளை உண்மையென்றே எண்ணிக்



கொண்டிருந்து வெகுநாட்களுக்குப்பின் அதுபொய்யென அறிந்து தாய்தந்தையரோடு குழந்தைகளும் பொய் பேசத்தொடங்கி விடுகின்றன. குழந்தைகளை அழுகையும் துன்பமும் அறியாது வளர்க்க வேண்டும். எப்பொழுதும் சிரித்தவண்ணம் சந்தோஷத்தோடும் வளர்ப்பதேமேல். அன்பு பரோபகாரசிந்தை முதலிய நற்குணங்கள் அவரிடம் உண்டுபண்ண வேண்டும். இம்முறையில் வளர்க்கப்படும் குழந்தைகள் வருங்காலத்தில் சந்தோஷசித்தர்களாய் எவ்வேளையிலும் நன்முயற்சி யுடையவராய் இருப்பார்கள். அன்பு பரோபகாரம் முதலிய அருங்குணங்கள் இவருக்கு உண்டாய் உலகநன்மைக்கு உதவிசெய்வார்கள். இதற்காகக் குழந்தைகள் விரும்பும் பொருள்களை அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்பதல்ல: பல பொருள்களிலும் பற்றுதல் உண்டாகாதவாறு பாதுகாக்கத் தாய்தந்தையருக்கு இயலாமலில்லை குலந்தைகளுக்கு அச்சம் உண்டுபண்ணும் வார்த்தைகளை ஒருபோதும் உச்சரிக்கக் கூடாது. பூச்சாண்டி வருகிறான்! பூனைவருகிறது! பேய்! வருகிறது! பூதம் வருகிறது என இம்மாதிரி வார்த்தைகளைச் சொல்லிப் பிள்ளைகளைப் பயப்படுத்துவது தற்காலத் தாய்மாரின் வழக்கமாயிருக்கிறது. இது மடமையால் சொல்லும் வார்த்தைகளே. பயம் இன்னதென்று அறியாத நிர்மலமான மனதில் பயம் குடிகொண்டுவிடும். அதுமுதல் எப்போதும் அச்சந்தான். பூச்சாண்டி, பூனை, பேய், பூதம் முதலியவற்றின் எண்ணம் அடிக்கடி உண்டாகும். அப்பொழுது இளம் மழலைகளின் கபடமற்ற மனம் அடையும் வேதனைக்கு ஒருஅளவுண்டா? ஒவ்வொருவரும் தம் சிறுபருவத்தில் இம்மாதிரி நிகழ்ந்தவற்றைச் சிந்தனைசெய்யின் தெரியலாம். தாய்தந்தையர்கள் தங்கள் அறியாமையால் அருமைக்குழந்தைகளுக்குச் செய்யும் பெருந்துன்பமிது. இவ்வாக்கு வன்மை இம்மட்டோடு நின்று விடுகிறதில்லை. எண்ணவொண்ணாப் பெருந்தீங்கு இழைக்கிறது. அப்புதல்வன் அது முதல் இப்பாரில் பயங்கொளியாக வாழ்கின்றான். உறுதியும் மனோதிடனும் அவனுக்கு இராது. மனோவலியில்லா உடல் ஊக்கு எதற்கு! அதினால் பலம் பெறலாமென்பது முழுப்பிசகு. சிவாஜியின் வீரச்செயல்களுக்கு அவர் தாயே காரணமாயிருந்தாரெனச் சரிதம் தெரிவோர் அறியலாம். போருக்குச்சென்ற தன் ஒரேபுதல்வன் புறமுதுகிட்டதினால் முதுகில் காயம்பட்டு இறந்தானெனக்கேட்டு வருந்திப் போர்க்களஞ்

சென்று பார்த்தபோது அவன் மார்பில் காயங்கொண்டிறந்ததைக் கண்டதும் ஈன்றபொழுதினும் பெரிதுவந்த தமிழ்த்தாய்மார் வாழ்ந்துவந்த நமது தமிழ்நாட்டிலே புதல்வரைப் பேடிகளாக்கும் தாய்மார்கள் தற்காலம் இருக்கிறார்கள் என்றே கூறலாம்.

ச. செல்லம் (யாதவன்)

சுசீந்திரம்.

---

## ஓ ரி ன் னு ரை .

---

"தந்தை மகற் காற்று நன்றி யவையத்து முந்தி யிருப்பச்செயல்"

என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளிய வாறு யாதவ மரபிற்றோன்றிய ஒவ்வொரு தகப்பனும் தன் பிள்ளைக்குக் கல்வி கற்பிப்பதையே முக்கிய நோக்கமாகக் கொள்ளவேண்டு மென்று அடிக்கடி வற்புறுத்திச் சொல்ல வேண்டியது மிகவும் அவசியமாகத் தோன்றுகிறது. கல்வி கல்லாப் பெருங் குறையாலன்றோ நமது சமூகம் இத்தகைய க்ஷீண திசைக்கு வந்துவிட்ட தென்பதை இனியாவது நாமுணர்ந்து கூடுமானவரை முயற்சித்து முன்னேற்றத்தை யடையத் தக்க சாதனமான வழிகளைத் தேடவேண்டும்.

கல்வியின் மூலமாகவன்றி மற்றெவற்றாலும் அறிவை யடைதல் இயலாது. ஒருவனுக்குக் கல்வியின் அளவே அறிவு விரிகிறது என்று திருவள்ளுவர் பிரத்தியட்ச உவமானங் காட்டித்

"தொட்டனைத்தூறு மணற்கேணி
மாந்தர்க்குக் கற்றனைத்தூறு மறிவு" என்றார்.

ஒருவன் அறிவைப் பெற்றாலன்றி அவன் உயர்ந்த நிலைகளை அடைய முடியாது. அஃதேபோன்று ஒரு சமூகம் அறிவாளிகளைப் பெற்றாலல்லது அச்சமூகம் உன்னத நிலைமைக்கு வரவியலாது.

'பிச்சைபுகினுங் கற்கை நன்றே' அதிவீரராம பாண்டியன்.
'கல்வி அழகே அழகு' நாலடியார்.

என்ற இன்னோரன்ன பல ஆன்றோர் வாக்கியங்களை நாம் தற்சமயம் அவசியம் கருத்துட்கொள்ளவே வேண்டும்.



ஸ்ரீ கண்ணபிரானை ஈன்ற பெருமையினை யுடையதன்றோ நம்குலம்! ஸ்ரீ கண்ணபிரான் காமதேனுவாகிய ஆவினங்களைப் பசும் புற்றரைகளில் சுயேச்சையாய் மேயவிட்டுச் சங்கு சக்கரம் தாங்கும் தமதிரண்டு செவ்விய கரங்களினாலும் புல்லாங்குழல் பிடித்துப் புள்ளிமான்களுலாவும் கானகத்திடை ஆனந்த பரவசனாய் வெண்ணெய் உண்ட வாயால் இன்னிசை பொருந்த ஊதிப் பிரபஞ்சத்தையே மகிழும்படி செய்து காட்டிய ஓர் ஒப்பற்ற தொழிலன்றோ நம் தொழில்!

கார்முகில் வண்ணனும் நம் கண்ணனைக் காட்டிலும், கொலைக்கும் பாபத்திற்கும் ஆதாரமாயுள்ள ஏனைய பல தெய்வங்களும் நமக்கு வேண்டுமோ? இத்தகை மாண்புடைத்தெய்வம் ஒன்று மட்டிலும் நமக்குப் போதாதோ?

நம்மவர்களின் முன்னேற்றத்திற்கென மிகச்சிரமம் எடுத்துக் கொள்ளும் பெரியார்கள் தங்களாலியன்றவரை மேன்மேலும் உழைத்து இக்குலத்திற்கோர் நன்மை அளிக்க வேண்டுமெனத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பல புத்தகங்களுக்கும் நமதினிய இவ் மித்ரனுக்கும்ஆசிரியராக இருப்பவரும் நம் குலத்துக்கெனத் தொண்டு செய்தலையே கடனெனக் கொண்டவருமாகிய ஸ்ரீமான் இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன் அவர்கட்கும் மற்றைய அவர் சகாய அங்கத்தினர்க்கும் சகல பாக்கியங்களையும் தேகதிடத்தையும் நீண்ட ஆயுளையும் நல்க வேண்டுமென எல்லாம் வல்ல கண்ணபிரானை இறைஞ்சுவோமாக.

K. கோவிந்தசாமி பிள்ளை. (யாதவர்)

டி மு. கோர்ட், குமாஸ்தா, விருத்தாசலம்.

---

## கால்நடை வைத்தியம்.

---

### (கால் நடைகளின் வியாதிகளும், சிகிச்சைகளும்)

(வியாதிகள்) வாய் சப்பை, கால் சப்பை, கோமாரி, வெக்கை, அம்மை, காய்ச்சல், அடைப்பான், கழிச்சல், சொறி, சேற்றுப் புண், சுளுக்கு, கொம்புமுறிதல் கன்றின் கழிச்சல் கன்றின் மலச்சிக்கல் வயிற்றுப் பொருமல் முதலியனவாகும்.

### கறக்கிற பசுவையும் கைக்குழந்தையையும் கண்ணெனப் பார்க்கவேண்டும்.

(வாய்சப்பை) கால்சப்பை இது மாட்டிற்கு வரும் ஒரு கொடூரமான தொத்து வியாதி. இது ஆடுகளுக்கும் பரவுவதுண்டு. குளம்புக்கு இடையிலும் பசுக்களின் மடியிலும் கொப்பளங்கள் கிளம்பும். அக்கொப்பளங்கள் வெடித்துப் புண்ணாகும். வாயில் நுரைதள்ளும். மாடு உதட்டையும் நாக்கையும் சப்பிக்கொண்டே இருக்கும். நொண்டிக்கொண்டு நடப்பதற்குக் கஷ்டப்படும். இவ்வியாதியினால் வயதான மாடுகள் அநேகமாகச் சாகிறதில்லை. ஆனால் சிறு கன்றுகள் மாத்திரம் மரிப்பதுண்டு.

(சிகிச்சை) நோய்கண்ட மாடுகளுக்குத்தீனி மெதுவானதாகவும் பலம் கொடுக்கக் கூடியனவாகவும் இருப்பது நலம். நோய் கண்டவுடன் மாடுகளுக்கு லேசாகப் பேதிக்குக் கொடுக்கவேண்டும். தண்ணீரில் சிறிது படிக்காரம் போட்டுக் கரைத்து அத்தண்ணீரால் மாட்டை இரண்டு மூன்று நாள் கழுவவேண்டும். கால்களைச் சுத்தம்பண்ணி வேப்பெண்ணெயாவது தேங்காய் எண்ணெயில் கற்பூரம் அல்லது கர்பாலிக் ஆஸிட் சேர்த்து அக்கலப்பையாவது பூசவேண்டும். இவ்வியாதி கண்ட பசுவின்பாலை நன்றாக்காய்ச்சிக் குடிக்கலாம். ஆயினும் குடிக்காமலிருப்பதே நன்று.

(கோமாரி) இதை வயிற்றெடுப்பு, பெருநோவு என்று சொல்வதுண்டு. இந்நோய் கண்டதும் மாடு தண்ணீராய்ச் சாணம் கழியும். பிறகு இரத்தமும் சீதமும் கலந்து கழியும். உடல் நடுங்கும். கண்களில் பீளை கட்டும். வேர்வையும் உண்டாகும்.

(சிகிச்சை) ஆவரங்கொழுந்து கற்றாழைச்சோறு வெங்காயம் சீரகம் கிளுவைக் கொழுந்து இவைகளைச் சேர்த்து இடித்துக் காடியுடன் கலக்கிக்கொடுக்கலாம். சிலர் பனங்கள்ளையும் கொடுப்பார்கள். இரண்டிலும் நல்ல குணந்தான்.

(வெக்கை) இது மாடுகளுக்கு வரும் வியாதிகளுள் மிகவும் கொடூரமானது. இந்தத் தொத்து வியாதி ஒரு மாட்டிற்கு வந்தால் மற்ற மாடுகளுக்கும் அருகிலுள்ள ஆடுகளுக்கும் சீக்கிரத்தில் பரவும். ஆரம்பத்தில் காய்ச்சல் கண்டு உடல் நடுங்கும். வாய், மூக்கு, கண் இவைகள் சிவந்து காணும். வாயிலும் மூக்கிலும் மூத்திரத்



தாரையிலும் சீழ் போன்ற சளி ஒழுகும். வாயில்புண் உண்டாகும். சீழும் இரத்தமும் கலந்த பேதி உண்டாகித் துர்நாற்றம் வீசும். நோய்கண்ட ஏழாம் நாளில் மாடுகள் இறப்பதுண்டு.

(சிகிச்சை) ஆரம்பத்தில் 10 அவுன்ஸ் விளக்கெண்ணெய் பேதிக்குக் கொடுக்கவேண்டும். 20 துளி கர்பாலிக் ஆஸிட் இளஞ்சூடான கஞ்சியில் தினம் ஒரு முறை கொடுக்கலாம். தீனி இளம் பச்சைப் புல்லும் கஞ்சியுமே. அவசியம் வியாதிகண்ட மாட்டைத் தனியாகப் பிரித்துவிட வேண்டும். செத்துப்போன மாட்டையும் அதன் சாணம் தீனி படுக்கை முதலியவற்றையும் நெருப்பிலிட்டுக் கொளுத்தவேண்டும். இல்லாவிடில் ஆழமாகக் குழிதோண்டிச் சுண்ணாம்பு போட்டுப் புதைக்க வேண்டும். (தொடரும்.)

S. பெருமாள் கோன்,

உபாத்தியாயர், போர்டு ஸ்கூல் திண்டுக்கல்.

## சமூக மகாநாடுகள்.

மாந்தரின் மனோநிலைக்கு ஏற்றவாறு பல நிகழ்ச்சிகள் உண்டாகின்றன. அது தனி மனிதனாலும், பலர் சேர்ந்தும் நடைபெறுகிறது. பலர் சேர்ந்து உழைப்பதற்குக் கூட்டமென்றும், கூட்டம் பல சேர்ந்ததற்கு மகாநாடு என்றும் பெயர். தனி மனிதனிலும் கூட்டத்தவர் செய்யும் வேலையே சிறப்புடையதென எடுத்துக் கூறவேண்டியதில்லை. சமூகம், தொழில், தேசம் முதலியவற்றின் சீர்திருத்தத்திற்காய் மகாநாடுகள் கூடிவருவது தற்கால வழக்கமாகவிருக்கிறது. மகாநாடுகள் மூலமாகப் பல முக்கியமான காரியங்கள் சாதிக்கப்பட்டு வருகின்றன. ஏனைய மகாநாடுகளைவிட சமூகமகாநாடுகளே சிறப்பாக நடைபெற்றுவருகின்றன எனலாம்.

சமூக மகாநாடுகளைவிட வேறு எதையும் முக்கியமாகக்கருதுவதற்கு இடமில்லை. ஆகையால் சமூக மகாநாடுகளே தற்காலம் சிறந்து விளங்குகின்றன. ஒருவனை ஜாதி அபிமானமே முக்கியமாகப் பிடிபட்டிருக்கிறது. சமுதாயாபிமானத்தால் பல் வேறு இடங்களிலிருந்தும் ஒருங்குகூடித் தங்கள் முன்னேற்றத்திற்கான நடை முறைகளைச் செய்யவேண்டிய திட்டங்களையும், தீர்மானங்

களையும் கவலையோடு அந்தச்சமூகத்தவர் கவனித்து வருவதுபோல வேறு எவர் கவனிப்பார்கள்? வேறு எக் கூட்டத்தில் இவ்விஷயத்தைப்பற்றிக் கவலை கொள்ளுகிறார்கள்? ஜாதி மகா நாடுகளால், நாட்டில் வேற்றுமைகள் உண்டாகிறதென்பது சிலர் கொள்கை. ஒரு சமூகத்தவர் மகாநாடுகள் கூடித் தங்கள் சமூகமே உலகத்தில் முதன்மையும், முக்கியமுமானதென்று பிரசங்கங்கள் செய்வதினால் அடுத்த சமூகத்தவர் தங்களுக்கு இழிவு ஏற்பட்டுவிட்டதாகக் கருதுகிறார்கள் என்பது சிலர் கொள்கை. இது சரியான கொள்கை எனக்கொள்ள முடியாது. தமிழ் நாட்டிலுள்ள எல்லாச் சமூகத் தவரும் தங்கள் சமூகங்களே முக்கியமானதெனப் பிரசங்கங்கள் செய்துவருகிறார்கள். ஒவ்வொரு சமூகத்தவரும் தங்களை உயர்ந்த வர்களென்று சொல்லிக்கொள்வதும், உயர்வதும், அவரவர் கடமை யாகும். என் சமூகத்தவர் இன்ன சமூகத்தவரிலும் இழிந்தவ ரெனக்கூற எவனும் இசையான். அங்ஙனம் ஒருவன் கூற வருவா னாயின் அவனிலும் தன் மதிப்பில்லாதவன் வேறு உண்டா?

ஒவ்வொரு சமூகத்தவரும் தங்கள் சமூகம் உயர்ந்ததெனக் கூறிக்கொள்ளப் பழம் புராணங்களையும் செப்புப்பட்டயம் கல் வெட்டு முதலானவைகளையும் ஆராயத் தொடங்கி ஆண்டுகள் பல வாயின. தங்கள் சமுதாயத்தின் வரலாறுகளையும், சமுதாயப் பெரியார் வரலாறுகளையும் அறிந்துகொள்ள வேண்டியது அவசி யமே. ஆனால், அம்மட்டோடு நின்றுவிடுதல் கூடாது. தம் சமு தாயம் தற்காலம் இருக்கும் நிலையையும், அதன் குறைகளையும், அதைச் சீர்திருத்தும் முறைகளையும் அறிந்து அதற்கான வேலை களைச் செய்யவேண்டும். இவையன்றிப் பழம் பெருமைகளை மாத் திரம் பேசிக்கொண்டிருந்துவிடுவது பயனில்லை.

எல்லாச் சமுதாயத்தவரும் சகோதர உணர்ச்சியோடு ஒழுகி வரவேண்டும். தம் சமுதாயத்தைப்போன்ற எல்லா உரிமைகளும் ஏனைய சமுதாயங்களுக்கும் உண்டென்ற எண்ணம் ஒவ்வொருவ ருக்கும் உண்டாகவேண்டும். தன்னைப் பெருமைப்படுத்த எண் ணுபவன் பிறரை எங்ஙனம் பெருமைப்படுத்த வேண்டுமோ அது போலத் தன்சமுதாயத்திற்குப் பெருமையை விரும்புகின்றவன் பிற சமூகங்களையும் பெருமைப்படுத்தவேண்டும். பிற சமூகத்தை வசை மொழிகளால் இழிந்து கூறுபவன் தன் சமூகத்திற்குப் பெரிய



இழிவை உண்டுபண்ணுகிறான். வசைமொழிகளால் சமூகங்களை இழிந்து கூறும் வழக்கம் இன்னும் சிலரிடம் இருந்து வருகின்றது. சமூகக் கலவரங்கள் இவராலேயே உண்டாகின்றன. இவ்விஷயத் தில் சமூகத் தலைவர்கள் சிந்தை செலுத்தினால் நன்று.

தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு சமுதாயங்களும் பல உட் பிரிவுகளோடு இருக்கின்றன. ஒவ்வொரு பிரிவுகளும் சமுதாயத் தோடு தொடர்பின்றித் தனித்தனியாக இருக்கின்றன. இங்ஙனம் பிரிவுபட்ட எல்லாச் சமூகங்களும் தமது சக்தியை இழந்திருக்கின் றன. மகாநாடுகளால் பல உட் பிரிவுகளும் நீங்கி ஒவ்வொரு சமூ கங்களும் வன்மையைப் பெற்று வருகின்றன எனக் காணுகிறோம்.

வருஷாவருஷம் கூடிப் பிரியும் மகாநாடுகளால் ஒரு நன்மை யையும் எதிர்பார்க்க முடியாது. அதற்காக ஏற்படுத்தப்படும் காரிய நிர்வாகக்கூட்டத்தவர் தன் நலமற்றுச் சமூகத்திற்கான நன் மையைச் செய்ய முன் நிற்கவேண்டும். நமது யாதவ மகாநாடு களும் நான்கு வருட காலமாக மகாநாடுகள் கூடி மேலான தீர் மானங்களும் நிறைவேறியிருக்கின்றன. அவைகளை நடைமுறை யில் கொண்டுவர ஒரு முயற்சியும் செய்ததாகத் தெரியவில்லை. இனியேனும் கூடுகிற மஹாநாடுகளில் திறமையான வேலைக் கூட் டத்தையும் தீர்மானங்களை நிறைவேற்றும் திட்டங்களையும் தயாரித் துத் தமிழ் நாட்டில் முன்னேறி நிற்கும் சில சமுதாயங்களைப் போல முன்னேற்றமடைய மிகத்தீவிரமாக யாதவசமுதாயம் முயல வேண்டும் என்று நமதுயாதவ சமுதாயத்தின் முன்னிலையில் வணக் கமாகத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்,

ச. செல்லம்,
சுசீந்திரம்.

## நன்றி மறவோம்.

நமது சமூகமிதில் நான்குமகா நாடு
சமாசமாக் கூடினதில் தானே—எமதுதல
யாதவ மித்திரனை யாங்களிது போதடைந்தோம்
மாதவமே என்புகல்வோம் மற்று

இ. ம. வெள்ளைச்சாமிக் கோனார்,
ஜவுளி வர்த்தகம், மதுரை.

# நம்மிடம்
# இருக்கப்பட்ட முக்கிய குறை.

கனம் யாதவர்களே!

நமது குலம் மிகவும் உயர்ந்த குலமென்றும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அவதரித்த குலமென்றும் நீங்கள் அறிவீர்கள். இப்படி நாம் பேசிக்கொண்டேயிருப்போமானால், அது நம்முடைய குலம் தாழ்வையடையுமே யொழிய, அதனால் உன்னத நிலையில் யாதொரு பிரதி உபகாரமும் அடையாதல்லவா?

ஆகையினால், நாம் ஒவ்வொருவரும் நம்மை முன்போல் உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவரவேண்டுமென்றால், நம்மில் ஒற்றுமை மிகவும் அவசியம். மேலும் நாம் எல்லோரும் ஒருவர்க்கொருவர் சகோதரத்துவமா யிருக்கவும் வேண்டும்.

ஆனால் இச்காலத்தில் நமது குலத்தில் அநேக பட்டங்களும், பிரிவுகளும் ஏற்படஏற்பட நமதுகுலம் மிகவும் தாழ்ந்தநிலைமைக்கு வந்து, பிறத்தியாருக்கு இடம் கொடுக்கக் கூடியதாக ஆகிவிட்டது. நம்மில் தற்காலத்தில் புதிது புதிதாக ஏதோ பிள்ளை, தாஸ், கரையாளர், நம்பியார், நாயுடு, சேர்வை, செட்டியார் முதலிய பட்டங்களை எல்லாம் சூட்டிக் கொள்கிறார்கள். அவைகளினால் அநேக பிரிவுகள் ஏற்பட்டு நம்மில் ஒரே ஜாதியாயிருந்தபோதிலும் அந்தப் பிரிவுகள் பலவிதமாக ஆக்கிவிட்டது. இவைகளினால் அநேக ஒற்றுமைக் குறைவுகளும் ஏற்பட்டுவிட்டன. ஆகையினால் நமக்கு முற்காலத்திலுரிய 'யாதவன்' அல்லது 'கோன்' என்ற பட்டத்தை மட்டும் வைத்துக்கொள்ளவேண்டும். மற்ற பட்டங்களெல்லாம் இனிமேல் கைக்கொள்ளக் கூடாது. இந்தப் பட்டங்களினால் நம்மில் பந்திபோஜனமும், கொள்ளுவன கொடுப்பனையும் இல்லாமல் போகிறது. இனிமேல் நாம் அந்தக் கொள்வன கொடுப்பனையும் பந்தி போஜனத்தையும் முன்னுக்குக் கொண்டுவரவேண்டும்.

இதோடு நாம் எந்த ஊருக்குச் சென்றாலும் கட்சி, கட்சி என்ற ஒரு கேவல வார்த்தையொன்று நடமாடிக்கொண்டே யிருக்கிறது. அதை ஒழித்து 'ஒற்றுமை' 'ஒற்றுமை' என்கிற வார்த்தை காதினால் கேட்கப்படவேண்டும். நாம் இப்பொழுது கல்வியில் மிக



வும் தாழ்ந்தநிலைமையிலிருக்கிறோம். இதைச் சீர்படுத்தும்பொருட்டு அநேக முயற்சிகள் செய்துவரவேண்டும். உதாரணமாகப் பெருங்குளம் என்னப்பட்ட ஒரு கிராமத்தில் சில யாதவ வாலிபர்கள் ஒன்றுகூடிப் பள்ளிக்கூடம் ஒன்று நடத்திவந்தார்கள். அது மூன்று மாதங்கள் மட்டும் நடைபெற்று வந்தது. பின்னால் ஒழுங்காய் நடைபெறவில்லை. அதற்குக் காரணம் நான் மேலே சொல்லிய கட்சியே. 'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்றமாதிரி இவர்கள் கட்சியினால் மற்றும் ஜாதியார்கள் இவர்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டால் பள்ளிக்கூடம் நிலைத்துவிடும் என்று பொறாமைகொண்டு இவர்களைப் பல மாதிரி இழுத்துவிட்டுப் பணச்செலவுகள் ஏற்படும்படி செய்துவிட்டார்கள்.

இப்பொழுது தரித்திரத்தினால் வீடுகளில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். அரிய சகோதரர்களே! இவர்களது நிலைமையை அறியுங்கள். இப்படிப்பட்ட ஆத்துமாக்களும் உலகத்திலிருக்கிறார்களே! ஐயோ! இவர்களிடம் ஒரு பள்ளிக்கூடவிஷயமாகக் கொஞ்சம் பொருள் கேட்டால் கொடுக்கிறதில்லை. ஆனால் இவர்கள் கஷ்டப்பட்டுச் சம்பாத்தியம்செய்த பொருள்களையெல்லாம் பீதாம்பர ஐயருக்கும், செப்படி வித்தைசெய்கிற நாய்க்கமார்களுக்கும், காவல்காரர்களுக்கும் பூச்சாண்டி சிப்பந்தியார்களுக்குமே இறைத்துவிட்டுப் போகிறது வழக்கம். சுடலை, இசக்கி முதலிய கோயில்களுக்கு வரி என்றால் ரூபாய் இருபத்தைந்து கொடுக்கிறது வழக்கம். ஆனால் யாதவமித்திரன் எனப்பெற்ற ஒரு பத்திரிகையினால் நமது பெயர் பூர்வீகமாகவே ஊரில் தெரியாதிருந்தபோதிலும் 120-மைலுக்கு அங்கேயிருந்து மாதாமாதம் வீடு தேடி வருகிற பத்திரிகைக்கு ஒரு ரூபாய் கொடுங்கள் என்றால், அது நம்முடைய ஜாதியையும், தொழிலையும் கெடுக்கிறதற்கு வந்திருக்கிறது என்று தப்பான அபிப்பிராயத்தையுடையவர்களாயிருக்கிறார்கள். ஆனால் 'யாதவமித்திரன்' அப்படிக் கெடுக்கிறதற்கு வராமல், சிவாஜி என்னப்பட்ட மகாவீரனுக்குமுன் ராமதாஸ், துகாராம் என்ற சிறந்த புருஷர்கள் தோன்றிப் பக்தி விஷயத்தில் ஈடுபட்டு வந்ததுபோல் இதுவும் நம்முடைய கண்களைத் திறந்து, நம் பக்தி விஷயத்தை நிலைநிறுத்தவே வந்திருக்கிறது. ஆகையினால் இதை மெத்தனமாக நினையாதபடி மிகவும் சந்தோஷத்துடனும், குதூகலத்துடனும், இன்றே இதற்குச் சந்தாதாரர்களாய்ச் சேருங்கள்,

ஸ்ரீ கண்ணபிரான் நமது குலத்தில் அவதரித்ததினால் நாம் எவ்வளவு மேன்மை அடைந்தோமோ அதுபோல இப்பொழுது இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன் அவர்களால் நமது குலம் முன்னேற்றம் அடையக்கூடியதா யிருக்கிறது. ஆகையினால், நீங்கள் ஒவ்வொருவரும் அவர்களுக்கு நீண்ட ஆயுளையும், ஊக்கத்தையும் மேன்மேல் கொடுக்குமாறு ஸ்ரீ கண்ணபிரானைத் தோத்திரம் செய்யும்படி மிகவும் தாழ்மையாய் வேண்டிக்கொள்கிறேன்.

க. ஆண்டியாதவன்,
பெருங்குளம்.

---

## வள்ளல் பாரி.

---

யதுகுமார்.
"காந்திதாசன் பர்மா"

---

திருவளர்ந்தோங்கும் நெடிய கடலாற் சூழப்பட்ட இந்நில உலகத்திலே, புண்ணிய பூமியாகிய இப்பரத கண்டத்தில், உம்பர் நாட்டினுஞ் சிறந்ததாய் நிலைபெற்றிலங்கும் பாண்டிய நாட்டில் "பறம்பு" என்ற பழம் பதியொன்றுண்டு.

அது முந்நூறு சிற்றூர்களையுடையதாய், குறிஞ்சி, முல்லை, மருதம் என்னும் நிலங்களின் வளத்தால் மிக்கோங்கியது. தேனருவியின் மதுக்குழம்பும், பாலாற்றின் வெள்ளமும் பரவப்பெற்றது. பல சோலைகளும், தடாகங்களும், சூழ்ந்து மாதம் மும்மாரி பெய்யும் மகிமையையுடையது. வானுறவோங்கி வளர்ந்து மகரிஷிகள் வதித்தற் கிடமாயும், ஆகாயத்திற் றோன்றும் நட்சத்திரங்களைப் போன்று, "நூற்றெட்டு நன்னீர் நிலை"கள் நிறைந்தும் ('ப' என்ற வடிவத்தில்) ஓர் மலையுள்ளது. அஃதே "பறம்பு மலை" எனப் பெயர் பெறும். உயிர் வாழ்தற்குரிய உணவுப் பொருள்களனைத்தும் இம்மலையின் கண் நிறைந்துள்ளது. மாரியின்றிப் பாரே வறண்டகாலத்தும், பறம்பின் வனங்குன்றவே குன்றாது. அஃதென்றும் பொன்றவே பொன்றாது. மிகு மழை, மிகு காற்று, மழையில்லாமை, தன்னரசு வேற்றரசு, விட்டில், யானை, கிள்ளை,



நஷ்டம் என்னும் எண்வகை நாட்டுக் குற்றங்களும் நீங்கியது. தேவாராதனை, திருவிழாக்கள் முதலியன எப்பொழுதும் நீங்காதிருப்பது. "இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும் வல்லரணும் நாட்டிற் குறுப்பு" என்ற "தமிழ்மறை"க்கோர் இலக்கியமாயமைந்துளது. இம்மலையை எளிதிற் கைப்பற்றுவதெனில் மாற்றலர்க்கு மிக அரிது. நிலங்களிலுண்டாகும் விளைவில் ஒன்பதில் ஒருபங்கை அரசர்க்குச்செலுத்தி, மற்ற எட்டுப்பங்கையுங்கொண்டு, பிதுர்க்களுக்கும், தேவர்களுக்கும், விருந்தினர்களுக்கும், சுற்றத்தார்களுக்கும், தங்கள் குடும்பத்திற்கும் செய்வன செய்து நீதி தவறுமல் இல்லறம் நடாத்திச் செல்வச் சிறப்புடன் வாழும் உத்தம குடிகளையும் பசு, பால் வளங்களையும் பல கீர்த்திகளையும் பொருந்தப்பெற்ற முன்னூறு கிராமங்களைத் தனதகங்கொண்ட இந்நாட்டிற்குத்தான் "பறம்புநாடு" என்று பெயர்.

(தொடரும்)

---

## நம்பகமாட்சி.

---

நம்பகமாட்சி என்பது நம்பகத்தால் உண்டாகும் பெருமை என்பதாம். அதாவது மக்களில் பலர்க்கு, உலகம் (உயர்ந்தோர்) ஆமோதித்துக் கையாண்டுவரும் விஷயங்களில் சில பிரதமத்திலேயே விளங்குவனவாயும், சில விளங்காதனவாயும் இருத்தல் இயல்பு. அப்படி விளங்காத விஷயங்களையும், உலகத்தை முன்சுவடாகக்கொண்டு, ஆராய்ந்து பாராமலே நம்பி வழிபடுவது நம்பகவழிபாடாம். அவ்வழிபாடு ஆஸ்திகோத்தமர்களுக்கு அனுபவ முறையில் நன்மையையும் பெருமையையும், உண்டாக்குவது கண்கூடு. இத்தன்மையான நம்பகம் அன்பின் நிலையெனப்படும். இதனை மனோமணீயம்,

"நம்பலென் பதுவே அன்பின் நிலைமை
தெளிந்தவை கொண்டு தெளிதற் கரியவை
உளத்தினில் நம்பி உறுதியாய்ப் பிடித்துச்
சிறிது சிறிதுதன் அறிவினை வளர்த்தி
அனுபவ வழியாய் அறிவதை அந்தோ
'அனுமானத்தியால் ஆய்ந்தறிந் திடுவோம்

அலதெனின் இலையென அயிர்ப்போம்' எனத்திரி
வாதியார் அன்பொரு போதுமே அறியார்
தாய்முலைப் பாலுள் நஞ்சு ஆய்பவர் அவரே"

என்று கூறுகின்றது. இது நம்பகத்தின் பெருமையை இனிது தெரிவிக்கவில்லையா? அலௌகிகத்தில் வழங்கப்படுவதொன்றாகவும், வைதிகத்தில் வழங்கப்படுவதொன்றாகவும், இந்த நம்பகம் இரண்டுவகைப்படும். முன்னது தேக நலத்தையும், பின்னது ஆன்ம நலத்தையும் பொறுத்திருக்கின்றன. தேக நலத்தைப் பொறுத்தது பெருப்பான்மையும் துக்கமயமானதும், மென்மேலும் பிறவியைத் தரக்கூடியதுமாய் இருக்கின்றது. ஆன்ம நலத்தைப் பொறுத்ததோ பிறவிக்கடலைக் கடப்பதற்குரிய தெப்பமாயும், நிரதிசையானந்தப் பேற்றை அடைவதற்கேதுவாயும் இருக்கின்றது. இவ்விரண்டில் நமது உயிர்க்கு உறுதி பயப்பதாயுள்ள நம்பகத்தையே நாம் இவ்வியாசத்தில் பேசுவோமாக. இந்த நம்பகம் தெய்வ நம்பகம் எனப்படும்.

தெய்வ நம்பகமே மனிதப்பிறவி பூண்ட நமக்குச் சிறந்ததொன்று, தெய்வத்தின் திருவருளாலன்றோ நாம் பகுத்தறிவோடு கூடிய ஜென்மத்தைப் பெற்றோம். மூலப்பிரகிருதியில் முழுகிக் கிடந்த ஆன்மாவுக்குக் கைகால் முதலிய உறுப்புக்களைத்தந்து இந்த உலகத்தில் பிறக்கச்செய்து காப்பாற்றி மேன்மையடைதற்கான அனுகூலங்கள் பலவற்றையும் கூட்டிவைத்த தெய்வத்தை நாம் மறப்பது தருமமா? மறந்தால் தெய்வ சகாயத்தை நாம் பெற முடியுமா? முடியாது, முடியாது; முடியாதென்பதே சத்தியம்.

குரு குலத்திற் பிறந்த வணங்காமுடி மன்னனாகிய துரியோதனன் தெய்வ நம்பகம் சிறிதுமில்லாதவனாயிருந்தான்; 'என்றனுக்கோர் தெய்வமில்லை; யானே தெய்வம்' என்று அகங்கரித்தான். பாண்டவருக்கும், துரியோதனனுக்கும் யுத்தம் நிச்சயமான போது பீஷ்மர் முதலான பெரியோர்கள், 'ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் சகாயத்தைப்பெற்று வருமாறு துரியோதனனைத் துவாரகாபுரிக்குப் போம்படியாகப் பலவந்தஞ்செய்தார்கள்.

(தொடரும்)

வித்வான், ம. இராஜகோபாலன், (யாதவர்)
சென்னை.

# 5-வது யாதவ மகா நாட்டு முயற்சிகள்.

## தலைவர்களின் சுற்றுப் பிரயாணம்.

---

நமது 5வது யாதவ மகாநாடு நடைபெற வேண்டிய டிசம்பர்மீ (மார்கழிமீ) நெருங்கிவிட்டபடியால் இது சம்பந்தமான காரியங்களை விரைவில் நடத்துவதற்கு இராமநாதபுரம்ஜில்லா யாதவர்களோடு கலந்து ஆலோசனைகள் செய்யச் சென்னையிலிருந்து நமது குலத் தலைவர் திருவாளர், ம. அப்பாத்துரைப்பிள்ளையவர்கள் நாளது நவம்பர்மீ 6௳ மதுரை வந்து சேர்ந்தார்கள் முன்னமே ஏற்பாடு செய்திருந்தபடி மகாநாடு சம்பந்தமாக நவம்பர்மீ 8௳ பரமக்குடியில் நம் கூட்டமொன்று கூடிற்று. அதற்குத் தலைமை வகிப்பதற்காகத் திருவாளர். ம. அப்பாத்துரைப்பிள்ளையவர்கள், மதுரையிலிருந்து நவம்பர்மீ 8௳ போட்மெயிலில் மதுரை, பிரபல வர்த்தகரும், முனிசிபல் கவுன்சிலருமான திருவாளர். இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனாரவர்கள், முனிசிபல் வைஸ் சேர்மன் திருவாளர். பி. பிச்சைமுத்துக்கோனாரவர்கள், அமெரிக்கன் காலேஜ், தலைமைத் தமிழாசிரியர் திருவாளர், ஆ. கார்மேகக்கோனாரவர்கள், முனிசிபல் கவுன்சிலர், திருவாளர். வ. முருகக்கோனாரவர்கள், பாகவதர் K. P. கருப்பையாக்கோனாரவர்கள், திரு முத்து B. A அவர்கள் ஆகிய இவர்களோடு புறப்பட்டுச் சென்றார்கள். இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள நமது யாதவர்களுள் முக்கியஸ்தர்கள் 500-பேர்களுக்கு மேலாக 2-மணிக்கு ஸ்டேஷனில் வந்து தலைவர்களையும், அவருடன் வந்தவர்களையும் வரவேற்றுக் கூட்ட நிகழ்ச்சிக்கென்று ஏற்படுத்திய கட்டிடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். சிற்றுண்டிகள் ஆனபின்பு கூட்ட நிகழ்ச்சி மாலை 4 மணிக்கு நடைபெற ஆரம்பித்தது. திருவாளர். இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனார் அவர்கள், கூட்டத்திற்குத் திருவாளர் அப்பாத்துரைப்பிள்ளை அவர்களைத் தலைமை வகிக்கவேண்டுமென்று பிரேரபிக்க, அதனை அவுல்தார், திருவாளர். அ. வேலாயுதக்கோனாரவர்கள் ஆமோதிக்கத் திரு. பிள்ளையவர்கள் ஆசனத்தில் அமர்ந்தார்கள்.

தலைவர் ஆசனத்தமர்ந்து முன்னுரை கூறிய பின்னர் திருவாளர். ஆ கார்மேகக்கோனார் அவர்களும், திருவாளர். இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனார் அவர்களும், , திருவாளர். பிச்சை

முத்துக்கோனார் அவர்களும், திருவாளர் வ. முருகக்கோனார் அவர்களும் யாதவ மகாநாட்டின் வரலாறு, மகாநாடுகளால் நமது குலத்துக்குண்டாகும் நன்மைகள், இராமநாதபுரம் யாதவர்கள் இது விஷயமாக மேற்கொள்ளவேண்டிய, முயற்சி, நம் குலத்தின் தற்கால நிலை முதலிய விஷயங்களைப்பற்றி விரிவாய்ப் பேசினார்கள். தலைவரவர்கள் இவ்விஷயங்களை ஆதரித்தும் விஸ்தரித்தும் பேசினார்கள். கூட்டத்துக்கு வந்திருந்தவர்கள் யாவரும் மகாநாடு நடைபெற வேண்டிய விஷயத்திலும் நம் குல முன்னேற்ற விஷயங்களிலும் மிகுந்த உற்சாகத்தைக் கூட்டி யாவரும் கலந்துபேசி இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள நம்மவர்கள் இருக்கும் கிராமங்களைப் பல பிரிவுகளாய்ப் பிரித்து மகாநாட்டுச் செலவுகளுக்காகத் தொகைகள் வசூலிப்பதற்கு முக்கியஸ்தர்களை நியமித்தார்கள். பின்பு தலைவர்களுக்கும் ஏனையோருக்கும் வந்தனோபசாரங்கூறி மாலைகள் சூட்டப் பெற்றன. நிகழ்ச்சி ஆரம்பித்து இரவு 8 மணிக்குக் கூட்டம் பூர்த்தியாயிற்று. இக்கூட்டத்தைக் கூட்டிய முக்கியஸ்தர்கள் அபிராமம் திருவாளர். ஆயர்பாடிக்கோனாரவர்கள், முதுகுளத்தூர் திரு. அ. வேலாயுதக்கோனாரவர்கள், மேமங்கலம் திரு. முத்துக்கோனாரவர்கள் முதலியோராவர். அன்னோர் குலாபிமானம் பாராட்டற்பாலது.

நாட்டரசன் கோட்டையில் இதுவிஷயமாக மற்றொரு கூட்டம் திரு. பிள்ளையவர்கள் தலைமையில் நடைபெற ஷையூர் நம் குலத்துத் திருவாளர். நரசிங்கராமனம்பலம் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்குத் திரு. பிள்ளையவர்களும், மதுரையிலிருந்து வந்த தலைவர்களும், அபிராமம் திரு. ஆயர்பாடிக்கோனார் முதலியோர்களும் சென்றார்கள். நாட்டரசன்கோட்டை அம்பலம் அவர்களும் ஷையூர் யாதவப் பெரியோர்களும் தலைவர் முதலியோர்களை வரவேற்று மேளதாளத்துடன் மோட்டாரில் ஊர்வலமாக அம்பலம் அவர்கள் பங்களாவுக்கு அழைத்துச் சென்றார்கள். பகல் போஜனத்திற்குப் பின்னர் விஷய நிகழ்ச்சி மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி மகாநாடு விஷயமாகப் பல பிரசங்கங்களும் ஆலோசனைகளும் நடந்தன. கூட்டத்திற்கு வந்திருந்த யாதவர்கள் யாவர்களும் மிக்க மகிழ்ச்சியோடு மகாநாட்டுச் செலவுக்கு இயன்ற தொகைகளை வழங்குவதாக வாக்களித்தார்கள். மாலை 5 மணிக்குத் தலைவர்களோடு ஏனையோர்கள் கூடியிருக்கப் புகைப்படம் பிடிக்கப்பட்டது. பின்பு வந்தனோபசாரத்துடன் கூட்டம் பூர்த்தியாயிற்று.



இக்கூட்டம் நடைபெறுதற்குக் கனம் நரசிங்கனம்பலம் அவர்கள் எடுத்துக்கொண்டமுயற்சியையும் அவர்கள் கூட்டத்தை மிகச்சிறப்பாக நடத்திவைத்த முறையையும் கண்டோர்க்குப் பேரானந்தத்தை உண்டாக்கியது.

இவ்விஷயமாகத் திரு. பிள்ளையவர்கள் தலைமையில் திருக்கோஷ்டியூரிலும் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதற்குத் தலைவர்களோடு மதுரைத் தலைவர்களும் மற்றும்சிலரும் நாட்டரசன்கோட்டையிலிருந்து காலை 6 மணிக்கு மோட்டாரில் சிவகெங்கைமார்க்கமாகத் திருக்கோஷ்டியூருக்கு விஜயமானார்கள். பகல் 10 மணிக்குஷையூர் யாதவர்கள் தலைவர் முதலியோர்களை எதிர் சென்று உபசரித்துத் தலைவர்கட்கு மாலைசூட்டிமேளதாளத்தோடுசங்கநிகழ்ச்சிக்காக ஏற்படுத்திய கட்டிடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். பகல் போஜனத்தின் பிறகு மாலை 5 மணிக்கு மகாநாடு விஷயமாய்ப் பிரசங்கங்களும் ஆலோசனைகளும் நடைபெற்றன. அவ்வூரிலிருந்தும் அடுத்த ஊர்களிலிருந்தும் வந்த பெரியோர்கள் மகாநாட்டுச் செலவுக்குத் தங்களாலியன்ற தொகையை அனுப்பி வைப்பதாக வாக்களித்த பின் கூட்டம் நிறைவேறியது.

இக்கூட்டத்தை நடத்தியவர்கள் கனம் மு. கருப்பையாக்கோனாரவர்கள், மு. அழகப்பனம்பலம் அவர்கள், அரளிக்கோட்டை எட்மேன் கனம் கருத்தானம்பலம்அவர்கள், கனம் இ. கண்ணப்பக்கோனார்முதலானவர்கள். இக்கூட்டத்திற்குக் கடியாபட்டியிலிருந்து வந்து கூட்டத்தைச்சிறப்பித்த ஸ்ரீமாந் டாக்டர் தியாகராஜபிள்ளையவர்களது குலாபிமானம் பாராட்டத்தக்கது.

நவம்பர்மீ 16உ ஸ்ரீவில்லிபுத்தூரில் இவ்விஷயமாக ஒரு கூட்டம் நடைபெற ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. அதற்குத் தலைமை வகிக்க ஒப்புக்கொண்டிருந்த திருவாளர். சென்னை அப்பாத்துரைப் பிள்ளையவர்களும் திரு, இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனார் அவர்களும் திரு, முருகக்கோனாரவர்களும், திரு, ஆ. கார்மேகக்கோனார் அவர்களும் 16உ மதுரையிலிருந்து 11 மணி ரயிலில் புறப்பட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் சென்றார்கள். அவ்வூர் யாதவர்களும் சுற்றுக் கிராமத்திலுள்ள யாதவர்களும் பெருந்தொகையாக ஸ்டேஷனுக்கு வந்து மிகுந்த குதூகலத்துடனும் மேளதாளத்துடனும் தலைவர்களை வரவேற்றார்கள். பின்பு தலைவர்களை மோட்டாரில் ஊர்வல

மாக அழைத்துச் சென்று நமது குலப் பெரியார் திரு சொக்கலிங்கம்பிள்ளை அவர்கள் மோட்டார் கம்பெனி மண்டபத்தில் தங்கினார்கள். சிற்றுண்டி கழிந்து அந் நகரத்துப் பொதுப் புத்தக நிலைய மண்டபத்தில் மாலை 6 மணிக்குக் கூட்டம் ஆரம்பமாயிற்று. தலைவர்கள் அக்கிராசனம் வகிக்கப் பல பிரசங்கங்கள் நடைபெற்றன. மகாநாட்டுச் செலவுக்குத் தொகைகள் வழங்குவதாக வந்திருந்த யாதவர்கள் அனைவரும் கையெழுத்திட்டார்கள்.

இக்கூட்டம் வெகு சிறப்பாக நடைபெறுவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொண்ட மோட்டார் கம்பெனி திருவாளர் R. சொக்கலிங்கம் பிள்ளை அவர் மருகர் திரு அரசப்பபிள்ளை அவர்கள், திருவாளர் பெருமாள் பிள்ளை அவர்கள், திருவாளர் இருளப்பக்கோனாரவர்கள், திரு. கோபாலகிருஷ்ணன், திரு. பொன்னுச்சாமிக்கோனார் முதலியவர்களது குலாபிமானம் போற்றத்தக்கது.

இம்மகாநாடு விஷயமாக, இரண்டுவாரம்வரை தமது அலுவல்களையும் சிரமத்தையும் கருதாமல் சுற்றுப் பிரயாணம் செய்த தலைவர் திருவாளர். அப்பாத்துரைப் பிள்ளையவர்களது குலாபிமானம் நம்மவர் அனைவராலும் மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

# செய்தித்திரட்டு.

லேடி வில்லிங்டன் மெடிக்கல் கலாசாலை மாணவி ஸ்ரீமதி ஆர். ருக்மணியம்மாள், சென்னையில் நடைபெற்ற சங்கீதப்போட்டிப்பரீட்சையில் முதல் பரிசு பெற்றிருக்கிறார்.

வைசிராய் டிசம்பர் 11-ந் தேதியன்று தஞ்சாவூருக்கு விஜயஞ் செய்யும்போது மேட்டூர் கால்வாய்ப் பாலத்தையும், முனிசிபல் மண்டபத்தையும் திறந்துவைப்பதோடு நகரமின்சார திட்டத்திற்கு அஸ்திவாரம் நாட்டுவார் என்றும் தெரிகிறது.

லாகூரைச் சேர்ந்த ராய்காஸியிலுள்ள தர்மசாலையில் இம்மாதம் 24-ந் தேதி இரவு திடீரென்று மூன்று குண்டுகள் வெடித்த அறையிலிருந்த ராய், பட்டாச்சாரி என்னும் இரண்டு வங்காள வாலிபர்களை உடனே பிடித்துக் கைது செய்தனர்.



மகாத்மா காந்தி ஐக்கிய மாகாணத்தில் மட்டும் சுற்றுப்பிரயாணம் செய்ததில் சுமார் மூன்று லட்சம் ரூபாய் வரையும் சேர்ந்திருப்பதாகத் தெரிகிறது.

கல்கத்தாவில் ஒரு வங்காளப் பெண் சென்ற வாரத்தில் மாமியின் கொடுமையைச் சகிக்க மாட்டாமல் தற்கொலை செய்துகொண்டாள். அவள் மாமியார்மீது வழக்கு நடைபெற்று வருகிறது.

நவம்பர் மாதம் 24-ந் தேதி காலை காரைக்காலில் இடியுமழையுமாக இருந்தபடியால், மழை தரங்கம்பாடி வீதியிலுள்ள ஆந்தோனியார் கோயிலில் இடிவிழுந்து கோயில் சிலுவை எங்கேயோ சிதறுண்டது.

ஆப்கன் தேசத்துப் புதிய அமீராகிய நாதிர்ஷாவைப் பாரசீக அரசாங்கத்தாரும் அங்கீகரித்துவிட்டதாகத் தெரிகிறது.

லாகூரில் காங்கிரஸ் வாரத்தில் கூடும் இந்திய தேசீக ஆசார சீர்திருத்த மகாநாட்டிற்கு மகாத்மா காந்தியைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர், அவர் தலைவராக வருதற்கு மறுத்துவிட்டால் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியைக் கேட்டுக்கொள்வதென்றும் தீர்மானித்திருக்கின்றனர்.

லாகூரிலும் அதன் சுற்றுப் புறங்களிலுமுள்ள சுமார் எட்டுக் கோவில்களில் இம்மாதம் 21-ந்தேதி யன்று தீண்டாதவர்களென்போரை அனுமதித்தனர். ஜபல்பூரிலுள்ள ஸ்ரீ ராதா கிருஷ்ணன் கோயில்தான் இதில் குறிப்பிடத் தக்கது இது சுமார் நூறு வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டதென்று தெரிகிறது.

ஐரோப்பாவிலுள்ள போலண்டின் தலைநகரான வார்சா நகரின் மிருக காட்சிசாலையில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு சிங்கம் சென்ற மாசம் 21-ந் தேதி மூன்றுகுட்டிகளை ஈன்றவுடன், களைப்புமேலிட்டு விழுந்துவிட்டதால், பால் சுரக்காது போகவே, குட்டிகளுக்குப் பாலில்லாமற் போய்விட்டது. பால்புட்டிகள் மூலமாகப் பசும்பால் ஊட்டுவதற்கு எவ்வளவு முயன்றும் பயன்படாமல் அந்தச் சிங்கக்குட்டிகள் இறந்துபோகும் நிலைக்கு வந்துவிட்டன. உடனே அந்தச் சிங்கத்தைக் கவனித்துக்கொள்ளும் வேலைக்காரனின் மனைவி இரண்டு தினங்கள்வரை தாய்ச்சிங்கத்திற்குப் பால் தாக்கும் வரை இரண்டுநாள் ஸ்தனப்பால் கொடுத்து அக்குட்டிக

ளின் உயிரைக் காப்பாற்றினளாம். என்ன! இம்மங்கையின் ஜீவகாருண்யமும், தைரியமும் என்று வியப்புறுகின்றோம்.

பிரிட்டிஷ் இந்தியாவில் 14-வயதுக்குக் குறைந்த பெண்ணுக்கும், 18-வயதுக்குக் குறைந்த ஆண்களுக்கும் விவாகஞ் செய்யக்கூடாதென்ற சட்டம் உண்டாவதற்கு மூலபுருஷரான ராவ்சாஹிப் ஹிரிபிலாஸ், சாரதா என்பவர் இன்னும் ஒரு சீர்திருத்தமசோதா கீழ்க்கண்டவாறு இந்திய சட்டசபையில் கொண்டுவரப்போவதாக நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். தற்போதுள்ள சட்டப்படி இந்து விதவைகள் சொத்துக்கு வாரிசாக முடியாமல் தடுக்கும் சில குறைகளை நீக்கும்படி சட்டம் இயற்றவேண்டுமென இவர் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொண்டார். இதே கூட்டத்தில் பண்டிதர் மோதிலால் நேரு கத்தர் பாதுகாப்புமசோதாவையும் கொண்டுவருவார். அன்னிய நாட்டு ஆடைகளினால் கதர் இயக்கம் நசுக்கப்படாமலிருப்பது, வேண்டிய பாதுகாப்பு கத்தருக்கு வேண்டுமென்பது இம்மசோதாவின் கருத்து.

ஒரு கோவேறு கழுதைக்குச் சொந்தக்காரனை ராம்மக்கா என்பவனைச் சிம்லா முனிஸிபாலிட்டியின் சுகாதார இன்ஸ்பெக்டரான சாப்மென் என்பவர் பிரப்பால் அடித்ததற்காகச் சிம்லா முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் 323 செக்ஷன்படி சாப்மென் மீது குற்றஞ்சாட்டி 40-ரூபாய் அபராதமும்; தவறினால் இரண்டுமாதக் கடுங்காவல் தண்டனையும் விதித்தார்.

## ஓர் அநுதாபம்.

இந்தியாவில் நாதசுர சங்கீதத்தில் நிகரற்று விளங்கியவரும், மாட்சிமைதங்கிய மைசூர் மஹாராஜா முதலிய ராஜாக்களால் பாராட்டப்பட்டவரும், மதுரைமாநகருக்குப் பெருங்கீர்த்தியை அளித்தவருமான M.பொன்னுசாமிபிள்ளை அவர்கள் (25—11—29) திங்கட்கிழமை காலை 7 மணிக்குத் தமது இல்லத்தில் திடீரென ஏற்பட்ட நோயால் இம்மண்ணுலகைவிட்டு இறைவன் திருவடியை அடைந்தார். இவரது பிரிவாற்றாமை சிறப்பாக மதுரைக்கும், இத்தமிழ் நாட்டுக்கும் பெருந் துன்பத்தை விளைவிப்பதாகும். இவரது அகால மரணத்தைக்குறித்து எமது அநுதாபத்தை இவருடைய குடும்பத்தார்க்குத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையுமாறு எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றோம்.

128 A

## யாதவமித்திரன் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினாங்கு சிங்கப்பூர். முதலிய வெளிநாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்

இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும். ஆதலால் முன்னாடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம் மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக்கொள்ளலாம் அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவமித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

128B

யாதவமகா ஜனங்களுக்கு [illegible]

# வேண்டுகோள்.

OFFICE OF THE [illegible] REGISTRAR
No. [illegible]
13 DEC 1929

யாதவ சகோதரர்களே!

நமது யாதவ மித்திரன் கல்வி, பொருளா[illegible] [illegible] ஆசாரச் சீர்திருத்தம் முதலிய துறைகளில் சிறந்த அறிஞர்களால் [illegible] பெற்ற அருமையான கட்டுரைகளைக் கொண்டு யாதவ மக்களின் முன்னேற்றத்தையே முக்கியமாகக் கருதி [illegible] வெளி வருகின்றது.

எல்லா யாதவ மக்களும் உடனே சந்தாதாரராய்ச் சேர வேண்டுமென்று கேட்டுக் [illegible]

எல்லா யாதவ மக்களிடமும் யாதவ மித்திரனைப் பரவச் செய்தல் சமுதாயப் பற்றுடையவர்களின் முதற்கடமையாகும்.

யாதவ மித்திரன் [illegible] வேண்டும். [illegible] யாதவ மித்திரன் மாதா மாதம் சமுதாய [illegible] தெரிவிக்கும்படி செய்ய வேண்டும். இதுவே சமுதாய [illegible] அறிகுறி.

இப்பொழுது விலை [illegible] பத்திரிகை அமைக்கப்பட்டிருக்கிறது. [illegible] விலைக்குத் தெரிவித்துப் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளவும்.

ஆகையால் யாவரும் பத்திரிகை படித்துப் பயன் பெறுமாறும், இப்பத்திரிகையை [illegible] அன்பர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தெரிந்த பத்திரிகை படிக்கும் [illegible] யாதவ சகோதரர்களிடம் [illegible] வேண்டுகிறோம்.

மானேஜர்,
யாதவமித்திரன் [illegible]
ஸ்ரீ கோபால[illegible]
[illegible]

Printed & Published by P. M. GOPALAKRISHNA KONE
at the [illegible] Press, Madura

307

Reg No. M:-2527

128C



# யாதவ மித்திரன்.

[illegible]

முன்னேற்றங்கருதிவெளிவரும்

[illegible]

| [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|
| 1 | [illegible] | 3 |

பொருள் அடக்கம்.

128

# யாதவமித்திரன்.

## ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்


(Editorial Board Members.)

தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனர் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி,
மதுரை.

---

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. ஏ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி ஏ பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.
7. ,, R. வேங்கடா சலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S. P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L. M F ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ்,
திருச்சிறாப்பள்ளி.


## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றியும் முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

---

யாதவமித்திரன் ஆபீஸ். ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை.

128 G
10 JAN 12



திருவாளர் M. மாலைக்கோனார் அவர்கள், மதுரை.

இவர் நம்குலப் பெரியாருள் ஒருவர். தென்னாட்டில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களுக்குள் சந்தனம் முதலிய வாசனைத்திரவிய வியாபாரத்தில் பிரபலம் பெற்றவர். ஆரம்பத்தில் சிறிதாக ஆரம்பித்த இவ்வியாபாரத்தைத் தம் புத்தி நுட்பத்தால் பல புதிய முறைகளைக் கையாண்டு தற்சமயம் தென்னாட்டில் ஒப்பற்றதாக விளங்கும்படி செய்துள்ளார். பல பெரிய காட்சிசாலைகளிலும், பெரியோர்களிடத்திலும் நற்சாட்சிப் பத்திரங்களும், தங்கப் பதக்கப் பரிசுகளும் பெற்றுள்ளார். இதற்கெல்லாம் காரணம் இவரது நாணயமான வியாபாரமே.

இவர் நமது குலாபிவிருத்தியில் அளவற்ற ஆர்வமும் ஊக்கமும் உள்ளவர். மதுரையில் நடந்த யாதவ மகாநாடு [illegible] செலவுக்காக முதன்முதல் ரூபாய் 300 தானாக மனமுவந்து அளித்த பெருங்கொடையாளர். இவருக்கு வயது [illegible] நம் குலத்தலைவராகிய கோனாரவர்கள் ஆரோக்கிய திடகாத்திரத்துடன் பல்லாண்டு வாழ்ந்து எல்லா நலங்களையும் எய்துமாறு திருவருளை வழுத்துகின்றோம்.

ஸ்ரீ

# யாதவமித்திரன்

## ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.



| தொகுதி | சுக்கில-ஞு மார்கழி-மீ | பகுதி |
|---|---|---|
| 1 | 1929-ஞு டிசம்பர்-மீ | 5 |



### கடவுள் வணக்கம்.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப்போதுவீர்! போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந் தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம்போல் முகத்தான்.
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.

ஸ்ரீ ஆண்டாள்.

## ஆயர் முதுமகள் மாதரியின் மாண்பு.

மாதரி என்னும் முதுமகள், ஆயர்தம்குலம்விளங்க வந்துதித்த பெண்கள்திலகமாவாள். இவள் கண்ணகி கோவலன் சரித்திரம் உரைப்பதும் தமிழ் மொழியிற் சிறந்த ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று

னதும் படிப்போருள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் அழகு வாய்ந்ததுமாகிய சிலப்பதிகாரத்தில் வரும் கதா பாத்திரங்களுள் ஒருத்தியாவள். தற்காலத்துநாடகநடிகர்கள்சிலப்பதிகாரக்கதையைப்பெரிதும்மாறுபடுத்தி நடத்துவதுடன் மாதவியாம் உத்தம பாத்திரத்தின் கௌரவமும் குறைவுபடவே நடத்துகின்றனர். ஆதலால் பொது மக்கள் இதனை அறிந்துகொள்ளுதற்கு இக்கட்டுரையில் சிலப்பதிகாரக் கதையில் மாதரி சம்பந்தமான கதைப்பகுதியை விரித்தெழுதிக்கொண்டு பின்னர் மாதரியின் மாண்பினை ஆராய்ந்து நமது பழய குல இயல்புகளை எடுத்துவிளக்குவோம்.

சோழநாட்டில் காவிரியாறு கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்திருந்தது, புகார் என்னும் காவிரிப்பூம் பட்டினம். இது சோழருடைய பழைய இராஜதானியாயும் சிறந்த துறைமுகப் பட்டினமாயும் விளங்கியது. இப்பட்டினத்தில் வாழும் வணிகர் தலைவன் மாசாத்துவான் என்பான். தன் மகன் கோவலனுக்கு மாநாய்கன் என்ற வணிகன் மகள் கண்ணகியை மணப்புரிவித்து அவர்களைத் தனி இல்லத்தில் வைத்து இல்வாழ்க்கையை நடத்திவரும்படி செய்தான். மணமக்கள் இருவரும் அவ்வாறே இல்லறத்தை இனிது நடத்திவந்தனர்.

இங்ஙனம் இவர்கள் வாழ்ந்து வருகையில் அந்நகரத்தில் அழகிலும் ஆடல் பாடலிலும் சிறந்து விளங்கிய மாதவி என்னும் நாடகக்கணிகைமீது கோவலன் காதல்கொண்டு தன்பொருள்முழுவதையும் அவள் பொருட்டே நாளும் செலவிட்டுக் கற்பிற் சிறந்த தன் மனைவி கண்ணகியை மறந்து காமக்கிழத்தியின் இல்லத்திலேயே தங்கி வருவானாயினன். கண்ணகி நாயகன் பிரிவால் ஏற்பட்ட வருத்தத்தை வெளிக்காட்டாது பொறுமையோடு காலங் கடத்திவாளாயினள். சின்னாளின் பின்னர் இந்நகரத்தில் ஆண்டுதோறும் இந்திரனைக் குறித்து நடைபெறும் இந்திரவிழா நடந்து முடிந்து நகர மக்கள் வழக்கம்போல் தம் பரிவாரங்களுடன் கடலாடுதற்குச் சென்றனர். கோவலனும் மாதவியும் சென்று அக்கடற்கரையில் ஓரிடத்திருந்து யாழை வாசித்துப் பாடிக்கொண்டிருக்கையில் மாதவி பாடிய பாடல் தனக்கு வெறுப்பை உண்டாக்கியதால் கோவலன் அவளைவிட்டு நீங்கித் தன் மனைவந்து சேர்ந்து கண்ணகியைக்கண்டு "பொய்மைமெய்யாகக்காட்டிபொழுகும்வஞ்சப்பாத்



தையை மருவி வறுமையுற்றுக் கெட்டேன்; அது எனக்கு மிக்க நாணத்தைத் தருகின்றது" என்றான். கண்ணகி அதுகேட்டு மாதவிக்கு மேலும் கொடுப்பதற்குப் பொருளில்லாமையால் இவ்வாறு கூறுகின்றார் என்று கருதி அடியாளிடத்து இரண்டு உயர்ந்த சிலம்புகள் உள்ளன அவற்றைக் கொண்டருள்க என்று சொன்னாள். அதனைக் கேட்ட கோவலன் அப்படியாயின் மதுரையை அடைந்து அச்சிலம்பையே மூலதனமாகக்கொண்டு வாணிபஞ்செய்து இழந்த பொருள்களை மீட்டும் ஈட்டும் கருத்துடையேன். நீயும் உடன் வருக என்றான். அதற்குக் கண்ணகி சம்மதிக்க அன்றிரவு விடியற்காலத்தில் ஒருவரும் அறியாதபடி இருவரும் புறப்பட்டுக் காவிரிக்கரை வழியாகவே வழிக்கொண்டு மதுரைக்குப் போகவிருக்கும் கவுந்தியடிகள் என்னும் சமணசமய சந்நியாசினியைக் கண்டு துணைக்கொண்டு, ஸ்ரீரங்கம், உறையூர் இவ்வூர்களைக் கடந்து மதுரையின் வழியை வினவித் தெரிந்து இரவும் பகலும் வழிநடந்து வையை ஆற்றை ஓடமேறிக் கடந்து மதுரைமா நகரத்தின் கோட்டைக்குப் புறத்திலுள்ள சோலையில் சமணமுனிவர்களது இருக்கையில் கவுந்தியடிகளுடன் தங்கினார்கள்.

மறுநாட் காலையில் கோவலன் தான் வாணிகஞ் செய்தற்கு ஏற்ற இடமறிந்து வருதற்கு மதுரை நகரத்தினுள்ளே புகுந்து அந்நகர் வளங்களைக்கண்டு மகிழ்ந்து வந்தகாரியத்தை மறந்து திரும்ப வந்து கவந்தியடிகளிடத்து மதுரை நகரத்தின் சிறப்பையும், பாண்டியன் செங்கோலையும் புகழ்ந்துகொண்டிருக்கையில் மாடலன் என்னும் பெயருடைய தனது பழைய சிநேகிதனைக் கண்டான். கண்டவன் தனக்கு நேர்ந்த கஷ்டங்களை அவனிடம் சொல்லி வருத்தமுற்று அவனுடன் அளவளாவிக்கொண்டிருந்தான்.

இச்சமயத்தில் ஆயர் குலத்திலுதித்தவளாகிய மாதரி என்னும் முதுமகள் ஆரியாங்கனை என்னும் தெய்வத்துக்குப் பால் பொங்கலிட்டு வழிபட்டுவிட்டு அச்சோலை வழியாக வருகின்றவள் கவுந்தியடிகளைக் கண்டு அருகிற் சென்று வணங்கினாள். வணங்கிய மாதரி அம்மையாரைக்கவுந்திபார்த்து' புனிதமாகியபசுவினங்களைக்காத்து அவற்றின் பாலைக் கன்றுக்கருத்திமிக்கதனை யாவர்க்கும் கொடுத்து உபகரிக்கும் தருமகுணமுடைய இடையரது இல்வாழ்க்கையில் கொடுமையென்பது சிறிதுமில்லை; அன்றியும் இம்மாதரி [illegible]

மும், அழுக்காறுமாகிய கெட்டகுணங்களில்லாதவள் அருள்மிகுந்தவள்; மேலும் முதுமகள். இன்றைக்கு இந்த இடைக்குலப் பெண்ணிடம் கண்ணகியை அடைக்கலமாக வைத்தால் யாதொரு தீங்கும் அடையாது, என்று எண்ணி மாதரியை நோக்கிக் கூறுவாள்.

ஓதரிய குணங்கள் வாய்ந்த மாதரி மடந்தையே! என் அருகில் இருக்கும் இம் மங்கை காவிரிப்பூம் பட்டினத்து வணிகச் செல்வி. இவள் கணவனது தந்தையின் பெயரைக் கேட்டால் இந் நகரத்து வணிகர் பெறுதற்கரிய பொருளைப் பெற்றார்போல் நல் விருந்தாய் ஏற்றுக்கொள்வர். அவ்வாறு அவர்கள் இவளையும் இவள் கணவனையும் அறிந்து அழைத்துக்கொள்ளும் வரை இம் மங்கையர்க்கரசியை உன்னிடம் அடைக்கலமாகத் தருகின்றேன்; இவளை நீராட்டி அலங்கரித்து, செவிலித்தாயும் நற்றாயும் நீயேயாயிருந்து இவளைத் தாங்குவாயாக; இதற்குமுன் இவள் பாதம் பூமியைக்கண்டறியாது. பாவம், தன் அடிகள் வெயிலின் வெம்மையால் கொப்புளங்கொண்டிருக்கவும் அதற்கு வருந்தாது தன் கணவன் வெயிலில் வருந்தியதற்கே நடுங்கு துயரமுற்று நாவும் புலரும்படி வாடித் தன் கணவன் துயரன்றித் தன் துயரென்று வேறுகாணாத பத்தினி தேவியாவள். பத்தினிப்பெண்டிரைவிட வேறு சிறந்த தெய்வம் இல்லை. பத்தினிப் பெண்கள் வாழும் நாட்டில் வானம் மழைபெய்யப் பொய்யாது; வளங் குன்றாது; அரசன் கொற்றம் சிதையாது; என்று பத்தினிப் பெண்டிர்களைப்பற்றிச் சொல்லும் நல்லோரது தருமநூலுரை நீயறிந்ததன்றோ! தவத்தோர் கொடுத்த அடைக்கலப் பொருள் அப்போது சிறிதாயினும் பின்பு மிகப் பேரின்பம் தரும்" என்று அடைக்கலப்பொருளைக் காத்தலின்சிறப்பை எடுத்துக் கூறிக் கண்ணகியை ஆயர்குல மடந்தையாகிய மாதரியிடம் அடைக்கலமாகக் கொடுத்து விரைவாக உன் மனைக்கு அழைத்துச் செல்க என்று கூறினாள்.

மாதரி தான் பெற்ற அடைக்கலப் பொருளுக்கு மகிழ்ந்து விடைபெற்று அவ்வாறே கண்ணகியையும், கோவலனையும் அழைத்துக்கொண்டு, கண்ணகியின் அழகைக் கண்டு வியந்த ஆயர் ஆய்ச்சிகள் சூழ மதில் வாயிலைக் கடந்து தன் மனை புகுந்தாள். பின்பு அவர்களைத் தன் வீட்டின் அருகில் விருந்தினர்க்கென்றே கட்டிச் செம்மண்பூசிப் புந்தலோடு விளங்கும் தன்வீட்டில் கண்ணகி கோவலன் இருவரையும் தங்கியிருக்கச் செய்து, பின்னர் கண்ணகியை நீராட்டுவித்து அலங்கரித்துத் தன் மகள் ஐயை என்பாளை அவர்களுக்குத் தோழியாக அமைத்துக் கண்ணகியைநோக்கி, கண்ணகி! நீ ஒன்றற்கும் கவலவேண்டாம்; இனி இவ்விடத்தில் உன் கணவர்க்குத் துன்பமுறுதலும் உண்டோ? இல்லை; என்று இனிய முகமன் கூறித் தேற்றினாள். அப்பால் அம்மாதரியின் கட்டளைப்படி ஆய்ச்சிகள், சமைத்தற்குரிய புது மண்கலங்களோடு தங்கள் குலத்துக்கும் கோவலன் குலத்துக்கும் ஏற்றதாகிய பலாக்காய், வெள்ளரிக்காய் கொம்மட்டிமாதுளங்காய், வாழைக்கனி, மாங்கனி, அவரை, துவரை, செந்நல்லரிசி, பால், தயிர், நெய் முதலியனவாகிய தூய உணவுப் பொருள்களைக் கண்ணகியிடம் கொண்டுவந்து கொடுத்தனர். மாதரி மகள் ஐயை அடுப்பில் தீ மூட்டினாள். கண்ணகி அவளுடன் உணவுப் பொருள்களை உண்ணுதற் கினிதாய்ப் பாகம் பெறச் சமைத்து முடித்தாள். பின்பு கண்ணகி கோவலனை அமுது செய்ய வேண்டினாள். கோவலன் பனங்குருத்தோலையாற் செய்த தவிசில் அமர்ந்தான். தேவி! ஈனு வாழைக் குருத்தை விரித்திட்டு அதில் வகை வகையாய் உணவுகளை வட்டித்தாள். அவன் அறுசுவை உண்டியை விரும்பி உண்டான், பக்கத்தில் நின்ற ஐயையும் மாதவியும் கோவலன் உண்ணும்போது "இந்த மதுரையில் இவ்வாயர்பாடியில் நாம் பெற்ற இந்நல்லமுதம்உண்கிற இந்த நம்பி, அந்த மதுரையில் அவ்வாயர்பாடியில் அசோதைபெற்ற அந்த நல்லமுதம் உண்ட பூவைவண்ணனாகிய கண்ணனோதான்! இவன் துயர் தீர்த்த இந்நங்கை, காளிந்தி ஆற்றின் கண்மணிவண்ணனைத் துயர்தீர்த்த நப்பின்னைப் பிராட்டியோதான்! என்று கூறி உவகை பொங்கி "இவரழகு நம் கண்களில் அடங்கா" எனப் புகழ்ந்துகொண்டனர்.

(தொடரும்)

ஆ. கார்மேகக்கோனார்,
தமிழாசிரியர்,
மதுரை.

# கண்ணன் சரிதம்.

(3-ம்பகுதி 70-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ கண்ணபிரானுக்கு ஜாதகர்மச் சடங்கு நிறைவேறிய பிறகு நந்தகோபர் கம்சனுக்கு வருஷந்தோறும் செலுத்தும் சப்பத்தைச் செலுத்தும்பொருட்டு வடமதுரை செல்லுதற்கு நினைந்து கோகுலத்தைத் தாம் வரும்வரை பாதுகாக்கும்படி தன் கீழ் உள்ள கோபாலர்களைக் கொண்டு ஏற்பாடு செய்துவிட்டுத் தாம் மதுராபுரிக்குப் புறப்பட்டுப் போனார். போனவர் கம்சனுக்குச் செலுத்த வேண்டிய திறைப்பொருளைச் செலுத்திவிட்டு, அங்கு தங்கியிருந்தார். அப்போது நந்தகோபர் மதுரைக்கு வந்திருக்கும் செய்தி அறிந்த வசுதேவர் நந்தகோபரைக் காணவேண்டும் என்னும் ஆசையினால் நந்தகோபர் இறங்கியிருக்கும் இடத்துக்கு வந்தார். நந்தகோபர் வசுதேவர் வருவதை அறிந்தவுடன் மிகுந்த மகிழ்ச்சியுற்று வசுதேவரை எதிர் சென்று அழைத்து அன்பு மேலிட்டுத் தழுதழுத்த குரலுடன் தம் புஜங்களால் தழுவிக்கொண்டார். பின்னர் நந்தகோபரால் உபசரிக்கப்பட்ட வசுதேவர் ஆசனத்தமர்ந்து அருகிலிருக்கும் நந்தகோபரை ஆவலுடன் நோக்கி "ஆரோக்கியமா" என்று விசாரித்துப் பின் தம் புதல்வர்களிடத்தில் மனஞ் செல்லப்பெற்றவராய் நந்தகோபரை நோக்கிப் பேசத்தொடங்கினார்.

நண்பரே! பலநாட்களாகப் பிள்ளையில்லாமலிருந்து மூப்புப் பருவத்தையும் அடைந்து இனி நமக்குப் புத்திரப்பேறு ஏது என்று புத்திரப் பேற்றில் நம்பிக்கை யில்லாதிருந்த உமக்கு இப்போது பிள்ளை பிறந்திருக்கிறதென்பது கேட்க மிகுந்த மகிழ்ச்சியுண்டாகிறது. "பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட்பேறல்ல பிற" என்று ஆன்றோர் கூறுகிறபடி பெறற் கரிய செல்வமாகிய புத்திர செல்வத்தைவிட மகிழ்ச்சி பயக்க வல்ல செல்வம் வேறு என்ன இருக்கின்றது. இது நிற்க, கம்சனால் சிறையிட்டுக் கிடந்த நான் உம்மை மீண்டும் காண்பேனென்று நினைக்கவில்லை. இப்போது சிறையினின்றும் நீங்கி உம்மைக் காணுதற்குக் கிடைத்த



பாக்கியத்தை நினைக்கும்போது மிகுந்த ஆனந்தமுண்டாகிறது. அன்பிற்கிடமான உத்தம நண்பரைக் காணக் கிடைப்பது அரிதான காரியமல்லவா! இது நிற்க, இனிப் பசுக்கள் சஞ்சரிப்பதற்கு ஏற்றதும் நல்ல தண்ணீராலும் செடி கொடி புல் பூண்டுகளாலும் செழிப்பையுடையதும் நோய்க் கிடங்கொடுக்காததும், விஸ்தாரமானதும் சுற்றத்தாருடன் உம்மால் வாசஞ்செய்யப் பெறுவதுமான கோகுலம் க்ஷேமமாயிருக்கிறதா? அக்கோகுலத்தில் உம்மையே தந்தையாக அடைந்து உம்மால் சீராட்டி வளர்க்கப்பெற்ற நம்புதல்வன் சுகமாக வளர்கின்றானா! என்று அன்புடன் கேட்டார்.

இவ்வாறு வசுதேவர் கேட்ட மர்மத்தை ஆலோசியாது நந்தகோபர், வசுதேவரைப்பார்த்து, "அன்பரே! உமக்குத்தேவகியிடத்திற் பிறந்த பலபுதல்வர்களும் கம்சனால் கொல்லப்பட்டார்களே! ஆ! இஃதென்ன துக்கம்! கடைசியாக ஒரு பெண் பிறந்தது; அதுவும் அந்தரம் சென்றது; இந்த உலகத்திலுள்ள ஜனங்களையெல்லாம் அதிர்ஷ்டமே அடக்கி ஆள்கின்றது. சுக துக்கமெல்லாம் அதனையே பொறுத்திருக்கின்றது. இவ்வுண்மையை எவனொருவன் அறிகின்றானோ அவன் சுகதுக்கங்களால் கட்டுப்படுத்தப்படமாட்டான். அவன் இரண்டையும் சமதிருஷ்டியாகவே காண்பான்" என்று வசுதேவரது புத்திர சோகத்துக்குத் தாம் இரங்கி அவரது உள்ளத்திற்கு ஆறுதல் அளிக்கும் சிறந்த நீதியை எடுத்துக்கூறினார்.

அதன்மேல் வசுதேவர் நந்தகோபரை நோக்கி நண்பரே! அரசனுக்கு ஆண்டுதோறும் அளிக்கவேண்டிய அரசிறையும் அளித்தாய்விட்டது. நாம் இருவரும் கண்டு அளவளாவிக்கொண்டோம். இனி நீர் இவ்விடம் அதிகநாள் தாமதிக்கவேண்டாம். கோகுலத்தில் பல கெட்ட சகுனங்கள் நிகழ்கின்றன. நீர் அங்கு விரைவாகப் புறப்பட்டுப் போகவேண்டும் என்று சொன்னார். இதனைக் கேட்டதும் நந்தகோபர் தாமதிக்காது உடனே வசுதேவரிடம் விடைபெற்றுக்கொண்டு தமது பரிவாரங்களுடன் எருதுகள் பூண்ட இரதத்தில் ஏறிக்கொண்டு கோகுலத்திற்குச் சென்றார். செல்லும் வழியில் "வசுதேவரதுசொல் பொய்யாகாதே என்ன உற்பாதங்கள் நிகழுமோ" என்று சங்கித்துப் பரமகாருண்ணிய மூர்த்தி திருநாமங்களைத் துதித்துக்கொண்டே சென்றார். (தொடரும்)

ஆ. கா.

# கண்ணன் துதி.

(இராகம்-கமாஸ். தாளம்-ஆதி.)

ஆயர்தம் குலக்கொழுந் தாக வந்தோனே
ஆங்கவர் நலத்தினுக் கருள் புரிந்தோனே
காயா மலர்மேனிக் கண்ணனே உன்னைக்
கைக்கொண்டகோகுலம் கலங்குவ தென்னை?
தாயினும்அன்பு புரிந்தெமைக் காவாய்!
தாங்கரும் பகைகள் தொலைத்தெமை யாளாய்!
சேயவர் நின்று தியங்கிடுங் காலை
சீர்பெறச் செய்தல் அன்றி யென்னவேலை? (1)

என்றுதா னகலுமோ? எங்குலக் குறைகள்
என்றுதா னொழியுமோ எம்நலத் தடைகள்
என்றுதா னுணர்வாள் யதுகுலத் தேவி!
என்றுதா னெழுவாள் நற்பயன் மேவி!
அன்றெங்கள் யதுகுலம் விளங்க வந்தோனே!
ஆயர்கள் வாழ்வினை ஆதரிப் போனே!
நன்றெமக் கருளியே காத்திட வேண்டும்!
நாங்களும் குலப்புகழ் பெற்றிடவேண்டும்! (2)

வறுமையும் துன்பமும் நின்குலத் தார்க்கோ?
வளமையு மின்பமும் வேண்டுவ திலமோ?
உறிவெண்ணெய் பால்தயிர் உண் டுவந்தோனே
உயர்நலத் தினிலெமை ஊக்க வந்தோனே
மறுவறு மன்பர்க்கே அமுதனை யானே
வஞ்சகர் தங்கட்கோ நஞ்சனை யானே
பெறும்புகழ் யதுகுலம் பேணவந் தாயே!
பெருக அதன்புகழ் அருள்புரி வாயே! (3)

ச. செல்லம்,

# திருப்பாணாழ்வார்.

(*)

தமிழ் நாட்டிலே சங்ககாலத்திற்குப் பின்னர் கி. பி. ஆறுவது ஏழாவது நூற்றாண்டுகளில் பக்திமார்க்கம் வெகு வேகத்துடன் பரவ ஆரம்பித்தது. பௌத்தர்களும் ஜைனர்களும் தங்கள் புகழைத் தமிழிலக்கியத்திலே நிலைபெறச் செய்துவிட்டு, அலையெறிந்து கரைபுரண்டுவரும் பக்திப் பெருங்கடலைத் தடுக்கலாற்றாது நசித்துப் போயிருந்தனர். வைணவம் வளர்ந்தோங்கியது. சைவம் தழைத்தது; ஆழ்வார்களும் சைவசமய குரவர்களும் தங்கள் பக்திப் பெருங்காதலின் பயனாக எழுந்த அமுதகீதாஞ்சலியினாலே தமிழருக்கு ஆத்மசாம்ராஜ்யம் தந்தனர்.

இவ்வாறு நம் நாட்டிலே தமிழொடு பக்திப் பயிரை வளர்த்த ஆழ்வார்களில் ஒருவர் சோழர் தலைநகரான (திருச்சிராப்பள்ளிக் கடுத்த) உறையூரிலே, பாணர்சேரியில் சுமார் 1000 - வருஷங்களுக்கு முன் தோன்றி வாழ்ந்து வந்தனர்.

பாணர்கள், ஆழ்வார் காலத்திலும் தீண்டாத வகுப்பென்று காலக்கொடுமையினால்ஒதுக்கப்பட்டுப் பறையரின் உட்பிரிவிலொன்றாகக் கருதப்பட்டு வந்திருக்கின்றனர். ஆனால் இவர்கள் பண்டைத் தமிழர் வாழ்விலே பேருறுப்பாகக்கருதப்பெற்று, அவரதுஇயற்கை வாழ்வை ஒளியும் மணமுமுறச்செய்தவர். 'தேன்பெய்து அமிழ்து பொதிந்து துளிக்கும் நரம்புகொண்ட சிறிய யாழை இடப் பக்கத்திலே தாங்கித் தமிழரசர் வீரத்தையும் தமிழ் வள்ளலார் ஈகையையும் தமிழ்ப் பண்களாலே வியந்து நாடெங்கும் கானம் செய்து தமிழகத்தை அலங்கரித்து வந்தனர். சிலப்பதிகாரத்தில்,

குழலினும் யாழினும் குரன் முதலேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங்காட்டும்
அரும்பெறன் மரபிற் பெரும் பாணிருக்கை

என்று இவர் போற்றப்பெறுகின்றனர். இன்னும் புறநானூறு, பத்துப்பாட்டு முதலிய சங்க இலக்கியங்களிலும் சிறப்பித்துச் சொல்லப்பட்ட பெரும் பாணரின் "அரும் பெறன் மரபு" காலகதியிலே தீண்டா வகுப்பாகக் கருதப்பட்டு வந்தது தமிழகத்திலே பிற்காலத்தில் நடைபெற்ற அநீதப் புரட்சிகளிலே மறக்கமுடி

யாதொன்றாகும். இத்தகைய தமிழ்ப்பாணர் மரபிலே தோன்றிய ஆழ்வார், தம் காலத்திலே நாடெங்கும் பொங்கிப் பிரவகித்துக்கொண்டிருந்த பக்திப் பெருக்கிலே தம் இதயத்தைப் பறிகொடுத்துக் கொஞ்ச தூரத்திலேயுள்ள ஸ்ரீரங்கத்தில்

"விரிதிரைக்காவிரி வியன்பெருந்துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்"

என்று இளங்கோவடிகள் வியந்து பாடிய அரங்கநாதனிடத்தே காதல் செலுத்தலானார். தீண்டாத வகுப்பாகக் கருதப்பெற்று வந்த தம் மரபை நினைந்து இரண்டாற்றுக்கும் நடுவிலே காலெடுத்து வைக்காமல், தினந்தோறும் காவிரியின் தென்கரையிலே சந்நிதியை நோக்கி நின்றுகொண்டு மணிவண்ணனின் திருச்சோதியில் உள் கலந்து பாண் மரபின் குலதனமான "அமிழ்துறழ்நரம்பின் நல்யாழை" மார்பிலே தாங்கிப் பரந்தாமனின் அருட் புகழைக் கல்லும் மரமும் கனிந்துருகுமாறு பலபடப்புனைந்து பாடி

சிந்திக்கும் தோறும் கை கூப்பும்
திருவரங்கத்துள்ளாய் என்னும்
வந்திக்கும் அங்கே மழைக் கணீர்மல்க
வந்திடாய் என்றென்றே மயங்கும்"

என்றபடியெல்லாம் பக்திசெய்து வந்தார். இவ்வாறு வழக்கம்போல் பாணர் பெருமகன் பக்திப் பேரின்பத்தில் மெய்மறந்து அமுதகானம் செய்துகொண்டிருக்கையில், ஒருநாள் பெருமாள் திருமஞ்சனத்திற்காகச் சகல வைபவங்களுடனும் காவிரி ஆற்றுக்கு வந்த ஸ்ரீ லோகசாரங்கமுனிவர் என்னும் பிராமணர் பாணரைப் பார்த்ததும் "ஜாதி குலம் பிறப்பென்னும் சுழிபட்டுத் தடுமாறித் தீண்டல் நேர்ந்துவிட்டதாக எண்ணிக் கோபங்கொண்டார். முனிவரின் பக்கத்திலே நின்ற ஒருவன் அவர் குறிப்பைத் தெரிந்துகொண்டு பாணரைக் கல்லால் எறிய அவரும் கண் விழித்துப் பார்த்துத் தாம் நினைவின்றித் தீண்டும் அண்மையிலே வந்துவிட்ட தம் குற்றத்தை மன்னித்திடுமாறு வேண்டிக்கொண்டு அவர்கள் கூட்டத்தை விட்டு விலகிக்கொண்டார். ஆழ்வார் மேனியில் கல் பட்ட மாத்திரத்தே அடியாரையன்றித் தனக்குப் பிறிதொரு சரீரமில்லாதவனான பகவான் அரங்கநாதனுடைய [illegible] மேனியிலே புண்பட்டு இரத்தம் பாய்ந்தது. இந்த விபரீதத்தைப்



பார்த்து யாவரும் நடுநடுங்கிப்போய்ச் செய்வதொன்றறியாமல் சித்தம் திகைத்து நிற்க; அரங்கநாதனும் லோகசாரங்க முனிவரின் கனவிலே தோன்றி அடியார் பக்கலில் அபசாரமிழைத்த மகத்தான பாவத்திற்குப் பரிகாரமாகப் பாணரைச் சந்நிதானங் கொணருமாறு ஆக்ஞாபித்து மறைந்தருளினார்.

ஸ்ரீ லோகசாரங்க முனிவர் கண்விழித்து,

"அமரவோ ரங்கம் ஆறும்
வேதமோர் நான்கும் ஓதித்
தமர்களில் தலைவராய
சாதி அந்தணர்களேனும்
நுமர்களைப் பழிப்பராகில்
நொடிப்பதோர் அளவில் ஆங்கே
அவர்கள் தாம் புலையர் போலும்
அரங்கமா நகருள்ளானே!"

என்னும் வாசகத்தை உள்நினைந்து தாம் அறியாமையினால் இழைத்துவிட்ட பெரும் பாவத்தை உன்னி உள்ளம்பதறித் திருப்பாணாழ்வாரைத் தேடிக்கொண்டு ஓடிவந்து பாணரின் கால்களிலே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கித் தம்மை மன்னித்தருளி, சந்நிதிக்கு வரும்படி உள்ளன்புடன் வேண்டிக்கொண்டார். பாணரும் வெகு எளிதில் தாமே மன்னித்துவிட்டுக் 'குலங்களாய ஈரிரண்டின் ஒன்றிலும் பிறந்திலாதவரான தாம்புண்ணிய பூமியான அரங்கபூமியிலே காலெடுத்து வைப்பது கூடாது என்று மறுத்துவிட்டார். லோகசாரங்க முனிவர், சிறிதும் தயங்காமல் பூமியிலே கால்படாதவாறு தம் தோள்களிலே எடுத்துச் செல்லக் காத்திருப்பதாகச் சொல்லி ஆழ்வார் மறுத்தும் விடாமல் ஒரே பிடிவாதமாய் அவரைத் தம் தோள்களிலே எற்றிக்கொண்டு ஸ்ரீரங்கநாதன் சந்நிதி அடைந்தார்.

(தொடரும்)

தா. கோபால்சோன்,
பூதப்பாண்டி.

# ஞான கலா விலாஸம்.

"நான் கண்டு கொண்டேன் நாராயணா வென்னு நாமம்" எனத் திருமங்கை மன்னன் திருவாய் மலர்ந்தருளிய திருவாய் மொழியின் ஒவ்வொரு பாசுரத்திலும் நாராயணஸ்மரணை சகல துக்கங்களையும் நிவர்த்திக்கு மெனக் கூறப்பட்டிருக்கிறது. பால பக்தனும் பிரகலாதனுக்குற்ற கொடிய துன்பங்களை நீக்கிப் பேரின்ப மளித்ததுவும், கொடிய முதலைபற்றிய மும்மதமால் யானையைக் காப்பாற்றியதும், அன்று துரியோதனன் சபையில் பக்திமிக்கபாஞ் சாலியின் மானத்தைக் காத்ததுவும் "நாராயணா வென்னும் நாமம்" அன்றோ! சகல துக்கங்களினும் பெரிதாய சம்சார மகா துக்கத்தை நீக்கியவரே முக்தராவர். ஆதலின் முக்தியடைவதற்கு அனுகூலமா யுள்ள நாராயண நாமத்தைத் துறவிகளும் சதா தியானித்துக் கொண் டிருக்கின்றனர். ஆதலின் எம்பெருமானது நாமஸ்மரணை சகல பாவங்களையும் போக்கி நித்தியானந்தத்தை விளைவிக்கு மாத லின், சதா நாராயணஸ்மரணை செய்யக்கடவோம்.

ஃ ஃ ஃ

"கிருஷ்ண! கிருஷ்ண!" நமது கால் பிறர்மேல் படின் உடனே 'கிருஷ்ண! கிருஷ்ண!' என்கின்றோம். அதாவது அந்நாமத்தை உச்சரித்தவுடன் அக்குற்றம் நீங்கப்பெறுகின்றோமென்பதாம். ஆத லின் உலகில் கொடிய பாதகங்களைச் செய்து வருந்துவோரும் பக வந் நாமாவை ஒரு முறை மனதில் தியானம் செய்யின் அப்பாதகங் களான் வரும் பாவங்கள் நீங்கி இன்பமடைகின்றனர். கிருஷ்ணபக்ஷி யெனப்படுங் கருடன் நாடோறும் தனக்குணவாகப் பல நாகங்க ளைக் கொன்றும், அடிக்கடி "கிருஷ்ண! கிருஷ்ண!" வென ஒலமிடு கின்றமையான் அஃது எல்லோராலும் போற்றப்படுகின்றது. பசுக் களோ மனிதர்கள் ஜீவிப்பதற்குப் பால் கொடுத்தும், புல்லைத்தின் றும், நிலத்தை உழுதும், மனிதரால் பட்டியில் கட்டுண்டு படாத பாடு படுகின்றது. காரணம் கிருஷ்ணஸ்மரணை இல்லாமையே போ லும். கருடனைக்கண்டால் ஹரி! ஹரி! என்று கன்னத்தில்போட்டுக் கொண்டு வணங்குகின்றனர். மாட்டைக் கண்டால் அடி, அடி என்று தடிகொண்டடிக்கின்றார்கள். கருடனுக்கு ஆகாரத்தை வலியச் சென்று கொடுக்கிறார்கள். மாடுகள் ஒருபிடி வைக்கோலை அதிகந் தின்றால் விரட்டுகின்றனர். எவ்வாற்றானும் நமக்குப் பிர



யோஜனப்படாத, மாம்ச பக்ஷணியான கருடன் கிருஷ்ணஸ்மரணை யால் பல்லோராலும் வணங்கிப் போற்றும் பெருமை யடைந்திருப் பதையும், நமக்குப் பலவகையாலும் உபயோகப்படும் ஸாகபக்ஷணி யான மாடுகள் கிருஷ்ணஸ்மரணை செய்யாமையால் சிறுமையுற்றி ருப்பதையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். ஆதலின் நாம் சதா கிருஷ்ணனைத் துதித்துப் பெருமையடைவோமாக.

ஃ ஃ ஃ

"கன்று சுவைக்கக் கறவாத கறவை கம்பிட்டடிக்கக் கறக் குமா" கன்றைக் கண்ட மாத்திரத்தில் மகிழ்ச்சியோடு மடியில் பாலைச் சுரந்து ஊட்ட விரும்பும் நல்ல ஜாதிப் பசுவேபோல், இரப் பவரைக் கண்டமாத்திரத்தில் சிறிதும் வெறுப்பில்லாமல் அவர்க்கு மிக்க மகிழ்ச்சியோடு வேண்டுவனவற்றைக் கொடுப்பதுதான் கொடை. அன்றிக் கன்று வாயைவைத்து முட்டி வருத்தியும், பிறர் பலவாறு பிடித்து அடித்து மடியையழுத்தியும் பால் சுரக்கும் பசுப் போல, இரப்போர் தம் வாயால் பல பேசி வருத்தவும், மற்றும் பலர் பலவாறு நிர்பந்தப்படுத்தவும், அந் நிர்பந்தத்திற்காற்றாமல் வெறுப்பொடு கொடுப்பது கொடையாகாது.

ஃ ஃ ஃ

"புண்ணியம் பாவம்" நாம் ஒவ்வொருவரும் இதுதான் உயிரென்று தேகத்தினிடத்து மிக்க அபிமானங் கொண்டு உண்டி உடை முதலி யவற்றால் பிரயாசைப்பட்டு, வருந்தி வளர்த்த இவ்வுடம்பே, யமன் உயிரைக் கொண்டுபோம்போது நமக்குப் பயன்படுவதில்லை, என் றால் மற்றெதுதான் நமக்குப் பயன்படப் போகின்றது? நமது உயிர் நீங்கின், அரிதில் தேடிய பொருள்கள்யாவும் வீட்டிலேயே தங்கிவிடும் சுற்றத்தாரெல்லாம் நம் கட்டையை இடுகாட்டிலிட்டு நீங்குவர். உடம்பு தீயுடன் ஒழியும். ஆயின் உயிருடன் துணையா கச் செல்வது அறமேயன்றி வேறில்லை. அவ்வறத்தான் வருவதே புண்ணியம். 'ஆதலின் இறுதியில் நம்மொடுவருவன இருவினைகளான நல்வினை, தீவினைகளாய பாவ புண்யங்களே' என்பதைத் தெளிவாக உணர்ந்து, தீவினைகளை நீக்கி நல்வினைகளைச் செய்யவேண்டும்.

"அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே விழியம்பு ஒழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மி இரு
கைத்தல மேல்வைத் தழுமைந்தருஞ் சுடுகாடுமட்டே
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே"

ஃ ஃ ஃ

(வளரும்)

திரு. ஐயன்பெருமாள்.
தமிழாசிரியர்.

—*—

# குலோத்தாரணம்.

'குலம்' பல பொருளுள்ள ஒரு சொல். அது இங்கே மக்கள் தோன்றும் வமிசத்தை உணர்த்துகின்றது. உத்தாரணம் என்பது அந்தக் குலத்தை முன்னிலைக்குக் கொண்டுவருதலாம். அதாவது குலத்தின் பூர்வோத்ரநிலைகளை அக்குலத்தினர்க்கு விளக்கிக்காட்டி, அதன் முன்னேற்றத்தில் அவர்களை ஊக்கங்கொள்ளச் செய்தலாம். குலத்தைப் பற்றி, அதாவது அதன் உயர்வு தாழ்வுகளைக் குறித்து, "இழிகுலம் ஒருவி, நல்லதோல்குலம் பெறுதலும் அரிதே" என்றும்

"நிலஞ்செய்தவம் என்றுணரின் அன்று நெடியோயென்
நலஞ்செய்வினை உண்டெனினும் அன்று, நகர் நீயான்
வலஞ்செய்து வணங்கவெளி வந்த இது முந்தேன்
குலஞ்செய் தவம்"என்றும், "மனுகுலத்தே வந்துதித்தோன்"

என்றும், "குலமுதற் றொன்மையுங் கொண்டோன்" என்றும், "குலத்தளவேயாகுங்குணம்" என்றும், "இடாதார் இழிகுலத்தோர்" என்றும் இவைபோன்ற பல வசனங்கள் வழங்கி வருதலால், குலத்தைக் கவனிக்கவேண்டிய எச்சரிக்கை நம் மக்களுக்கு முக்கியமாம்.

இத்தகைய குலம், தொன்றுதொட்டு நான்கு பெரும் பிரிவுகளாய், ஒவ்வொரு பிரிவிலும் அநேக உட்பிரிவுகளைப் பெற்று நடைபெற்று வருகின்றது. சமவுரிமைக்கு யோக்கியரான மக்களுக்கு இப்பிரிவினைகள் ஏன் ஏற்படவேண்டும் என்பதை நாம் ஆழ்ந்து நோக்குவோமானால் உண்மை ஒருவாறு வெளிப்படும். இது விஷயமாகச் சிறிது பேசி, பின் எடுத்துக்கொண்ட விஷயத்திற் றலையிடுவோம்.

மக்களெல்லோரும் பிழைக்குரியராதலாலும், ஒவ்வொருவரும் தன்னுயிர்போல மன்னுயிரைப் பார்க்கவேண்டியிருத்தலாலும் காரணம்பற்றியோ, நிஷ்காரணமாகவோ சில சமயங்களில் தமக்குள் உண்டாகக்கூடிய மனஸ்தாபத்தை,'விற்பிடித்து நீர்கிழியவெய்த வடுப்போல்' மாற்றிக்கொள்வதைவிட்டு, நீடித்திருக்கும் பகையாக ஒருவரிடமும் வைத்துக்கொள்ளலாகாதென்பதே சமவுரிமையின் பொருளெனத் தெரிகின்றது. அவ்வாறு பொருள் கொள்ளாவிடின் அச் சமவுரிமை இவ்வுலகத்தை நடைபெற்ற பொருட் காட்சிச்



சாலைக்கு ஒப்பாக்கிவிடும்; அப்படி சமவுரிமை பாராட்டி நடையாடினாலும் ஒருவரையொருவர் மதிக்கும் வழிக்கு இடமில்லாமல் கேவலம் மரப்பாவை (மரத்தாலான பொம்மை) நடையாடுவது போலாகும். ஆனாலும் எல்லா உயிர்களிடத்தும் பொதுப்பட அன்பு செலுத்துவதே அறிஞர்க்கழகு. பிழைபுரிபவர் கண்டிக்கப்படுவதும் மறக்கருணையாம். ஆகவே சமத்துவம் உள்ளபடி பிரகாசிப்பது முத்தியுலகத்திலென்றும், வித்தியாசம் ஜொலிப்பது இவ்வுலகத்திலென்றும் அறியலாகும். இந்த உத்தேசத்தைக்கொண்டு முத்தியுலகத்தை நித்தியவிபூதி என்றும், இவ்வுலகத்தை லீலாவிபூதி என்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். லீலாவிபூதி எனினும் நாடகமேடை எனினும் ஒன்றே. நாடகசாலையாகிய இப்பூமியில் அறிஞர்களை அவரவர் தந்தஞ் செய்கையால் தாமே தேடிக்கொண்ட வினைக்குத் தக்கபடி சூத்திரப் பதுமைகளாக்கிப் பகவான் சூத்திரதாரியாக இருந்து ஆட்டுவிக்கிறான். "ஆட்டுவித்தால் ஆரேதான் ஆடாதார் என்பதனை நாட்டுவித்தான் என் கண் நயந்து" என்பது அறிஞர் கூற்றல்லவா?

இக்கூற்றின்படி பூமியில் நடிக்கப்பிறந்த ஜீவாத்மாக்களுக்குக் குலந்தாங்கு சாதிகள் வெவ்வேறுண்டாயினவென்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோலும், வெள்ளிடை மலைபோலும் தெள்ளெனவிளங்கலாயிற்று. இவ்வண்ணம் பாரம்பரியமாக நிலைத்துவரும் குலமே மக்களின் யோக்கியதையை வெளியிடுவதற்குத் தலைமையாயிருக்கிறது. அதனை உயிரினும் சிறந்ததாகப் பாதுகாத்துவருதல் அம்மக்களின் முக்கிய கடமைகளுள் ஒன்று. இப்பாதுகாப்பிற்குரிய அங்கங்கள் சில இருக்கின்றன. அவற்றை உணர்ந்தொழுகினால் குலப்பெருமை தானே வெளிப்படும். இந்த உளவை நோக்காமலே ஒவ்வொருவரும் தந்தமது குலத்தைப் புகழ்ந்து பேசிக்கொள்வது சகஜம். "காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு" தானே! ஆனால் இத்தற்புகழ்ச்சி ஆன்றோர்முன் தலையெடுக்குமா? எடுக்காது. கையூன்றியல்லவா கரணம்போடவேண்டும். நல்லார் பொல்லாரென்பதை நடத்தையா லல்லவோ நாட்டவேண்டும்? இதற்கு வருணாச்சார ஒழுக்கந்தான் அடிப்படை; ஒழுக்கம் ஒருவனை நன்னிலைக்கு உயர்த்தும் துணைக்கருவி. இதனைக் கற்காத ஒருவன் குலநலம் பேசுதல் நெல்லினுட் பிறந்த பதராகும். அன்றியும் நிலைநில்லான் வார்த்தை நீர்மேலெழுத்து என்று உலகம் கூறும்.

இது நிற்க குலநலம் குலத்தின் சந்ததியால் பெருகவேண்டும்; அதன் பொருட்டுக் குலத்திற் பிறந்த குல மைந்தரை அஞ்சிலறியாதார் ஐம்பதிலென்னறிவரென்று இளமையிலிருந்தே நல்லிணக்கம் நல்லொழுக்கம், கல்வி, கேள்விமுதலிய உத்தம பயிற்சிகளில் பழக்கிவரும் கஷ்டத்தை அவர்களுடைய பெற்றோர் தம் குடும்ப கஷ்டத்தில் ஒன்றாக எடுத்துக்கொள்ள வேண்டும். குலத்தின் மேன்மையைப் பற்றியும் அடிக்கடி போதித்து அதில் உற்சாகமூட்டி வரவேண்டும்; முன்னோர் போனவழி பின்னோர் என்பதால் அம்முதுரையைமனத்திற்கொண்டு அத்தன்மையான நன்மார்க்கங்களை அவர்களுக்குத் தாமே நடத்திக் காட்டவேண்டும். இப்படிப் பழக்கப்பெற்ற மக்களே குலதிலகராவார்கள். பழக்காவிடில் பிள்ளைகள் குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பாவார்கள்.

பூவாதே காய்க்கும் மரமும் இருத்தல்போல மக்களில் ஏவாதே குல நலத்தைக் கவனிக்கும் பிள்ளைகளும் உண்டு. இப்பிள்ளைகள் கருவில் திருவுடையவராய்த் தோன்றியவராவார்கள். இது ஏகதேசம் முடிவாகக் கூறும்பக்ஷத்தில் நன் மக்களால்தான் குலம் விளங்குகிறதெனத் தெரிந்துகொள்ளலாகும்.

இந்தப் பிரகாரம் விளங்கும் குலமும் சில காலத்தில் க்ஷீணதசையை அடைவது உண்டு. வண்டியுருளையைப்போல் வாழ்வுந் தாழ்வும் மக்களை மாற்றி மாற்றிப் பற்றுவது உலக இயற்கையல்லவா? ஆனைக்கும் அடி சறுக்கும் என்பதுபோல் வாழ்வடைந்த குலம் தாழ்வடைந்தபோது அதை முன்னிலைக்குக் கொண்டுவருவதற்கேற்ற முயற்சிகளை அறிவறிந்த மக்கள் தேடாது தம் நாளை வீணே கழிப்பரோ! ஒருக்காலும் அவ்வாறு கழிக்கமாட்டார்கள். "அல்லனபோலாவனவும் உண்டு சில" என்னும் முதுமொழி இருத்தலின் சிதலை தினப்பட்ட ஆலமரத்தைத் தூணாய் அதன் விழுதுஊன்றித் தாங்குவதை யொத்து, தாழ்வடைந்த குலத்தை அக்குலத்தின் சந்ததியார் முன்னேற்றத் துணிவார்கள்; துணியாவிடின் குலத்துக்கேற்படும் குறைவு அவர்களையுஞ்சாரும். இதற்கு அஞ்சிநொந்து நிற்கும் குலம் முந்தியிருந்த நிலைமைக்கு வந்துவிடப் புந்தியுள்ள மைந்தர் மிகப்பாடு படுவரென்பது திண்ணம். பலர் அவ்விதம் பாடுபட்டுத் தங்குலத்தை முன்னேற்றத்திற்குக்கொண்டு வந்திருத்தலையும், கொண்டுவருதலையும் நாம் நமது கண்ணாரக் கண்டும் காதாரக்கேட்டும் வருகிறோம்.



இஃதிவ்வாறாக, யாதவகுலம் எத்தன்மை பொருந்தியது; அக்குலத்தவர் எவ்வாறான நிலைமையில் முன் இருந்தனர்; தற்போது அக்குலம் என்ன நிலைமையிலிருக்கிறது; அதன் முன்னேற்றத்திற்கு உழைத்தவருண்டா? இவை முதலியவற்றை இனி நாம் மேல்நோக்காகவே சிறிது ஆராய்வோம்.

யாதவம் என்றால் பசு. பசுக்களை ஏராளமாக உடையவராய் அவற்றின் பரிபாலனத்தையே தமது பிரதான தொழிலாகப் பூர்வந்தொட்டுக் கொண்டுள்ள இக்குலத்தினர்க்கு யாதவர், தொறுவர் (தொறு, கோ-பசு) கோபாலர், அண்டர், கோன், கோனார் என்றும், அரசராயிருந்தமையின் கோன் என்றும், பசுக்களின் இலக்ஷணமுணர்ந்து அவற்றை இன்னினவென்று நினைத்துப் பார்க்கிறவராதலின் கோஸங்கியர் என்றும், நடுநிலைமையோடு நடுநிலத்திருப்போராதலின் இடையர், பொதுவர் என்றும், யாவர்க்கும் பால், தயிர், வெண்ணெய், மோர் கொடுத்துத் தாய்போலாதரிப்போராதலின் ஆயர் (ஆயம்-தாய்) என்றும், வேணுகானஞ் செய்தலால் கானவர் என்றும், இவ்வாறு காரணப்பெயர்கள் பல வழக்கிலிருந்து வருகின்றன. இக்குலத்தை எல்லா வகுப்புகளிலுமுள்ள பெரியோர்களேயன்றி, வேதம், புராணம்; இதிகாசம் முதலிய நூல்களும், மெய்யறிஞராகிய ஆழ்வார் ஆச்சாரியர்களும், கவீச்சுரரும் புகழ்ந்திருந்தலின் இதற்குத் தற்புகழ்ச்சி அநாவசியமாயற்று. பிரமகுல நாயகியாரான ஸ்ரீ ஆண்டாள் அம்மையாரும் இடைப்பெண்களது நடையுடை பாவனைகளை ஆமோதித்தாசைகொண்டு நடிக்கத்துணிந்ததும் நடித்திருப்பதும் கருதற்பாலதாம், கவீச்சுரியாகிய ஔவைப்பிராட்டியார்.

"மெய்வந்த கோவலர் தங்குலத்தாரை வெறுங்குலத்தோர்
கைவந்த வஞ்சொலின் வாய்வெந் திடுமந்தக் காரணங்கேள்
ஐவந்த வேள்வியி லவர்க்குந் தெய்வமு மாகிநின்ற
தெய்வம் பிறந்த குலங்காணும் நந்தன் திருக்குலமே"

என்று இக் குலத்தைக் கொண்டாடியதுடன் இவ்வமிசத்தாரிற் புகழுடன் தோன்றி விளங்கிய அசதி என்பவர்மீது 'அசதிக்கோவை'யும் யாதவ சிகாமணி என்னும் பிரபந்தமும் பாடி, பாரி, காரி என்னும் யாதவ சிகாமணியரையும் வியந்துரைத்திருக்கின்றனர். ஒரு காலத்தில் தம்மைப் பரிந்தழைத்துபசரித்த அங்கவை சங்கவை என்கிற யாதவச் சிறுமி

யரை அவர்களுடைய இயற்கை நற்குணங்களைக் கண்டு மெச்சிப் பெருமைக்குரிமையராகச் செய்தனர். இவைபோன்ற சிறப்புக்களை எண்ணெடுத்தியம்பி வியாசத்தைப் பெரிதாக்க யான் இச்சிக்கவில்லை. இக்குலத்திற் பிறந்தும் குலப்பெருமை யறியாதொழுகும் சிலர்க்கு இதில் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டவேண்டுமென்னுங் கருத்தினாலேயே சிறிது பேசத்துணிந்தேன்.

ஐந்து வகைப்பட்ட நிலங்களுள் முல்லை நிலம் யாதவர்க்குரியதாயிற்று, ஆனிரை மேய்ப்பதற்குப் போதிய வசதிபொருந்தியதாதலின் இவர்களுக்கு வகுத்த தசாங்கம்:— நாடு, நந்தமண்டலம் (முல்லை நிலம்), நதி-யமுனை, மலை-கோவர்த்தனம் நகரம்-கோகுலம், ஆயர்பாடி மாலை-முல்லைமலர், கொடி-வேதவடிவான கருடாழ்வான், வாத்தியம்-பேரிகை (முரசம்), வாகனங்கள்-யானை, குதிரை, செங்கோல் (அரசன்)-நந்தகோபன். இவர்களுடைய வீடுகளின் மொத்தம் ஐந்து லக்ஷம்; தெருக்கள் இரண்டாயிரத்தைநூறு. அஷ்டவசுக்களில் மேன்மைபெற்ற துரோணரே நந்தகோபன்; அத்துரோணர் இல்லக்கிழத்தியான தரா என்பவளே அசோதை.

நிலைகலங்கிய தருமத்தை நிலைநிறுத்தவந்த பகவான் பசுரூபமான தருமத்தைப் பெற்றுள்ள யாதவ குலம் தலைசிறந்தபடியால், அத்திருக் குலத்தையே தன் திருவிளையாடல்களுக் குகந்ததாகக் கொண்டனன். அக்குலஸ்திரீகளனைவரும் தாருகாவனத்து மகரிஷிகளாவர். அன்பு, அருள், அறிவு நூற்பயிற்சி, உலகநூற்பயிற்சி, உதாரத்துவம், பரோபகாரம், பராக்கிரமம், குலமோம்பல், குடியோம்பல், பொறுமை அடக்கம், பெரியார்ப் போற்றல், தெய்வபக்தி, ஒற்றுமை, சுய நலத்தினும் பொதுநலம் பெரிதும் பாராட்டல் முதலியவற்றைக் கைக்கொண்டொழுகிச் சீரும், பேரும், ஊரும் நாடும் மதிக்கப்பெற்று ஓங்கிவந்த யாதவ வீரர்களுடைய பொற்குலம் தற்காலம் பிரபலியாமல் க்ஷீணித்துவருகிறது. யாதவரிற் பலர் தங்களைத் தாங்களே குறைவுபடுத்திக்கொண்டு பிறரால் இகழப்பட்டுவருகின்றனர். உயர்வற உயர்நலம் பெற்று வாழ்ந்த குலம் இப்போது தாழ்ந்த குலமாகக் கருதும்படி நிற்கின்றது. இதன் சந்ததியாரில் இப்போது செல்வத்திலும் கல்வியிலும் சிறந்தவர்களில்லையா? இருக்கிறார்கள். பெருந்தன்மை வாய்ந்த இவர்கள் ஒன்றுகூடி நன்றிபுரிய மனம் வைத்தால் குன்றிய குலம் முன்போல் நின்றுநிலவாதா? குலத்தை முன்னேற்றத்திற்குக் கொண்டு



வர விடாமுயற்சியோடு முயன்றுவரும் குலமக்களுக்குத் தெய்வம் சகாயஞ்செய்யும் என்பது உண்மைதானே!

இந்த முன்னேற்றத்திற்கு நாம் செய்யவேண்டியவை எவை? நமது ஏழைச் சிறுவர்களையும், சிறுமிகளையும் கல்வியில் தேர்ச்சியடைய வைக்கவேண்டும்; அவர்களுக்கு உடைக்கும், உணவுக்கும் படுக்கைக்கும் வேண்டிய வசதிகள் ஏற்படுத்தவேண்டும்; கைத்தொழில்களில் அவர்களைப் பயிற்சியடையவும் செய்யவேண்டும்; குலத்தின் தன்மையையும், இல்லற ஒழுங்கையும் போதித்து வரவேண்டும்; குலப்பத்திரிகைகளை வரவழைத்துப் படிக்கும்படி செய்யவேண்டும்; இவைகளுக்காக அவர்களுக்கென்று ஒரு தரும கட்டிடம்கட்டி வைக்கவேண்டும். முதலில் வாடகைக் கட்டிடம்வைத்துக்கொண்டு பின்பு சொந்தக் கட்டிடம் ஏற்படுத்திக்கொள்ளலாம். நம்மவர்களில் சிலர் கிராமங்களுக்குச் சென்று நமது குல முன்னேற்றத்திற்கு அனுகூலமான விஷயங்களை யெல்லாம் பிரசங்க மூலமாக அங்குள்ள யாதவர்களுக்குப் போதித்து அந்தப் போதனைப்படி அவர்கள் நடந்துவரச் சிரத்தை யெடுத்துக்கொள்ளுமாறு பார்க்கவேண்டும். இவைகளையெல்லாம் நிலைப்படுத்துவது ஆரம்பத்தில் கஷ்டமாகவே இருக்கும். சில முன்னேற்றத்தை முன்னிட்டுச் சிரமத்தைப் பொருட்படுத்தலாகாது. விரைவிலேயே இவற்றைக் கவனிக்க நம் அருப்பெருங் குல கனதனவான்கள் முன்வருதல் மிகவும் அவசியமாயிருக்கிறது.

குலமுன்னேற்றத்தைக் கருதி, சென்னையிலுள்ள அறிவாளரான யாதவ ஸ்ரீமான்கள் பலர் ஒருமித்து "யதுகுல மகா சங்கம்" என்றொரு சங்கம் ஏற்படுத்தி நடத்திவருவது புகழ்தற்குரியதே. வருடந்தோறும் சபைகூடி இது விஷயமாகத் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டு, சிற்றுண்டி அருந்திப் போவதோடு நில்லாமல், தங்கள் தீர்மானத்தைச் செய்கையில் காட்டி நம் ஏழை மக்களை நன்னிலைப்படுத்தி வருவார்களானால் அவ்வுத்தமர் கீர்த்தி மெத்தவும் பிரகாசிக்கும்.

குல முன்னேற்றத்தின் நலத்தை உத்தேசித்து, மதுரை, வடக்குச் சித்திரை வீதியில், ஸ்ரீ கோபால் மஹாலில், யாதவமித்திரன் ஆபீஸ் ஒன்று ஸ்தாபகம் செய்து, பெரும்பான்மையும் யாதவ வித்துவ சிகாமணிகளைக் கொண்டே "யாதவமித்திரன்" என்னும் உயர்தர மாதப்பத்திரிகை ஒன்றைத் தம் சொந்தப் பொறுப்பிலேயே

நடத்திவரும், மதுரை, பிரபல புத்தகவியாபாரம், ஶ்ரீமான் இ மா. கோபாலகிருஷ்ணக் கோனாரவர்களின் வீரத்துவம், தீரத்துவம், தயாளத்துவம் முதலிய சிறந்த குணங்கள் உலகப் புகழ்ச்சிக் குரித்தானவை யென்று சொல்லவும் வேண்டுமோ?

"ஆற்ற லிலனுய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு"

என்று தமிழ் மறையே பறையறைகின்றது.

ஆயினும் அத்திருவாளரது பெருந்தன்மைக்காக அன்னவர்க்கு நீடித்த ஆயுளும் நிலைநிற்கும் சுகவாழ்வும் அருள்புரியுமாறு; ஈடுமெடுப்புமில்லாத உம்பர் கோமானுகிய கண்ணனெம்பெருமானுடைய கமலக் கழல்களை அறிவிற் சிறியனுகிய யானும் அன்புடன் போற்றுகின்றனன்.

இந்த யாதவமித்திரனைப் பூதலம் மெச்சுமாறு நற்போக்கில் நடத்திவரும் ஆசிரியரனைவரும், கீர்த்தியோடு கூடிய ஆனந்த வாழ்வில் நீடூழி வாழக் கணக்கறு நலத்தனனை அந்தமில் ஆதியெம் பகவன் கடாட்சித் தருள்வானுக.

இம்மித்திரன் நமது உயர்வின் பொருட்டே வெளிவந்துண்மையின் நம்மவர் யாவரும் இதனை எங்கும் பரவவைத்து ஓங்கி வளருமாறு சிறிது சிரமம் எடுத்துக்கொண்டு நிலைப்படுத்துவாராக.

யாதவரேயன்றிப் பிறரேயரும், இதன்கண் பொதுநல விஷயங்களும் பொருந்தியிருத்தலை நோக்கி, இதனைப் பேணுவாராக.

"மாயனை மன்னும் வடமதுரை மைந்தனை
தூயபெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினிற் றோன்று மணிவிளக்கை
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது
வாயினாற் பாடி மனத்தினாற் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினிற் றூசாகும் செப்பு"
(ஶ்ரீ ஆண்டாள்)

ம. இராஜகோபாலன், யாதவன்,
வித்வான், கோமளேசுவரன் பேட்டை,
சென்னை.

# கோபாலத்வமும் ஜீவகாருண்யமும்.

கோபாலத்வம் ஜீவகாருண்யத்தைத் தொடர்ந்து நிற்பதாகிய
ஒன்று. அது ஜீவகாருண்யத்தையே அடிப்படையாகக் கொண்
டுளது என்று கூறினும் மிகையாகாது.

உயிர்களுக்குத் தீங்கு செய்யாதிருத்தலும், அவைகட்கு
நேரும் இடர்களை விலக்குதலும், அவைகளுக்கு வேண்டிய உதவி
களைப் புரிதலும், கடைசியாக அவைகளிடத்தில் அன்பு பாராட்டு
தலும் ஜீவகாருண்யத்தின் பாற்பட்டன. ஜீவகாருண்யத்தைப்
போதிக்கவந்த பெரியாரும் சுருக்கமாக 'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு'
என்றே கூறியிருக்கின்றனர்.

கோபாலத்வத்தில் இவ் அன்பு குடிகொண்டிருப்பதைக் கூற
வேண்டிய அவசியமில்லை. உயிர்களிடத்தில் அன்பு செலுத்தும்
முறைகள் பலவற்றுள் கோபாலத்வமும் ஒன்று என்று கொள்ளு
தல் வேண்டும். பசுக்களைப் பரிபாலித்து வரும் ஒருவன் அப்பசுக்
களிடத்தில் அன்புசெலுத்தானுயின், அவன் செய்யும் பரிபாலனம்
என்னவாகும்? இவைகளை உணர்ந்தே முற்காலத்திய கோபாலர்
கள் தங்கள் தொழிலை சீரிய முறையில், இரக்க நெஞ்சத்தோடு,
பலரும்போற்றும் வண்ணம் நடத்திவந்தார்கள். புலவர்கள் தங்
கள் பாக்கள் சிலவற்றுள் புகழ்ந்து பேசுவதற்கிணங்க, அவர்களின்
நடைமுறைகளும் இருந்தனவென்பதற்குச் சற்றும் சந்தேகமில்லை.
அந்நடைமுறைகளை நினைக்குந்தோறும் அவர்களிடையே நிலவி
வந்த ஜீவகாருண்யத்தின் மேன்மை தோன்றிக்கொண்டிருக்கிறது.

முற்காலத்தவர் பசுக்களை மந்தை மந்தையாக அன்போடு
பராமரித்துவந்தார்கள். அப்பசுக்களுக்கு இயற்கைப்படி வேண்
டிய எவையும் அவர்கள் தேடிக்கொடுக்கப் பின்னிட்டார்களில்லை.
ஆற்றோரங்களிலும், பசும்புற்றரைகளிலும் பிற செழிப்பான விடங்
களிலும், பசுவினங்களை ஓட்டிப்போய் அவைகளை வயிறார மேய
விட்டும், குளிப்பாட்டியும், இளைப்பாறச் செய்தும் வந்தனர். கன்
றுகளைப் பசுக்களிடத்து வேண்டுமட்டும் பாலூட்டவிட்டு, அக்கன்
றுகள் திருப்தியாக உண்டதுபோக மீதியாக உள்ள பாலைத் தாங்
கள் கறந்து உண்டும், பிறர்க்கீந்தும் சுகமாக வாழ்ந்து வந்தனர்'

இந்நாளைய கோபாலத்வத்தில் எத்தகைய ஜீவகாருண்யம் அடங்கியிருக்கிறதென்பதைப்பற்றி விரித்துக் கூறவேண்டியதில்லை. இப்போது எல்லாம் நேர்மாறாக நடக்கின்றன. பசுக்களைப் போதியபடி மேயவிடுகிறதென்பதே கிடையாது. அவைகள் பெரும்பாலும் சிறையிலடைபட்டவைகளாகவே இருக்கின்றன. பெரிய நகரங்களில் அச்சிறையும், நெருக்கமானதாயும், சுத்தமில்லாமலும், சமநிலையற்றதாயும் இருக்கிறது. ஆகார வகைகளோ ஆவினங்களின் தேவைக்குத் தக்கவாறு இருப்பதில்லை. வாயில்லாப் பிராணிகளை இப்படி வருத்துவது புண்ணியமாகுமா! அது மாத்திரமல்ல, பால் காக்கும் நேரத்தில் கன்றிற்குப் பசுவின் மடியைக் காட்டி, அது ஆவலோடு உறிஞ்ச எத்தனிக்கும்போதே அதை இழுத்துக் கட்டிவிட்டு, மடி வற்றக் கறந்தபின், அதை அவிழ்த்துவிடுகிறார்கள். அந்தோ! இஃதென்ன பாபம்! நம்குலத்துக் கடுத்த செய்கை இதுவாகுமா! இது ஒருவன் வாய்ச்சோற்றைப் பிடுங்குகிறதை ஒக்குமே! இதோடு நிற்கிறார்களா? இல்லையே. இவர்களின் கொடுஞ் செய்கையால் பசிநீங்க உண்ணுதற்கில்லாத இளங்கன்றுகள் இரண்டு மூன்று மாதத்திற்குள் இவர்களின் அநீதியை முறையிட விண்ணுலகஞ் சென்றுவிடுகின்றன. பிறகு அவைகளின் உள் உறுப்புக்களை எடுத்துவிட்டு வைக்கோலை அடைத்துப் பசுக்களின் முன் வைத்து அப்பசுக்களை ஏமாற்றித் தங்களுக்கு வேண்டிய பாலைக் கறந்துகொள்ளுகிறார்கள். இவையெல்லாம் ஜீவகாருண்யமாகுமா! இவைகள் கோபாலத்வப் தான் என்று கூறலாமா?

சகோதரர்களே! இக்கசட வழக்கங்களை நாம் கைவிடுதல் வேண்டும். நம் முன்னோர்கள் நடந்தவாறு நாமும் ஏன் நடத்தல் கூடாது? ஐஸ்வரியத்துக்கு இருப்பிடமாகிய ஆவினங்களை அன்போடு பார்த்து வருதல்வேண்டும். அப்போதுதான் ஜீவகாருண்யசீலர்களாக நாம் விளங்கக்கூடும்.

பகுத்துண்டு பல்லுயி ரோய்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.—திருவள்ளுவர்.

ரா. தேசிகன். (யாதவன்)

புதுவை.

---

# நம்பகமாட்சி.

(122-ம் பக்கத் தொடர்ச்சி.)

துரியோதனன் "நான் உயர் குலத்திற்பிறந்த ஒரு பேரரசன்; கேவலம் ஒரு பிறப்பில் இருகுலங்கொண்ட ஒரிடையனையா நான் மதித்துச்சென்று எனக்கு உதவிபுரியும்படி வேண்டிக்கொள்வது! நீங்களெல்லாம் சுத்த வீரர்களல்லவா? உங்களை விட அவன் என்ன மிக்க பலசாலியா? யோசிக்காமல் சொல்லத் தொடங்கிவிட்டீர்களே?" என்றான். அது கேட்டு அவர்கள் அவனதறியாமைக்கிரங்கி, செஞ்சோற்றுக் கடனொழிக்கத் தீர்மானித்து, "நாம் இவனுக்கு மந்திரிகளாய்விட்டோம்; ஆனபின், நம்மை, "தம் முயிர்க்குறுதி எண்ணார் தலைமகன் வெகுண்டபோதும் வெம்மையைத் தாங்கி நீதி விடாது நின்றுரைக்கும் வீரர்" "காலமும் இடனும் ஏற்ற கருவியுந் தெரியக்கற்ற நூலுற நோக்கித் தெய்வம் நுணித்தறம் குணித்தயேலோர்" என்றல்லவோ சொல்லப்படுகின்றது. அப்படியிருக்க 'புத்திகெட்ட இராஜாவுக்கு மதிகெட்ட மந்திரி' களாய்விடலாமா? என்று தீர்க்காலோசனை செய்து, அவனுக்கு இதவார்த்தைகள் பலவுரைத்துத் துவாரகைக்குப் போய்வரத் தூண்டினார்கள்.

துரியோதனன், "ஐயோ! இவர்கள் 'கைப்பறவையை விட்டுக் காட்டுப் பறவைக்குக் கண்ணிவைக்கச் சொல்லுகிறார்களே! இதுவும் நமது தலைவிதிதான். என்ன செய்யலாம். காலத்துக்கேற்ற கோலம்' போட்டுத்தான் தீரவேண்டும்" என்று தனக்குள் நிச்சயித்துக்கொண்டு, கண்ணபிரானிடம் விருப்பமின்றிச் சென்றான்.

"வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின்—வஞ்சித்த (வையை)
எங்கும் உளனொருவன் காணுங்கொல் ........" என்கிறபடி

முற்றுமுணரவல்ல முழுமுதற் பொருளான ஆயர் நாயகன், தன் அரண்மனைக் காவலாளரை நோக்கி "நான் எனது பள்ளியறையில் அறிதுயில் புரிந்துகொண்டிருப்பேன். எனது தலைப்பக்கம் ஒரு சிம்மாசனம் போட்டுவையுங்கள். சிறிதுநேரத்தில் தெய்வ நம்பகமற்ற துரியோதனனும், தெய்வ நம்பகமுள்ள அர்ச்சுனனும் என்னைக்

காணவருவார்கள். அவர்களைத் தடைசெய்யாமல் என் அறைக்குள் விட்டுவிடுங்கள்.'' என்று கட்டளை இட்டுப் பள்ளியறை புகுந்து பொய்த்துயில் கொண்டிருந்தனன்.

அவர் சொன்னது போலவே அர்ச்சுனன் வந்து, சிம்மாசனத்திலுட்காராமல் அவருடைய திருவடியருகில் மௌனமாக உட்கார்ந்தனன். அவன் கருத்து,

“திருவடியை நாரணனைக் கேசவனைப் பரஞ்சுடரைத்
திருவடி சேர்வது கருதிச் செழுங்குருகூர்ச் சடகோபன்
திருவடிமே லுரைத்ததமிழ் ஆயிரத்துள் இவை பத்தும்
திருவடியே யடைவிக்கும் திருவடி சேர்ந் தொன்றுமினே''

என்னும் பெரியார் வாக்கில் வைத்த நம்பகமாம்.

பிறகு துரியோதனன் வந்தான்; எங்குட்காருவது என்ற கவலையை மேற்கொண்டான்; மாடு மேய்க்கும் இடையன் இவன்; இராஜாதிராஜன் நாம் இவன் பக்கம் நாம் வருவதே தப்பு; அந்தக் கிழப்பிணங்கள் நமது கௌரவத்தைக் கவனியாது இங்கு அனுப்பினார்கள். அவர்கள் போட்ட மாயப்பொடியில் மதிமோசம் போயல்லவோ வர நேர்ந்தது. ‘ஆசானுக்கும் அடைவு தப்பும்’ என்னும் பழமொழி நம்மிடத்தும் பலித்தது ஆச்சரியமே! இனிப் ‘போனதை நினைக்கிறவன் புத்திகெட்டவன்’ என்று நம்மையே பரிகசிப்பார்கள் என்று எண்ணுதும் எண்ணி, ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் தலைப்பக்கமிருந்த சிம்மாசனத்தில் உட்கார்ந்தனன்.

இப்படி இருவரும் பின்னு முன்னுமாக உட்கார்ந்திருந்தபோது “மெய்யர்க்கே மெய்யனாகும் விதியிலா என்னைப்போலும் பொய்யர்க்கே பொய்யனாகும் புட் கொடியுடைய கோமான்'' ஆகிய கண்ணபிரான் நித்திரையினின்றும் விழித்துக்கொண்டவன் போலெழுந்ததும் அர்ச்சுனனைக் காண நேர்ந்தது. உடனே தனஞ்சயனை நோக்கிப் பெருமான் “அர்ச்சுனா! ஏது நீ இவ்வளவு தூரம் என்னை நாடிவந்தது! நீங்கள் எல்லோரும் சுகந்தானே?'' என்று வினவினான். அர்ச்சுனன் “சுவாமி! தங்கள் அருளால் நாங்கள் க்ஷேமமே. எங்களுக்கும் கௌரவர்க்கும் தாயபாக விஷயமாய்ப் போர் ஏற்பட்டிருக்கிறது. அப்போரில் தாங்கள் எங்களுக்குத் துணை செய்யவேண்டும். அதைக் கருதியே வந்தேன்'' என்றான்.



அதற்குப் பெருமான் “நானோ [illegible]வர் குலத்தவன்; நடுநிலைவழாதவன்; எனக்கு நீங்களும் கௌரவர்களும் ஒன்றே. நீங்கள் தெய்வ நம்பகம் உள்ளவர்களாதலால் உங்களுக்குக் குறைவுண்டாகக் காரணம் இல்லை. ‘கடவுளை நம்பினோர் கைவிடப்படார்’ என்பதைக் கேட்டதில்லையா? தெய்வ பலத்தின் முன் மற்ற பலம் என்ன செய்ய முடியும்? ஒருவர் சகாயமும் உங்களுக்கு வேண்டியதில்லையே'' என்றான். (தொடரும்.)

வித்வான், ம. இராஜகோபாலன், (யாதவன்)
சென்னை.

---

# யாதவ வாலிபர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

---

நான் எழுதும் இவ் விஷயமானது சிலருக்கு வெறுப்பாகவோ வெட்கமாகவோ இருக்கக் கூடும். அதற்காக எழுதாமல் விட்டுவிடலாமென்றால் மனது இடங்கொடுக்கவில்லை. நமக்குள்ளிருக்கும் கெட்ட மூடப் பழக்க வழக்கங்களை நீக்கித் தற்காலத்திற்கேற்ப நடப்பதே சமூக சீர்திருத்தமாகும். நகரங்களில் வசிக்கும் யாதவர்கள் தங்களை நாகரிகத்தில் சிறந்தவர்களாக நினைக்கக்கூடும். நகரங்களில் நம்குலப்பெண்களிற் பலர் பால்,தயிர்,நெய்முதலியவைகளைத்தெருக்களில் கொண்டுபோய் விற்பதே முக்கிய தொழிலாகக் கைக்கொண்டிருக்கிறார்கள். தற்காலம் இந்தியா இருக்கும் நிலைமையில் இம்மாதிரி வியாபாரங்களைக்கொண்டு நம்மவர்கள் மேம்பாடடைய முடியுமா என்று பார்க்குமளவில் சாதாரணமாக அவர்கள் அரைவயிற்றுச் சாப்பாட்டிற்குக்கூடப் போதுமான அளவு சம்பாதிக்க முடியாமல் கஷ்டப்படுகிறவர்களாவார்களன்றி மேன்மையடைய முடியாதென்பது தெளிவாம். யாராவது இத்தொழிலால் அதிக லாபமிருக்கிறது என்று சொல்வார்களானால், இல்லை என்று நிரூபிக்கக்கூடும். இதற்காக நான் இத்தொழிலை அறவே ஒழிக்கவேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால் இதைவிட அதிக லாபமுள்ள வியாபாரத்தையோ தொழிலையோ செய்யத் தீர்மானித்து முயலவேண்டும் என்பதே என்னுடைய ஆவலாகும். சிலர்

இதுதான் நமது ஜாதித்தொழில் என்றோ பண்டைக் காலம் முதல் நேற்றுவரை வழக்கமாக நடந்து வந்ததென்றோ சொல்லக்கூடும். இவ்வாறு மற்ற ஜாதியார்களும் சொல்லிக்கொண்டு தங்கள் தங்கள் முன்னோர்கள் செய்த தொழிலையே செய்துவந்திருப்பார்களாகில் அவர்கள் தற்காலமிருக்கும் இவ்வளவு உன்னத ஸ்திதியில் இருக்க முடியுமா என்று சற்று ஆலோசிக்கவேண்டுகிறேன். உதாரணமாகப் பிராமணர்களை எடுத்துக்கொள்வோம். அவர்கள் முற்காலத்தில் ஜாதியில் உயர்ந்தவர்களென்றும், கடவுளுக்குச் சமானமானவர்களென்றும், பிறரால் நன்கு மதிக்கப்பெற்றுக் கஷ்டம் என்பது இன்னது என்றே தெரியாது வாழ்ந்து வந்தவர்களும்கூட நம்மைப்போல் முன்னோர்களுடைய தொழிலென்று சொல்லிக்கொண்டு பழய பஞ்சாங்கத்தையும் தர்ப்பைப் புல்லையும் தூக்கிக்கொண்டு திரிகிறார்களா என்று கேட்கிறேன். ஏன் இவர்கள் தங்கள் பழந் தொழிலைக் கைவிட்டார்களென்றால் நாகரிகமானது நாளுக்குநாள் அதிகமாகித் தாங்கள் கஷ்டப்படாமல்வாழ்ந்துவந்ததற்குக் குறைவு ஏற்படுமென்று தெரிந்துகொண்டு ஆங்கிலம் கற்பதே வேதம் கற்பது என்று நினைத்து ஆங்கிலத்தில் நிபுணர்களாகிச் சகல உத்தியோகங்களையும் கைப்பற்றி உன்னத ஸ்திதியிலிருக்கிறார்கள். ஆகையால் நமது ஜாதித் தொழிலை இப்பொழுதே கைவிட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. நமது மக்களைக் கல்வியில் தேர்ச்சி அடையச் செய்துவிட்டால் நமது தொழில் அதுதானகவே நாகரிகமான முறையில் திரும்பிவிடும்.

நகரங்களில் பால், தயிர், நெய் முதலியவை விற்கிறவர்கள் பெரும்பாலும் பெண்களேயாம். பெண்களிலும் சிலர் வாலிபப் பெண்களேயாகும். இப்பெண்கள் ஊர்முழுதும் தெருத்தெருவாய்ப் பால், தயிர் என்று கூவிக்கொண்டு தங்களுக்கு முன் பின் தெரியாத இடங்களில் சுற்றி அதனால் சம்பாதிக்கும் பொருளைக்கொண்டு சில ஆண்மக்கள் சோம்பேறித்தனமாக எவ்வித வேலையும் செய்யாமல் குடிவெறியர்களாகத் திரிவதல்லாமல் சிறைச்சாலைக்கும் செல்கிறார்கள். ஐயோ! இவைகளெல்லாம் நமது ஆண்மக்களின் கல்வியறிவில்லாத் தன்மையினாலும் மதியீனத்தாலும் பழயவழக்க பழக்கங்களில் உள்ள மூட நம்பிக்கையாலும் ஏற்படுவதல்லவா? அந்தோ! இன்னும் இவ்வாறு "பழய வழக்கம் பழய வழக்கம்" என்று கூறி நடந்து வந்தால் நமது சமூகம் என்று கடைத்தேறுவது?



உண்மையாக நமது சமூகம் முன்னேறவேண்டுமானால் இன்று முதல் நம் இளம்பெண்கள் இம்மாதிரி வியாபாரம் செய்தல் கூடாதென நமது யாதவ வாலிப சிகாமணிகள் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்றுபிரசாரம் செய்யவேண்டும். இதற்குப் பல இடையூறுகள் ஏற்படவும்கூடும். சிலர் "வயதுமுதிர்ந்தபெண்கள் இல்லையென்றோ, ஆண்பிள்ளைகளா கொண்டுபோய் விற்பது என்றோ, இதுதானு எங்களுக்குக்கொடுக்கும் சுதந்திரம்" என்றோ சாக்குப் போக்குகள் சொல்லவும் கூடும். அக்காரணம் யார் சொன்னாலும் யௌவனப் பெண்கள் மாத்திரம் தெருத்தெருவாக வீடுவீடாகச் சென்று பால், தயிர் முதலியவை விற்பது கூடாதெனக் கட்டுப்படுத்தல் வேண்டும். இம்மாதிரிக் கட்டுப்பாடு வாலிபர்களாலேதான் முடியுமேயல்லாது முதியவர்களால் முடியாது. ஏனெனில் பழய பழக்க வழக்கங்கள் அவர்கள் உடலில் ஊறிப்போயிருக்கிறது. சீர்திருத்தங்கள் செய்யத் தைரியமும், தியாக புத்தியும் இன்றியமையாததாகும். வாலிபர்கள்தான் இதைப்பற்றி முக்கியமாகக் கவனித்துவரக் கூடுமாகையால் நான் வாலிபர்களை இக்காரியத்தில் சிரத்தை எடுத்துக்கொள்ளும்படி மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

பொ. பிச்சைமுத்துக்கோனார்,
முனிஸிபல் வைஸ்சேர்மன்.
மதுரை.

---

## திரிசிரபுரம்
## யாதவ வாலிபர் சங்கம்
## இலவச வாசகசாலைத் திறப்புவிழா.

(*)

திரிசிரபுரம் யாதவ வாலிப சங்கத்தின் ஆதரவில் நிகழும் சுக்லஹ மார்கழிமீ 8-உ (22-12-29) ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்குத் திரிசிரபுரம் பெரியகடைவீதி ஸரஸ்வதி விலாஸ பாடசாலைக் கட்டிடத்தில், தென்னிந்தியா ரெயில்வே Dr. A. வாசுதேவபிள்ளை (யாதவர்) L. M. P. அவர்கள் இலவச வாசகசாலையைத் திறந்து வைத்தார்கள்.

அதுபொழுது அவைத்தலைவரவர்கள் நம் குல மக்களது பண்டைப் பெருமைகளைப் பல இதிகாச புராண மேற்கோள்களுடன் எடுத்துக் கூறியும், இடையில் நம் குலம் அடைந்திருந்த சிறுமைகளையும், தற்போது நம் குலப் பெரியார்கள் ஆற்றிவரும் பெருந்தொண்டின் பயனைச் சிறிது சிறிது முன்னேற்றமடைவதையும் விளக்கினர். இவற்றிற்கெல்லாம் இனி வருங்காலத்தில் நின்று உழைக்கக்கூடியவர் வாலிபர்களே! ஆகையால் அவர்கள் உலக ஞானத்தையும், கல்வி அபிவிருத்தியையும்; ராஜீய, தேசீய விஷயங்களையும் அறிய இன்றியமையாதது பத்திரிகையே என்றும், அதற்கு வாசகசாலை அவசியம் ஏற்படவேண்டுமென்றும், அதனால் சமத்வமும், சகோதரத்வமும் வளருமென்றும் கூறிய பின்னர், சங்கக் காரியதரிசி T. கிருஷ்ணசாமிபிள்ளை அவர்கள் சங்கத்தின் பெயரால் அளிக்கப்பெற்ற வெள்ளிக் கத்திரிகொண்டு, ஆண்டு கூடியிருந்த பொது மக்களது ஆரவாரத்தினிடையே தலைவர் Dr. A. வாசுதேவபிள்ளை அவர்கள் எழுந்து வாசகசாலையில் கட்டப்பட்டிருந்த பட்டு நாடாவை வெட்டித் திறந்துவைத்தனர்.

பின்னர் உயர்திருவாளர், பண்டித R. மீனாக்ஷிசுந்தரம், பண்டித திரு, ஐயன்பெருமாள்கோனார் ஆசிரியர், T. N. சுந்தரராஜலுநாயுடு, K. J. இராமகிருஷ்ணன், P. பாலகிருஷ்ணன், S. R. பாலகிருஷ்ணன், N. கோவிந்தசாமி, பிஷப் ஹீபர் கிளைக்கலாசாலை புத்தூர் தலைமை யாசிரியர், J. அருளானந்தம் (யாதவர்) ஆகிய இவர்கள் ஒவ்வொருவரும் வாசகசாலையின் அவசியம், பத்திரிகாபிமானம், என்பவை பொருளாகச் சிறந்த விரிவுரைகள் நிகழ்த்தினார்கள்.

வாசக சாலையின் வளர்ச்சிக்காகத் தலைவர் Dr A. வாசுதேவபிள்ளை ரூ 20, உயர் திருவாளர், A. ஆழ்வார்தாஸ் (யாதவர்) அவர்கள் ரூ. 5. உறையூர் உயர்திருவாளர், P. P. இராமானுஜதாஸ் (யாதவர் அவர்கள் ரூ 3. உயர்திருவாளர் வைத்தியர், R- பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் ரூ. 3 B. லெக்ஷ்மணசெட்டியார் ரூ 1 நன்கொடையாகக் கொடுத்துதவியதைச் சங்கத்தார் பெற்றுக்கொண்டு அவர்களது பெருந் தயாளத்தைப் பாராட்டி அவர்களுக்கு நன்றி செலுத்தினர்.

வாசகசாலைக்குத் தினசரிப் பத்திரிகைகள் 5ம், வாரப்பத்திரிகைகள் 4ம், மாதப்பத்திரிகைகள் 9ம் ஆகப் 18 பத்திரிகைகளும்



பெரும்பாலும் இச் சங்கத்தின் அங்கத்தினர்களும், குலாபிமானிகளுமே இலவசமாகக் கொடுத்துதவி வருகின்றனர். நம் குல முன்னேற்றத்திற்கு உதயபானுவெனத் தோன்றி நம் குல மக்களிடையே மாதந்தோறும் தவறாது குலாவித் தீவிரமாக உழைத்துவரும் "யாதவமித்திரனை" அதன் பொறுப்பாளரும், நம் குலந் தலைசிறந்தோங்கவேண்டுமெனும் பேரவாக்கொண்டு சிறந்த தொண்டாற்றிவருபவரும், வள்ளலும் ஆகிய உயர்திருவாளர், இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனார் அவர்கள் இவ்வாசகசாலைக்கு இலவசமாக அனுப்பி, வாலிபர்களுக்கு ஊக்கங் கொடுத்த பெருந்தகைமைக்கு இச்சங்கம் நன்றி செலுத்துகின்றது.

இறுதியில் திரிசிரபுரத்தின் பல திக்குகளினின்றும் வந்திருந்து சபையை அலங்கரித்த யாதவ கனவான்களுக்கும், யாதவ குலாபிமானிகளுக்கும், தலைவரவர்களுக்கும் காரியதரிசியவர்களால் வந்தனோபசாரம்செய்ய விழா இனிது முடிந்தது.

T. கிருஷ்ணன், (யாதவன்)
காரியதரிசி.

---

## எனது அன்புரை.

---

"தென்மொழியோ தேன்மொழியோ" வென்னும் திருமொழி வளரும், தெய்வப் பழந்தமிழ் நாட்டிலே, பிரபல இராக்களைத் தந்த பழம் பெரும்பதியெனும் செந்தமிழ் க்ஷேத்திர மதுரைமாநகரிலிருந்து, "அகில உலக யதுகுல முன்னேற்றம்" கருதி அரிய பெரிய விஷயங்களைத் தாங்கி வெளிவரும் "யாதவமித்திரன்" என்னும் திங்கள் வெளியீட்டின் முதலாவது தொகுதி இரண்டு மூன்றும் பகுதிகள் வரப்பெற்று அளவிலா மகிழ்ச்சியடைந்தேன். இவ்விரண்டு தொகுதிகளையும் பார்த்ததில் இதன் கொள்கை முற்றிலும் தன் பெயருக்கேற்ப, "யதுகுல முன்னேற்ற"த்திற்கான விஷயங்களையும், 'உலகத்திற்கேதாகியும் நமது உயிர் வாழ்க்கைக்கே முக்கியமாகிய பொருள்களை யெல்லாங் கொடுத்து சமஸ்தமான தேவதைகட்கும் இருப்பிடமாகிய காமதேனு வென்னும் புண்ணிய பிராணியாகிய பசு பாதுகாத்தலையும் உலகத்தின் நானு பக்கங்களின் நவீன செய்திகளையும் உலக அறிஞர்களின் அறவுரைகளையும் கொண்டு

விளங்குவதால் இப்பத்திரிகை யாதவ மக்களுக்கேயன்றி மற்றையோர்க்கும் இன்றியமையாத ஓர் நற்றுணையாயிருந்து பேருதவி புரிந்துவரும்'' என்பது எமதபிப்பிராயம்''.

தமிழுலகில் தற்காலம் எங்குப்பார்த்தாலும் ஜனங்களெல்லாம் "பத்திரிகை பத்திரிகை" என்பதாகத் "தினத்தாள், வாரத்தாள், பக்ஷத்தாள், மாதத்தாள் ஆண்டு மடல்'' என எத்தனையோ பத்திரிகைகளை யேற்படுத்தி அவைகளில் ஆதரிப்பாரின்றிச் சில மறைந்துவிட்டதெனினும், தமிழுலகைப் பத்திரிகா உலகமாக்கி, மக்களை உபத்திரவிக்கிறார்களென்று சிலர் எண்ணவோ சொல்லவோ செய்யலாம். ஆனால் நாம் அதைப் புத்திசாலித்தனமானவைகளென்று மதிக்கமாட்டோம். ஏனெனில் ஒரு நாடோ ஒரு சமூகமோ முன்னேற்றமடையவேண்டுமானால் அதன் பரப்பெங்கும் பத்திரிகைகளும், பாடசாலைகளுமே மிளிரவேண்டும். இதை உத்தேசித்தே தான் அறிவிற் சிறந்த பெரியார்கள் எந்த சமூகத்தையேனும் எந்த நாட்டையேனும் முன்னேற்றமடைந்திருக்கிறதா? இல்லையா? எனத் தெரிந்துகொள்ளவேண்டுமானால் அவர்கள் அந்த நாட்டினரையோ சமூகத்தினரையோ, கண்டால் உங்களுக்கென எத்தனை பத்திரிகைகள், எத்தனை பாடசாலைகள், எத்தனை கலாசாலைகள் இருக்கின்றனவென்னும் கேள்விகள் கேட்கின்றனர். பத்திரிகைகளின் எண்கள் மிகுவதைத் தாழ்வாக நினைக்கவோ சொல்லவோ சிறிதும் இடமில்லை. ஆதலால் இப்பத்திரிகையாகிய "யாதவமித்திரனை" "தருமங்கள் கெட்டு அதர்மம் மேலோங்குங்கால் நான் அவதாரஞ் செய்வேன்'' என்று பகவான் கண்ணன் கீதையிற் கூறியபடி தருமங் குறைந்து, அதர்மம் தழைத்தோங்குமிந்நாளில் அதர்மத்தைச் சிதறவடித்து, தருமத்தை நிலைநாட்ட அவதரித்திருக்கும் தர்ம தேவதையாகிய கண்ணன் என்பேன். யதுகுலத்துக்கு இன்றியமையாத ஆசான் என்பேன். அறிவையூட்டி வளர்க்கும் தாயினுமினிய அன்னை! என்பேன். உண்மைத்தோழன்! என்பேன். ஐம்புலனையும் ஒருமித்து இன்பம் நுகரச்செய்யும உத்தமமனைவி! என்பேன். பெருஞ் செல்வம்! என்பேன். நெருங்கிய சுற்றம் என்பேன் இன்பம் தரும்பெரும் வீடென்பேன்! நோயகற்றுஞ்சஞ்சீவி! என்பேன். இன்னமுதென்பேன். உண்மைச் சேவகனென்பேன். மானமுடைத்துங்க ளாயர் குலம் என்று ஆழ்வார் அருளிச்செய்த ஆயர் கோமான்! என்பேன். அரசனென்பேன்! கல்விச்சாரம்! என்



பேன். துவாபரயுகத்தில் வடமதுரையிற் றோன்றிய கோபாலனென்பேன்! கலியுகத்தில் தென்மதுரையில் கோபால்மஹாலில் ஜனித்த கண்மணி! என்பேன். சுயேச்சையும், சுவாதீனமுமற்று, அஞ்ஞானத்திலும், சோம்பலிலும், பசியிலும், தரித்திரத்திலும் வருந்தி உறங்கிக்கிடக்கும் யதுகுல மக்களைத் தட்டியெழுப்பி உய்விக்கும் நற்றுணைவனாதலால், யாதவ சமூகத்தவரெல்லோரும் யாதவமித்திரனுக்கு இன்மொழி கூறி இனிது வரவேற்பார்களாக.''

இப்பொழுது கிடைத்திருக்கும் இரண்டு மூன்றும் தொகுதியில், "கண்ணபிரான் திருவிளையாடல்கள், கண்கவர் வனப்பு வாய்ந்த படங்களுடனும், முப்பத்திரண்டு பக்கங்களுடனும், நல்ல தாளில் நல்ல பதிப்புள்ள நல்ல தமிழில், பண்டிதரேயன்றிப் பாமரருமறியுமாறு தெள்ளிய தமிழ் நடையில் பரோபகாரமுள்ள அறிஞர்களின் வியாசங்கள் ஒளிசெய்கின்றன. அன்பர்களின் ஆசிமொழிகள் நீடூழி சீருடன் சிறப்புடன் வாழட்டுமென்று கோஷிக்கின்றது. இத்தனைக்கும் காரணமென்ன? பத்திரிகையில்லாத சமூகத்தில் முதல் முதலாகத் தோன்றியது பற்றியே என்பதை எவரும் நன்குணர்வர். ஒவ்வொரு பக்கமும் படிக்கப்படிக்கப் பாரி வாழ்ந்திருந்த பறம்புமலைத் தேன்போலவே தித்திக்கின்றது. யாதவர்களின் இல்லந்தோறும் அன்புடன் போற்றி வளர்க்கப்படும் தர்மதேவதையின் அவதாரமாகிய காமதேனுவின் பால்போல் ருசிக்கின்றது. இதன் பெயர் யாதவமித்திரன் என்றாலும் யதுகுலத்துக்கு மட்டுமல்ல, பாரத நாட்டுக்கும் அகில உலகத்துக்கும் தெய்வமாகத் தோன்றி எல்லோருள்ளத்திலும் பகவத்கீதை என்ற திவ்ய தேவாம்ருதத்தை ஊட்டிய கண்ணன் என்றே கூறுவேன். இவ்வரிய பத்திரிகைக்குத் தமிழ் மொழியை ஐயந்திரிபறக் கற்றவரும், ஆங்கிலத்திலும் நற்புலமை வாய்ந்தவரும், தானறிந்ததை யாவர்க்கும் பயன்படுமாறு மிக்கத் தெளிவாகவும், அழகாகவும் எடுத்துக் கூற வல்லவருமாகிய, "திருவாளர். ஸ்ரீ. ஆ. கார்மேகக்கோனாரவர்கள்'' யாதவ சமூகமும்; தமிழ்ப் பயிரும் நவீன முறையில் செழித்தோங்கி வளருமாறு தலைமை ஆசிரிய பீடத்தமர்ந்ததும், மற்றும் ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள் ஒருங்கே அமையப்பெற்றதும் பிரபலவர்த்தகராகிய "ஸ்ரீமான், இ. மா. கோபால கிருஷ்ணக்கோனாரவர்கள்'' கைமாறு கருதாது வெளியிட்டுதவ

முன் வந்ததும், தமிழுலகமும், யாதவ சமூகமும் செய்த தவப் பயனேயாகும். தமிழுலகிலும், பிற உலகிலும் வாழும் யாதவ சகோதர சகோதரிகள் இதற்குச் சந்தாதாராகச் சேர்ந்து, பத்திரிகையை ஆதரித்து, ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கட்கு மென்மேலும் ஊக்கம் உண்டாகும்படி செய்வதோடல்லாது, மாதப் பத்திரிகையை வாரப்பத்திரிகையாக்க யதுகுல தெய்வம் ஒவ்வொருவருள்ளத்திலும் குடிகொள்ளுமாறு பிரார்த்திக்கின்றேன்.

உலகெலாம் வாழ்க! யாதவமித்திரன் வாழ்க! யதுகுலமும், ஆனினமும் வாழ்க! தமிழ்மொழி வாழ்க! ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்களும், சந்தாதார்களும் வாழ்க! தருமமே ஜெயம்,

எண்ணற் கரியானே! எப்பொருட்குஞ் சேயானே!
நண்ணற் கரியானே! நாரணனே!—கண்ணனே!
மாதவனே! யாதவனே! மாயவனே! ஆயவனே!
வேதமுதல்வா! வா! விரைந்து!

யதுகுமாரர் காந்திதாசன்,
பர்மா.

---

# செய்தித்திரட்டு.

அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் ஜனத்தொகை 12-கோடி. அந்நாட்டில் தினந்தோறும் காலையில் 1,30,00 000 பத்திரிகைகளும், மாலையில் 2,60,00,000 பத்திரிகைகளும் வெளியிடப்படுகின்றன.

சென்னை சட்டசபை அடுத்த எப்ரல்மாதம் 13உ கலைக்கப்பட்டு ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் தேர்தல் நடைபெறுமெனத் தெரியவருகிறது.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் இதர விடுமுறை நாட்களிலும் சட்டசபை, முனிசிபாலிட்டி ஜில்லா போர்டுகளின் தேர்தல் தினங்களிலும் சாராயக்கடைகளும், கள், அபின், கஞ்சா முதலிய வெறிச்சரக்குக் கடைகளும் மூடப்படவேண்டுமெனச் சென்னை சட்டசபையில் ஒரு தீர்மானம் நிறைவேறியிருக்கின்றது.

பால்ய விவாஹத்தடைமசோதா அடுத்த எப்ரல்மாதமுதல் அமுலுக்கு வரப்போகிறதென்று தெரிகிறது.

யாதவ மித்திரன் சந்தா விபரம்.

---

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்
இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்த வேண்டும். வி பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி. பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும், ஆதலால் முன்னடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம்மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக்கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது. பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

யாதவ மகா ஜனங்களுக்கு ஒரு

# வேண்டுகோள்.

யாதவ சகோதரர்களே!

நமது யாதவ மித்திரன் கல்வி, பொருளாதாரம், ஆசார சீர்திருத்தம் முதலிய துறைகளில் சிறந்த அறிஞர்களால் எழுத பெற்ற அருமையான கட்டுரைகளைக்கொண்டு யாதவ மக்களி முன்னேற்றத்தையே முக்கியமாகக் கருதி மாதம் ஒருமுறை வெ வருகின்றது.

எல்லா யாதவ மக்களும் உடனே சந்தாதாராய்ச் சே வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

எல்லா யாதவ மக்களிடமும் யாதவ மித்திரனைப் பரவ செய்தல் சமுதாயப் பற்றுடையவரின் முதற்கடமையாகும்.

யாதவமித்திரன் நம்மவர்வாழும் ஒவ்வொருகிராமங்களிலும் உலாவ வேண்டும். ஒவ்வொரு யாதவரிடத்திலும் யாதவ மித்திரன் மாதா மாதம் சமுதாய விஷயங்களைத் தெரிவிக்கும்படி செய்ய வேண்டும். இதுவே சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அறிகுறி.

இப்பொழுது விலாசந் தெரிந்த சிலருக்கே பத்திரிகை அனுப்பப்பட்டிருக்கிறது. ஏனையோர் விலாசந் தெரிவித்துப் பத் திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகையால் யாவரும் பத்திரிகை படித்துப் பயன் பெறு மாறும், இப்பத்திரிகையை வாசிக்கும் அன்பர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தெரிந்த பத்திரிகை படிக்கும் ஆற்றலுள்ள நமது யாதவ சகோதரர்களின் விலாசங்களைத் தயைசெய்து எழுதி யனுப்புமாறும் வேண்டுகிறோம்.

மானேஜர்,

**யாதவ மித்திரன் ஆபீஸ்,**

ஸ்ரீ கோபால் மஹால்,

வடக்குச்சித்திரை வீதி, மதுரை.

Printed & Published by E. M. GOPALAKRISHNA KONE
at the Excelsior Press, Madura.